# தங்க முடிச்சு

## 1

இந்தக் கதையில் உபயோகப்படுத்தியிருக்கும் மலையாளக் கவிதை குங்குமம்' மலையாள வாரப் பத்திரிகை 14-8-83 இதழில் வெளியான ''நமஸ் காரம்'' என்கிற கவிதை (எழுதியவர் குஞ்நுண்ணி) நன்றியுடன் எடுத்தாளப்பட்டிருக்கிறது. கதாபாத் திரங்களின் பெயர்களில் யாரேனும் நிஜமாக இருந் தால் தற்செயல்தான்.

அப்பா அம்மா வைத்த பெயர் கன்னியப்பன். சினிமா வுக்காகக் கரிகாலன் என்று மாற்றிக் கொண்டேன். கோச்செங்கணானுடன் சங்க காலத்தில் இரண்டு சோழப் பேரரசர்களில் ஒருவனாகக் கருதப்படும் கரிகால் சோழனுக்கும் எனக்கும் தொடர்பு கிடையாது. நடராஜா சாஸ்திரி நியூமராலஜிப்படி, ஐந்து எழுத்தில் பெயர் வைத்துக்கொண்டால் அதிர்ஷ்டம் என்று சொன்னார். பி.ஏ முதல் ஆண்டுவரை தமிழ் படித்ததற்கு ஞாபகமாகக் கரிகாலனைத் தேர்ந்தெடுத்தேன். பட்டினப் பாலையில் பாடப்பட்டிருக்கும் அந்த வீரம் மிகுந்த சோழனுக்கும் எனக்கும் வேறு உறவில்லை.

தமிழ் சினிமாவில் டைட்டில்களை உற்றுப் பார்ப்ப வராக இருந்தால் நீங்கள் என் பெயரைக் கேள்விப்பட்டி ருக்கலாம். வசனம் உதவி கரிகாலன்—என்று இரண்டு செகண்டுக்கு ஓரத்தில் வருவேன். பல இடங்களில் வேலை

செய்திருந்தாலும் டைட்டிலில் என் பெயர் போட மாட்டார்கள். பரவாயில்லை. பைசா வந்தால் சரி. வசனம் உதவி என்கிற பொதுப் பெயரில் பற்பல பாவங்கள் அடங்கியுள்ளன. டைரக்டரும் ப்ரொடியூசரும் விடுதி அறையில் விடியும் வரையில் உட்கார்ந்து யோசித்து உள்ட்டா அவியல் பண்ணி ஒரு கதையைத் தயாரிப்பார்கள், கதைகூட இல்லை, ஒரு 'நாட்டு'. ஒரு முடிச்சு அதை என்னிடம் சொல்லி அதை நான் லைனா'கச் செய்து. அப்புறம் சீன் பிரித்து, படப்பிடிப்புக்குக் கிளம்பும்போது வசனம் எழுதி, இந்த வேலையெல்லாம் நான்தான் செய்கிறேன். பஞ்சு அண்ணன், நாராயணன் போன்றோரிடம் வேலை செய்து அனுபவம் உண்டு. 'உறங்காதே' என்கிற படத்துக்கு முழுத் திரைக்கதை வசனம் எழுதியுள்ளேன். உறங்கிக் கொண்டிருக்கிறது.

ஹீரோவாக நடிக்கத்தான் சென்னைக்கு வந்தேன். சின்ன வயசில் சாக்ரட்டீஸ் நாடகம், மனோகரா வசனங்களையெல்லாம் சிவாஜீ போலவே நடித்துக் காட்டுவேன். பள்ளி நாட்களில் கட்டபொம்மன் வேண்டுமென்றால் கன்னியப்பனைத்தான் கூப்பிடுவார்கள். 'வானம் பொழிகிறது, பூமி விளைகிறது' என்று ஓடி வந்துவிடுவேன். பள்ளியிறுதியில் நாடகங்கள் சொந்தமாக எழுதி நடிக்க ஆரம்பித்தேன். கல்லூரியிலும் அது வளர, பி.ஏ. முதல் வருஷத்தில் அடிக்கடி கண்ணாடி பார்த்துக் கொண்டதில் முக வெட்டு, வசனத் தெளிவு இரண்டு விதத்திலும் எனக்குக் கதாநாயகம் இருக்கிறது என்று தோன்றி, பெற்றோருக்கு (அப்பா தேனியில் பிலிப்ஸ் டீலர், அம்மா டீலரின் மனைவி) உருக்கமாகக் கடிதம் எழுதி வைத்து விட்டு சென்னைக்குக் கிளம்பி விட்டேன். ('மன்னித்துக் கொள் தாயே; உம் மகன் பிரபலமானதும் உன்னை வந்து சந்திக்கிறேன் )

தினப்படி பாண்டியன் எக்ஸ்பிரஸ்ஸில் இருபத்தாறு பேராவது சென்னைக்கு இப்படி சினிமா ஆசையுடன்



வருகிறார்கள். அவர்களுக்கு என் அறிவுரை; வேண்டாம்! வீடு திரும்புங்கள்! அங்கே பீன்ஸ் வியாபாரம் செய்யுங்கள் லாட்டரி டிக்கட் விற்பனை பண்ணுங்கள். சைக்கிள் ஷாப் லாண்டரி என்று எப்படியேனும் ஜீவிக்கலாம் இந்தப் பிழைப்பு வேண்டாம்! யாரும் கேட்கப் போவதில்லை. இருந்தாலும் சொல்லி விட்டேன்.

வீ. விட்டு ஓ, வந்த எனக்குக் கோடம்பாக்கத்துச் சந்துகளிலும் ஸ்டூடியோக்களிலும் எழில் வாசல்களிலும் பிரம்மோபதேசம் கிடைத்தது. மரத்தடிக்கு மரத்தடி கதாநாயகர்களாகக் காத்திருக்கிறார்கள் என்று புலப்பட்டு விட்டது. கதாசிரியர்களில் அத்தனை போட்டி இருக்காது என்று தோன்றியது, கொஞ்சம் எனக்குக் கவிதை வரும். மரபு புதுசு இரண்டும் எழுதுவேன், அதனால் பாட்டில் பூரலாமா என்று யோசித்தேன். வைரமுத்து, வாலி எல்லாம் தூள் கிளப்பிக் கொண்டிருக்கிறார்கள். ஒரு பிரபல வசனகர்த்தா (பேர் சொல்ல மாட்டேன்) திரைக்கதை வசனம் பாடல் எழுதித் தர ஒரு முழு நோட்டு வாங்குகிறவர். அவருக்கு உதவியாளருக்கு உதவியாளராக வாய்ப்புக் கிடைத்தது.

அதன் பின் இரண்டு மூன்று டப்பிங் படம், ஆரம்ப கால சிலுக்குநடித்த மலையாளப் படங்கள். ['படுத்திருந்த ராத்திரிகள்' போன்று பெயர் சூட்டி வெளியிட்டார்கள். சிலுக்கு வருவது மூன்று நிமிஷம் அதற்கு வசனம் பூரா எழுதினேன். மலையாளத்திலிருந்து தமிழ் பண்ணுவது சுலபம்தான். தெலுங்குதான் கஷ்டம் 'எந்தகூ' என்று ஒரே இழுப்பாக இழுத்தால் நம் பாஷையில் வார்த்தைகளே கிடையாது. இருந்தும் சோபன்பாபு ஜெயசுதா படம் ஒன்று பண்ணினேன். அதற்கப்புறம் தமிழ் சான்ஸ், வசன உதவி என்று ஒன்றிரண்டு வந்தது. எதற்கு இழுப்பானேன்? இன்றைய தேதிக்கு அடுத்த வேளை சோற்றுக்குப் பழுதில்லாமல் வருகிறது. கல்யாணம் ஆகவில்லை சொந்தசந்தோஷத்துக்கு 'கன்னி' என்ற பெயரில் அவ்வப்

போது கதை, கவிதை எழுதுவேன். முரசு பொங்கல் மலரில் ஒரு கவிதை வந்திருக்கிறது. 'மாலை முரசு' வேலூர்ப்பதிப்பில 'வாழ்வா சாவா?' என்று ஒரு சிறு கதை வந்திருக்கிறது,

என்னைப் பற்றி அதிகமே சொல்லிக் கொண்டு விட்டேன். சமீபததில் எனக்கு நிகழ்ந்த நிகழ்ச்சிகளின் பின்னணியை நீங்கள் உணருவதற்கே இந்தப் பீடிகை வயசு இருபத்தொன்பது. பீடி, சிகரெட்டு, ஜரிதா எந்தப் பழக்கமும் கிடையாது பெண் வாசனை கிடையாது. கையெழுத்து மணி மணி, தோற்றம் மதிப்பாக இருப்ப தாகத்தான் எண்ணம்.

## 2

செப்டம்பர் ஏழாம் தேதி. என்னுடைய அறை மாப்பலத்தில் உஸ்மான் ரோடைக் கண்டபடி வெட்டும் சந்துகளில் ஒன்றில் லாட்ஜும் இல்லாத வீடும் இல்லாத கட்டடத்தில் மாடி அறை. அருகில் 'அருணா பிரிண்டர்ஸ்' என்று ஒரு கால் மிதி அச்சகம் ஓயாமல் நோட்டீஸ்' அடித்துக் கொண்டிருக்கும். (சழிவு விற்பனை, காண வாரீர்!) காலை ஹார்ன் சப்தம் கேட்க எட்டிப்பார்த்தால் கிட்டு. புகையிலையைத் துப்பிவிட்டு மேலே பார்த்து—'கன்னியப்பா—உடனேவா.'

''என்ன ஸார்'', என்றேன். கிட்டு ஒரு பி. ஆர். ஓ.

''விஜி ஆர் கூப்ட்டனுப்பிச்சிருக்கார். எதாவது பளிச் சின்னு உடுத்திண்டு உடனே வா!''

விஜி ஆர் என்றபெயரைக் கேட்டதும், எனக்குஉடனே குதற்றம் ஏற்பட்டது. ஏவி எம், பாலாஜி, தேவர் மாதிரி



பெரிய பேனர். மிகப் பெரிய ப்ரொட்யூஸர். ரஜினி ஸ்ரீதேவியை வைத்து இப்போதுதான் 'லடுக்கா லடுக்கி' என்று ஒரு இந்திப்படம் ஜுபிலி பார்த்திருக்கிறார், தமிழில் எட்டு ஜுபிலி எடுத்தவர், எல்லாமே பெரி சாகப் பண்ணுவார். கார் எரிக்க வேண்டுமானால் எரித்தே காட்டுவார் கட்டடத்தை வெடி வைத்து உடைத்தே காட்டுவார், பெரிய கை. அவர் என்னைக் கூப்பிடுகிறாரே.

'விஜி ஆரா? என்னையா?என்னை எப்படித் தெரியும்?

'தபார் சும்மா தர்க்கம் பண்ணிண்டு இருக்காதே. வண்டி உன்னைக் கொண்டய் விட்டுட்டு டப்பிங் ஆர்ட்டிஸ்டுகளுக்குப் போயாகணும். உடனே வா.'

'உடனே'க்கு முன்னாலேயே பான்ட் மாற்றிக் கொண்டு பவுடர் போட்டுக்கொண்டு கிளம்பிவிட்டேன். காரில் காஸட்டை பொருத்திக்கிட்டு 'நம்ம புதுப் படத் துக்கு ராஜா போட்டிருக்கார். பாரு தூளு' என்றார். எனக்குச் சங்கீதத்தில் கவனமில்லை. விஜிஆர் என்னையா? அவர் ராஜா. நான் சபையோரப் பாமரப்புள்ளி. அவர் என்னை அழைப்பதாவது? எம்ஜிஆர் அழைப்பது போலல்லவா இருக்கிறது? கிட்டுவைக் கேட்டதில், எனக் கும் தெரியலைப்பா! அவருடைய பிரதர்-இன்-லாதான் எங்கிட்ட சொல்லிண்டிருந்தான். நான் அவாளுக்கெல் லாம் இப்ப ஓர்க் பண்றதில்லை. ரொம்ப கொட்டையடி என்றார். எது எப்படியோ விஜிஆர் என்ன கேட்டாலும் ஒப்புத்துண்டுடு. இந்த மாதிரி சான்ஸ் வராது பணம் கிணம் எதையும் பத்தி மூச்விடாதே. நோட்டு அடிக்கறாப் பல சலவை நோட்டா சரக்குனு உருவித் தருவான். கேட்டே? கோபம் வந்துரும். பிரதர்-இன்-லாதான் ஆல் இன் ஆல்னாலும் கதை டிஸ்கஷன் எல்லாம் பெரியவர் தான். அவருக்கு நல்ல கதைன்னா ஒரு மோப்பம் உண்டு.

எந்தக் கண்ராவி நாட்டு'ன்னாலும் ஒத்துண்டு மறு பேச்சு பேசாதே என்ன? என்று உபதேசம் செய்தார்.

ஆள்வார்ப்பேட்டையில் கமல்வீட்டுக்குப் பின் பக்கம் சந்தில் திரும்பியது கார். விஜிஆர் அங்கே புதுசாக ஒரு டப்பிங் தியேட்டர் கட்டியிருக்கிறார். வாசலில் எட்டுபத்து கார்கள் மௌனமாக நின்றுகொண்டிருந்தன. ஆளுயர டிபன் பாக்ஸில் என்னவோ வந்து இறங்கியது. பழைய வீட்டை உள்ளுக்குள் புதுப்பித்து, ஏஸி பண்ணி, கம்ப்யூட்டர் டப்பிங் வசதி ஏற்பாடு செய்திருந்த அந்த இடத்துக்குள் தயக்கமாக நுழைந்தேன். வாசலில் ஒரு இளைஞன் தொளதொளவென்று தங்கத்தோடாவுடன் ஸ்டேட் எக்ஸ்பிரஸ் பிடித்துக் கொண்டிருந்தான். கிட்டு என்னைக் காட்டி 'கன்னியப்பன்' என்றார். 'நான் போய் வண்டியை நிர்மலா, மாலா, பாக்யஸ்ரீ மூணுக்கும் அனுப்பிச்சுர்றேன்.''

'செய் அய்யரே' என்று அந்த இளைஞன் என்னை மேலும் கீழும் பார்த்தான். விஜிஆராக இருக்க முடியாது.

'கன்னியப்பா, ஸார்தான் சின்ன முதலாளி. ப்ரொடக்ஷன் பாத்துக்கறார். இவர் கடாட்சம் கிடைச்சாபோறும் உனக்கு வரட்டுமா?'

கிட்டு போனதும், 'நீங்கதானே 'கரிகாலன்னு' வசனம் எழுதறவரு?' என்றான்.

'நீங்க' என்று சொன்னது வியப்பாக இருந்தது.

'அய்யா நான்தான்யா. எம்பேரு உங்களுக்குத்தெரிஞ்சிருக்கிறதே ஆச்சர்யம்யா. பாக்யம்யா!''

'அய்யா' எல்லாம் வேண்டாம். நான் முரளீதர், விஜிஆருக்கு மச்சான். அவர் என் மாமா. 'கரிகாலன் னு என்ன பேரு.''

'அது சும்மா ந்யூமராலஜிக்கு வெச்சுக்கிட்டதுங்க!''



''நியூமராலஜியில நம்பிக்கை உண்டா? பெரியவருக்கு ரொம்ப நம்பிக்கை. ஒம்போது வந்தாகணும் அவருக்கு. ஆர்ட்டிஓ ஆபீஸ்லபணம் கொடுத்து கார் நம்பர் எல்லாம் கூட்டினா ஒம்போது, மலையாளம் தெரியுமா உங்களுக்கு?'

'அவ்வளவா தெரியாதுங்க.'

'டப்பிங் எல்லாம் பண்ணியிருக்கிங்க?'

'அது ஏதோ ஒக்கபிலேரியை வெச்சுக்கிட்டு செஞ்சதுங்க.'

'சரி, வெய்ட் பண்ணுங்க. பெரியவரு உள்ள இருக்காரு இல்லை, உள்ளே போய் ஓரத்தில் உக்காரலாம். படம் ப்ரொஜக்ஷன் ஆய்க்கிட்டு இருக்கு.'

மெள்ள நழுவி குளிருக்குள் நுழைந்தேன். சின்ன தியேட்டர். இருட்டில் எத்தனை பேர் உட்கார்ந்திருக்கிறார்கள் என்று தெரியவில்லை. திரை வெளிச்சத்தில் பிரதிபலித்த காலி நாற்காலியில் கபக்கென்றுஉட்கார்ந்து கொண்டேன். திரையில் மலையாளப்படம் ஓடிக்கொண்டிருந்தது. வழக்கம் போல் தென்னங் கீற்று கடல், பான்ட்டை மாட்டிக்கொண்டு ஒரு வயசான கதா நாயகன் ஓடிக் கொண்டிருக்க அந்தப் பெண்ணின் வெட்கத்தை க்ளோஸ்அப் காட்டியது. புதிய நடிகை, பரிச்சயமில்லாத முகம். கொஞ்சம் மாதவி. கொஞ்சம் ஜெயப்ரதா. தென்னை மரத்தின் மேல் மல்லாந்த வாக்கில் சாய்ந்து கொள்ள அவன் ஓடி வந்து அவள் முகத்தைப் பூவால் தடவினான். பின்னணி சங்கீதம் லேசாகப் புறப்பட, 'ஸொப்னாவதாரம் எடுத்த சுவண்ண சுந்தரி' என்று யேசுதாஸ் பாடினார். 'பர்ர்ர் என்று மணி ஒலிக்க படம் வெட்டுப்பட்டது. இமைத்து இமைத்து லைட் வெளிச்சம் வர நான் திரும்பிப்பார்க்க, ஒருவர் பின்னால் ஒருவர் மட்டும் உட்கார்ந்திருக்க அவர் பின்னால் நான்கைந்து பேர் உட்கார்ந்திருக்க 'எப்படி' என்றார் முன்வரிசையில் இருந்தவர்.

'சரியான குட்டிங்க.'

'இன்னா முகம் பார்த்தியா? இது ஜூபிலி சமாசாரமா இல்லியா டேய்! அந்த படகுக்குக் பின்னாலருந்து க்ளோஸ் அப் வருமே, அதை இன்னொருக்கா போட்டுக் காட்டிடு' என்றார். அவர்தான் விஜிஆர். ஜெமினி சினிமாவில் போட்டோ பார்த்ததைவிட இளமையாகத்தான் இருந்தார், நாற்பத்தைந்து வயசு இருக்கலாம். தலைமுடி லேசாக வாரப்பட்டிருந்தது, உயர்ந்த ஜாதி, 'ஃபாரின்' கண்ணாடி இருட்டில் தெளிந்து வெளிச்சத்தில் கருக்கும் கண்ணாடி அணிந்திருந்தார். வாசனை அடித்தது. என்னை ஒரு முறை பார்த்தபோது நான் வணக்கம் சொல்ல கவனிக்காது திரும்பிக்கொண்டார். தியேட்டர் மறுபடி இருள, இப்போது அந்தப் பெண் கடற்கரையிலிருக்கும் படகுக்குப்பின்னாலிருந்து எட்டிப்பார்த்தாள். பாட்டு அவளிடம் சும்பனம் கேட்டது. அவள் முகத்தை நோக்கிக் காமிரா விரைய,

'என்ன டைட்டுத் தாங்குது பாரு? மொகம் பல்லு எல்லாம் பாரு எனன வரிசை! அப்படியே மல்லிகைப் பூ கோத்தப்பல!'

'பாடி என்னய்யா? முகம்தானே முக்கியம். எத்தனை பரபரப்புக் காட்டுது பாகு? தபார் தபார்!'

பெரிய கைமாதிரி தாங்க தோணுது.'

'பப்ளிஸிட்டியை இப்பவே துவங்கிட்டேன்.'

'தமிழு வருமா?'

'வாராட்டி என்ன? மலையாளமும் தமிழும் ஒண்ணு தானேய்யா.'

'டப் பண்ணிரலாங்க.'



'வேண்டாங்குது. சொந்தக் குரல்ல பேசறேங்குது. குரல் ரொம்ப இனிமையாத்தான் இருக்குது. உடம்பில ஒரு குறையில்லை மச்சி. ஒரு மாதிரி கலக்கிருச்சு இந்தப் பொண்ணு என்னை! நானும் எத்தனையோ பாத்துப் புட்டேன். இது தினுசே வேற எங்கயோ போவப் போவுது '

'நல்லாப் பாத்துக்கிட்டிங்களா?'

'இதுதான வேண்டாங்கறது. பாரு ஸும்ஸூட்டு போட்டா கம்முனு வாரும். என்ன வயசுங்கிறே. இருபத்திரண்டு! பதினாறுக்கு மேல் சொல்ல முடியுமா? பாலிஷ் போகவே இல்லை.'

'பேரு?'

'அல்கா அல்லது சுலேகா. 'க்கன்னா கிடையாது. சுலேகா பரவாயில்லை. இங்கிலீஷையும் தமிழையும் கூட்டினா ஒன்பது வருது'. சுலேகா அல்லது அல்கா இப்போது எங்களை விட்டு கதாநாயகனை நோக்கி ஓட ஆரம்பித்தாள்.

'இந்தப் படம் ஒண்ணுதான் முழுக்க பண்ணியிருக்கு. மலையாளத்தில் ஓடலை. ஆனா ஒம்பது வயசிலருந்து தங்கச்சி, விளக்கு தூக்கி, கோலாட்டம் ஆடற பொம்பளன்னு நிறைய படத்தில வந்திருக்கு பாத்த உடனே தங்கச் சுரங்கம்னு எனக்குத் தெரிஞ்சு போச்சு.'

'நேர்ல பாத்திங்களா?'

'பாத்தேன். ஒரு ஷெட்யூல் ஆயிருச்சே! ஸ்கூல் பொண்ணு மாதிரித்தான் இருக்கும். ஆனா நல்ல உயரம். கிட்டப் பாத்தா பிலிம் சரக்குன்னே சொல்ல முடியாது கில்லாடிய்யா இந்தக் காமிரா தம்பி.'

'அடிபட்ட கேஸா?'

'சேச்சே புஷ்பம்யா! அதைப் பத்தி அவதூறு பேசாதே. மைஸூர்ல முத அவுட்டோர் ஷெட்யூல் போனப்ப ரொம்ப தோஸ்த்தாயிருச்சு. விஜிஆர் ஸாருன்னா உயிரு! என்ன? ஏரியாப் பேசிரலாமா ரெண்டா ரூபாக்கு?'

விளக்குகள் உயிர்பெற, முரளிதர் உள்ளே நுழைந்து விஜிஆரை மெல்ல நெருங்கி மரியாதையுடன் ஏதோ சொல்ல, அவர் என்னைத் திரும்பிப் பார்த்தார். நான் எழுந்து நின்று அவரைக் கரங்கூப்பி வணங்கினேன்.

'கிட்ட வா' என்றார். பயத்துடன் அருகே போனேன்

'என்ன பேரு.'

'கன்னியப்பன்.'

'க-இன்-னி-ய-இப்-ப-இன்' என்று விரல்விட்டு எண்ண ஆரம்பிக்க 'திரையில கரிகாலன்னு நயூமராலஜிக்கு மாத்திக்கிட்டங்க.'

'அப்படியா, அஞ்செழுத்துன்னா வருது?'

'இங்கிலீஷில ஒம்பது வருதுங்க.'

'உக்காரு.'

'பரவாயில்லைங்க'

'அது என்ன புஸ்தகம் முரளி?'

'ஜேம்ஸ் ஹாட்லி சேஸ்.'

'அ! அந்தாளோட 'ஈவு'ன்னு ஒரு கதை படிச்சுச் சொன்னாங்க. உனக்கு இங்கிலீஷ் வருமில்லை?'

'வரும்யா.'

'எனக்குக் கதை புடிச்சிருந்தது. 'நாட்டு' நல்லாவே இருக்குது. கொஞ்சம் தேவடியா சமாசாரம் வருது. அதை எடுத்துட்டு உள்ட்டா பண்ணாம, அதாவது அந்தப்



பொண்ணு அப்பா அம்மா தங்கச்சிங்களுக்கு சம்பாரிச்சுப் போடறதுக்கு கிளப்பில டான்ஸ் ஆடற மாதிரி கொஞ்சம் போட்டுப் பிரட்டி 'ஒன்லைன்' பண்ணிக்கிட்டு வா தமிழ்ல. பார்க்கலாம். அப்பொறம் முரளி புஸ்தகம் கொடுப்பான் வேற 'நாட்டு' இருந்தாகக்கூடச் சொல்லு. டீனா முனிம் பார்த்திருக்கில்லை. அதை வெச்சுக்கிட்டு இந்தில பண்றேன்.''

'மாமா, இவருக்கு மலையாளம் வரும்.'

'அட! அப்ப இந்தாளயே வசனம் பழகித்தர உபயோகப்படுத்தலாம் முரளி அதையெல்லாம் கவனிச்சுக்க, எத்தனை படம் பண்ணியிருக்கே.'

'அய்யா, இருவதில் ஓர்க் பண்ணியிருக்கேங்க'

'முரளி, கொஞ்சம் அட்வான்ஸ் கொடுத்துரு 'நாட்டு'க் கொடுத்தா 'ட்ரீட்மெண்ட்' எழுதுவ இல்லை?

'அதாங்க நான் இதுவரை செய்து வந்திருக்கேன்!'

சிகரெட்டை வாயில் பொருத்திக் கொண்டு அதற்குத் தங்கரான்ஸன் ஒன்றால் உயிர் கொடுத்து புகையுடன் பேசினார் 'அதான் வேணம் எனக்கு. டபிள் மீனிங்கில எழுதுவியா?

'செய்துரலாங்க.'

இப்போது முரளிதர் தன் மாமாவின் கிட்டே போய்க் கொஞ்சம் பேச அவர் என்னை மறுபடி வியப்பாகப் பார்த்தார். 'ஆமா வேணா ஒரு டெஸ்ட். எடுத்துரேன்! என்ன மச்சி பெறப்படலாமா? விழா இருக்குது நம்ம படத்துக்கு. தாளிங்க கேடயம் கொடுக்கறாங்க. கோயமுத்தூர் வெச்சுக்கிட்டியே, கொழிச்சியா இல்லையா? ஆர்ருவா பண்ணியா இல்லையா?'

அவர்கள் புறப்பட்டுச் செல்ல நான் திரையைப் பார்த்தேன். காலியாக இருந்தது. மனத்திரையில் அந்த சுலேகாவின் உருவம் மிச்சமிருந்தது.

தியேட்டரை விட்டு வெளி வந்ததும் நான் முரளிதரிடம் 'என்னங்க ஸ்க்ரீன் டெஸ்ட்டு?' என்றேன்.

'ஒண்ணுமில்லை. அடுத்த படத்திலே ஒரு சின்ன பார்ட்டுக்கு ஒரு மாதிரி உருவ அமைப்புள்ள ஆளு தேவையின்னு சொல்லிக்கிட்டு இருந்தாரு ஒரு டிஸ்கோ டான்ஸர் பார்ட்டு, கொஞ்ச நேரத்தில காலியாயிடறான். சின்ன பார்ட்டா இருந்தாலும் நல்லா வந்திருக்கு. நம்ம ருக்மாங்கதன் தான் ஸ்க்ரிப்ட் எழுதியிருக்கார்.'

தெரியுங்க' எனக்குப் பிரமிப்பதாக இருந்தது. திடீர் என்று விஜி ஆர் படத்துக்கு எழுத சான்ஸ், நடிக்கவும் சான்ஸ்!

'காலை ஷூட்டிங் இருக்குது. மத்தியானம் மூணரை மணிக்கு என்னை வந்து பாருங்க, புக்கு கொடுக்கறேன். ரெண்டு நாள்ல ஒன்லைன் பண்ணி பெரியவருக்கு படிச்சுக் காட்டி பிடிச்சுப் போச்சின்னா நிறைய செய்வார். கை தாராளம்!'

'தெரியும்யா' என்று அவரை நன்றியுடன் வணங்கினேன்.

'கூழைக் கும்பிடு போடாதிங்க உங்ககிட்ட திறமை இருக்கு. உங்களைப்பத்தி சந்துரு சொல்லியிருக்காரு அதுக்காகத்தான் நாங்க உங்களைக் கூப்பிட்டோம்.' அப்போது ஒரு வண்டி வந்து நிற்க அதன் பின்பகுதியிலிருந்து ஒருவன் ஜாக்கிரதையாக ஒரு உடையைக் கையில் பிடித்துக் கொண்டு இறங்கினான். 'ட்ரெஸ் தெச்சு வந்திருச்சா? சரி கொடு அதை' என்றான். குங்குமச் சிவப்பில் பாவாடையா கவுனா என்று சொல்ல முடியாதபடி இருந்தது. முரளிதர் அதை வாங்கி சற்று தூரத்தில் வைத்துப் பார்த்து 'அளவெல்லாம் செரியா இருக்குமில்லை'' என்றான்.

'ஒரு முறை போட்டுப் பார்த்துரறது நெல்லதுங்க. ஆல்ட்ரேஷன் வேணுமின்னா கடையாண்டை சொல்லியனுப்பிச்சா ராத்திரியே ஆல்டர் பண்ண கொடுத்துரறேன்.'



'இப்பஅவுங்க போட்டுப் பார்க்கணும்ங்கறியா ராவ்'

'ஆமாங்க.'

'இப்ப யாரை அனுப்புவேன்? எல்லாரும் போயிருக்காங்களே.'

'என்னங்க செய்யணும்?' என்றேன்

'அந்தப் பொண்ணுசுலேகா ப்ரொஜக்ஷன்ல பாத்திங்களே நம்ம கதாநாயகி, அவகிட்ட போய் இந்த டிரஸ் அளவு செரியா இருக்கான்னு கேட்டுக்கிட்டு வரணும். காலை டான்ஸ்ல இது உபயோகப்படுது.'

'நான் வேணா போயி கேட்டுக்கிட்டு வரவா?'

'சரி, வண்டி அனுப்பறேன். கேட்டுட்டு வந்துருங்க சாக்கிரதையாப் பேசுங்க, பொண்ணு ஒரு மாதிரி, அண்ணன் ஒருத்தன் செத்த முறைப்பா இருப்பான்! ராவ், இவருக்கு நாளைக்கு ஒரு டிஸ்கோ சர்ட்டு வேணம், ஸ்க்ரீன் டெஸ்ட் எடுக்கறம்.'

தையற்காரர் என்னைக் கண்ணாடி வழியாக அனுமானித்தார்.

'கரெக்ட்டுங்க.'

'ராவ் என்னங்கறிங்க? ராஜகுமாரிக்கே ஜாக்கெட் தெச்சவரு' என்று முரளிதர் சிரித்தான்.

## 3

விஜசி காலனி தாண்டி கொஞ்சம் உலர்ந்த வயல் போல இருந்த பிரதேசத்தில் திட்டம் இல்லாமல் இங்கும் அங்கும் கட்டப்பட்ட புதிய காலனியில் அந்த வீடு தனியாக இருந்தது. வாசலில் கார் நிற்க ஒரு பழுப்பு நாய் தன் அளவுக்குச் சம்பந்தமில்லாமல் பெரிசாகக்குலைத்தது 'டோம்மி கீப் கொயட்' என்று கதவருகே வந்தவனைப் பார்த்ததும் மலையாளி என்று சொல்ல முடிந்தது மலையாளிகளுக்கேயென்ற சதுர முகம், பின் தள்ளிவாரப்பட்ட சுருட்டை முடி. பனியனில்லாமல் சில்க் சட்டை அணிந்திருந்தான்.

'நீ யாரு?' என்றான்.

'விஜி ஆர்யூனிட்டில்இருந்து வரங்க. டிரஸ் கொடுத்து அனுப்பிச்சாங்க!'

அவன் உள்ளே நோக்கி 'மோளே ஆரோ டிரஸ்ஸு கொண்டு வந்திருக்குன்னு இங்நூட்டு ஒண்ணு வந்து நோக்கியாட்டே' என்றான்.

சுலேகா என்கிறவள் தலை வாரிக்கொண்டே வந்தாள் 'யாராண' என்றாள்.

'முரளிதர் அனுப்பிச்சாருங்க. நாளைக்கு இந்த டிரஸ்ஸு...'

'நிங்களை ஞான் இதுவரெ யூனிட்டிலாம் கண்டிட்டே இல்லல்லோ?' என்றாள். விஜிஆர் சொன்னாற்போல குரல் இனிப்பாக இருந்தது. பளபளப்பான நாகம் போல அடர்த்தியாகக் கூந்தல். அதை வாரிக கொணடே அந்த டிரஸ்ஸைப் பார்த்தாள். இருவரும் மலையாளத்தில் வேகமாகப் பேசிக் கொண்டார்கள். கேட்டுக் கதவை திறந்தான்.



'நாய்' என்றேன்.

'நாய் ஒண்ணும் பண்றதில்லை. போடா மோனே. அகத்து செந்து இருந்நாட்டே.'

மலையாள நாய் உள்ளே செல்ல 'நிங்கள் யாராண' என்றாள்.

'நான் அவர் யூனிட்டில ரைட்டர், கதை வசனம் எழுதுறவன்'

'ஒரு எழுத்துக்காரனோ? வரு வரு' என்று வரவேற்றாள்.

சின்ன வீடுதான். டிஸ்டெம்பர் மணம் இன்னும் விலகவில்லை. செடிகள் இல்லாத தொட்டிகள். ஒரே ஒரு கரு ரத்த ரோஜா. பழுப்பு நாய் கடமை முடிந்து விட்டது போலப் பின்புறம் சென்று காதை உயர்த்திக் கொண்டு எச் எம் வி பாணியில் உட்கார்ந்து கொண்டது. உள்ளே பிரம்பு நாற்காலிகளுக்கு அருகில் ஒரு டூ-இன்-ஒன், காமிரா — மலையாள இதழ்களிடையில் தினத்தந்தி இருந்தது. அந்தப் பெண் உடையை வாங்கிக் கொண்டு உள்ளே போனாள். அண்ணன்காரன் சிகரெட் பற்ற வைத்துக்கொண்டு என்னுடன் பேசுவதா வேண்டாமா என்று யோசித்துக் கொண்டிருந்தான்.

''வர்ற படத்துக்கு நீங்கதானே எழுதறது?''

'ஆமாம்' என்று சொல்லி வைத்தேன்.

''கிரிஜையோட பார்ட்டி நல்ல பாட்டாணோ?''

''கிரிஜா?''

''அதான் என் சிஸ்டராணம். சுலேகா ஸ்க்ரீன் பேரு.'

'என்னுடைய ஸ்க்ரீன் பேரு கரிகாலன்' என்று சிரித்தேன்.

'கரிகாலன் கேள்விப்பட்டிருக்கு.' பொய்! 'சிகரெட் வலிக்குமா?'

'வலிக்த மாட்டேன்' என்று புன்னகைத்தேன். திடகாத்திரமாக இருந்தான். மென்மையான சுலேகாவுக்கும் அவனுக்கும் ரத்த சம்பந்தம் சொல்வது கஷ்டமாக இருந்தது லுங்கியில் பெரிய பெரிய பூ மத்தியானத் தூக்கக் கண்களில் கயமை தெரிந்தது.

'நோக்கு.' திரும்பிப் பார்த்தேன். கிரிஜா என்ற சுலேகா குங்குமச் சிவப்பு உடையைப் போட்டுக்கொண்டு நின்றாள். எப்படிப்பட்ட உடை என்று சொல்ல முடியவில்லை. ஒரு மார்பை மட்டும் புடவை மாதிரி மறைக்க, மற்ற மார்பு ரிஷி கன்னிகை மாதிரி, இடுப்பைச் சுற்றி கவுன் போல வடிவம் எடுத்து கொஞ்சம் பிரித்து கால் தெரிந்தது. தமிழ் சினிமாவில்தான் இந்த மாதிரி டிஸைன்களெல்லாம் சாத்தியம் அதைப் போட்டுக் கொள்ள இவளுக்கு மூச்சு வாங்கியிருக்கும். தன்னை இங்கே அங்கே தொட்டுப் பார்த்துக் கொண்டு 'இதும் இட்டுக்கொண்டு டான்ஸு செய்தால் தையல் பொட்டிப் போம்' என்றாள் ஆனால் அவளுக்கு எந்த உடையும் பொருந்தும் போலத்தான் இருந்தது. விஜிஆர் 'ஜூபிலி சரக்கு' என்று ஆச்சரியப்பட்டுச் சொன்னதின் அர்த்தம் புரிந்தது, அவளிடம் எந்தக் குறையும் தென்படவில்லை

சில பெண்கள் அழகாக இருப்பார்கள். கூர்ந்து பார்த்தால் ஏதாவது ஒரு குறை இருக்கவே இருக்கும். மூக்கு லேசாகத் தூக்கலாக இருக்கும். அல்லது புருவங்கள் ஒன்று சேர்ந்திருக்கும் கன்னம் கொஞ்சம் உப்பலாக, கழுத்துக் கீழ் சதையாக, இல்லை—சற்று மாறு கண்ணாக இருக்கும். அப்படி ஏதும் இவளிடம் சட்டென்று தெரியவில்லை. மேலும் அழகான பெண்களிடம்தான் அழகாக இருக்கிறோம் என்கிற கர்வம் அல்லது பிரக்ஞை எப்போதும் இருக்கும், இதனாலேயே அவர்கள் செயல்களில் ஒருவித செயற்கைத் தன்மை தெரியும், இந்தபெண் தன்னைப்பற்றி எதுவுமே நினைப்பில்லாமல் இருந்தாள். அது அவள் தோற்றத்துக்கு ஒரு புதிய பரிமாணம்



தந்தது 'எங்ஙனே உண்டு?' என்று தன் உடையைப் பற்றி என்னிடமே கேட்டாள் லேசாக அவள் அசைய 'ப்யூட்டிஃபுல்' என்றேன்.

'நிங்ஙள் சும்மாதே பறயுகயா' என்று சிரித்தாள். சட்டென்று 'தினத்தந்தி'யை எடுத்து ஓரத்தில் ஒரு கவிதை எழுத வேண்டும் போல இருந்தது 'ப்ரெஸ்ட்டில கொஞ்சம் பிடிப்புன்னு சொல்லியாச்சு இரிக்க' என்றாள். 'பேர் எந்தா?'

'கரிகாலன்'.

அதைக் கேட்டதுமே சிரித்தாள்.

'சீ அங்ஙனே சிரிக்கல்ல போளே, என்றான் அவன்.

'அ! சாரல்லே' என்று அவனைப் பாசாங்காக அதட்டினாள். ஒரு சிறுமி பீங்கான் கோப்பைகளில் டீ கொண்டு வர நான் உட்கார்ந்து கொண்டு அவளைப் பார்த்துக் கொண்டே சாப்பிட்டேன். பார்க்காமல் இருக்க முடியவில்லை. மேசைமேல் இருந்த திரை இதழை எடுத்துப் பிரித்து, ஒரு பக்கத்தில் அவளுடைய கலர் போட்டோ இருந்தது. 'இது எம்கே பிரபு எடுத்ததாக்கம், எந்தானு எழுதியிருக்குன்னதுன்னு ஒந்து வாய்ச்சட்டே.'

நான் அதை எடுத்து 'விஜிஆரின் பிரம்மாண்ட தயாரிப்பில் புதிய நடிகை சுலேகா' என்று படித்துக் காட்டினேன்.

'எந்து? புதிய நடியோ? ஞான் ஒம்பது வயது முதல் அபிநயிக்கான் தொடங்கியதா ஞான் ஏதாண்டு பத்து முப்பது படத்தில் அபிநயிக்கும் செய்து செறிய செறிய வேஷம். எண்ட அம்மா ஒரு காலத்தில் பேரொத்தநடியாயிருன்னு. மரிச்சுப் போயி. ஆபோட்டோ கண்டோ? எண்ட அம்மையா'.

அவன் கட்டிய திக்கில் மாலை போட்டு ஒரு அம்மாவின் படம் இருந்தது

'தமிழ் படிக்கவே தெரியாதா?'

'கொறைச்சு கொறைச்சு அறியும்' என்று 'தினத்தந்தியை' எடுத்து அதன் கொட்டை எழுத்துக்களை மெதுவாக 'பால்காரருக்கு இருபது லெட்சம்'என்று படித்தாள்.

'வெரிகுட்'

'எனிக்கானு இருவது லட்சம் கிட்டிதுன்னு ஞான் இதொக்க விட்டுட்டுப் போயானே. எந்தின இருவது லட்சம்? பத்தாயிரம் மதி ஓ! பத்தும் வேண்டாம் ஒந்நாயிரம் மதி! கேட்டோ பாலன் சேட்டா?'

அவன் கவனிக்காமல் உள்ளே செல்ல அவன் போன திசையை முறைத்துப் பார்த்தாள். 'நான் போய் என்ன சொல்லணும்' என்றேன் உடையைப் பற்றித் தீர்மானம் கிடைக்காமல்.

'இரிக்க' என்றாள்.

'எனக்கு அவ்வளவா மலையாளம் வராது,'

'எனிக்கு தமிழ் வராது' என்றாள். நாய் வாலை ஆட்டிக் கொண்டு வர அதைத் தூக்கி வைத்துக்கொண்டு சற்று நேரம் 'மோனே, மோனே என்று அதைப் பழுது பார்த்தாள்.

'தமிழ்ப் படத்தில்... நடிக்கிறிங்க. தமிழ் கத்துக்கங்களேன்.'

''நீங்கள் கத்துக் கொடுக்கறதா?'

'கத்துக் கொடுக்கறதா' இல்லை-'கொடுக்கறிங்களா?'

'கொடுக்கறீங்களா?'

'கொடுக்கறேன்.'

'ஈ சினிமா லோகம் வளர மோசம்.'



'மறுபடி மலையாளமா? தைரியமா தமிழ்லே, பேசுங்க.'

'இந்த சினிமா உலகம் ரொம்ப மோசம்.' 'என்ன அஃறிணை கொஞ்சம் அதிகமாவருது. பரவாயில்லை. நீங்க கொஞ்சிக் கொஞ்சிப் பேசறது அழகாவே இருக்கு.

'அம்பிகை ராதை எல்லாம் தமிழ் பேசுமோ?'

'பேசும்னுதான் சொல்றாங்க.'

''ஏய்! ராதைக்கு டப்பிங்காணாம்.'

'அவங்க எப்படிப்போனா என்னங்க?'

'விஜி ஆர் ஸார் வளர...இல்லை, ரொம்ப நல்லது இல்லை, நல்லவர்.'

நான் மையமாக ஆமோதித்தேன்.

'எனிக்கு ஈ காமிரா பர்த்டேக்கு கொடுத்தது. அவுட்டோரில்' என்று காமிராவைக் காட்டினாள். சட்டென்று ஞாபகம் வந்தவள்போல 'கொஞ்சம் இருக்கட்டும். இதா வரேன்' என்று சந்தடியில்லாமல் மாடிப்படியை நோக்கிச் சென்றாள். வீட்டுக்கு மாடிப்படி இருப்பதை உணர்ந்தேன் ஒரு அறைக்குமேல் இருக்க முடியாது. அங்கிருந்து கொஞ்ச நேரத்தில் அதே முறையில் சன்னமாகத் திரும்பி வந்து என்னிடம் ஒரு சின்னப் பொட்டலத்தைக் கொடுத்தாள். 'இதை பிரிண்ட் போட்டு கொடுக்கச் சொல்றது.'

'என்ன இது.'

'சேட்டனுக்குத் தெரியண்டாம்' என்றாள். அவள் குரலில் சதியும் சின்னக் குழந்தையின் கண்ணாமூச்சு உற்சாகமும் இருந்தது 'ஒரு கவரில் போட்டு ஒட்டிக் கொடுக்கட்டும்.'

'இது என்ன?' என்று கேட்டதற்குப் பதில் சொல்வதற்குள் சேட்டன் வந்துவிட 'அப்புறம்' என்று கண்ணைக் காட்டினாள். அந்தப் பொட்டலத்தைப் பையில் போட்டுக் கொண்டேன். அவள் 'கொஞ்சம் இருக்கட்டும்-டிரஸ்ஸை கொடுக்கறது' என்று சொல்லி உள்ளே

போக—பாலன் என்னைப் பார்த்து 'வண்டி ஸ்டுடியோவுக்குப் போறதா' என்றான்.

'ஆமாம்.'

'என்னை ஜெமினில விட்டுட்டுப் போங்க.' இவன் தமிழ் அவளை விடப்பரவாயில்லை. சேட்டன் என்று ஒப்புக்கொள்வது தான் கஷ்டமாக இருந்தது. சந்தேகப் பார்வை கொஞ்சம் உயர் மட்டத்திலிருந்து என் சட்டை கசங்கியிருப்பதையும் நான் சற்றுக் கருப்பாக இருப்பதையும் தேர்ந்தெடுத்து பார்க்கும் பார்வை.

சுலேகா அந்த உடையைக் கொண்டுவந்து கொடுத்தாள். 'ராவ்கிட்ட சொல்லுங்க-இங்க ஒரு அர்றை இன்ஞ் லூஸ் பண்ணிடறது.'

அவளை விட்டுப் பிரியத் தயக்கமா இருந்தது. இன்னும் கொஞ்சம் பார்க்க வேண்டும்போல இருந்தது. இவளுக்குத் தமிழ் கற்றுக் கொடுக்க யாராவது வாயெடுத்தால் உடனே ஒப்புக் கொள்ளத் தீர்மானித்தேன். காரில் விஜிஆரை உனக்கு நல்லாத்தெரியுமா?' என்று கேட்டான் அண்ணன்காரன்.

'அவ்வளவு தெரியாது.'

'முரளியை?'

'அவரையும் அதிகம் தெரியாது. கதை எழுதக் கூப்பிட்டனுப்பிச்சிருக்காங்க. வேற ஆளில்லை. அதனால டிரஸ் சரி பார்க்க வந்தேன்.'

'கிரிஜைக்கு ஒண்ணாங்கிளாஸ் பார்ட்டா எழுதணும்.'

'சரி.'

'பாக்யராஜ் இவளைக் கூப்பிட்டது. அதை விட்டுட்டு விஜிஆர் படம் ஒப்புக்கிட்டதாக்கும்.'



'விஜி ஆர் பெரிய நேம் இல்லைங்களா? உங்க சிஸ்டருக்கு இனிமே அதிர்ஷ்டம் பாருங்க.'

'இப்பவே நிறையப்பேர் கேட்டுக்கிட்டு இருக்காங்க. பயங்கர பப்ளிசிடி!' காரின் முன்பக்கத்திலிருந்து ஸ்வாதினமாக' 'ஸ்டேட் எக்ஸ்பிரஸ்' பாக்கெட் எடுத்துக் கொண்டு அதிலிருந்து ஒரு சிகரெட் பற்ற வைத்து மிச்சத்தைப் பைக்குள் செலுத்திக் கொண்டான்.

அவனை ஜெமினியில் இறக்கி விட்டதும் டிரைவர், 'சரியான கஞ்சப் பயலுங்க! இருக்கிற பாயட்டெல்லாம் அள்ளிட்டுப் போயிருவான். காஸட்டைக்கூட எடுத்துக்கிடுவான். நீங்க இருக்கிங்கன்னு விட்டு வெச்சான். முதலாளி படம் சக்ஸஸ் ஆனா இவனுக்கு ஒரு கார் கொடுக்கிறதா சொல்லியிருக்காரு.'

'அந்தப் பொண்ணு எப்படி?

'அது பொம்மைங்க. ஒண்ணும் தெரியாது. இவந்தான் ஆட்டிப் படைக்கிறான். என்னாண்டைகூட ஒரு முறை சொல்லியிருக்கு. 'மூர்த்தி! என்னை இப்படியே கொல்லத்துக்குக் கூட்டிப் போயிடு. எல்லாத்தையும் விட்டுட்டு கிராமத்துக்குப் போயிர்றேன்னு சொல்லும். அதுக்கு கொஞ்சம் கல்யாண ஆசை இருக்குதுங்க. கல்யாணம் பண்ணிக்கிட்டு பிள்ளைங்க பெத்துக்கிட்டு வளக்கணும்கிறது. இவுங்க விடுவாங்களா? சக்கையாய் பிழிஞ்சுட்டுத்தானே விடுவாங்க. நல்ல பொண்ணுங்க.'

'இவன் அண்ணனா?'

'அண்ணன்காரன் இல்லைன்னு பேசிக்கிறாங்க. சித்தப்பா மகனோ இல்லை ஒரு வேளை லவ்வரோ ஒண்ணுஞ் சொல்ல முடியாதுங்க. இந்தமாதிரி உறவெல்லாம் ஆழமாப் போகக் கூடாதுங்க,' எனக்கு சுலேகாவைப் பற்றிக் குழப்பமாக வயிற்றில் இனம் பிரிக்க முடியாத உணர்ச்சி ஏற்பட்டது இங்கேயே காரைத்திருப்பச் சொல்லிமறுபடி

அந்த வீட்டுக்குப் போய் அவள் நிசமானவளா—அந்தக் கண்கள் அத்தனை கருமையா என்று நிச்சயம் செய்து கொள்ளப் பகுதிதறிவில்லாத இச்சை ஏற்பட்டது. யார் மேலேயோ பொறாமையாக இருந்தது. ஒரு கணம் மனம் தடுக்கிக் கேரளத்தில் மௌன ஏரிப்பரப்பின் அருகே அவளுடன் நடந்து பார்த்தேன். திகைப்பாகவும் குழப்பமாகவும் இருந்தது. இவள், இதுவரை பெண்களைத் தீவிரமாக எண்ணாத என்னை ஒருவகையில் சங்கடம் பண்ணினாள்.

அவள் என்னிடம் சதிப் பார்வையுடன் கொடுத்த அந்தக் காகிதப் பொட்டலத்தைப் பிரித்துப் பார்த்தேன். 'கோடக்ரோம்' பிலிம் சுருள் அது எதற்கு என்னிடம் கொடுத்தாள் என்று விவரம் கேட்க வேண்டும். நாளை படப் பிடிப்பு இடைவேளையின் போது கேட்டுவிடலாம். அவளுடன் பேசுவதற்கு ஏதாவது சாக்கு.

டப்பிங் தியேட்டர் வெளியில் அலுமினிய நாற்காலியில் நான்கைந்து பேர் உட்கார்ந்து பியர் அருந்திக் கொண்டிருந்தார்கள். முரளி என்னைப் பார்த்ததும் 'என்ன பொருந்துதாம்மா?' என்றான்.

'கொஞ்சம் செஸ்ட்டில் புடிக்குதுன்னாங்க.'

'துரை, நீ போய் ராவ்கிட்ட தகவல் சொல்லு காலை. ஸ்டுடியோவில் கொண்டாந்து கொடுக்கணும்னு சொல்லு அப்படியே 3636 ஐ எடுத்துக்கிட்டு நீ சாப்பாட்டுக்கு போய் வர்றப்ப சாமுவேல் கிட்ட செட்டுக்கு சொல்லிடு.' தொடர்ச்சியாக அவன் ஆணைகள் பிறப்பிக்கும் போது இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன் கண் விடல்' என்று வள்ளுவரை நடை முறையில் பார்த்தேன். 'சுலேகாவைப் பற்றி என்ன நினைக்கிறீங்க? அண்ணனைச் சந்திச்சிங்களா?'

'பொய்யில்லா பொண்ணுங்க. அண்ணனைப் பத்தி அப்படிச் சொல்ல முடியாது.'



'கதாசிரியர் நல்லா கணிச்சு வெச்சிருக்கிங்க. தமிழ் தான் சுட்டுப் போட்டாலும் வரலை. டப்பிங் சொந்த வாய்ஸ்தான்னு பெரியவர் தீர்மானம் பண்ணியிருக்காரு. சந்தர்ப்பம் கிடைக்கப் பல்லாம் சொல்லிக் கொடுங்க. அந்த ஒன்லைனுக்கு புஸ்தகம் வீட்டில இருக்குது. போறப்ப வாங்கிட்டுப் போயிருங்க.'

நிறைய இருட்டினப்புறம் தான் அவனுடன் புறப்பட முடிந்தது. நாடகக் கொட்டகை வட்டத்தின் அருகில் கிரிக்கெட் மைதானத்தில் சரகில் அமைதியாக இருந்தது விஜிஆரின் வீடு. எட்டடி உயரத்துக்கு குரோட்டன்ஸ் சுத்தமாக முடிவெட்டப்பட்டிருந்தது. சுற்றிலும் மறைந்த தால் உள்ளே காம்பவுண்டுக்குள் நுழைந்த பின் தான் இத்தனை பெரிய வீடு என்று தெரிய வந்தது. விஜிஆரின் மனைவி வாசலில் ஊஞ்சலாடிக் கொண்டு 'ஞானபூமி' படித்துக் கொண்டிருந்தாள். நெற்றியில் பெரிய பொட்டு.

'என்ன முரளி இத்தினி நேரம்?' என்றாள்.

'ரொம்ப வேலைக்கா' என்றான்.

'என்ன ஆச்சு, ஏதாவது மேற்கொண்டு தெரிஞ்சுதா?'

'இல்லை. அதேதான்.'
என்னைப் பார்த்தாள். 'இவரு யாரு புதுசா இருக்கு'

'கதாசிரியர். கொஞ்சம் இருங்க' என்று உள்ளே போனான். அவள் என்னைப் பார்வையால் அளவெடுத்தாள். பட்டுப் புடவையில் பாதி சரிகையாக இருந்தது. உடம்பில் சாத்தியமுள்ள இடமெல்லாம் நகை. வராந்தா வெளிச்சத்தில் வைர மூக்கு சற்றே நீலம் காட்டியது. 'உங்களுக்குச் சொந்த ஊரு எது?'

'தேனிம்மா.'

'தேனி. மாதிரி சுறுசுறுப்பா இருப்பிங்களாக்கும். சுலேகாவைப் பாத்திங்களா?'

'பாத்தேம்மா' என்றேன் கேள்வியை எதிர்பார்க்காத தயக்கத்துடன்.

'நல்ல அழகில்லை அந்தப் பொண்ணு?'

'ஆமாம்மா.' முரளி வந்து அந்தப் புத்தகத்தை என்னிடம் கொடுத்தான். 'டிராப் பண்ணிக்கிட்டு வண்டி அனுப்பிச்சிருங்க.'

'அவளுக்கு இருவத்திரண்டு வயசு' என்றாள். தேவடியா! எல்லாருமே தேவடியாளுங்க!'

'சரி சரி, இதெல்லாம் இவருக்கென்ன இப்ப? என்றான் முரளி. நான் 'வர்றேம்மா' என்று வணக்கம் தெரிவித்துவிட்டுப் புறப்பட்டேன். விஜிஆரின் மனைவி கொஞ்சம் அசடு போலும்!

ரங்கநாதன் முனை ஹோட்டலில் சாப்பிட்டு விட்டு அறைக்கு வந்து படுத்து அந்தப் புத்தகத்தைப் புரட்டிய போது சிந்தனை தடுமாறியது. புத்தகக் கதாநாயகியும் சுலேகாவும் கலந்து போய்க் குழப்பினார்கள். அதிகாலை எழுதிக் கொள்ளலாம் என்று அலாரம் வைத்துப் படுத்த பின்னும் விளக்கணைத்த பின்னும் சுலேகா அ ஆ இ ஈ என்று பாலபாடம் பயிலும்போது, தேவடியா ஒவ்வொரு எழுத்துக்கும் சிரிக்கணுமா என்று விஜிஆரின் மனைவி கேட்க பாடம் மாறிப்போய் விஜிஆரின் மனைவிக்குத் தேனியில் மலையாளம் கற்றுக் கொடுப்பதுபோலக் கனவு பாதை தவறியது!

# 4

மறுநாள் காலை சுலேகா என்னை ஸ்டுடியோவில் அடையாளம் கண்டு கொள்ளவில்லை. ஓரிரு முறை சிரித்துப் பார்த்தேன். வீண். விஜிஆர் ஸாருடன் நின்றவாக்கிலேயே சிரித்துப் பேசிக் கொண்டிருந்தாள். அண்ணனைக் காணவில்லை டான்ஸ் மாஸ்டர் பெண்மணி. 'ப்ளேபாக்' போட்டு ஒரு வரியில் ட்டூ, ட்டு என்று தாளவாத்தியத்துக் கேற்ப தலைக்கு மேலே கைகளைக் கோர்த்துக் கொண்டு இடுப்பை வெட்டச் சொன்னாள். 'ராஜூ ஸார், இதான் ஃபைனல் டேக், இனி எடுத்தா அயடக்ஸ் விளம்பரம் தான்' என்றாள். விஜிஆர் அவளைக் 'கண்ணு' என்று அழைத்தார். நான் மரத்தடியில் ஒதுங்கினேன் என்னை அவள் கவனிக்கவில்லை என்று குறையாக இருந்தது ராவோடு ராவாக மையல் கொண்டு விட்டால் அவள் என்ன செய்வாள்? விஜிஆர் என்னைக் கூப்பிட்டு 'என்ன ஒன்லைன் ரெடியா?' என்றார்.

'இல்லைங்க, நாளைக்குத் தயாராயிடும்.'

விஜிஆர் ஸார்' கரிகாலன் எனக்குத் தமிழ் கத்துத் தரது'.

அட! என்னை ஞாபகம் இருக்கிறதே.

'கத்துக்கறியா கண்ணு? ரொம்பத் துடி என் கண்ணு!' என்று அவள் இடுப்பைத் தட்டினார். போங்க ஸார் என்று இவரை அவள் திரும்பத் தட்டி கண்ணாடியை எடுத்துக் கொண்டு மாட்டிக்கொள்ள நான் சட்டென்று முரளியைப் பார்த்தேன். சினிமாவில் இதெல்லாம் சகஜம் என்பது போலப் புன்னகைத்துக் கொண்டிருந்தான்

'எல்லாரையும் சாப்ட்டுரப் போறா பாரு. ஸ்ரீதேவி, ஜெயப்ரதா எல்லாத்தையும் முழுங்கிறப் போறா பாரு.'

'எனிக்கு அதெல்லாம் வேண்டா.'

'கல்யாணம் கட்டிக்கிட்டு, அது என்ன ஊரு கொல்லம பக்கத்தில் ஏதோ சொல்லுவியே, அங்க குழந்தை பெத்துக்கணும். அதானே வேணம் உனக்கு?'

'ஆமாம், ஆமாம்.'

'முதல்ல நடி. அப்புறம் கல்யாணம்.'

'இதுதான் லாஸ்ட் படம்.'

'இதான் முதல் படம்.'

'இதான் லாஸ்ட்டுன்னு ப்ராமிஸ் பண்ணுங்க. அப்பதான் அடுத்த ஷாட்டு!' என்று அவர் மார்பில் செல்லமாகக் குத்தினாள். 'சரி போ ஓடு! சமத்தா ஆடு' என்று அவளைப் பிடித்துத் தள்ளினார், எழுந்தார். 'முரளி, பிலிமுக்கு ஏற்பாடு பண்ணிட்டியா?'

ஸ்டாக் இருக்குது மாமா. கொஞ்சம் செக்கில கையெழுத்துப் போடணும். ஆபீஸ் பக்கம் வந்தீங்கன்னா...'

'வரேன்' என்று எழுந்து சென்றார். 'முரளி ஸார், ஒரு விஷயம், நேத்திக்கு டெஸ்ட்டு ஏதோ சொன்னீங்களே?' என்று கேட்டேன்.

'மறந்துட்டேன். நேராப் போனிங்கன்னா எட்டாம் நம்பர் ப்ளோர் வரும். அங்க காஸ்ட்யூமர் ராதாகிருஷ்ணனைப் பாருங்க. அவரு சட்டை கொடுப்பாரு. பக்கத்திலேயே டெஸ்ட் எடுப்பாங்க. நடந்துக்கிட்டுதான் இருக்கு. சீக்ரம் போங்க!' நான் விரைவாக நடந்து அங்கே சென்றேன்.

ராதாகிருஷ்ணன் என்பவர் 'என்ன சைஸு?' என்று கேட்டார்.

'நுப்பத்தெட்டுங்க.'

புதிதாக பளபளப்பான சட்டை கொடுத்தார். அதன் முதுகில் இரண்டு இதயங்கள் அம்புக் குத்தப்பட்டு ரத்தம் சிந்திக் கொண்டிருந்தன.



நான் அங்கே செல்வதற்குள் காமிரா துணியால்மூடப்பட்டு விட்டது ஒரு ஆள் கவலையுடன் ஒரே திசையில் பார்த்துக் கொண்டிருக்க அவரைக் கேட்டதில் 'ஏனையா இருக்கிறவனல்லாம் மனுஷனா மாடாய்யா! ஒவ்வொருத்தரா நீர்ச் சுருக்குக்காரனுக்குச் சொட்டறாப்பல வந்திங்கன்னா நான் எப்ப லஞ்சுக்குப் போறது?'

'முரளி ஸார் இப்பதான் சொல்லியனுப்பிச்சார்.'

'காமிராமான் போயாச்சு. நாளன்னைக்கு வா மறுபடியும்,'

நான் சற்று ஏமாற்றத்துடன் தான் விலகினேன். முரளியிடம் திரும்பி வந்து சொன்னபோது கூலிக்கு மாரடிக்கிற பயலுவ. ஆளை விட்டு இருக்கச் சொல்லியிருக்கு. அரை நிமிஷம் தங்க மாட்டாங்களே.' சுலேகா என்னைக் கண் கொட்டாமல் பார்த்து 'இன்னைக்கு தமிழ்ப் பாடம் உண்டா?' என்றாள்.

'வேண்டாம். நாளைக்கு! இன்னைக்கு ஷூட்டிங் முடிஞ்சு வரநேரமாயிடும்.' அவளருகில் இருப்பதே பாக்கியம் போல இருந்தது முரளி வேறு வேலையாக விலகிச் செல்ல சுலேகா 'இந்தச் சட்டை உங்களுக்கு நல்லாவே இருக்குது. ரஸ்ட் கலரா, ஆப்பிள் கலரா?'

'உன் உதடு கலர்.'

'இந்த மரத்துக்குப் பேர் ஜாக்காராண்டா. இங்க எத்தனை பேருக்கு இந்த மரத்துப் பேர் தெரியும்.''

''ஆமாம்.''

'நீங்கள் கவிதை எழுதுமோ?'

''எழுதுவேன்,''

'என்னைப் பத்தி ஒரு கவிதை சொல்லேன்.'

'அப்படி சட்டுனு வராது. யோசிச்சு எழுதிக்கொண்டு வரேன்.'

'நான் ஒண்ணு சொல்ட்டா, புரியுமா'

'சொல்லுங்க!'

**உயிரின் உணர்வேகும் நீரினு நமஸ்காரம்**
**ஊரினு நீரே குன்னமாரிக்கு நமஸ்காரம்**
**மாரிக்கு மாதாவாகும் காரினு நமஸ்காரம்**
**காரினு சிறகாகும் காற்றக்கு நமஸ்காரம்**
**காற்றினு குளிரேகும் காடினு நமஸ்காரம்**
**காடினு காவலாகும் நாடினு நமஸ்காரம்**
**நாடினு கண்ணாய், கையாய், காலாய், வர்த்திக்குன்ன**
**நரனு நமஸ்காரம் நரனு நமஸ்காரம்**
**நரனே நரனாக்கும் தர்மமே நினக்காயிட்டு**
**ஆயிரம் நமஸ்காரம் ஆயிரம் நமஸ்காரம்.**

'எப்படி?'

'நல்லா இருக்கு. 'மாரி'ன்னா தமிழ்லயும் மழை; 'கார்'னா தமிழ்லயும் மேகம்.'

அவளை டான்ஸ் மாஸ்டர் அழைக்க மறுபடி இடுப்பு வெட்டுவதற்காகச் சென்றாள். ப்ளே பாக் யூனிட் நாராசமாக 'வாடி எந்தன் பைங்கிளி' அபத்தத்துக்கும் அவள் சொன்ன எளிய கவிதை வரிகளுக்கும் உள்ள வித்தியாசத்தை வியந்தேன்.

இவளுள்ளே ஒரு ஸன்னமான குழந்தை, ஒரு கவிதா நெஞ்சம் பொதிந்திருக்கிறது. இவளைப் பற்றி ஏனோ கவலையாக இருந்தது சுற்றப்பட்டவர்கள் எல்லோர் பார்வையிலும் களங்கமிருந்தது. டான்ஸ் உடை அவள் பாதி மார்பைக் காட்ட காலில் வெண்மை தெரிய எல்லாரும் ஒரு சமூகமுயற்சியாக அவளைத் தோலுரிப்பது போலப் பட்டது.



நேராக அறைக்கு வந்தேன். அவளுக்கு கவிதை எழுதித் தர வேண்டும் என்று உற்சாகமாகி விட்டது. நான் பைத்தியமாகிக் கொண்டிருக்கிறேன். 'இந்தப் பொண்ணு யாரையும் கலக்கிரும் மச்சி' என்று விஜி ஆர் சொன்னது நினைவுக்கு வந்தது. எட்டு முறை கவிதையை ஆரம்பித்துக் கிழித்துப் போட்டேன். 'ஒன்லைன்' ஒருவரி கூட இன்னும் ஆரம்பிக்கவில்லை. விஜி காலனி போனால் என்ன என்று தோன்றியது. கவிதை பிறக்கவில்லை. கிறுக்குத்தான் பிடித்திருந்தது.

ராத்திரி ஒரு மணிக்குப் பக்கத்து அச்சாபீஸ் ட்ரெடில் சப்தம் கேட்டு எழுந்துவிட்டேன். சட்டென்று அந்தக் கவிதை உதயமானது—

**'வாய்ப்புக் கிடைத்தால்,**
**விடுதலை செய்து,**
**ஒரு ஜலப்பரப்பில்**
**இந்தத் தங்க மீனைச் சேர்த்துவிட வேண்டும்'**

## 5

ஒரு வாரம் சுலேகாவைத் தினசரி பார்த்துத் தமிழ் தரச் சந்தர்ப்பம் கிடைத்தது முரளிதர் எனக்காகப் பஸ் ஸ்டாண்டு ஓட்டலிலே ரூம் போட்டுத் திரைக்கதை எழுதச் சொன்னான் பச்சை பெயிண்ட் அடித்துச் சுவர்களில் மூட்டை தேய்த்த ரத்தக் கறைகளுக்கு இடையில் ஆங்கில நாவலுக்குச் சினிமா வேஷம் கொடுத்தேன். இந்தக் கலையில் நான் சற்றுப் பழக்கப்பட்டு விட்டதால் சுலபமாகச் செய்ய முடிந்தது.

விஜி ஆருக்கு எழுதினதை வாசித்துக் காட்டக் காத்திருந்து தாவு தீர்ந்துவிட்டது. ஒரு முறை ஆபீஸ் அறை

யில் சிக்கி என் கதைச் சுருக்கத்தைக் கேட்கத் தயாராக இருந்தபோது பம்பாயிலிருந்து ரமேஷ் ஸிப்பியிடமிருந்து ட்ரங்க்கால் வந்து காணாமற்போய்விட்டார். மறுமுறை பாம்குரோவ் ஓட்டலில் 234ஆம் எண் அறையில் ஒருநாள் ராத்திரி பதினோரு மணிக்குக் கூப்பிட்டிருந்தார். 'முழுக்க வாசிச்சுக் காட்டிருய்யா. நாளைக்கு இதை முடிவெடுத்தே ஆகணும். கதை கிடைக்காம பூஜை போட்டதே இல்லை. சொல்லு!

சிகரெட் பற்ற வைத்துக்கொண்டு கையில் ஸ்காட்ச் கோப்பையை நிரப்பிக் கொள்ள நான் முதலில் 'ஒன் லைனைப்' படிக்க ஆரம்பித்தேன் என் கதையில் கொஞ்ச நேரம் கவனம் செலுத்தினார். நமக்குத் தோதுப்படாத கதை அது எப்படியோ விஜி ஆருக்கு அதன் மேல் மோகம் வெள்ளைக்காரர்கள் கூட மோசமாக எழுதுவார்கள் என்பதற்கு அத்தாட்சியாக இருந்தது.

'குமார் காரை எடுத்துக் கொண்டு எழிலியின் வீட்டுக்குப் போகிறான் (மூலக் கதையில் எமிலி) அங்கே மெல்லக் கதவைத் திறக்கையில் லேசாக ரத்தக் கறை தெரிய நாய் குரைக்கும் சத்தம் கேட்கிறது...'

'இருய்யா! முரளி, நான் இந்தக் கதையா அன்னைக்கு சொன்னேன்?' அருகே கை கட்டிக் கொண்டு நின்ற முரளி 'ஆமாம் மாமா. நான் அப்பவே நல்லால்லைன்னு சொன்னேன். நீங்கதான் கேக்கலை.'

'இல்லைடா, வேற சொன்னேன். இது ரொம்ப அடாஸா இருக்கு இத பாரு கரிகாலா, உங்கிட்ட ஏதாவது நல்ல நாட்டா இருக்குதா?

'உறங்காதே!' சட்டென்று ஞாபகம் வர, 'இருக்கு, சொல்லட்டுங்களா '

'இப்ப லேட்டாயிருச்சு. காலைல பளிச்சுன்னு ஸ்டுடியோவுக்குக் கிளம்பறதுக்குள்ளே சொல்லிரு. தங்க



நாட்டா இருக்கணும்! என்ன? போய்ட்டு வா. சுலேகா உன்னைப்பத்தி கேட்டுக்கிட்டு இருந்தது. நல்லா தமிழ் கத்துக் கொடுக்கறியாமே?''

'அந்தப் பொண்ணு நல்லாவே கத்துக்குதுங்க?'

'பத்து நாளில புடிச்சுக்கும். ரொம்ப துடி அது. எங்கிட்ட உயிரே வெச்சிருக்கு! என்ன முரளி?'

'ஆமாம் மாமா,' விஜி ஆர் கிளம்பி ஸ்டூடியோவுக்குப் போய்விட்டார்.

வெளியே வந்தபோது சுலேகாவுக்காக வண்டி ஒன்று போகிறதாகச் சொன்னார்கள். ஸ்டூடியோவில் ஷூட்டிங் முடிந்து வீட்டுக்குப் போகிறாளாம். அதில் தொற்றிக் கொண்டேன் அண்ணன் பாலன் சுலேகா விஜி ஆர் மூவரும் பேசிக் கொண்டிருக்க சற்று தூரத்தில் முரளி நின்று கொண்டிருந்தான். விஜிஆர் தலையைத் தலையை ஆட்ட சுலேகாவும் கொஞ்சம் உணர்ச்சி வசப்பட்டுப் பேசினாற் போல இருந்தது. அண்ணன் அவளோட கார் கதவுவரை பேசிக்கொண்ட வந்தான்.

'நீ வளரே த்ரிதி பிடிக்கன்னு. அத்தே உறத்தோடு அங்ஙனே சோதிச்சதன்னே தெற்றாணு' என்றான். பாலன் வண்டியில் ஏறிக் கொள்ளவில்லை. பின் ஸீட்டில் சுலேகா மட்டும் ஏறிக் கொள்ள டிரைவர் மூர்த்தி மௌனமாக காரைச் செலுத்தினான். என்னைக் கவனிப்பாள் என்று திரும்பிப் பின்பக்கம் பார்த்தேன். சுலேகா அழுது கொண்டிருந்தாள் மூர்த்தி அதைக் கேட்கவில்லை போல கார் ஓட்டிக் கொண்டிருந்தான். எனக்கு மிகவும் சங்கடமாக இருந்தது. நான் இருப்பதைக் கவனிக்காமல் அழுகையில் கவனமாக இருந்தாள் கைக்குட்டையால் முகத்தை அழுத்தி அழுத்தி துடைத்துக்கொண்டு விட்டு விட்டு அழுதாள. கொஞ்சம் அடங்கட்டும் என்று காத்திருந்து மன்னிச்சுக்குங்க எதுக்கு அழறீங்க? என்னால் ஆறுதலா ஏதாவது சொல்ல முடிஞ்சுதுன்னா...' அப்போதுதான் என்னை நிமிர்ந்து பார்ததாள்.

'அட! தமிழ் வாத்தியாரா? ஸோரி' என்று கண்ணீரிடையே சிரிப்பது பஜார் விளக்குகளின் கடக்கும் வெளிச்சத்தில் கன்னத்து முத்துடன் தெரிந்தது.

'படப்பிடிப்பில ஏதாவது நடந்து போச்சா?'

'இல்லியா' என்றாள்.

'பின்ன என்ன விஷயம்'

'சொந்த விஷயம்' என்றாள். எனக்கு மேலே கேட்கத் தயக்கமாக இருந்தது விஜசி காலனி வந்துவிட அவள் இறங்கிக் கொள்ள 'குட்நைட்' என்றேன்.

'வாங்க வந்துட்டு சாயா அடிச்சுட்டுப் போறது. சேட்டனுக்கு கார் வரும்'

நான் சந்தோஷத்துடன் இறங்கிக் கொண்டேன். அந்தச் சிறுமி கதவைத் திறக்க உள்ளே அவளுடன் செல்லும்போது 'பிலிம் என்ன ஆச்சு' என்றாள்.

'டெவலப் பண்ணக் கொடுத்திருக்கேன்

'நேரே எங்கிட்ட கொடுக்கணமாக்கும். கரிகாலன் சாருக்கு விவாஹம் கழிஞ்சோ?''

'இல்லை.'

'யாராவது லெவ் பண்றதா''

'இல்லை, உன்னைத்தான்!'' என்று சொல்ல வாயெடுத்தேன்.

'கவிதை என்ன ஆச்சு?'

'ஆச்சு' என்றேன். அந்த 'தங்க' மீனைச் சொன்னேன்

'தங்க மீனு நான்தானே?'

'ஆமாம்'



'கரிகாலன் என்னைத் தண்ணில சேரக்குமோ?'

'நிச்சயம் செய்யறேன் சுலேகா'. அவள் கண்களில் நீர் திரையிட்டது.

கரிகாலன் சத்தியம் அடிச்சு சொல்லணும், யார் கிட்டேயும் சொல்ல மாட்டேன்னு.'

'யார் கிட்டேயும் சொல்ல மாட்டேன் சுலேகா! சொல்லுங்க.'

'நான் ஒருத்தரை விவாஹம் கழிக்கப் போறது. ரொம்ப ரஹஸியம். பிரஸ்ஸுக்கு சொல்லக் கூடாது! சத்தியம் பண்ணிச் சொல்லணும்' என்று கையை நீட்டினாள்.

நான் திகைப்புடன் அவள் கையைத் தட்டி வாக்களித்தேன்.

'யார் கிட்டயும் பரயண்டா... சொல்றதில்லை. என்ன? எனிக்கு ஈ சினிமையெல்லாம் வேண்டாம். ஒம்போது வயசிலிருந்து அபினயம் செஞ்சு அலுத்துப் போச்சு. ரொம்ப மோசம், காமிரையின் முன்னாலே என்னைப் பொம்மை மாதிரி வெச்சு எல்லாரும் வேடிக்கை பார்க்கறது. பணம் வந்து என்ன பிரயோசனம்? சந்தோஷம் இல்லை. பதிமூணு வருஷம் போதும் எனிக்கு பேர் வேண்டாம், பிரபலம் வேண்டாம். ஒரு கொச்சு... சின்ன வீடு. கொஞ்சம பணம் போதும். ஒரு நல்ல கணவன். எல்லாத்தையும் விட்டுரும். எனிக்கு கரிகாலன் ஹெல்ப் தேவையா இருக்கு. மைஸூர்ல நடந்ததிலே தொடங்கி எல்லாம் சொல்லிடறது. யார்கிட்டயும் சொல்ல வேண்டாம். பிரஸ்ஸுக்கு சொல்ல வேண்டாம். அவர்தான் இப்ப யார்கிட்டயும் சொல்லவேண்டாம்னு சொல்லியிருக்கு. கரிகாலன் கிட்ட மட்டும் நான் சொல்றது!'

சரி சரி, யாரைப் பற்றிச் சொல்லப் போகிறாள்? இதற்குள் வாசலில் கார் கதவைச் சாத்தும் சப்தம் கேட்க 'சேட்ட வந்து, இப்ப வேண்டாம். சண்டே ஷூட்டிங் இல்லா சேட்டன் கொச்சிக்குப் போறது. வீட்டில் யாரும் இல்லாமல் நான் தனியா இருக்கும். அதனால வீட்டுக்கு மத்தியானம் சாப்பிட வரது நான் எல்லாம் சொல்லிவிடறது. என்ன?''

பாலச்சந்திரன் உள்ளே நுழைந்து என்னை வெறுப்புடன் பார்த்தான். நீ ஏன் இங்கிருக்கிறாய்? என்பதுபோல வாசலில் டிரைவர் ஹார்ன் அடித்தான் நீங்க போங்க— நேரமாயிடுச்சில்ல?' என்று என்னைத் தள்ளாத குறையாகக் கதவைச் சாத்தினான். அவனிடம் விஸ்கி வாசனை இருந்தது. காரில் அறைக்குத் திரும்பும்போது ஏன் அண்ணனிடம் சொல்ல வேண்டாம் என்கிறாள்? மைஸூரில் நடந்ததென்ன? ஞாயிற்றுக்கிழமை என்ன சொல்லப் போகிறாள் என்று யோசித்தேன். எனக்கு அவளது முகந்தெரியாத காதல் கணவனைப் பற்றிப் பொறாமையாக இல்லை. அவளை எந்த வடிவத்திலும் என்னால் காதலிக்க முடியும். என் காதலுக்கு அவன் உடல் தேவையில்லை உள்ளம்தான்! முதன் முதலாக அவள் வாழ்க்கை அத்தனை ஒன்றும் சிக்கலில்லாததல்ல என்பதை அவள் கன்னத்தில் விழுந்த கண்ணீர் முத்துக்கள் அறிவித்தன

## 6

மறுதினம் 'திரைமலர்' என்ற பத்திரிகையில் அந்தச் செய்தி வந்திருந்தது அதையும் என் பக்கத்து அறை ஆசாமி பார்த்துவிட்டுச் சொல்லித்தான் தெரிந்து கொண்டேன். அதில் 'காற்றினிலே' என்கிற பகுதியில் 'குருவி' என்பவர் எழுதியிருந்தார்.



'விஜிஆரின் கேரளக் கதாநாயகி முதல் தமிழ்ப் பட ரிலீஸுக்கு முன்பே காதலனையும் பார்த்துக் கொண்டு விட்டாளாம்! ஒரு தமிழாசிரியராம். விஜிஆரின் அடுத்த பெரிய படத்தில் இவள் நடிப்பை பார்ப்பதற்கு முன்னே நாமெல்லாம் இடுப்பைப் பார்க்கும் படியாகசக பத்திரிகைகள் பயங்கர பப்ளிஸிட்டி கொடுக்க நடிகை சொந்தக் குரலில் பேச ஆசையாம். தமிழ் சுற்றுக் கொடுக்க வந்த குட்டிக் கதாசிரியர் கருப்புக்கால் சோழன் தமிழுக்குப் பதில் மற்றதெல்லாம் கற்றுக் கொடுப்பதாகத் தெரிகிறது.

சுலு இவரிடம் என்ன கண்டாளோ? காதலுக்குக் கண்ணில்லை என்று லேசாகவோ சொன்னார்கள்.

'கல்யாணப் பேச்சுக்கூடக் காற்றிவாக்கில் அடிபடுகிறது. விஜிஆர் கொதிக்கிறாராம்'

எனக்கு அதைப் பார்த்ததும் ஆத்திரமும் பயமும் ஏற்பட்டது விஜிஆர் இதைப்பார்த்தால் என்ன சொல்லுவார்? அவ்வளவுதான். என் எல்லாமே கோவிந்ததான்! உடனே டிஸ்மிஸ்! சுலேகா என்ன சொல்லுவாள்? முரளிதர்? யார் இந்தச் 'குருவி?' அவனை அப்படியே பிடித்துக் காலின் கீழ் அழுத்தித் தேய்க்க வேண்டும் போல ஆத்திரமாக இருந்தது, பத்திரிகை சுதந்திரம் என்றாலும் பொய் சொல்வதற்கு ஒரு அளவு வேண்டாம்? இப்போது என்ன செய்வது? யூனிட்டில் நிச்சயம் இதைப் படித்திருப்பார்கள்.

யூனிட்டிலிருந்து கார் வந்தது. 'கூப்ட்டனப் ச்சாருங்க

'எதுக்காம்?'

'அதெல்லாம் எனக்குத் தெரியாதுங்க' எப்படித் தப்பிப்பது! உடம்புசரியில்லை என்று சொல்லிவிடலாமா? எப்போதாவது விஜிஆரை எதிர்கொண்டே ஆகவேண்டும். இப்போதே முடித்துவிடுவது நல்லது காரில் போகும் போது மூர்த்தி மௌனமாக இருக்க இவனும் படித்திருப்

பான் என்று தோன்றியது எம்போதும் கொஞ்சமாவது என்னிடம் பேசவான். இன்று பேசவில்லை.

நான் சென்ற போது விஜிஆர் குளித்துவிட்டுத் திருநீறுடன் பொட்டுடன் ப்ரொஜக்ஷன் அறைக்குக் கீழ் இருந்த கம்ப்யூட்டருக்கு சூடம் காட்டிக்கொண்டிருந்தார் என்னைப் பார்த்து வாங்க காதலரே' என்றார்.

எனக்குத் திக்கென்றது. 'அய்யா என்ன சொல்றீங்க '

'நீ திரைமலர் பார்க்கவில்லை போல இருக்கு.'

'நீங்க பாத்துட்டிங்களா?'

'இந்த மாதிரி சாக்கடை விஷயங்களை எல்லாம் நம்ம பயலுக தவறாமக் காட்டிருவானுங்க.'

'அய்யா அதெல்லாம் அபாண்டம் குருவிக்கறவரு...'

'குருவி விடற சரடு எனக்குத் தெரியாதா? நான் இதெல்லாம் நெம்பறவனா? தாளி கூட்டியாய்யா அந்த... யானை சமாதி கட்டிரலாம்! என்ன மோசமான பப்ளிஸிட்டி பாரு, எம் பொண்ணு காதல் பண்ணிச்சுன்னு வதந்தி போடணும்லா என்னைக் கேளு! நான் கொடுக்கறேன் வதந்தி! ராஜேஷ் கன்னாவோடு போடு. இல்லை அவென் யாரு சிவப்பா கோழி மாதிரி இருப்பானே '

'ரிஷிக் கப்பூர்'

'ஆ! அவன் கூடப்போனதா எழுது! டேஸ்ட்டா இருக்கும் அதைவிட்டுட்டு யூனிட்டில மூலைல உக்கார்ந்துக்கிட்டு கரிகால் சோழன் ஆட்டுக்கால் சோழன் என்னய்யா சொண்ட்டி பப்ளிஸிட்டி இது யார்யா இந்தக் குருவி? கூட்டியாய்யா. யோவ்! கரிகாலன், நீ ஏதாவது அவனைச் சந்திச்சு இந்த மாதிரி அக்கப்போர் கொடுத்தியா?'

'இல்லைங்கய்யா. இந்த ஆளு யாருன்னே தெரியாதுய்யா' என்றேன் கண்ணீருடன்.



முரளிதரன் தெளிவாகப் பேசினான். 'மாமா, இதை விட்டுருங்க. இந்தப் பத்திரிகை அடாஸு. மொத்தமே அஞ்சாயிரம் காப்பிதான் அச்சாகும். பாஸ் கொடுக்க லைன்னு கோவத்திலே இந்த மாதிரி ஏதாவது செய்தி போடுவாங்க. எடிட்டர் அட்ரஸ் பாத்து வெச்சிக்கிட்டேன். ஆயிரம்விளக்கிலே இருக்குது. இதனால ஒண்ணும் டாமேஜ் கிடையாது மாமா!'

'உனக்குத் தெரியாது. இதைப் பார்த்து குமுதங்காரன் வளத்துவான்!' விஜிஆர் என்னைப் பார்த்து 'நிசமா நீ தமிழ்தானே கத்துக் கொடுத்துகிட்டிருக்கே? இல்லை காதலா? உங்க மாதிரி எழுத்தாளங்களை எல்லாம் நெம்ப முடியாது. கரிமுனி மாதிரி இருந்துக்கிட்டு பொம்பளங்களைக் கவர்ற வசிய சக்தி ஏதாவது வெச்சிருப்பிங்க! என்ன எளவுகவிதை கதை எழுதுவாங்களோ! பொம்பளை ருசி இவுங்களுக்கு உண்டு.'

'அய்யா இல்லைய்யா, உங்களுக்குத் துரோகம் நினைப்பாங்களா?'

'எனக்கில்லையா துரோகம்? கம்பெனிக்கே ஆயிருதில்லை! இப்ப அந்தப் பொண்ணு மேல ஒரு களங்கம் விளந்திருச்சில்லை! முரளி, நீ எப்படியாச்சம் அந்தக்காடை குருவியை அதட்டி வையி! என்ன சோழா? காதலா! நீயும் பார்த்து அதட்டி வையி! இனிமே இந்த மாதிரி எழுதினா கொட்டையைப் பெசைஞ்சுருவோமுன்னு சொல்லு இல்லை நீயே பெசைஞ்சுட்டு வந்துரு! மதுரைக்காரன் தானே, சிலம்பம் எல்லாம் ஆடுவியே'' விஜிஆர் இந்த விவகாரத்தை லைட்டாக எடுத்துக் கொண்டது எனக்கு உற்சாகமாகவே இருந்தது. நல்ல வேளை விஷயம் தீவிரமாகவில்லை. இருந்தும் சுலேகா என்ன நினைப்பாள்? இந்தக் குருவி யார்? முரளியைக் கேட்டேன். அவனுக்கும் அந்தாளைத் தெரியாதாம். கொஞ்சம் பொறுத்துக்கொள் கண்டுபிடித்துத் தருகிறேன் என்று சொன்னான்.

'எனக்குப் பரவாயில்லைங்க. சுலேகா என்னமா ஃபீல் பண்ணுவாங்க.'

'ஆ, இதெல்லாம் சகஜம்! வாரப் பத்திரிகை அடுத்த வாரம் ஆவியாய்ப் போயிரும், எதுக்கும் அவளை கேட்டு வெச்சுக்க. மறுப்பு எழுதணும். அவ விரும்பினால் சரி! நீ போய்ப் பார்த்துக் கேட்டுருங்க.'

'இல்லைங்க. எனக்கு அவங்களைப் பார்க்கறதுக்கே தயக்கமா இருக்குது.'

'இதுக்கெல்லாம் தயங்கக் கூடாது.'

நான் யோசித்தேன்.

'ஒண்ணு செய்யறேங்க. ஞாயிற்றுக்கிழமை என்னைக் கூப்பிட்டிருக்காங்க சுலேகா. அப்ப கேட்டுர்றேன்.'

'அதுகூடச் சரிதான். ஞாயிற்றுக் கிழமைன்னா இன்னும் ரண்டு நாள் இருக்குது. சரி! பாத்துட்டு அன்னிக்கு சாயங்காலத்துக்குள்ளே தகவல் சொல்லுங்க. எப்ப பார்க்கப் போகுறீங்க?'

'பகல் பன்னண்டு மணிக்கு லஞ்சுக்கு கூப்பிட்டிருக்காங்க'.

'அடி சக்கை! அப்ப 'குருவி சொல்றதிலேயும் கொஞ்சம் உண்மை இருக்காப்பல'.

'என்னங்க. நீங்களும் என்னைத் தப்பா எண்ணிக்கிட்டிங்க''

'சும்மா சொன்னேன் கரிகாலன். நீங்க ஞாயிற்றுக் கிழமை நாலரை மணிக்குள்ள சொல்லிருங்க. தேவைப் பட்டா வண்ணத் திரையில ஒரு மறுப்பு விட்டுக்கலாம். தேவைப்பட்டாத்தான்! இந்த விசயத்தை இக்னோர் பண்ணிறதுதான் நெல்லது.'



'அய்யா விஜிஆர் கதை கேட்டாரே, வெச்சிருக்கங்க'

'பேர் என்ன?'

'உறங்காதே' என்று அபசகுனமாகச் சொல்ல விருப்பமில்லாமல் 'தங்க முடிச்சு'ன்னு வெச்சிக்கிட்டங்க. அவரு ஒரு முறை சொன்னார் பாருங்க, கோல்டன் நாட்டு! அதுதான்.

'சபாஷ்! மாமாவுக்குப் புடிச்சுப் போயிரும். ஆனா இன்னிக்கு முடியாது. சேட்டு வரான் ஃப்ளைட்டில ப்ரொஜக்ஷன் இருக்குது'.

## 7

சாயங்காலத்துக்குள் அந்தக் காற்று வாக்கில் சம்பவத்தை மறந்திருந்தாலும் ஒரு அமெச்சூர் முயற்சியாக அந்த பத்திரிகை ஆபீஸைத் தேடிப் போனேன். ஆயிரம் விளக்கில்தான் இருந்தது. பத்திரிகை ஆபீஸ் என்றால் கண்ணாடித் தடுப்புக்கள் எல்லாம் போட்டுப் பிரமாதமாக இருக்கும் என்று நினைத்தேன். அப்படி எதுவும் இல்லாமல் திரைமலர் என்கிற பெயரே தென்படவில்லை நீண்ட வராந்தாவில் இரண்டு பக்கங்களிலும் ஷாப்புக் கடைகள் இருந்தன. நடுவே திறந்த வானம். முதல் கடையில் காயில் சுற்றிக் கொண்டிருந்தார்கள். மற்றொரு கடையில் பஜனை காஸட்டுக்கள் விற்பனை. 'திரைமலர் ஆபீஸா? மாடிக்குப் போங்க'.

மாடி கீழ்ப் பகுதியின் டிட்டோவாக இருந்தது. தையல்காரர்கள் ஏராளமாகத் தைத்துக் கொண்டிருக்க பக்கத்தில் டைப் இன்ஸ்டியூட் சின்னதாக. நெற்றியில் சந்தனமிட்டு 'திரைமலர்—சினிமா வார இதழ்' என்று பலகை தொங்க அங்கே போனேன். சாய்மானமாகப் புறாக் கூடுகளில் நிறைய எழுத்துக்கள் நிரம்பியிருக்க

அதனருகே கதர் பனியனுடன் கன்னத்தில் மைக் கறையுடன் ஒருத்தர் 'யார் வேணம் உங்களுக்கு?' என்றார்.

'எடிட்டரைப் பார்க்கணும்.'

ரொம்ப முனைந்து ஓரத்தில் தடுப்புப் போட்டுத் தனியாக்கப்பட்ட அறையில் எடிட்டர் நிறைய போட்டோக்கள்—காலி ப்ரூப்களுக்கு மத்தியில் உட்கார்ந்திருந்தவர் என்னைச் சந்தேகமாகப் பார்த்தார்.

'என் பேர் கரிகாலன். குருவிங்கறவரைப் பார்க்கணும்.'

'ஏன் மறுபடி எதிலேயாவது மாட்டிண்டாச்சா?'

'ஏன் ஸார், ஒரு செய்தி போடறதுக்கு முன்னால அது எவ்வளவு தூரம் மத்தவங்களைப் பாதிக்கிறது, அது பொய்யா நிசமான்னு பார்க்க வேண்டாம்?

'நீங்க எதைச் சொல்றீங்க?''

'காற்றினிலேன்னு சுலேகாவையும் என்னையும் பத்தி போட்டிருக்கிங்களே இந்த வாரம்.'

'ஓ! அதுவா? காத்து வாக்கில செய்தி வந்தது. போட்டுட்டம்'

'யார் சார் அந்தச் செய்தியைக் கொடுத்தாங்க?'

'அது குருவியைக் கேட்டாத்தான் தெரியும்.'

'எங்கே அந்தக் குருவி?'

அவர் இப்ப வரமாட்டார். ராத்திரி ஏழு மணிக்குத்தான் வருவார்'

'சரி, இனிமே அந்த மாதிரி செய்தி போடச் சொல்லாதிங்கோ. உதை வாங்குவார்.'

'சரி வந்தா சொல்றேன், இப்ப என்ன போச்சு? அந்தச் செய்தி உண்மையில்லைன்னு உங்க கைப்பட ஒரு லட்டர் எழுதிக் கொடுங்க. போட்டோவோட பிரசுச் சுட்டாப் போச்சு.'



'உங்களுக்கெல்லாம் வெவஸ்தையே கிடையாதா ஸார்! ச்சே!'

'என்ன ஸார் செய்யறது? இன்னைத் தேதிக்கு மொத்தம் பதினோரு சினிமாப் பத்திரிகை இருக்கு அதே கமல், அதே ரஜினி. அதே சிலுக்கு! திருப்பித் திருப்பி இங்க படப்பிடிப்பு அங்க காதல் காட்சின்னு எழுதிண்டிருந்தா எப்படி ஸார் பத்திரிகை விலை போகும்? யாராவது பிள்ளையாண்டிருக்காளா? யாராலது ஓடிப் போயிட்டாளா? யாராவது தற்கொலை பண்ணிட்டாளா அது ந்யூஸ் இல்லை யார் சின்ன வீடு வெச்சிண்டிருக்கா? யார் கல்யாணம் உடையப் போறது? யார் ஆப்பரஷன் பண்ணிட்டா... ஆமா! 'பாரா' மறுகல்யாணம் பண்ணிக்கப் போறாராமே, நிசமா? உங்களுக்குத் தெரியுமா?''

''உங்களை எல்லாம் கேள்வி கேக்காம உள்ள தள்ளணும்!'

'தள்ளினா ஸர்க்குலேஷன் எகிறிக்கும். தள்ளமாட்டேங்கறானே'

''விஜிஆர் கொஞ்சம் ஜாக்கிரதையா இருக்கச் சொன்னார்!' என்று சொல்லிவிட்டு அந்த இடத்தை விட்டு வெளி வந்துவிட்டேன். சினிமா உலகைவிட சினிமாப் பத்திரிகை உலகம் மோசமாக இருக்கும் போல. அந்த ஆளை அந்த இடத்திலேயே சிண்டைப் பிடித்து உலுக்கிவிட்டு வந்திருக்க வேண்டும். பதிலுக்கு என்னவோ லட்சர் அடிச்சுக்கிட்டு வந்திருக்கிறேன். மனசுக்கு நான் மகா கோழை, எனக்குப் பொதுவாக நிறைய பயங்கள் உண்டு.

போலீஸ் என்றால் பயம். தந்தி வந்தால் பயம். ஸ்விட்சைப் போடும்போது பயம் இதுவரை போலீஸ் ஸ்டேஷன் பக்கம் போனது கிடையாது. நான் பார்த்த போலீஸ் நிலயங்கள் எல்லாம் சினிமாப் பொய்கள்தாம்

## 8

ஞாயிற்றுக் கிழமைக்கு முன் ஒருமுறை சுலேகாவைச் சந்திக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டதுவிட்டது நான் அவளை வதந்தி அடங்கின பிற்பாடுதான் சந்திக்க விரும்பினேன். இருந்தும் ஒரு முறை ஸ்டூயோவுக்கு முரளி கூப்பிட்டதாகச் சொன்னபோது நான் போயிருந்தேன் படப்பிடிப்பில் இடையில் ஜூஸ் குடித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தாள். சென்ற முறை பார்த்த அழுமூஞ்சியா என்று ஆச்சரியமாக இருந்தது. எல்லோரிடமும் சிரித்துக் காலைப் பரப்பிக் கொண்டு தமாஷாகப் பேசிக் கொண்டிருந்தாள். நான் நழுவப் பார்த்தேன். 'கரிகாலன் இங்க வரது' என்றாள்

'இவர் யார் தெரியுமா? அறியுமா? என் லவர்' என்று என் முதுகில் தொட்டுக் காட்டினாள். அந்தக் கதாநாயகன் கொஞ்சம் நெர்வஸாக இருந்தான். 'கரிகாலன் பேப்பர்ல பார்த்ததோ' என்றாள்.

'சுலேகா, நீங்க அதையெல்லாம்...'

'அடுத்த முறை என்னையும் கவாஸ்கரையும் வெச்சு எழுதும் இல்லை? இல்லை அவன் வேண்டா. வெங்சர்க்கார்! அவன் நல்ல உயரம்!'

'சுலேகா, நீங்க விளையாட்டா எடுத்துக்கிட்டிங்கன்னா சரி.'

'இதைப் போய் சீரியஸா எடுக்கறதா? லைஃப்ல எதையும் சீரியாஸா எடுத்துக்கக் கூடாது.

என்னைத் தனியாக அழைத்து 'என் விவாஹத்துக்கு நீங்கள் வரணும் என்றாள்.

'எப்ப?'



'அது ஒரு பாம ரகசியம்!' என்று சிரித்தாள். 'யார் கிட்டயம் சொல்லண்டா.'

ஞாயிற்றுக் கிழமை வரச் சொல்லியிருக்கிங்க. ஞாபகம் இருக்கில்லை?

'நிச்சயம்! கரிகாலன் உதவி எனக்குத் வேலையா இருக்கு. உங்க தங்க மீனுக்கு விடுதலை கிடைக்கப் போறது' என்று என்னிடம் கண் சிமிட்டினாள். படப்பிடிப்பு அழைக்க மனசு லேசாகி அவள் நடிப்பதை சுவாரஸ்யமாகப் பார்த்துக் கொண்டிருந்தேன்

சுதா நாயனாக நடிக்கும் இளைஞன் தான் ரொம்ப நெர்வஸாக இருந்தான். அவனை முதுகில் தட்டிக் கொடுத்தாள். காமிராக்காரரின் கிராப்பைக் கலைத்தாள். அழகுக்கு வைத்திருந்த ஸ்டூடியோ பழங்களைக் கடித்துத் துப்பினாள். அங்கிருந்தே என்னைப் பார்த்து மறுபடியும் அந்த விகற்பமில்லாத கண் சிமிட்டல்!

## 9

ஞாயிற்றுக் கிழமை காலை ஸ்டூடியோவிலிந்து எனக்கு வண்டி வந்திருந்தது. விஜி ஆர் தான் கூப்பிட்டிருந்தாராம். முரளி டப்பிங் தியேட்டரில் வாசலில் நின்று கொண்டிருந்தவன் 'பத்து மணிக்கு ஸ்டூடியோவுக்கு வந்துருங்க' என்றான்.

'என்னங்க.'

'ஸ்கிரீன் டெஸ்டு தொடர்ந்து நடக்கப் போறது. நீங்க அன்னைக்கு கொடுக்கவே இல்லை. இல்லை? ஃபைனலா இன்னிக்குத் தேர்ந்தெடுக்கணும்.'

'சரிங்க. அந்தச் சட்டை எங்கிட்டயே இருக்குதுங்க.'

'சரி. அதையே போட்.டுக்கிட்டு வந்துருங்க.'

பத்து மணிக்கு அந்தத் தக்காளி கலர் சட்டையை அணிந்து கொண்டு ஸ்டுடியோவுக்குப் போய் நின்றேன். யாருமே இல்லை சினிமா வழக்கமே இது தான். பத்தே முக்கால்வரை காத்திருந்த பின் ஒரு பழைய மிச்சல் காமிரா கொண்டு வந்தார்கள்—ஒரே ஒரு ரோலுடன். இரண்டு மூன்று பேர் வர சிலர் சம்பந்தப்படாமல் காமிராவை லோடு பண்ணுவதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் எல்லோருமே என்னைப் போலச் சட்டை போட்டிருந்தார்கள் சரிதான்! இவ்வளவு போட்டியா என்று நினைத்துக் கொண்டேன் எல்லோரையும் வரிசை பார்த்து நிற்கவைத்துத் தலைக்குப் போட்டுக்கச் சொல்லி பிரம்புத் தொப்பி கொடுத்துச் செடிக்குப் பின்னாலிருந்து வந்து வெளிச்சத்தில் காமிராவுக்கு முன் நடக்கச் சொன்னார்கள், ஆளுக்கு ஒரு பத்துப்பதினைந்து செகண்ட் 'விர்ர்ர்ர்.' ஒவ்வொருத்தராப் பார்த்து என் முறை வருவதற்குப் பன்னிரண்டே கால் ஆகிவிட்டது, சுலேகா கூப்பிட்டிருந்தது ஞாபகம் வந்தது, இங்கேயே பன்னிரண்டு கடந்து விட்டதே. டெஸ்ட்டு வேண்டாம் என்று கிளம்ப விருந்த சமயம் என் முறை வந்தது நான் நடந்து படம் எடுத்து முடித்துக் கிளம்புவதற்குப் பன்னிரண்டரை கார்கள் எல்லாம் ட்ரிப் போயிருந்தன, ஸ்டூடியோ வாசலுக்கு வந்து ஒரு ஆட்டோ பிடித்துக் கொண்டு சுலோகாவின் வீட்டை அடைந்த போது மணி பார்த்தேன், ஒரு மணிக்கு இரண்டு நிமிஷங்கள்.

'ரொம்ப நேரம் காத்துக்கிட்டு இருந்திங்களோ?' என்று அவளிடம் சொல்ல வேண்டியதை ஒத்திகை பார்த்துக்கொண்டே கதவைத் தட்டினேன் பதில் இல்லை. சற்று நேரம் காத்திருந்து 'என்னது, வீட்டில் இல்லையா. என்னை சாப்பிட வரச் சுசால்லியிருக்கிறாளே? பின் பக்கமாக வீட்டைச் சுற்றி வந்தேன், வெளியே எங்கும் போயிருந்தால் வேலைக்காரச் சிறுமியிடம் சொல்லிப்



போயிருப்பாள். பின்பக்கத்தில் தான் அந்தப் பொண்ணு இருப்பாள். பின்பக்கத்துக் கதவு திறந்திருந்தது. உள்ளே சென்றேன்.

'பிரசன்னா...பிரசன்னா' என்று கூப்பிட்டேன். பதில் இல்லை எல்லோரும் வீட்டைத் திறந்து போட்டுவிட்டு எங்கே போனார்கள்? உள்ளே சென்றேன்.

ஹாலில் யாரும் இல்லை. டேப்ரிக்கார்டர் தரையில் இருந்தது. ஃபெமினா பத்திரிகையும் இருந்தது. இடது பக்கத்து பெட்ரூமுக்குள் எட்டிப் பார்த்தேன். காலியாக இருந்தது ஒரு வேளை மாடிக்குப் போய் அங்கே உட்கார்ந்திருக்கிறாளோ?' 'சுலேகா சுலேகா' என்று கூப்பிட்டேன். மாடியிலிருந்து கூம் கூம் என்று சப்தம் கேட்டது அது என்ன சப்தம் என இனம் கண்டு கொள்ள முடியவில்லை மெல்லப் படியேறினேன். மாடியில் இருப்பது சுலேகாவின் சொந்த அறை அங்கே நான் போனதே இல்லை அதன் பாதியில் மாடி கடந்து திரும்பியதும் சுலேகாவின் நாயைப் பார்த்தேன். அறைக் கதவு சாத்தியிருக்க அதன்மேல் கால்களை வைத்துக் கொண்டு பிராண்டிக் கொண்டிருந்தது. என்னைக் கண்டதும் ரொம்ப சந்தோஷததுடன் வாலை வேகமாக ஆட்டித் தனக்குத்தானே சுழன்று கொண்டது நான் வந்து விட்டதில் சந்தோஷம் காட்டிக் கதவு திறக்கப்போகிறது என்று எதிர்பார்த்தது போலும் சுலேகா உள்ளே இருக்கிறாள் போலும் கதவைத் தட்டினேன். நாயும் சேர்ந்து பிராண்டியது கொஞ்ச நேரம் நாயின் கூம் கூம் மட்டும் கேட்க கதவு உள்ளே தாழிட்டிருக்குமோ என்று ஐயப்பட்டேன்' கதவுக்கு டோர்லாட்ச் பொருத்தியிருந்ததால் உள்ளே தாழிட்டிருக்கிறதா என்று சொல்வதுகூடக் கஷ்டமாக இருந்தது.

சன்னலைத் தள்ளிப்பார்த்தேன் திறந்து கொண்டது உள்ளே நோக்கினேன்.

சுலேகா நின்று கொண்டிருந்தாள். என்ன இது, உயரமாய் நின்று கொண்டிருக்கிறாளே என்று வியப்பதற்கு

முன், அவள் நிற்கவில்லை—தொங்கிக் கொண்டிருந்தாள் என்பது தெரிந்தது! சற்றுத் தாழ்வான உத்தரத்திலிருந்து இல்லாத பேனுக்குப் போட்ட கொக்கியிலிருந்து ஒரு கயிறு தொங்க தலை இடது பக்கம் சாய்ந்து திறந்த வாயில் ரத்தத்துடன் கண்கள் திறந்து கை விரல்கள் மடக்கிக் கொண்டு—

எனக்கு மின்சாரத் தேள் கொட்டியது.

அய்யோ, என்ன இது சுலேகா! பிரசன்னா! பிரசன்னா!' கதவைத் தட்டிப் பார்த்தேன். லாட்ச் பூட்டிக் கொண்டிருந்தது என் செய்வேன்? என் செய்வேன்? போலீஸ்... போலீஸ்!

உடனே போலீஸிடம் போய்ச் சொல்ல வேண்டும் பக்கத்தில் போலீஸ் நிலையம்? போ உடனே!...உடனே!...

அதைத்தான் உடனே செய்திருக்க வேண்டும். பதிலாக முட்டாள்தனமாக ஒரு காரியம் செய்தேன்.

அந்த இடத்தை விட்டு விலகி நாய் இன்னும் கதவைச் சுரண்டிக் கொண்டிருக்க, சப்தமில்லாமல் விலகிப் புறப்பட்டு...

என் அறைக்குத் திரும்ப வந்துவிட்டேன்.

## 10

எதற்காக அப்படி ஓடி வந்தேன் என்பதை யோசித்துப் பார்க்க அப்போது சந்தர்ப்பம் கிடைக்கவில்லை என்றாலும் பின்னால் அதைத் தீவிரமாகச் சிந்தித்திருக்கிறேன். என் கோழைத்தனத்தை விடத் தற்காப்புத்தான் அப்போது தலையெடுத்திருக்கிறது. கூடவே என் ரத்தத்தில் இருக்கும் பயம்! போலீஸ் பயம், சட்டத்துடன் உறவாடப் பயம். அவளை நான் பார்த்த நிலையில் அவள்



பரிதாபமாகத் தொங்கிய நிலையில் அவளுக்கு உயிர் இருப்பதாகத் தெரியவில்லை. கண்கள் ஒளியிழந்து முகமும் உதடுகளும் நீலம் பாரித்து...சான்ஸே இல்லை! நான் போய் இதைப் போலீஸிடம் ரிப்போர்ட் செய்ய அவர்கள் 'இருய்யா' இந்தப் பொண்ணைத் தெரியுமா உனக்கு?' என்று கேட்டு நான் தமிழ் கற்றுக்கொடுத்ததும் எனக்கும் அவளுக்கும் உறவு இருப்பதாகப் பத்திரிகையில் செய்தி வந்ததும் அவர்களுக்குத் தெரிந்துபோய் அவர்கள் என்னைக் கேள்வி கேட்க, மடக்கி வைத்துக்கொள்ள, தத்துபித்து என்று உளறப்போக. 'மிஸ்டர் கன்னியப்பன்! யூ ஆர் அண்டர் அர்ரஸ்ட்!'

இம்மாதிரி ஏதேதோ குருட்டு யோசனைகளின் பலனாய் நான் அந்த இடத்தைவிட்டு ஓடி வந்துவிட்டேன். தப்பு! அநியாயம்! முட்டாள்தனம்! எல்லாம் ஒப்புக்கொள்கிறேன். இருந்தும் எல்லாச் சந்தர்ப்பத்திலும் எல்லாச் சூழ்நிலையிலும் உத்தமமாக நடந்து கொள்ள நான் தேவனல்ல. வெறும் மனிதன். கோழை! பயம்! இந்தச் சந்தர்ப்பத்தில் இப்படித்தான் நடந்து கொண்டேன். அதோடு விட்டது காரியம்! யாரும் நான் வந்ததையோ போனதையோ பார்க்கவில்லை. யாராவது அப்படி விசாரித்து என்னைக் கேட்டால் நான் அந்தப் பக்கமே போகவில்லை என்று சொல்லிவிடலாம்.

ஸ்டூடியோவிலிருந்து கிளம்பவே நேரமாகி விட்டதால்...வெய்ட் எ மினிட்' முரளிக்கு நான் அங்கே போகப் போகிறேன் என்று தெரியுமே? தெரிந்தால் என்ன? அவன் என்னைச் சந்தேகிப்பானா? முடியாது! அவள் உடலைப் பார்த்தால் இறந்து கொஞ்ச நேரமாகி...எண்ணாதே! அந்த உடலைப் பற்றியே எண்ணாதே! நான் பார்த்தது சுலேகா அல்ல அது ஏதோ ஒரு தோற்றம் சுலேகா சிரிப்பாள்! கேலி பண்ணுவாள்! தப்புத் தப்பா தமிழ் பேசுவாள் நீங்கள் என்று கூப்பிடாமல் 'கரிகாலன்' என்பாள், சுலேகா இல்லை அது. பெண்ணே! முட்டாள் பெண்ணே!

தற்கொலை செய்து கொள்ளும் அளவுக்கு உலகத்திலே எந்த சோகமும் பிரம்மாண்டமானதல்ல.

என்னிடம் சொல்ல மாட்டாயோ? சொல்வதற்காகத்தான் என்னைக் கூப்பிட்டாய் எதற்காக அப்படி செய்து கொண்டாய்? என் மலையாள ராணி! கல்யாண ஆசையாலா? யாராவது வாக்குக் கொடுத்து ஏமாற்றி விட்டானா? இல்லை, உன்னை நீ சபலக் கணத்தில் இழந்துவிட்டாயா? கர்ப்பமாகி விட்டாயா? சினிமா உன்னை உள்ளத்தில் அரித்துவிட்டதா? அதன் அலுப்பு உன்னை ஆக்கிரமித்துவிட்டதா? ஏண்டி என் தங்க மீனே

'கரிகாலன் என்னைத் தண்ணில சேரக்குமோ.'

பஸ் பிடித்து என் அறைக்கு வந்து சன்னலை எல்லாம் மூடி இருட்டுப் பண்ணிக்கொண்டு தரையில் படுத்து விட்டேன். பசி காணாமற் போய்விட்டது. உடம்பல் ஸ்திரமாக ஒரு நடுக்கம் இருந்தது. நாய் இன்னும் அந்தக் கதவைப் பிராண்டியிருக்கும். பிரசன்னா எங்கே போனாள்? இதோ வந்துவிட்டாள். கதவைத் தட்டி எட்டிப் பார்த்து வீல் என்று கத்தியிருப்பாள். பக்கத்து வீட்டில் சொல்லியிருப்பாள். அவர்கள் போலீஸுக்கு...

போலீஸ் நிலையம் எங்கிருக்கிறது?

நீ ஏன் உடனே இதை எங்களிடம் தெரிவிக்காமல் விலகிச் சென்றாய்?

நான் அங்கே போகவே இல்லையே? யார் பார்த்தார்கள்? சாயங்காலத்துக்குள் முரளியைப் பார்த்து நான் அங்கே போகவே இல்லை என்று சொல்லிவிடலாமா? சே, நானாகப் போய்ச் சொன்னால் சந்தேகம் வலுவாகும். பைத்தியக்கார காரியம் செய்து விட்டேன். இப்போது போகலாமா? இப்போது போனால் அவர்கள் எல்லாம் வந்து 'ஏன்யா சொல்லாம வீட்டுக்கு ஓடினே? கொஞ்சம் ஒதுங்கியிரு! இங்கேயே இரு. உன்னைத் தீர விசாரிக்கணும்.'



சந்தேகம் வந்துவிட்டால் போலீஸ் 'நகக்கண்களில் ஊசி ஏற்றி இல்லாத குற்றத்தைக்கூட' ஒப்புக்கொள்ள வைத்து விடுவார்கள். வேண்டாம்! நான் அங்கே போகவே இல்லை என்று சத்தியம் பண்ணிவிடலாம்

இருந்தும் எப்படியோ ஒருவிதத்தில் சுலேகாவுக்குத் துரோகம் பண்ணிவிட்டேன் என்றுதான் தோன்றியது. சொல்லியிருக்க வேண்டும். அம்மாதிரி அந்த உடலை அங்கே தொங்க விட்டுவிட்டு விலகினது மகா...

சே, அதைப்பத்தி நினைக்காதே. வாரப் பத்திரிகையைப் பார்...

'நீங்கள் பெண்ணாக இருந்தால் இந்தப் புதிர் உங்களுக்கு.'

நான் பெண்ணில்லை. பேடி!

'கீழ்க்கண்ட புதிருக்கு விடையளித்துத் தெரிந்து கொள்ளுங்கள்.'

'நீங்கள் செய்த ஒரு தவறுக்குத் தண்டனை வழங்கப்படும்போது—

அ. உண்மையைச் சொல்லி அதனால் ஏற்படும் விளைவுகளைச் சந்திப்பீர்களா?

ஆ. வேறு யாரேனும் தவறுக்குக் காரணமாய் இருந்தாலும் பொய் சொல்லி அதை ஏற்றுக்கொள்வீர்களா?

இ. தவறுக்குக் காரணமாய் இருந்தவர் ஏற்றுக்கொள்ளாதவரை பொய் சொல்வீர்களா?'

பத்திரிகையைத் தூக்கியெறிந்தேன். என்னையே சுட்டிக் காட்டுகிறாற் போல் இருக்கிறதே, தெருவில் யாரோ பேசிக் கொண்டே சென்றது. 'என்னதான் இருந்தாலும் நீ அப்படிச் செய்திருக்கக்கூடாதுப்பா.' எல்லாமே

என்னைத்தான் சொல்கிறது, கடவுள் பற்பல விதங்களில் என்னைச் சுட்டிக் காட்டுகிறார். மாட்டிக் கொள்ளப் போகிறேன். சன்னல் கதவைச் சரியாகச் சாத்தவில்லை. ஏதாவது சினிமாவில் போய் உட்கார்ந்து கொண்டு விடலாம். அதுதான் சரி, இங்கே படுத்தால் தூக்கம் வராது. அந்தத் தொங்குமுகம் வந்து உறுத்திக் கொண்டே இருக்கும். சுலேகாவின் முகம் வீங்கியிருந்தது. கண்கள் சூனியத்தை உற்றுப் பார்த்தன. உதடுகள் நீலம் மூக்கின் ஓரத்திலும் வாயின் ஓரத்திலும் ரத்த நுரை போல கொஞ்சம் கொஞ்சம் நாக்குக்கூட வெளியே தெரிந்ததே? கடித்துக்கொண்டு விட்டாளோ?

கடவுளே! கடவுளே! இந்த எண்ணங்களை எப்படி நிறுத்துவது! என்ன செய்வேன்? இங்கே இருக்காதே. ஓடு எங்கேயாவது ஓடு! ஜனங்களுடன் கலந்துகொள் மணி என்ன? ஏதாவது பைத்தியக்கார மணி! சினிமாவில்போய் உட்கார்ந்துகொள். எப்படியாவது அந்தத் தொங்கும் பெண்ணை மற மற மற! அவசரமாக மாடிப்படி இறங்கி னேன் அருணா பிரிண்டர்ஸ் 'என்னங்க சௌக்கியங்களா?' என்று விசாரித்தார்

'சேதி தெரியுமா உங்களுக்கு?'

அட, இதற்குள் பரவிவிட்டதா?

'ஒரு ஜெர்மன் மிஷன் சல்லிசா விலைக்கு வரது. வாங்கப் போறேன் ஏன் ஒரு மாதிரி இருக்கிங்க?'

'ஒண்ணுமில்லைங்க. காலைல ஸ்டுடியோ போய் நேரா வந்துட்டேனா, நேரே வந்துட்டேன்! தலை வலி! படுத்துட்டேன்...' சாக்கிரதை சாக்கிரதை! சந்தேகமே வராமல் எப்போதும்போல் இரு, நீ உன் செயலை மறைக்க வேண்டும். உன் பாதச்சுவடிகளை அழிக்க வேண்டும். சிரிக்கப் பார்த்தேன். 'ரொம்ப சந்தோஷங்க. வரங்க!'



நடந்தேன். பஸ் பிடித்தேன். பவர் ஹவுஸிலேயே இறங்கிக் கொண்டேன். எத்தனைக்கு டிக்கட் வாங்கி னேன். என்ன சினிமா? பெயரைக் கூட பார்க்காமல் கூண்டில் கை விட்டு டிக்கெட் வாங்கினேன். நடக்கும் போது 'மிஸ்ட்டர்' என்ற குரல் என்னைக் கூப்பிடுவதைக் கேட்டுத் திடுக்கிட்டேன். 'சில்ரை வாங்காமப் போறீங் களே அப்புறம் நாங்க ஏச்சுப்பிட்டோம்னு சொல்றது!' என்று குப்பையாக சன்னல் வழியாக பாக்கிப்பணத்தை நீட்ட 'ஸாரி' என்று—சுலேகா 'ஸோரி' என்பாள்—மெல்ல நடந்தேன்.

மிருகங்களைப் பற்றிய படம். பாலைவனத்தில் பரி தவிக்கும் சன்மங்கள். ஒரு சொட்டுத் தண்ணீருக்காக வானத்தை அண்ணாந்து பார்த்துச் சூலூற்ற மேகம் வந்தும் காற்றுக்குப் பரிதாபமாக ஈரத்துக்குக் காத்திருந் தது. வெயிலின் தகனத்தைத் தாங்க முடியாமல் செத்து விழும் பறவைகள். மிருகங்ளுக்குச் சினிமா கிடையாது, சோகம் கிடையாது. தற்கொலை கிடையாது ஏன்? என்ன காரணம்? என்ன சொல்ல வந்தாள்? நான் சமயத் திற்குப் போயிருந்தால் அவளைக் காப்பாற்றிருக்க முடி யுமோ? பார் பர்ர் என்ன அழகான மான்கள்! கண்களைப் பார் சுலேகாவைப் போல! பார் பார், கொஞ்சம் மழை வந்ததும் எத்தனை உற்சாகமான பூ மரங்கள். 'இந்த மரத்துக்குப் பேர் ஜாக்கராண்டா...'

**காடு .காட்டின் ஓரம் காற்று**
**காரின் சிறகான காற்றுக்கு நமஸ்காரம்**
**காற்றுக்குக் குளிர் தரும் காட்டுக்கு நமஸ்காரம்**

'நமஸ்காரம் நமஸ்காரம்!' என்று மெலிதான அபி நயத்துடன் கவிதை சொன்னவளுக்கு என்ன ஆயிற்று? தற்கொலையா? அபத்தம்! அவள் கடைசியில் பார்த்த போது எத்தனை உற்சாகம்? எத்தனை மான் குட்டி அவளிடம் இருந்தது எப்படித் தற்கொலை செய்து கொள்ள முடியும்? எப்படி?

'ஸார், படம் முடிஞ்சுருச்சு!'

வெளியே வானம் கருத்திருந்தது. இடிகள் திரண்டு சப்தித்துக் கொண்டிருக்க ஒரே ஒரு நீர் சொட்டு வரப் போகும் மழையின் முன் மாதிரியாய் என் கன்னத்தில் பட்டது. சுலேகாவுக்காகச் சென்னை சிந்தும் ஒரு கண்ணீர் முத்து.

'எனிக்கு பேர் வேண்டாம். பிரபலம் வேண்டாம் அபிநயம் செய்து அலுத்துப் போச்சு, காமிரையின் முன்னாலே என்னைப் பொம்மை மாதிரி வெச்சு வேடிக்கை பார்க்கறது.'

எல்லாம் சரிதான்! அதற்காகத் தற்கொலையா? அநியாயம்! பைத்தியம்! பைத்தியம்!

'மைஸூர்ல நடந்தது தொடங்கி எல்லாம் சொல்லிடறது யார் கிட்டேயும் சொல்ல வேண்டாம் பிரஸ்ஸுக்கு சொல்ல வேண்டாம்.

பாண்டி பஜார் மத்தியில் கூட்டமாக இருந்த ஓட்டலில் போய் கடப்பைக் கல் மேசை முன் உட்கார்ந்து காபி கேட்டேன். அது ஆறும் வரை காத்திருந்து மெல்லக் குடித்தேன். வெளியே வந்தபோது மணி ஆறுதான் என்றாலும் மேகங்களின் தயவால் இருட்டிருந்தது வெற்றிலை பாக்குக் கடையில் மாலைச் செய்தித்தாளின் போஸ்டர் தொங்கிக் கொண்டிருந்தது

பிரபல நடிகை தற்கொலை?

இது என்ன கேள்விக் குறி? பைசா கொடுத்து அதை வாங்கிக் குழல் விளக்கு வெளிச்சத்தில் பார்த்தேன். கொட்டை எழுத்தில் போடச் சமயம் போதவில்லை போலும். ஓரத்தில் கடைசிச் செய்தி என்ற பகுதியில் புதிய நடிகைகளில் பிரபலமாயுள்ள சுலேகா (வயது பதினெட்டு) இன்று பிற்பகல் தற்கொலை செய்து கொண்டாள் எனத் தெரிகிறது. அவளுடைய வீட்டில்



தூக்கில் தொங்கினார். போலீஸாரிடம் இது தற்கொலை தானா என்று விவரம் கேட்டதற்கு அவர்கள் நிச்சயமாக எதுவும் தெரிவிக்கவில்லை. புலன் விசாரித்து வருவதாகச் சொன்னார்கள்.

என்ன செய்வது? அறைக்குப்போனால் சும்மா இருக்க விடாதே இந்த எண்ணங்கள். நிம்மதி தருமா? சுற்றலாம். பிளாஸ்டர் பெண்களின் ஊடே நடந்தேன். பல பேர் பனியன் வாங்கிக் கொண்டிருந்தார்கள். இலவச எவர் சில்வர் கப்புக்காக இரண்டு ஃபாரெக்ஸ் வாங்கினார்கள். கண்ணாடிக்குப் பின் டெலிவிஷனில் மௌனமாக இயங்கிய நன்னன் தமிழ்ப் பாடத்தை வேடிக்கை பார்த்தார்கள் பஸ்ஸுக்குக் காத்திருந்தார்கள் பேப்பரைப் பிரித்து வைத்துக்கொண்டு பேசிக்கொண்டிருந்தார்கள். உருளை மேல் ஒரு பிச்சைக்காரன் பஜாரைக் குறுக்கே கடந்து, போனான். போலீஸ் ஜீப் ஒன்று வேகமாகப் போய்க் கொண்டிருந்தது. என் அறைக்குத்தான் போகிறது! பேப்பரில் விவரமே இல்லையே! கால் பத்தித்தானே செய்தி! அச்சுக்குப் போவதன் முன் முழு விவரம் தெரிந்திருக்காது. நாளைக் காலை தெரிந்துவிடும். எல்லாம் புட்டுப் புட்டு வைத்துவிடுவார்கள். நாளைக் காலை வரை எப்படி இருக்கப்போகிறேன். இன்னொரு சினிமா போகலாமா? இல்லை, பஸ் ஸ்டாண்டை நோக்கி நடந்தேன். கோவிலில் நூறு செருப்புக்கள் வெளியே காத்திருக்க ஒலி பெருக்கி 'சத்திங்கிறது இறைவனோட ஆற்றல். சிவனும் சக்தியும் எப்போதும் இணைஞ்சே இருப்பாங்க பிரிக்கவே முடியாது இந்தக்காலத்திலே முனகலுன்னா டைவோர்ஸ் பண்ணிட்டுப் பிரிஞ்சுடறா! சிவனுக்கும் சக்திக்கும் டைவோர்ஸே கிடையாது! ஏன்னா சக்தி சிவத்துக்குள்ளே அடங்கினது. ஊதுவத்திக்குள்ள வாசனை அடங்கியிருக்கு. ரெண்டையும் பிரிக்க முடியுமா! முடியுமா? முடியுமா?

அதுபோல பூரணி, பராசக்தி, ராஜராஜேஸ்வரி. அபிராமி, நாராயிணி, உமை, மஹேஸ்வரி, மனோன்மணி

துர்க்கை, காளி, லட்சுமி, சரஸ்வதி, அம்பிகை எல்லாம்
சக்தியோட வடிவங்கள்தான்...' சுலேகா? மூலைக்கடை-
யில் மசாலா சோடா சாப்பிட்டு மறக்க முயற்சி.

இப்படியே நடந்துபோனால் ரயில்வே கேட் வரும்.
ரயில் போகிறவரை பார்த்துக் கொண்டிருக்கலாம்.
வந்ததும் தலையைக் கொடுக்கலாம்.

எங்கே படித்தேன்? தூக்கில் போடுவது வேதனை
இல்லாத தண்டனை! கழுத்து எலும்பு படக்கென்று
உடைந்து போய்விட உடனே நினைவிழந்து விடுகிறார்
கள். ஆம். சுப்ரீம் கோர்ட் தேசிய விவாதத்திலே...இப்
போது போய்ப் படுத்துக்கொள்ள வேண்டாம். ராத்திரி
முழுவதும் இப்படியே அலையாய் அலையலாம். இதோ
இந்த வற்றிப்போன மாடு அலைகிறதே அதைப் போல.
பசிக்கும்வரை அலையலாம். பசியா? மருந்துக் கடையில்
ஏதாவது மாத்திரை தருவார்களா? கேட்டுப்பார்க்கலாம்.
தூக்கத்துக்கு. என்னடி பேசாமல் தூக்க மாத்திரையை
விழுங்கிச் சாந்தமாக செத்துப் போயிருக்கலாம்! ஏன்
இப்படி கோரம் பண்ணிக்கொண்டாய்? ஏன் ஏன் மருந்து
கேட்கவில்லை? அவர்களுக்கு ஏதாவது சந்தேகம் வந்து
போலீஸ் விசாரிக்க...ராத்திரி மற்றொரு சினிமாவில்
போய் உட்கார்ந்தேன். என்ன படம், என்ன பாஷை
என்று கூட ஞாபகம் இல்லை!

படத்திலேயே, என் பயங்களையும் மீறிய அலுப்பில்
ஒரு மணி நேரம் குழப்பமான கனவுகளுடன் தூங்க
முடிந்தது. அப்புறம் பிளாட்பாரம், பார்க் என்று
அலைந்தேன்.

# 11

மறுதினம் காலைக் காப்பி சாப்பிட்டு விட்டு
இரண்டு மூன்று தமிழ் இங்கிலீஷ் தினசரிகளைக் காத்
திருந்து வாங்கிக் கொண்டு உடனே படித்தேன். தமிழ்ப்
பத்திரிகைகள் எல்லாவற்றிலும் கொட்டை கொட்டை
யாகத் தலைப்பு கொடுத்து விஸ்தாரமாகப் போட்டிருந்
தார்கள். தந்தியில் அவள் தொங்கும் கோலத்தில் தலை
சாய்த்து சற்று இருட்டாகப் படம் வேறு போட்டிருந்
தார்கள்.

தலைப்புச் செய்தியின் இணைச் செய்திதான்
என்னைத் திடுக்கிட வைத்தது.

காதலன் தலைமறைவு.

காதலனா? என்ன இது யார்?

நடிகை சுலேகா அவர் வீட்டில் மாடி அறையில்
கழுத்தில் சுருக்கிட்டுத் தொங்கினார். அவருக்கு வயது
பதினெட்டு.

மலையாளத்தில் பல படங்களில் நடித்துள்ள இந்த
அழகான நடிகை முதன் முதலில் ஒரு பெரிய தமிழ்ப்
படத்தில் நடிக்க வாய்ப்புப் பெற்றுப் பிரபலமாக விளம்
பரப் படுத்தப்பட்டவர்.

தற்கொலை இல்லை.

இந்த சம்பவத்தைப் புலன் விசாரித்து வரும் போலீஸ்
அதிகாரி பாண்டியன் இது தற்கொலை என்று நம்புவதற்
கில்லை என்று சொன்னார். சவப் பரிசோதனை ரிப்
போர்ட்டுகளின்படி நடிகையைக் கயிற்றால் இறுக்கிக்
கொன்றுவிட்டு தூக்கில் தொங்க விட்டிருக்கலாம் என்று
நம்புவதற்கு இடமிருக்கிறதாம்.

காதலன்.

நடிகை சுலேகா கேரளத்தைச் சேர்ந்தவள். இவருக்கு தமிழ் கற்றுக் கொடுக்க ஏற்படுத்தப்பட்ட கரிகாலன் என்கிற திரை எழுத்தாளருக்கும் நடிகைக்கும் காதல் என்று வதந்தி சினிமா வட்டாரங்களில் பரவியிருந்தது. இந்தக் கரிகாலனைப் போலீஸார் தேடிக் கொண்ருடிக் கிறார்கள் என்று தெரிகிறது. சம்பவ தினத்தன்று கரிகாலன் நடிகை சுலேகாவைப் பார்க்க வந்திருப்பதாகத் தெரிகிறது. போலீஸார் தீவிரமாகப் புலன் விசாரித்து வருகின்றனர். இது பற்றி உதவிக் கமிஷனர் திரு... எனக்கு திகீர் என்றது. அய்யோ மாட்டிக் கொண்டேனா? எப்படி நான் அங்கே போனது தெரியும்? நான் என்ன செய்வேன்? உடனே அறைக்குப் போனால் அங்கே நிச்சயம் காத்திருப்பார்களோ? என்னத்தைச் செய்வேன். எக்கசக்கமாகச் சந்தேகத்துக்குரியபடி நடந்து கொண்டு விட்டேனே.

இனி போலீஸிடம் சரணடைந்தாலும் அவர்கள் என் கதையை நம்புவார்களா? ஏன் ஓடிப் போனாய்! ஏன் கண் மறைவானாய்? பயமாக இருந்தது. ராத்திரி பூராவும் சினிமா பிளாட்பாரம் என்று சுற்றினேன் என்றால் எப்படி நம்புவார்கள்? நான் அங்கே போனது எப்படி அவர்களுக்குத் தெரிந்தது? அறைப்பக்கம் போய்ப் பார்க்கலாம் என்று மெல்ல நடந்தேன். லாட்ஜுக்கு எதிரே போலீஸ் வண்டி நிற்பதைப் பார்த்தேன். போச்சுரா போனால் உடனே அரஸ்ட். இரு, இதை யோசிக்க வேண்டும். யாரையாவது கேட்க வேண்டும். யாரைக் கேட்பது? யாராவது நண்பனைக் கேட்க வேண்டும் என்று தீர்மானித்தாலும் இந்த இடத்தை விட்டு விலக வேண்டியது மிக முக்கியம். இன்னும் தலைமறைவா? எப்போது வரை? எப்போது வரை? குற்றவாளியைக் கண்டுபிடிக்கும் வரை. தற்கொலை இல்லையா? கொலையா? யார் யார்? எக்கேடு கெட்டுப் போகட்டும். முதலில் என் தலையைக் காப்பாற்றிக் கொள்ள என்ன செய்ய வேண்டும்?



படக்கென்று பஸ் பிடித்துச்செண்ட்ரல்வரை டிக்கெட் வாங்கினேன். வேறு ஊர்? யாரிருக்கிறார்கள் பேசாமல் தேனிக்குப் போய் விடலாமா? அங்கேதான் போலீஸார் கண்ணி வைத்துக் காத்திருப்பார்கள். அப்பா அம்மாவுக்குத் தெரிந்து போயிருக்கும். என்ன வருத்தப்படுவார்கள்! மகன் பெரிய ஆசாமியாகி விட்டேன்! பேப்பரில் எல்லாம் கொட்டை எழுத்திலே பேர் வந்துவிட்டது மாலை மதிப்புக்குள் என் போட்டோவைத் தேடிப் பிடித்துப் போட்டுவிடுவார்கள். 'திரைமலர்' நான் சொன்னேனே, கேட்டீர்களா என்று கெக்கலிக்கும். திடீர் என்று 'திரைமலர்' சேல்ஸ் அதிகரிக்கும்.

பஸ் மாற்றி ஐஸிஎப் காலனிக்குச் சென்றேன். நான் நண்பன் என்று சொல்லிக் கொள்ளக்கூடிய ஒரே பிரகிருதி ராமசுவாமி அங்கேயிருந்தான். இநநேரம் ஃபாக்டரிக்குப் போயிருப்பான். அங்கே விசாரிப்பதுதான் நலம். நான்தான் கரிகாலன் என்று மூஞ்சியைச் சம்பந்தப்படுத்த தெரிந்தவர்கள் யாரும் இல்லை. போக்குவரத்துப் போலீஸை எல்லாம் பார்த்தால் உள்ளங்காலில் ஜில்லென்று இருந்தது. உள் போனில் சொல்லி ராமசுவாமி ரிஸப்ஷன் பகுதிக்கு வர.

'என்னய்யா கன்னியப்பன்?'

'ராமு நீ இன்னைக்குப் பேப்பரைப் பார்க்கலையா?

'பார்த்தேன் இன்னிங்ஸ் டிபீஃட், ஏன்?'

'ராமு, நான் ஒரு சிக்கல்ல இருக்கேன். எனக்கு உன் உதவி தேவையா இருக்கு'

'என்ன விஷயம் சொல்லு?'

'உன்னோட தனியாப் பேசணும். வெளிய வரியா'

ரிஷப்ஷன் ஆபீசுக்கு வெளியே வந்து மரத்தின் ரோடோரப் பக்கமில்லாமல் அந்தப் பக்கமாகப் போய்

தின்றுகொண்டு—'ராமு' இன்னிக்குப் பேப்பர்ல சுலே கான்னு ஒரு நடிகை செத்துப் போய்ட்டதா செய்தி வந்ததே பாத்தியா?

'இல்லை. என் ஓய்ஃப்தான் ஏதோ சொல்லிண்டிருந்தா. தமிழ் பேப்பர்ல பெரிசா வந்திருக்குன்னு. இந்துவிலே வரலை. அவளை எரிச்சு மாசியம் ஆனப்புறம்தான் போடுவான். இல்லை, ஒரு வேளை ஓரத்தில எங்கயாவது போட்டிருப்பான். ஏன்?'

அந்தப் பொண்ணு தற்கொலை பண்ணிக்கலை. கொலை செய்யப்பட்டிருக்கலாம்னு போலீஸ் சந்தேகப்படறா. ஆசாமி சாட்சாத் நான்தான்!

நீயா!' என்று சிரித்தான். 'என்னடா அபத்தமா இருக்கு? நீயாவது கொலை பண்றதாவது'

'இரைஞ்சு பேசாதே. எங்க பாத்தாலும் போலீஸா இருக்கு.'

'அதெல்லாம் செக்யூரிட்டி ஆசாமிங்க. பல்லு புடுங்கின போலீசு. அட! நீ கொலை பண்ணியா? என்னடாது! ஒரு புழு பூச்சியைக் கூட இம்சை பண்ண மாட்டியே நீ!'

'அது என்னமோ ராமு எனக்கு வேலை சரியில்லை. சந்தர்ப்ப சூழ்நிலையில் எம்மேல சந்தேகம் வரும்படியா பைத்தியக்காரக் காரியம் செய்துட்டேன்.'

'என்ன பண்ணே சொல்லு. ஆமா! நீ ஒரு ஜாவா வாங்கப் போறேன்னு சொன்னியே. வாங்கிட்டியா?'

'அய்யோ! இப்ப போய் ஜாவாவா?'

'இல்லை. எங்கிட்ட ஒரு ஜாவா இருக்குஸேல்ஸுக்கு!'

'ராமு, நான் சாலைப் பத்தி பேசிட்டிருக்கேன்.'



'சே, நீ பண்ணலைடா! உன்னைச் சந்தேகப்பட்டாங்கன்னா போலீஸ் சொணட்டின்னு அர்த்தம். நீயாவது.'

'கொஞ்சம் நிதானமாகக் கேட்டன்னா நடந்ததைச் சொல்றேன், இப்ப என்ன பண்ணணும், அதைசொல்லிடு.

''ஜாவா வாங்கிக்கிறியா?''

'உன்னை அடிக்கலாம் போல வரது.'

'சொல்லு சொல்லு, நடந்தது என்ன?'

கேட்டதும். 'உன்னைப் போல மடப்பயல் இருக்க முடியாது' என்றான்.

'சரி ஒப்புத்துக்கறேன்.'

'உன்னைப் போலப் பைத்தியம், ஏமாளி, அசடு, வடிகட்டின முட்டாள் இருக்கவே முடியாது.'

'சரி சரி, என்ன பண்றது'

'சிம்பிளா போய் போலீஸ்கிட்டே நடந்ததைச் சொல்லிட்டு. சாயங்காலம் ஏதாவது ஒரு சிலுக்கு படத்துக்குப் போறதை விட்டுட்டு குழம்பிக் குட்டிச்சுவர் பண்ணியிருக்க.

'என்னுடைய சந்தர்ப்ப சூழ்நிலை.'

'என்ன மயிரு சந்தர்ப்பம்! இந்த மாதிரி கொக்கு தலையில் வெண்ணெய் வைக்கற யோசனை உனக்குத்தாண்டா தோணும் திலிமிட்!'

'நான் என்ன பண்ணணும்?'

'இப்பக்கூட லேட்டில்லை. போலீஸ் கிட்ட போய் நடந்ததை எல்லாம் ஒண்ணு விடாம மறைக்காம முழுங்காம சொல்லிடறதுதான் உத்தமம்.'

'இப்ப போனா ஏன்யா நேத்தேவந்து சொல்லலைன்னு கேட்டா?'

'கேட்டா நான் ஒரு முட்டாளுங்கன்னு சந்திரபாபு பாடினாம் பாரு அந்த மாதிரி பாடிடு கேட்காம இருப் பாங்களா? கேப்பாங்க. மென்னு முழுங்கணும். நீ நடந்துண்டிருக்கிற விதத்தைப் பார்த்தா உன்னை முழு மையா தெரிஞ்ச எனக்கே சந்தேகமா இருக்கு டேய் கன்னி, 'ஏதாவது எனக்கு வயலண்ட் ஸ்ட்ர்க் இருக்கா? கழுத்தை நெரிச்சா எப்படி இருக்கும்னு யார் கிட்ட யாவது பரீட்சை பண்ணிப் பார்க்கற ஐடியா ஏதாவது உன் மனசில இருந்து'

'விளையாடாதே ராமு எனக்கு வேற வழி சொல் லேன்''

வேற வழியே, கிடையாது. போ. ஒப்புத்துக்கோ. உன்னைத் தூக்கிலே போடறதுக்குள்ள வென்றா சரி! போடாபொங்கி. அறிவு உண்மை எப்பவாவது வெல்லும். எங்க போச்சு? வா. என் கூட வா. இங்கேயா ஒரு அவுட் போஸ்ட் இருக்கு. சொன்னாப் போறும். ஒழுங்கா வந்து ஜீப்பில அழைச்சிண்டு போவாங்க.'

'அரஸ்ட் பண்ணுவாங்களா.'

'இல்லை. சந்தனப் பேலாவிலிருந்து சந்தனம் எடுத்து கன்னத்தில் தடவுவாங்க. ஆளைப்பாரு! கன்னி, யூ ஆர் இன் ஃபார்ஸம் தேர்ட் டிகிரி. நகமெல்லாம் எப்படி இருக்கு பரவாயில்லை. கட்டிங் ப்ளையர் வெச்சு இழுத்தா வந்துரு மோல்லியோ? புதுசா நகம் வெச்சுக்கலாம்!'

'என்னடா பயப்படுத்தறறே.'

'பின்ன என்னை என்ன பண்ணச் சொல்றே? வேற வழி ஏதும் புலப்படல போ. நான் வேணா கூட வரேன்.

'சரி ராமு நீ சொல்றாப்போலயே செய்துர்றேன்.'

'இப்பவே ஓடு. நான் வரவா?'

'வேண்டாம்.'



அவனிடமிருந்து விடை பெற்றுக் கொண்டபோது தான் என் மனதில் உடனே போலீஸிடம் போவதுதான் நல்லது என்று தோன்றியது. இருந்தும் உள் மனத்தில் இருந்த பயம் அதிகமாயிருக்க மெல்ல மவுண்ட் ரோடு போலீஸ் நிலையத்தில் சொல்லலாம், மாம்பலத்தில் சொல்லிக் கொள்ளலாம், சாயங்காலம் சொல்லிக் கொள்ளலாம் என்று மெல்ல மெல்ல ஒத்தி போட்டேன். தீர்மானமின்றி அறைக்கு வந்தேன் அறை வாயிலில் ஜீப் ஏதும் இல்லை. மத்தியானம் பன்னிரண்டு மணி இருக்கும் அச்சகத்தில் சாப்பாட்டுக்குப் போயிருக்க வேண்டும். எதிர் விறகுக் கடையில் யாரோ தூங்கிக் கொண்டிருக்க நான் சட்டென்று பக்கவாட்டில் திரும்பி மாடிப்படி ஏறிப் போனதை ஒருவரும் பார்க்கவில்லை. அறைக்குப் போய் ஒரு சில சட்டை வேட்டிகள் எடுத்துக்கொண்டு உடனே ஸ்டேஷனுக்குப் போய், பணம் பெட்டியில் இருக்கிறது, அதையும் எடுத்துக் கொண்டு ஒரு தலையணையை எடுத்துக் கொண்டு பங்களூர், மைஸுர் அல்லது பம்பாய்! எல்லாம் அடங்கி போலீஸ் உண்மையான குற்றவாளியைக் கண்டு பிடிக்கிறவரை தலைமறைவு உண்மை நிச்சயம் ஒரு நாள் கண்டுபிடிக்கப்படும். அதன் பின் வரலாம். ஆம், அதுதான் சரி, அதுதான் சரி. சட்டென்று ஒரு பையில் ஒன்றிரண்டு சட்டைகள், இருந்த பணம் முழுவதும், ஒரு காற்றழுத்த தலையணை எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு அறைக்கதவைப் பூட்டும்பொழுது தோளில் கைபட்த திரும்பினேன்.

அந்த ஆசாமி போலீஸ் உடையில் இல்லாவிட்டாலும் மீசையும் க்ளோஸ் கிராப்பும் போலீஸ் அதிகாரி என்பதை உரக்க அறிவித்தது.

'மிஸ்டர் கன்னியப்பன். எம்பேரு பாண்டியன்.'

'அப்படியா? வந்து நான் உங்களத்தான்...சார் நான் உங்களத்தான் சந்திக்கலாம்?...'

'சட்டை பாண்ட்டோடயா! பரவாயில்லையே. உங்களுக்குச் சிரமம் ஏதும் இருக்க வேண்டாம்னு நாங்களே வந்துட்டோம். ஜீப்பு மரத்தடி நிழல்ல கொஞ்சம் மறைவா நிக்குது. நீங்க பார்க்கலைன்னு தோணுது... எங்ககூட வரீங்களா?'

நான் என்னை அறியாமல் காகிதப் பொட்டலத்தைக் கக்கத்தில் இடுக்கிக் கொண்டு இரண்டு கைகளையும் ஒன்று சேர்த்து நீட்டினேன்—விலங்குக்கு.

'தேவையில்லை. கூட வந்தாப் போதும். வரீங்களா.'

## 12

நான் கதை வசனம் எழுதின இருபது கதைகளில் பதினெட்டில் போலீஸ் நிலையம் வந்திருக்கிறது. நேரில் பார்ப்பதற்கு இத்தனை வித்தியாசமா! என்ன என்ன பொய்களை எல்லாம் ஜோடித்துக் கொண்டிருக்கிறோம் என்று வியப்பாக இருந்தது. நுழைந்த உடனே பூஞ்சாடிகள் இருந்தது. காம்பவுண்டுக்குள் டயர் சப்பட்டையாக ஒரு ஆட்டோ ரிக்ஷா முகம் நசுங்கி நின்று கொண்டிருந்தது. அதனருகில் அப்பளமாக ஒரு சைக்கிள். சிற்சில திருடர்களும் திருட்டு அடிக்கப்பட்டவர்களும் பழகின இடத்தைப்போல போலீஸ் கான்ஸ்டபிள்களுடன் பேசிக் கொண்டிருந்தார்கள் பீட் டூட்டியெல்லாம் போர்டில் எழுதியிருந்தது. ஒரு பெண்மணி டயல் இல்லாத டெலிபோனின் தலையைத் தட்டிக் கொண்டிருந்தாள், பழுப்புக் காகிதங்கள் கொண்ட நிறைய ரிஜிஸ்தர்கள் இருந்தன வரிசையாக ரை.' பில்கள் ஸ்டாண்டில் நின்று கொண்டிருந்தன அறைக்கு வெளியே ஒரு கவலை முகத்தன் குந்தி உட்கார்ந்திருக்கு 'யோவ்! வழியை மறைச்சிக்கிட்டு! அங்க போய் உட்காரு' என்று அவனை அதட்டி



விட்டு வாங்க' என்று என்னை உள்ளே அழைத்துச் சென்றார் பாண்டியன். என்னை எப்போது கைது செய்யப் போகிறார்கள்—என் உரிமைகள் என்ன—எதுவும் தெளிவாகத் தெரியாத நிலையில் தயங்கித் தயங்கி உள்ளே நுழைந்தேன். அழ வேண்டும் போலிருந்தது எப்படி என்னை நம்பப்போகிறார்கள்! ரொம்ப அடிப்பார்களோ துன்புறுத்துவார்களோ என்று கை நகங்களைப் பார்த்துக் கொண்டேன் கஸ்ட்டடிக்கு உண்டான சிறிய சிறை அறை தெரிந்தது அதில் ஒருவன் சொந்த வீடு போல உட்கார்ந்திருநதான்.

''அய்யா நான்... எனக்கும் அந்த தற்கொலைக்கும் சம்பந்தமே...' என்று உடைந்த குரலில் ஆரம்பித்தவனை 'கொஞ்சம் இருங்க. ஒரு போன் அடிச்சுட்டு வரேன்' என்று எண்களைச் சுழற்றி 'ஸார் பாண்டியன்! அவனைக் கூட்டியாந்துட்டேன்.'

அந்த முனை சொல்லும் ஆணைகளைத் தன் மீசையைத் தடவிக் கொண்டே ஸர் ஸர்' என்று கேட்டுக் கொண்டிருந்த பாண்டியனை நான் நிதானமாகப் பார்க்க முடிந்தது. அவர் ஸர்க்கிள் இன்ஸ்பெக்டரா என்ன பதவி என்றெல்லாம் தெரியாது. சீருடையிலிருந்து சொல்லலாமாமே! முன்னே பின்னே போலீஸ் பக்கம் தலை வைத்துப் படுத்திருந்தால்தானே! கண்களில் நல்ல கருமை. தீர்க்கமான பார்வை என்னைக் கடந்திருந்தது. மூக்கு பெரிசாக இருந்தது. கீழுதடுகள் தடிமனாக இருந்தன. கீழ்ப் பற்கள் சற்றே வரிசை தவறி இருந்தன. ஃபோன் பேச்சை முடித்துவிட்டு என்னைத் துளைப்பது போலப் பார்த்தார். 'சொல்லுங்க கன்னையன். என்ன ஆச்சு?'

தவித்தேன். நடந்ததை அப்படியே சொல்லி விடுவது தான் உத்தமம் என்று பகுத்தறிவு சொல்லிறது நம்ப மாட்டார்களோ, அடிப்பாரோ என்று பயம் என் கை விரல்களை நடுங்க வைத்தது. ஸார் எனக்கும் வந்த இந்த சமபவத்துக்கும், சுலேகா தற்கொலை கொலை என்று

தொடர்பில்லாமல் பேச ஆரம்பித்தவனை நிறுத்தி, 'கன்னையன், நீங்க வேறு எந்தத் கேள்விக்கும் பதில் சொல்ல வேண்டாம். அங்க போனீங்களா இல்லையா?'

'எங்க ஸார்.'

'சுலேகாவின் வீட்டுக்கு.'

எப்ப ஸார்.'

சட்டென்று அவர் முகம் உக்கிரமாகியது. டோன்ட் ப்ளே வித் மி மேன். தெரிஞ்சுக்கிட்டே தெரியாத மாதிரி இந்தப் பாசாங்கெல்லாம் நடக்காது!' என்றார்.

சட்டென்று சாந்தப்பட்டு 'ஆல்ரைட். நீங்க சொல்ல விருப்பப் படாட்டா நான் உங்களுக்குச் சொல்றேன். நேத்தைக்கு மதியானம் நீங்க சுலேகாவின் வீட்டுக்குப் போயிருந்தீங்களா இல்லையா.

'எப்ப ஸார்?'

அவர் அலுப்புடன், 'மத்தியானம் பன்னிரண்டரை மணிக்கா காலையா எப்பன்னு நீங்க தான் சொல்லணும். கன்னையன், எங்ககிட்ட பொய் சொல்லித் தப்பிக்க முடியாது. உங்களைக் கொண்டு போய் விட்ட ஆட்டோ ரிக்ஷாக்காரர் சொல்லியிருக்காரு. பத்து ரூபாய்க்குச் சில்லரை இல்லாமபாக்கியை வெச்சுக்கப்பான்னு சொல்லியிருக்கிங்க. அவரை மத்தியானம் அழைச்சுக்கிட்டு வரதா இருக்கேன், நீங்கதானான்னு பார்த்துச் சொல்லிரலாம். காலை பத்து மணிக்கு அங்க போயிருக்கிங்க!'.

'அய்யோ' காலை பத்துமணிக்கு நான் ஸ்டூடியோவில் இருந்தேங்க!''

'எப்ப போனீங்க? சொல்லிருங்க.'

'ஒரு மணிக்கு இரண்டு நிமிஷம் இருக்கறப்போ!'

'அப்படி. வாங்க! எப்படி அவ்வளவு கரெக்டா சொல்றீங்க?'



'சுலேகா என்னைப் பன்னிரண்டு மணிக்கு சாப்பிடச் வரச் சொல்லியிருந்தாங்க, லேட்டாயிடுச்சு ஸ்டூடியோ விலே அதனால அவங்க வீட்டுக் கதவைத் தட்டறதுக்கு முன்னாடி மணி பார்த்தேன்.'

'போறப்ப சிவப்பு சட்டை போட்டுக்கிட்டு இருந் தீங்க '

'ஆமாங்க. ஸ்டூடியோவில் ஸ்க்ரீன் டெஸ்ட்டு எடுத்த சட்டையைப்போட்டுக்கிட்டு போயிருந்தேன். சட்டையை மாத்திக்கிறதுக்கு நேரம் கிடைக்காம அப்படியே போயிட்டேன் '

'இந்தச்சட்டை போட்டுக்கிட்டு நீங்க வாசக்கதவைத் தட்டினத எதிர்த்தாப்பலே கட்டட வேலை நடக்குது அங்க கவனிச்சுவச்சிருக்காங்க. ஆட்டோ ரிக்ஷாக்காரர் இந்தச் சட்டையை ஞாபகம் வெச்சிருக்கார். நீங்க திரும்பிப் போறப்ப பஸ் ஸ்டாண்டில் இதே சட்டையை நோட் பண்ணியிருக்காங்க. இந்த மாதிரி டொமேட்டோ கலர் சட்டையைப் போட்டுக்கிட்டுப் போயிருந்துட்டு அங்க போகவே இல்லைன்னு சாதிக்கப் பாக்கறீங்க. சிறுபிள்ளைத்தனம். ஆமா, பத்து மணிக்கு எங்க இருந்தீங்க?'

ஸ்டூடியோவில். ஸார், சத்தியமா சொல்றேன் எங்ககூட இருந்த காமிராக்காரரைக் கேட்டுப் பாருங்க. ஸார், டெஸ்ட் எடுத்தவங்களைப் கேட்டுப் பாருங்க '

'பத்து மணிக்கு நீங்க வி.ஓ.சி காலனி போகலை?'

'அய்யோ, இல்லவே இல்லை சார்'.

'பத்தரை மணிக்கு இந்தச் சட்டையோட உங்களைப் பார்த்தா சாட்சி இருக்கே.'

'என்னையா? என்னையா?'

'உங்களைன்னு சொல்லலை. ஆனா இந்தச் சட்டை போட்டுக்கிட்டு ஒரு ஆளு பத்தரை மணிக்கு வீட்டுப்

பின்புறத்துக்கதவிலிருந்து வெளியே வந்ததா கட்டடத்து வேலைக்காரர் ஒருத்தர் சொல்லியிருக்கார்'

'அய்யோ, அது நானில்லை சார்.'

'சட்டை அதேதானே! முதுகுப் பக்கத்தில் இதயம் வரைஞ்சிருந்ததைக்கூட சொல்லியிருக்காரே!'

'ஸார், இது அபாண்டம். அநியாயம். அந்த மாதிரி சட்டை அன்னிக்கு ஸ்டூடியோவில் எட்டுப் பேர் போட்டுக்கிட்டு ஸ்க்ரீன் டெஸ்ட்டு எடுத்தாங்க அவங்களை ஏன் கேக்கலை?'

'அவங்களையும் கேக்கத்தான் போறேன் ஆனா அவங்களுக்கும் சுலேகாவுக்கும் சம்பந்தமே இல்லையே! நீங்க தானே சுலேகாவுக்குத் தமிழ் கத்துக் கொடுத்து, காதல் கத்துக் கொடுத்தது எல்லாக் கண்ராவியும்...'

'ஸார்! அது வந்து ஸார்...' திரை மலர் இதழை எடுத்துப் பேனாவால் பட்டையாக அடிக் கோடிட்டிருந்த பகுதியை எடுத்துப் படிக்க ஆரம்பித்தார். 'குட்டிக் கதாசிரியர் கருப்புக்கால் சோழன் கரிகாலன்ங்கறது நீங்க தானே?'

'ஆமா ஸார். ஆனா இந்த திரைமலர்ல வந்திருக்கிறது அத்தனையும் பொய்யி. நான் அவளுக்குத் தமிழ் கத்துக் கொடுத்தேன். அவ்வளவுதான் இண்டஸ்ட்ரில யாரை வேணா கேட்டுப் பாருங்க ஸார்.'

'கேக்கலாம் கேக்கலாம் அவசரமே இல்லை. முதல்ல உங்க 'அலிபியை' ஒழுங்கு படுத்திரலாம். பத்து மணிக்கு நீங்க ஸ்டூடியோவில் இருந்தேங்கறிங்க. ஒரு மணிக்குத் தான் அங்க போனீங்க! அப்படித்தானே?'

'அப்படித்தான் ஸார்'

'உங்களுக்கு யார் கதவு திறந்து விட்டாங்க, சுலேகாவா?'



'இல்லை ஸார், கதவைத் தட்டினேன் யாரும் திறக்கலை. பின்பக்கம் போனேன். அங்க கதவு திறந்திருந்தது உள்ளே போனேன்.'

'அடிக்கடி பின் பக்கமாகத்தான் நுழைவிங்களா?'

'அய்யோ இல்லை. வேலைக்காரப் பொண்ணு அந்தப் பக்கம் இருக்கும்னு விசாரிக்கலாம்னு பின்பக்கம் கதவைத் தொட்டேன் திறந்துகிச்சு!'

சரி உள்ளே போனிங்க. அங்க என்ன பாத்தீங்க, பெட்ரூமில் சுலேகாவைப் பாத்தீங்களா?'

'இல்லைங்க. கீழ எல்லாமே காலியாத்தான் இருந்தது. மாடிக்குப் போனேன். மாடியில் அவ நாய்...' எல்லாவற்றையும் சொன்னேன். நம்புகிறாரா நம்பவில்லையா! ஏதும் தெரியாத முகமூடி அணிந்தாற் போல முகம்! பிரம்பை அடிக்கடி உள்ளங்கையில் உருட்டிக்கொண்டிருந்தவர் திடீர் என்று ஒரு போடு போட்டு விடுவாரோ என்று தோன்றியது.

'நீங்க பார்த்த போது உடல் தொங்கிக்கிட்டு இருந்தது இல்லையா?'

'ஆமா ஸார்.'

'கை?'

'ரெண்டு கையும் அப்படியே மூடியிருந்தது இருக்கினாப்பல.'

'கண்ணு?'

'தெறந்திருந்தது.'

'என்ன கலர் புடவை கட்டியிருந்தாங்க?'

'நீலத்திலே பூப் பூவா போட்டாப்பல'

'கதவு.'

'சாத்தியிருந்தது. டோர் லாக்ட்.'

'அப்பிடியா, இப்ப சொல்லுங்க. இந்த மாதிரி ஒரு பொம்பளை தூக்கில தொங்கறதைப் பார்த்திங்க. ஏன் உடனே போலீஸுக்குத் தெரிவிக்கலை?' ஏன் தலை மறைவாயிட்டீங்க?'

'அது வந்து ஒரு பயத்தாலதான்.'

'என்ன பயம்! தற்கொலைதானே, கொலையில்லையே? இதில் பயப்பட என்ன இருக்குது? கொலையா இருந்தாத்தான் யார் மேலயும் சந்தேகப்பட வாய்ப்பு இருக்குது நீங்க என்ன சொல்றீங்க? இது கொலையா, தற்கொலையா?'

'தெரியலை சார். அதை நீங்க கண்டு பிடிச்சிருப்பீங்களே!'

'சொல்லுங்க. ஏன் ஓடிப் போயிட்டிங்க' அதை அவர் விடவில்லை.

'சொன்னேனே, பயத்தாலதான்.'

'யார் கிட்டபயம்.'

'போலீஸ் '

'என்னைப் பார்த்தா பயமா இருக்குதா உங்களுக்கு?'

'ஆமா, ஸார்.'

'குற்றம் செய்திருந்தாத்தானே போலீஸ் கிட்ட பயப்படணும். நீங்கதான் எதும் செய்யலையே. பத்தரை மணிக்கு ஸ்டுடியோவில் இருந்திருக்கீங்க. அதைப் பார்க்கத்தான் போறேன்! போலீஸ்கிட்ட பயம். சரி, ஓடி வந்துட்டிங்க. ஏன் ரூமுக்கு வரலை? நைட்டு தூங்க வரலை? ராத்திரி எங்க போனீங்க.

'திரிஞ்சுக்கிட்டு இருந்தேன் ஸார். ரொம்ப குழப்பமா தெளிவில்லாம இருந்திச்சு. ராத்திரி சினிமாவுக்குப் போனேன் சார்.'

'என்ன சினிமா?'



'பேர் தெரியாது சார்.'

'பேர் தெரியாதா! இதை நம்பச் சொல்றிங்களா ''

'எங்கையாவது போய் உக்காந்தா சரின்னு அதில் போய் உக்காந்தேன் ,

'டிக்கெட் இருக்குதா?'

நான் பையைத் தடவிப் பார்த்து 'இல்லை ஸார். அந்த சட்டையில் இருக்கலாம்.' அவர் டிக்கெட் பாதியை மேலாகத்தான் பார்த்துவிட்டு மேசையில் வைத்துவிட்டு 'சரி, பத்து பத்தரை மணிக்கு ஸ்டூடியோவில் இருந்திங்கன்னு சொல்றீங்களே அங்க உங்களைப் பார்த்தவங்க யாராலது இருக்காங்களா?'

'நிறையப் பேர்.

''எனக்கு ஒரு ஆள்போது, யாரு? பேர்சொல்லுங்க.'

'எனக்கு ஒரு ஆள்போதும். யாரு பேர்சொல்லுங்க.'

பேர் ஏதும் தெரியாது சார். காமிராக்காரர். பிலிம் சுருள்கொண்டு வந்தவங்க. அப்புறம் என்னோட டெஸ்ட் எடுக்க வந்தவங்க ஒரு எட்டுப்பத்துப்பேர் இருப்பாங்க எல்லாரும் எனக்கு அன்னியர்கள் பேர் தெரியாதவங்க.'

'ஒருத்தர் பேரக்கூடத் தெரியாதா?'

'ஸாரி ஸார்.'

'நான் தான் உங்களுக்கு ஸாரி சொல்லணும். கூட நடிச்சவங்க எல்லாரும் இதேசட்டைதான் போட்டுக்கிட்டு நடிச்சாங்களா?.

'ஆமாம்.'

''அவங்களைப் பார்த்தா அடையாளமாவது சொல்ல முடியுமா?''

''யாரை?''

''யாரையாலது ஒருத்தரை.'

'ம்...முடியும்னு நினைக்கிறேன். சுருட்டை சுருட்டையாக முடிவெச்சிக்கிட்டு ஒரு ஆளு இருந்தாங்க: அப்புறம்...

'அவங்கள்ள யாராவது நடுவில வெளியே போய்ட்டு திரும்பி வந்தாங்களா ஞாபகம் இருக்கா'

'என்னமோ யார் யாரோ போய் வந்த வண்ணம் இருந்தாங்க. எனக்குச் சரியா சொல்லத் தெரியலை.'

நீங்க எப்ப நடுவிலபோய்ட்டு எப்ப திரும்பி வந்தீங்க? அய்யய்யோ! நான் தொடர்ந்தேத்தியா அங்கதாங்க இருந்தேன்.'

'சுலேகாவை நீங்கள் காதலிச்சிங்களா?

எதற்காகவோ தயங்கினேன் 'ஆம் நான் அவளைக் காதலிக்கத்தான் செய்தேன். அந்தக் காதல் ஏறக்குறைய இலக்கியக் காதல் மாதிரி!' இப்படிச் சொன்னால் காச்கிச் பட்டை போலீஸ் அதிகாரியின் காதில் வேறு விதமாகத் தொனிக்கும். 'இல்லை சார்.'

'பின் அவளைப்பத்தி கவிதையெல்லாம் எழுதியிருக்கீங்க!' என்று என்னிடம் ஒரு கசங்கிய காகிதத்தை, எறிந்தார்.

அதுநான் அவளைப் பற்றிக் கவிதை எழுத முயன்று பாதியாகக் கிழதநுப் போட்ட காகிதத்துண்டு. 'சுலேகா என் இதய ரேகா' என்பதுடன் கிழிந்திருந்தது. 'அட இது எப்படி உங்களுக்கு?'

'உங்க வீட்டுக் குப்பையைப் பொறுக்கறதும் எங்க வேலைதான்! என்ன செய்யறது! அப்ப அவங்களை நீங்க காதலிச்சிங்க! இத பாருங்க, பொய் சொல்றதும் ரொம்ப கஷ்டம். அடுக்கடுக்கா சொல்லிக்கிட்டே போகணும். நல்ல ஞாபக சக்தி வேணும். உண்மை ரொம்ப சுலபம்' என்ன நடந்தது? சொல்லிருங்க. ஏன் போனீங்க!



'அதான் சொன்னேனே ஸார் சுலேகா என்னைச் சாப்பிடக் கூப்பிட் டிருந்தாங்க.'

'இதை யார்கிட்டயாவது சொல்லியிருக்கீங்களா போறதுக்கு முன்னாடி?'

'சொல்லியிருக்கேன். முரளிஸாரைக் கேட்டுப் பாருங்க.

'முரளி ஓ! ப்ரொட்யூஸரோட மச்சான்! கேட்டுரலாம், கேட்டுரலாம்! பாருங்க கன்னியப்பன். நான் ஒண்ணு சொல்றேன். நடந்ததைச் சொல்றேன். குறுக்க கேசாம கேட்டுக்கிட்டே வாங்க. அப்புறம் பதில் சொல்லுங்க என்ன? உங்களுக்குச் சுலேகா மேல ஆசைவந்துருச்சு உங்க காதலைப் பல விதத்தில் வெளிப்படுத்தறதுக்கு நல்ல பல சந்தர்ப்பங்கள் உங்களுக்குக் கிடைச்சிருக்கு. அதைப் பத்தி வதந்தி கூட பத்திரிகையில போடற அளவுக்கு உங்கள் சந்திப்பு விருத்தியாயிட்டுது. நீங்க அவளைக் கல்யாணம் பண்ணிக்க கேட்டிருக்கிங்க. அவ உங்களை துச்சமா பேசியிருக்கா ஒரு சாதாரண உதவிக் கதாசிரியரைப் போயி நான், சுலேகா, ஸ்டாரு, கல்யாணம் பண்ணிக்கிறதாவது கனவில் கூட நினைக்காதேன்னு பளிச்சுன்னு சொல்லிட்டா அன்னைக்கு உங்களை அதை சொல்லத்தான் கூப்பிட்டிருக்கா இந்த மாதிரிச் சொல்றதைக் கேட்டதும் உங்களுக்கும் ஆத்திரம் வந்திருச்சு, நியாயம்தானே எல்லாருக்கும் அப்படி துச்சமா பேசினா ஆத்திரம் வராத்தானே வரும்! என்ன பண்ணீங்க? ஒரு கவுத்தை எடுத்தீங்க. கழுத்தை நெரிச்சிங்க. அதைத் தற்கொலை போலக் காட்டறதுக்கு அப்படியே விட்டத்திலே உடலை மாட்டிட்டு உங்களை யாரும் பார்க்கலைன்னு வந்து படப்பிடிப்புக்கு வந்துட்டீங்க...'

நான் அதிர்ந்து போனேன். 'அய்யோ என்ன ஸார்! நான் எழுதற கதையைவிட கடுமையான கற்பனையாக இருக்குதே!' என் கண்களில் பொல பொலவென்று கண்ணீர் உதிர அப்போதுதான் நிலைமையின் தீவிரம்

புரிந்தது. இவர் என்னைத்தான் சந்தேகிக்கிறார். ராத்திரிக்குள் குற்றத்தை ஒப்புக் கொள்ளும் படி துளைத்து எடுத்துவிடப் போகிறார். கேள்வி கேட்டே சாகடிக்கப் போகிறார்.

'எதுக்காக அழறீங்க இப்ப '

'நான் செய்யலை ஸார். நான் செய்யலை ஸார் அய்யோ! அய்யோ! நான் செய்யலை!'

சட்டென்று குரலை உயர்த்தி 'பின்ன ஏன்யா யாரும் இல்லாத தினமாப் பார்த்து அங்க போனே?

'புரியலீங்க.'

'அண்ணன்காரன் அந்த வேலைக்காரப் பொண்ணையும் அழைச்சிக்கிட்டு கொச்சிக்குப் போயிருக்கிறது தெரியுமில்லே உனக்கு.

'அண்ணன் போனதுதான் தெரியும் வேலைக்காரப் பொண்ணுகூடப் போனது தெரியாதுங்க.'

'யாரும் இல்லாத சமயமா பார்த்து செலக்ட் பண்ணியிருக்கே. எட்டுப் பேர் போட்டுக்கிட்ட சட்டையைப் போட்டுக்கிட்டுப் போயிருக்க. அடையாளம் கண்டு பிடிச்சாலும் யாருன்னு சொல்லக் குழப்பம் வந்துரும்! சரியான கில்லாடிய்யா நீ! அந்த நாயி அன்னியர்களைப் பார்த்தா புடுங்கி எடுத்துடும்னு அண்டை அசல்ல சொன்னாங்க அவளைக் கொலை பண்றபோது நாயி என்ன பண்ணுச்சு? பாஞ்சிருக்காதோ? அதை யாரும் கட்டிப் போடலை! வந்தவன் பழக்கப்பட்ட ஆசாமின்னு தானே அர்த்தம்! உன்னைத் தவிர அடிக்கடி அவங்க வீட்டுக்கு வந்து போனவங்க அதிகம் பேர் இல்லை.'

'ஸார். அந்த நாயி விஜிஆஎரப் பார்த்தாக்கூட வாலை ஆட்டும்! அப்படிப்பார்த்தா அவரையும் சந்தேகப் படணும். எல்லாரும் சேர்ந்து எம் மேல சதி பண்ணி குற்றம் சாட்ட விரும்பறீங்க. கடவுள் உங்களை லேசில விடமாட்டார்.'



'சைத்தான் வேதம் ஓதறியா? கொலையையும் செஞ்சுப்பிட்டு.'

நான் இப்போது முழுவதும் உடைந்து போய் அழுதேன். சிந்த முடியாமல் மூக்கிலும் கண்ணிலும் தண்ணீர் தாரை தாரையாக ஒழுக 'இப்படி இப்படி சொன்னிங்கன்னா என்னைப் போல ஏழைங்க பாதுகாப்பு இல்லாதவங்க எங்க போறது அய்யா? நான் செய்யலையா! நான் செய்யலை! தான் செய்த ஒரே தப்பு பாத்த உடனே தெரிவிக்காதது! அதுக்கு நோான கரரணம் பயம்! போலீஸ் கிட்ட பயம்தான்! நீங்க இந்த மாதிரி கேட்டுக்கிட்டே இருந்திங்கன்னா அப்படியே உடைஞ்சு போயி எல்லா குற்றத்தையும் ஒப்புத்துக்கிடுவேன்! அய்யா என்னை விட்டுருங்க! நானில்லை அது நானில்லை!'

மேசைக்குக் குறுக்கே அவர் காலைத் தேடினேன்—தொட்டுக் கும்பிடுவதற்கு!

'சேச்சே, காலைத் தொடாதே' என்று எழுந்துநின்று தன் பிரம்பை இன்னும் கையில் உருட்டிக் கொண்டு என்னருகில் வந்தார். தரையில் உட்கார்ந்திருந்த நான் கிலி பிடித்து அடுத்த செயலை ஒரு விதத்தில் எதிர் பார்த்து அடிக்குத் தயாரானேன் பிரம்பை மேசை மேல் வைத்தார், என் தோளைப் பிடித்தார் என் உடல் பூரா நடுங்க ஆரம்பிக்க 'எந்திரி' என்றார்.

'எந்திரியான்னா?''

'எழுந்திருந்தேன். 'கன்னியப்பன், நீங்க இந்தக் கொலையைச் செய்யலை' என்றார்.

நான் நம்பிக்கையில்லாமல் 'ஸார்?' என்றேன்.

'மோட்டிவ் இல்லை. பத்தாது! எனக்கே நான் சொன்னது பூரா அபத்தம்னு தெரிஞ்சு போச்சு. இருந்தாலும் உங்க சாட்சியத்துல எங்கயாவது ஓட்டை இருக்

கான்னு பார்க்கறதுக்காகத்தான் இந்த மாதிரி மடக்கினேன். உக்காருங்க. டேய்ப்பா! ஒரு டீ கொண்டு வா.'

சட்டென்று குளிர்ச்சியாகக் காற்று அடித்தாற் போல உணர்ந்தேன். கண்ணைத் துடைத்துக் கொண்டு, 'ஸார், ரொம்ப பயந்துட்டேன்.'

'ஒரு சின்னச் செயலால் என்ன குழப்பம் பாருங்க உங்களுக்கும் குழப்பம். எங்களுக்கும் குழப்பம்!' இப்போது கூட எனக்கு நம்பிக்கையில்லை—இது அவருடைய கேள்வி கேட்பதில் புதிய உத்தியோ என்று! 'பேசாம மத்தியானமே ரிப்போர்ட் பண்ணியிருந்திங்கன்னா விஷயம் உங்களைப் பொறுத்தவரையிலே அங்கியே தீர்ந்து போயிருக்கும்! அதை விட்டுவிட்டு ராவோடுராவா தலைமறைவாயிருந்து ஒரு ஆட்டோவிலேயோ, நடந்தோ, ஒரு வீட்டுக்குப் போனா உங்களை யாரும் கவனிச்சுக்கலைன்னு நினைச்சுக்கறது தப்பு எத்தனையோ பேர் பாக்கறாங்க. பாத்துட்டு தேவையில்லைன்னா கொஞ்ச நேரத்தில் மறந்துருவாங்க. தேவைப்பட்டா நினைப்புக்குக் கொண்டு வர முடியும். உங்களைப் பஸ் ஸ்டாண்டில் ஒண்ணரை மணிக்குப் பார்த்ததுக்கு நாலு சாட்சி இருக்குது. ஆட்டோக்காரர்கிட்ட போட்டோ காட்டின உடனே பளிச்சின்னு சொல்லிட்டாரு இவர்தான்னுட்டு. எதுக்காக போலீஸ்கிட்டப் பயப்படணும்? நாங்க என்ன கடிச்சா முழுங்கிடுவோம்? இந்த மாதிரிதான் எத்தனையோ கேஸ்கள் மக்கள் முன் வராததால் நாங்க குறுக்கு வழிக்கெல்லாம் போக வேண்டியிருக்குது. பத்தாயிரம் பேருக்கு ஒரு போலீஸ்காரனை வெச்சு கொலை கொள்ளை திருட்டு எதும் இருக்கக் கூடாதுன்னு பாத்துக்கோன்னா அவங்களுக்கும் அப்பப்போ ஆத்திரம் வரத்தான் வரும். போலீஸ்காரங்க தர்மபுத்திரங்கன்னு சொல்லவரலை ஆனா ஜனங்க ஒத்துழைப்பு எங்களுக்குக் கட்டாயம் வேணும். இந்தம்மாளை ஒருத்தன் கொன்னிருக்கான்.

'தற்கொலை இல்லையா ஸார் அது? நிச்சயமா தெரிஞ்சு போச்சா?'



'கழுத்திலே மூணு சுத்து இறுக்கியிருக்கு. தற்கொலை பண்ணிக்கிட்டா ஒரு சுத்துத்தான் சாதாரணமா இருக்கும். அப்பொறம் தற்கொலைன்னா எச்சி வழியும். எச்சிலே இல்லை! அந்தம்மா பயத்திலே ஒண்ணுக்குப் போயிருக்காங்க, வெளிக்குப் போயிருக்காங்க! கையெல்லாம் எதையோ பிடிக்கிறதுக்கு பரிதாபமா இறுக்கியிருக்கு போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட் பார்த்தேன். செத்து போனது அஸ்ஃபிக்ஸியரவால! ரத்தக் குழாய் எல்லாம் கன்ஜெஸ்ட் ஆயிருக்குது. ஸெரிப்ரல் இஸ்கீமியான்னு சொல்லுவாங்க. அது வேற ஆயிருக்குது. ஆனா ஸெர்விக்கல் வர்டிப்ரா எதும் உடையலை. தூக்கில தொங்கினா பெரும்பாலும் கழுத்து எலும்பு உடைஞ்சுரும். என்ன ஒரு மாதிரி ஆயிட்டிங்க? என்ன பண்றது. இதையெல்லாம் நிறையவே பாத்தாச்சு! அந்தம்மா நிச்சயம் கொலை செய்யப் பட்டிருக்காங்க. கொலை நடந்த நேரம் பத்து பத்தரை இருக்கும். நீங்க பாத்தப்ப மூணுமணி நேரம் தொங்கியிருக்காங்க. அண்ணன் இல்லை, வேலைக்காரப் பொண்ணு இல்லை. ரெண்டரை மணிக்கு வீடு கூட்டறவ போயிருக்கா. பாத்திரம் தேய்க்கப் பின்பக்கமா உள்ள போயி நாயைப் பார்த்து மேல போயிகுய்யோ முறையோன்னு கூப்பாடு போட்டு போலீஸுக்கு ஓடி வந்து சொல்லியிருக்கா. அவளுக்கு இருந்த பொறுப்புக் கூட உங்களுக்கு இல்லை. நீங்க எங்களுக்குத் தேவைப் படறது ஒரு முக்கியமான விட்னஸுக்காக. அந்தம்மா கூட கொஞ்சம் க்ளோஸாகவே பழகியிருக்கிங்கங்கற ரீதியில அவங்க எப்பவாவது ஏதாவது உங்ககிட்ட ப்ரச்னை எதைப்பத்தியாவது சொன்னாங்களா''

'சொன்னாங்க, கல்யாணம் பண்ணிக்கப் போறதா சொன்னாங்க.'

'யாரை?'

'யாரைன்னு சொல்லலை. அதுக்குத்தான் என்னை ஞாயிற்றுக் கிழமை கூப்பிட்டிருந்தாங்க. என்னுடைங உதவி தேவையிருக்கிறதா சொன்னாங்க.'

'அப்படியா? முதலில எப்ப சந்திச்சீங்க அவளை?

பயம் எல்லாம் விலகின நிலையில் அந்தப் பாண்டி யனை எனக்குப் பிடித்துப் போய் விட்டிருந்தது. முதலில் விஜி ஆரால் அழைக்கப்பட்டதையும் சுலேகாவைத் திரை பிம்பத்தில் முதலில் சந்தித்ததையும் தமிழ் கற்றுகொடுக்க ஏற்பாடானதும் விஜி ஆர் அவளைப் புகழ்ந்து பேசின தையம் சேட்டன் பாலச்சந்திரன் பற்றியும் 'சேட்டனும் இல்லை பூட்டனும் இல்லை ஏதோ தூரத்து உறவுக்கா ரன். அதும் சந்தேகக் கேஸ்! கொச்சிக்கு நிசமா போனா னான்னு விசாரிக்கணும். சொல்லுங்க இந்த விஜி ஆரும் அந்தப் பொண்ணும் எப்படிப் பழகினாங்க?'

'ஒரு மாதிரி அன்னியோன்னியமா ஒருத்தரை ஒருத்தர் தட்டிக்கிட்டு சிரிச்சுப் பேசிக்கிட்டு, ஆனா இந்த மாதிரி பழகறதெல்லாம் சினிமாவிலே சகஜம்ங்க.'

'வாஸ்தவம்தான் பொண்ணு எப்படி?'

'ரொம்ப தங்கங்க! தற்கொலை பண்ணிக்க வேண்டிய பொண்ணு இல்லைங்க. வாழ்க்கையில நிறைய விஷயங் கள்ல அதுக்கு சின்னக் குழந்தையோட ஆர்வம் இருந்தது. மரத்துக்குப் பேர் சொல்லும். கவிதை சொல்லும். யூனிட்டிலே எல்லாரையும் கலாட்டா செய்யும். ப்ச்! அதுக்கு இதெல்லாத்தையும் விட்டுட்டு ஊருக்குப் போயி கல்யாணம் செய்துக்கிட்டு குழந்தை பெத்துக்கணும்னு தான் ஒரு ஆசை! எல்லார் கிட்டேயும் சொல்லியிருக்கு. ஒரு விதமாக மத்தவங்களால் பயன்படுத்தப் பட்ட பொண்ணு போல, சினிமா வாழ்க்கையை விரும்பாத பொண்ணுன்னுதான் சொல்லலாம். ஒன்பது வயசில இருந்து ஆக்டிங் பண்ணியாச்சு. போதும் போதும்னு தான் பல முறை சொல்லியிருக்கு.'



'யாரைக்கல்யாணம் பண்ணிக்கப்போறேன் கோடி காட்டலியா?'

'இல்லங்க ஒரு முறை மைஸூர்ல நடந்ததில் இருந்து' எல்லாத்தையும் உங்கிட்ட சொல்லிர்றேன்னு சொல்லிச்சு அவ்வளவு தாங்க...

'அப்படியா பாண்டியன் ஒருகாகிதத்தில் 'மைஸூர்' என்று எழுதிக் கொண்டார்'

'விஜி ஆருக்கும் அதுக்கும்உறவை எப்படி நீங்கவகைப் படுத்துவீங்க!''

'ஒருவிதமான, ஒரு விதமான...என்ன சொல்லலாங்க' அவளுக்கு ஏராளமா பப்ளிஸிட்டிகொடுத்து ஒரு பேட்ரன் மாதிரி இருந்தார். பெரிய ஸ்டாராக்கணும்னு சொல்லிக் கிட்டிருந்தாருங்க, அவ பிறந்த தினத்துக்குப் பரிசெல்லாம் கொடுத்து, இந்த மாதிரி'

'என்ன பரிசு.'

'காமிரா! காமிரா! காமிரா! காமிரா! ..பிலிம்!' என்றேன்

'என்னங்க?'

'சுலேகா எங்கிட்ட ஒரு பிலிம் கொடுத்து டெவலப் பண்ணி பிரிண்ட் எடுத்து யார் கிட்டயும் காட்டாம அவகிட்ட கொண்டு கொடுக்கச் சொல்லியிருந்தாங்க'

'அப்படியா, கொடுத்தீங்களா?'

'இல்லைங்க. டெவலப் பண்ணக் கொடுத்து இன்னும் கலெக்ட் பண்ணலை.'

'எங்க கொடுத்தீங்க.'

'பஸ் ஸ்டாண்டுக்குப் பக்கத்தில் ஒரு போட்டோ கடையில.'

ரசீது இருக்கா?'

'ரூம்ல இருக்குது.'

'மை. .பர்ஸ்ட் ப்ரேக்! வாங்க போகலாம்!'

ஜீப்பில் போகும்போது அவர் மற்றவர்களைப் பற்றிக் கேட்டார். 'முரளி அவருக்கு ஒரு நம்பகமான சேவகன் போலங்க. எல்லாக்காரியமும் அவர்தான். ப்ரொடக்ஷன் வண்டிகளுக்கு ஏற்பாடு பண்றது. ரொம்ப பணிவான, மௌனமான, மத்தவங்க விசயத்திலே அனாவசியமா குறுக்கிடாத ஆளு. என்னை ஸ்க்ரீன் டெஸ்ட்டுக்கு அனுப்பிச்சவரே அவர்தான்.'

'அந்தம்மா? விஜி ஆருடைய மனைவி?'

'அந்தம்மாவை ஒரு முறைதான் சந்திச்சேன், ஒரு மாதிரி பேசினாங்க.'

'ஒரு மாதிரினா?'

'சுலேகாவுக்கு என்ன வயசுன்னு கேட்டுஇருபத்திரண்டுன்னு அவங்களே சொல்லிட்டு, தேவடியா, எல்லாருமே தேவடியான்னாங்க,'

'அவங்களுக்கு என்னவெறுப்போ! என்னசந்தேகமோ ஆமா, இந்த வதத்தி எப்படி உருவாச்சு? திரைமலரில உங்களுக்கும் அந்தப் பொண்ணுக்கும் தொடர்பு இருக்கிறதா?'

'அந்த ஆளு 'குருவியை' விசாரிக்கத்தான் போயிருந்தேங்க. சிக்கலை.'

''சரி, அந்த ஆளை அப்புறம் பாத்துரலாம்!'

# 13

அறைக்குப் போனபோது, 'கரிகாலன் உங்களைப் போலீஸ் தேடிக்கிட்டு' என்று அருணா பிரிண்டர்ஸ் ஆரம்பிச்சா நான் பெருமையுடன் 'அவங் கூடத்தான் வந்திருக்கேன்' என்று சொல்லிவிட்டு அறைக்குப் போய் அந்த ஸ்டூடியோ ரசீதைத் தேடி' எடுத்து மறுபடி ஜீப்பில் ஏறிக் கொண்டேன். ஸ்டூடியோ பூட்டியிருந்தது.

'எப்ப திறக்கும்?'

'லஞ்சுக்குப் போயிருக்காங்க. நாலு நாலரைக்குத் தான் வருவாங்க. என்னங்க, ஏதாவது வீடியோ கேஸா?'

பாண்டியன் தன் கைக்கடிகாரத்தைப் பார்த்து, 'இன்னும் ரெண்டு மணி நேரம் இருக்குது வாங்க அந்தக் குருவியைப் பார்த்துட்டு வரலாம்' என்றார்.

'பத்து மணிக்கு அதே மாதிரி டிஸ்கோ சட்டை போட்டுக்கிட்டு ஒரு ஆள் பின் பக்கமா வெளிய வந்ததை எதிர்த்தாப்பல கட்டடத்தொழிலாளி ஒருத்தர் பார்த்திருக்காரு மணிதான் கொஞ்சம் உதைக்குது வாட்சு கிடையாதே எப்படியோ சொல்றேன்னா அதுக்கப்புறம் மேஸ்திரி கிட்ட டயம் கேட்டதா சொல்றார். பத்து பத்தரை மணிக்கு அவ இறந்திருக்கலாம்னு போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட், டெம்பரேச்சர், டைஜ்ஷன் எல்லாத்தையும் வெச்சு கணக்கிட்டிருக்காங்க. ஒண்ணு கொல்லத்துக்காரர் உங்களைப் பார்த்துக்கிட்டு முன் பின்னே மணி சொல்லியிருக்கணும். ஆனா அந்தச் சட்டை எல்லாருக்கும் ஞாபகம் இருக்குது. வெளியே வந்த ஆளு சிவப்புச் சட்டை போட்டிருந்தான்னு தீர்மானமா சொல்றாரு. பத்து மணியா, ஒரு மணியா? ஒரு மணின்னா அவன் பார்த்தது உங்களை, பத்து மணிக்கும் ஒரு மணிக்கும் அத்தனை குழப்பமா ஏற்படும்? இது கொஞ்சம் உதைக்குது, அதனாலதான் உங்களைக் கேட்டேன். கூட

ஆக்டிங் பண்ணவங்க எவராவது பத்து பத்தரை மணிக்கு நைஸா நழுவினாங்களான்னு? யோசிக்கப்பாருங்க. இப்ப இந்தக் குருவியை சந்திக்கலாம்,' மறுபடி 'திரைமலர் அலுவலகத்தில் நுழைந்தபோது எடிட்டர் போலீஸ் உடையைப் பார்த்ததும் திகிலாகி விட்டார். 'ஸார் தப்பு நடந்து போச்சு. அந்தப் பொண்ணு இப்படிச் செய்யும்னு நாங்க கனவில்கூட நினைக்கலை. விஜிஆர் அப்படியே கோன்னு கண்ணீர் விட்டு இடுகாட்டில தரையில உக்காந்து அழுதார் ஸார்...'

'கவனிச்சேன், உங்க மாதிரி ஆளுங்க கண்டதை எழுதப்போயிதான் அந்தப் பொண்ணு அந்த மாதிரி தற்கொலை பண்ணிக்கிச்சோ என்னவோ?'

'தற்கொலையா ஸார்?'

'இப்ப நான் என்ன சொன்னாலும் காது மூக்கு வெச்சுப் போடப் போறே! எங்கய்யா அந்தக்குருவி?'

''ஸ்டூடியோவுக்குப் போயிருக்கார். வர ராத்திரி ஏழு மணி ஆகும். கோடம்பாக்கமே ஸ்தம்பிச்சுப் போயிருச்சு. டெக்னிஷியன்கள் எல்லாம் ஒருநாள் படப்பிடிப்பை ரத்து செஞ்சு...'

'அதெல்லாம் விடு. குருவியைப் பத்திப் பேசு.'

'ஸ்டூடியோவுக்குப் போயிருக்கான்னேன்!'

'எந்த ஸ்டூடியோ?'

'சாரதா.'

'வா போகலாம். சாரதா.'

'நான் எதுக்கு? அங்கிருந்து ஏவிஎம் போயிர்றதா சொன்னான்.'

'அப்ப ஏவிஎம்க்குப் போகலாம். வரிங்களா?'

'அவன் ஆப்படலைன்னா உங்களுக்குச் சிரமம் இல்லையா?''



எனக்கு ஒரு சிரமமும் இல்லை. இதான் என் ஜோலி. அவன் அகப்படறவரைக்கும் சுத்திக்கிட்டே இருக்கலாம். தபாரு, எடிட்டரய்யா! புருடா விடாதீங்க. யாரு இந்தக் குருவி சொல்லித் தொலை.'

அவர் சற்றுத் தயக்கத்துடன் 'வந்து வந்து...உங்க, கிட்ட எதுக்குப் பொய் சொல்லணும், நான்தான் ஸார்'.

'அப்படி வா வழிக்கு இப்ப சொல்லு இந்த ஆளையும் சுலேகாவையும் பத்தி வதந்தி ஒண்ணு எழுதினியே, அது எங்க கிடைச்சது உனக்கு?'

'அது வந்து...எனக்கு யார் சொன்னா?'

'அதான் நான் கேக்கற கேள்வி'

'சரியா ஞாபகமில்லையே ஸார்.'

'தபாரு, ஞாபகப்படுத்திக்கிறவரைக்கும் நான் இங்கே விட்டுப்போறதா இல்லையே.

'ரொம்ப பயமுறுத்தறேளே, பத்திரிகை சுதந்திரம் ஒண்ணு இருக்கு தெரியுமா?'

'என்ன மயிரு பத்திரிகை சுதந்திரம்? எதையாவது புடிச்சு எழுதிட்டு அந்தப் பொண்ணு தொங்கிட்டா, பாஸ்டர்ட்! எழுதறப்போ ஒரு பொறுப்பு வேண்டாம்? அது எந்த விதத்தில அந்தப் பெண்ணோட செண்டிமெண்ட்ஸை பாதிக்கும். ஒரு கவலை வேண்டாம்? என்னன்னு நினைச்சுக்கிட்டு இருக்கே? எதை வேணுமானாலும் குருவி கொக்குன்னு எழுதிட்டு தப்பிச்சுக்கலாம்னு பார்க்கிறியா? இங்கு லை. ப்லாங் ஸூட்டுப் போடப் போறாங்க தெரியுமோல்லியோ? கிரிமினல் அ. பென்ஸ்!'

என்ன 'ஸார் பயமுறுத்தறீங்களே!' அவர் கண்களில் மருட்சியும் கவலையும் தோன்ற 'சரி ஸார். சொல்லிட்டேன் அந்தச் செய்தியை எனக்குக் கொடுத்ததே விஜிஆர் யூனிட்டிலதான்!'

'விஜிஆர் யூனிட்டில யாரு?'

'போன் பண்ணிச் சொன்னாங்க. இந்த மாதிரி ஒரு செய்தி போடு. பணம் சேரும்னுட்டு!'

'யாருய்யா? யாரு போன் பேசினா? யார் பேசறதுன்னு கேக்க மாட்டியா?'

'விஜிஆர் யூனிட்டில இருந்து பேசறம்னாங்க. விஜி ஆராகக் கூடவே இருக்கலாம், ஸார், உங்ககிட்ட மறைக்க வேணாம்னு பார்க்கறேன். இன்டஸ்ட்ரில இன்னொரு ரூமர் இருந்தது தெரியுமோல்லியோ?'

என்னன்னு சொல்லு?'

'என்னை சாட்சிக்குகீட்சிக்குக் கூப்பிட மாட்டீங்களே?'

'இல்லை. சொல்லு.'

'அந்தப் பொண்ணு சுலேகாவுக்கும் விஜிஆருக்கும் கல்யாணம் ஆகப்போறதுன்னு சொன்னாங்க. ஆயிடுத்து ரிஜிஸ்ட்டரார் ஆபீஸ்ல மைஸூர்ல முடிஞ்சுடுத்துன்னு கூடச் சொன்னாங்க. முதல் ஷெட்யூல்ல அவுட்டோர் போன போது ரெண்டு பேருக்கும் ரொம்பப் புடிச்சுப் போயி படம் முடிஞ்ச உடனே கல்யாணம்னு தீர்மான மாயிருச்சாம். சின்ன வீடு மாதிரி இல்லாம ரெகுலரா கல்யாணம்தான் வேணும்னு அந்தப் பொண்ணு கேட்டுதாம், அதனாலதான் தடக்கம்னு சொன்னாங்க. இதில மச்சினதும் உடந்தைன்னு கூடப் பேச்ச இருந்தது. விஷயத்தை வெளிய வராம கமுக்தமா வெச்சுக்கத்தான் இந்த மாதிரி கரிகாலனுக்கும் சுலேகாவக்கும் ஒருஇதுன்னு கவுண்ட்டரைக் கிளப்பி விட்டிருக்காங்க. இப்படி ஒரு டெக்னிக் இந்த , பீல்டில் ரொம்ப சகஜம். ராதா சோதாவைக் காதலிக்கிறானா—ராதாவும் வேதாவுக்தும் ஒண்ணைக் கிளப்பி விடறது!'

'அப்படியா? விஜிஆர், கல்யாணம் இதெல்லாம் உனக்கு யார் சொன்னா.'

'இதுக்கெல்லாம் ரிஷிமூலம் பாக்காதங்கோ பராபரிய காதில விழும். கொஞ்சம் காதைத் தீட்டி



வெச்சுக்கிட்டா டிரைவர் சொல்லுவான், லைட்பாய் சொல்லுவான், ஓட்டல் வெயிட்டர் சொல்லுவான். இவர்கள் ட்டருந்தெல்லாம் தப்பிக்கவே முடியாத்! என்ன'

'சரியானமாமா பிஸினஸ்யா உம் பிஸினஸ்! இதென்ன என்று ஒரு ஃபோட்டோவை எடுத்துப் பார்த்தார். 'இதைப் போடப் போறியா.'

'ஆமா, செண்டர் பேஜில் கலர்ல' அந்தப் படத்தில் ஒரு ஆலிவுட் நடிகை ஈரத்துணியில் முலைக்காம்பெல்லாம் தெரிய நனைந்திருந்தாள். 'பத்திரிகை விலைபோகணு மில்லை?'

'ஐய்யோ! நாடு வாழ்க! வாங்க கரிகாலன். யோவ் குருவி, உன்னை அப்புறம் விசாரிக்கிறேன்.'

'எப்ப வேணா வாங்கோ. ஆல்வேஸ் ஓப்பன்! நம்ம எக்ஸ்ட்ரா நளினா சொன்ன மாதிரி ஆல்வேஸ் ஓப்பன்.'

திரும்பச் செல்லும்போது பாண்டியன் சிந்தனைவசப் பட்டிருந்தார். என்னிடம் அதிகம் பேசவில்லை.

'எங்கயோ இழுத்துக்கிட்டும் போவுதுல்யா இந்தக் கேஸு. சே, உங்கசினிமா உலகமே சாக்கடையா!'

'என்னால நம்பவே முடியலை ஸார். விஜி ஆர் இந்த மாதிரி வதந்தியைக் கிளப்பியிருப்பாருங்களா? குருவி பொய் சொல்லுது.'

'இல்லை. அவன் சொன்ன காரணம் சரியாத்தான் இருக்கது. டைவர்ஷன்! அட்டென்ஷனை டைவர்ட் பண்ற மாதிரி! அதாவது முதல்ல சொன்னது உண்மையா இருந்தா!'

'என்னது?'

'விஜி ஆர் அவளைக் கல்யாணம் பண்ணிக்க ஏற்பாடாகியிருந்தா!'

'எனக்கு அப்படித் தோணலை. நீங்க விஜிஆரைப் பார்த்தீங்களோ?'

'பார்த்தேன் பார்த்தேன். ரொம்ப நொந்து போயிருந்தார். படத்தில் பப்ளிஸிட்டியில இன்வெஸ்ட் பண்ணதெல்லாம் நஷ்டமாயிடுச்சேன்னு நொந்திருக்கார்னு நினைச்சேன். இது வேற ஆங்கிள்! சுவாரஸ்யமாத்தான் இருக்குது. அந்தம்மா எப்படி?'

'யாரு?'

'மனைவி.'

'ரொம்ப லட்சுமிகரமா ஊஞ்சாலாடிட்டு பட்டுப் புடவை வைர நகைன்னு சோபிதமா இருந்தாங்க''

'இருந்தும் விலைமகள்னு திட்டினாங்க.'

'திட்டறாப்பல இல்லைங்க. ஏதோ ஒரு தவிர்க்க முடியாத உண்மையை எடுத்து சொல்றாப்பல!'

'கதாசிரியர் நல்லாத்தான் கவனிச்சு வெச்சுருக்கிங்க என்று சிரித்தார்.

இப்போது போட்டோ ஸ்டுடியோ திறந்திருக்க அந்த ரசீதைக் கொடுத்து விட்டு மஞ்சள் மஞ்சளாக இருந்த சின்னச் சின்னக் கவர்களில் கடைக்காரர் தேடும்போது எனக்கு இதயம் துடித்தது. பாண்டியன் கவலையே இல்லாமல் போக்குவரத்தைக் கவனித்துக் கொண்டிருந்தார்.

'இந்தாங்க, சிலது நெகட்டிவ் மோசமா இருந்ததை ப்ரிண்ட் எடுக்கலைங்க. அப்போது பாண்டியன் என் அருகில் வந்து 'உங்ககிட்ட காசு இருக்காது. தெரியும் எனக்கு. எத்தனைப்பா என்றார்.'

'அம்பத்தேழு ஸார். குட்மார்னிங் ஸார்.'

'குட் ஈவினிங்! எப்படி இருக்கு விடியோ பிஸினஸ் எல்லாம்?'

'விடியோவா? அய்யோ!,

'டீப் த்ரோட் எத்தனை காப்பி வெச்சிருக்க?'



'அய்யோ! என்ன ஸார் சொல்றீங்க? டேய், போய் சூடா காப்பி கொண்டுவாடா.'

'இரு இரு, உன்னை அப்புறம் கவனிச்சுக்கிறேன். ப்ளூபிலிமா ராஜா? நடத்து எங்க போற நீ அப்புறம் வரேன்.' போட்டோக்காரர் கைநடுங்க மூன்று ரூபாய் கொடுக்க அந்தப் புகைப்படங்களை வாங்கிக் கொண்டார் நான் அவருடன் ஜீப்பில் ஏறிக்கொள்ள ஸீட்டிலிருந்து ஜீப் கிளம்புவதற்கு முன்னமேயே உலையில் இருந்த போட்டோ பிரதிகளைப் பாதி பாதியாகப்பிரித்து நோக்கினார். லேசாக விஸிலடித்தார். கேஸ் சூடுபிடிக்குதுய்யா.

'என்னங்க?'

'இதைப் பாருங்க.'

அந்தப் புகைப்படங்களில் விஜிஆரும் சுலேகாவும் தனித்தனியாக மைஸூர் பிருந்தாவன் தோட்டத்தில் நீர் பெருக்குக்கு அருகில் ரெஸ்ட் ஹவுஸ் அருகில் ஒரு சில படங்களில் வழிப்போக்கர்கள் எடுத்த சில காட்சிகளில் இரண்டு பேரும் ஒன்றாக இறுக்க அணைத்துக்கொண்டு... 'குருவி சொல்றதில் உண்மை இருக்கு போலத்தான் இருக்குது. ப்ரொட்யூஸர் நடிகை உறவாய்யா இது இதுல பாரு, ஏறக்குறைய முத்தம். இல்லை வாசனை பார்க்கிறாரா?''

பிரமிப்பாக இருந்தது. விஜிஆரும் சுலேகாவும்பழகின பாணியில் இதுவரை இந்தமாதிரி உறவு இருக்கிறது என்று எனக்குத் தெரிந்திருக்கவில்லை. நான் பார்த்த அன்னியோன்யத்தில் கொஞ்சம் குறும்பும் குழந்தைத் தனமும்தான் இருந்ததே தவிர சுலேகா மாதிரி குழந்தைத் தனமாக எல்லோருடனும் தொட்டுத் தொட்டுப் பேசும் நடிகைகளை தான் பார்த்திருந்தால் இந்த விகற்பம் என்னால் கற்பிக்கவே முடியவில்லை. எனக்குக் குழப்பமாக இருந்தது விஜிஆரா!

அவர்கள் இரண்டுபேரும் பேசிக்கொண்ட எல்லா சம்பாஷணைகளையும் முயன்று ஞாபகத்தில் கொண்டு வந்தேன்.

'எனிக்கு ஈ காமிரா பர்த் டேக்கு கொடுத்தது அவுட்டோரில்!'

'அந்தப் பொண்ணு என்னைக்கலக்கிருச்சு மச்சி! நானும் எத்தனையோ பார்த்துப்புட்டேன். இது தினுசே லேற. கல்யாணம் கட்டிக்கிட்டு—அது என்ன ஊ ந— கொல்லம் பக்கத்தில் ஏதோ சொல்லுவியே அங்கு குழந்தை பெத்துக்கணும். அதானே வேணம் உனக்கு' முதல்ல நடி. அப்றம் கல்யாணம்.' அன்று வீடு செல்லும் போது அவள் அழுதது. பாலன் சுலேகா விஜிஆர் மூவரும் பேசிக்கொண்டிருக்க நீ ரொம்ப பிடிவாதம் பிடிக்கிறாய். அவர்கிட்ட அப்படிக் கேட்டது தப்பு என்று பாலன் மலையாளத்தில் சொன்னது காரில் கண்ணீர்!

'என்று யோசிக்கிறிங்க, கன்னியப்பன்.'

'இப்ப யோசிச்சுப் பார்த்தா விஜிஆருக்கும் அவளுக்கும் ஒரு பிரத்தியேக உடன்பாடு, உறவு இருந்திருக்கு. அதைச் சுலபமா எங்களால் எல்லாம் கண்டு பிடிக்க முடியலை.'

'மிஸ்டர் கரிகாலன்! சோழ ராஜாவும் பாண்டிய ராஜாவும் அந்தக் காலத்தில நிறைய சண்டை போட்டாங் களாம். நீங்களும் ராஜா இல்லை, நானுமில்லை. உங்க உதவி எனக்குத் தேவையாயிருக்கு. போலீஸ் உங்களை உபயோகப்படுத்தப் போறதா வெச்சுக்கங்களேன்!'

'என்ன ஸார் செய்யணும், சொல்லுங்க.'

'விஜிஆருக்கு டெலிபோன் பண்ணணும் நீங்க '

'என்ன சொல்லணும்' என்றேன் கொஞ்சம் வியப் புடன்.

'இந்த மாதிரி எங்கிட்ட சில போட்டோக்கள்ளாம் கிடைச்சிருக்குது. மைஸூர்ல எடுத்த போட்டோ. அதைப் பத்தி உங்ககிட்ட பேச விரும்பறேன்னு சொல்லிடுங்க.''

'எப்ப பண்ணணும் போனு?'

'இப்பவே வாங்க ஸ்டேஷனுக்கு ''

## 14

எனக்கு இப்போது ரொம்பத் துடிப்பு ஏற்பட்டு விட்டது நரம்பெல்லாம் முறுக்கிக் கொண்டு விட்டது போல் உணர்ந்தேன். உண்மை சாடை காட்டுகிறது. அதை வெளிக் கொணருவதில் எனக்கு லேசாக ஒரு பங்கு கிடைத்து விட்டது. பாண்டியன்தான் டயல் செய்தார். அதை அடிக்க வைத்து என்னிடம் கொடுத்தார்.

'ஹலோ விஜிஆர் க்ரியேஷன்ஸ்.'

'விஜிஆர் கூடப் பேசணுங்க '

'அவர் இல்லைங்களே. நீங்க யார் பேசறது?'

'கரிகாலன்ங்க. கதை வசனம் எழுதறவரு.'

'சரி...கொஞ்சம் இருங்க. மறுமுனையில் டெலிபோன் பொத்தப்பட்டு கொஞ்ச நேரம் கழித்து 'அலோ' என்றது விஜிஆர்தான்.

'அய்யா, நான் கரிகாலன் பேசறேன்.'

'எங்கருந்து பேசறே' என்று அதட்டலாகக் குரல் வந்தது சற்று உடைந்தது போல, சற்று சோகம் போல வும் தோன்றியது.

'அய்யா, நான் இங்க ஒரு ஓட்டல்லருந்து பேசறேன், ஒரு முக்கியமான விஷயம்.'

'உன்னை போலீஸ் அரஸ்ட் பண்ணியிருக்கிறதா சொன்னாங்க.'

'அரஸ்ட்டா? போலீஸா?' என்று பாண்டியனைப் பார்த்தேன். அவர் சட்டென்று காகிதத்தில் சரசர வென்று எழுத அதை மெல்லப் படித்தேன்.

'இல்லைங்க. என்னை டெம்பரவரியா விட்டிருக் காங்க. அய்யா பெரிய சிக்கல்.'

'சரி ஆபத்து எதும் இல்லையே'

'அய்யா! அய்யா! இதை நீங்க கேட்டே ஆகணும். எங்கிட்ட சில போட்டோக்கள் இருக்குது.'

'என்னது?'

'போட்டோங்க, போட்டோ. மைலாப்பூர்ல எடுத்த சில போட்டோக்களைச் சுலேகா அம்மா எங்கிட்ட டெவலப் பண்ணக் கொடுத்தது. அதை போலீஸ்கிட்ட காட்டலாமான்னு தீர்மானமில்லாம தவிச்சுக்கிட்டு இருக்கேங்க!'

'கரிகாலா! நான் உன்னை உடனே பார்க்கணும். வீட்டுக்கு வந்துரு! வேற எதுவும் செய்யாதே!'

'வீட்டுக்குங்களா...'

பாண்டியன் வேகமாகத் தலையாட்டினார். எழுதிக் கொடுத்தார் நான் உங்க வீட்டுக்கு வர்றதை எங்க யாவது போலீஸ் கண்காணிச்சாங்கன்னா? எனக்கு அந்த போட்டோக்களைப் பார்த்து ஒண்ணும் புரியலே இல்லைங்க.'

'அப்ப ஒண்ணு செய்யி. ஆறு ஆறரை மணிக்கு இருட்டினதும் மெரினா பீச்சாண்டை தாத்தா செலை இருக்கு பாரு, அங்க வா. என் கார் தெரியுமில்லை. முப்பத்தாறு முப்பத்தாறு. அதைப் பாத்ததும் அதில ஏறிக்க என்ன, வரியா?'

'அய்யா, நிச்சயம் வரேன்யா.'

'அதையும் கொண்டுட்டு வந்துரு.'

'சரிய்யா. வச்சுரட்டுங்களா.'

வைத்ததும் பாண்டியனைப் பார்த்து 'ஸார், நீங்க பெரிய ஆளு என்றேன்.

'என்ன சொன்னாரு?'

'மெரினாகிட்ட இடம் சொல்லி கார்ல வரதா சொன்னாரு. கார்ல ஏறிக்கன்னாரு. போட்டோ எடுத்துட்டு வரச் சொன்னாரு.'

'அவர் கார் ஓட்டுவாரா?'



'தெரியும் பார்த்திருக்கேன்.'

'அவர் கூட கார்ல தனியா போகாதே. உள்ளே ஏறாதே. பீச்சில மணல்ல பேசிக்கலாம்னு சொல்லிரு. இல்ல, எங்கயாவது ரெஸ்டாரண்ட் அலைழச்சுட்டுப் போகச் சொலு.'

'ஏன் ஸார்?'

'சொல்றதைக் கேளு.'

'போட்டோ?'

'எடுத்துட்டுப் போ. பரவாயில்லை. நெகட்டிவ்வை நான் வெச்சுக்கறேன்!'

'என்ன கேக்கணும்.'

'ஒண்ணும் கேக்க வேண்டாம். இந்த மாதிரி எம்மேல அபாண்டமா போலீஸ் பழி சுமத்தறாங்க. சரியான சாட்சியம் இல்லாததால் விட்டிருக்காங்க. இதுக்கு என்ன சொல்றீங்க? என்னால இதை அவங்க கிட்ட காட்டாம இருக்க முடியாதுன்னு சொல்லிரு.'

'சரி

'அவர் என்ன சொல்றாருன்னு உன்னிப்பா கவனிக்க ஒரு டேப்ரிக்கார்டர் கொடுக்கட்டுமா சின்னதா?'

வேண்டாங்க. அதெல்லாம் தோதுபடாது. சொன்னதை ஞாபகம் வச்சுட்டு எழுதிக் காட்டிர்றேன்.'

'சரி'

'இதை நீங்களே போய் விசாரிக்கக் கூடாதோ?'

'விசாரிக்கத்தான் போறேன். அதுக்கு இன்னும் வேளை வரலை. நீங்க முதல்ல போய்ப் பாருங்க. பயப்படாதிங்க வட்டாரத்தில நாங்க இருப்போம்'

இல்லைங்க. இப்ப பயம் போயிருச்சு

'தனியா அவர் கூடப் போகாதிங்க, என்ன?'

'சரிங்க.'

# 15

சீவக சிந்தாமணியில் ஒரு பாடலுக்காக ஆதினம் ஆதினமாக அலைந்த தமிழ்த் தாத்தாவின் முன் சாலையோரத்தில் நின்றுகொண்டேன் ஜனத்திரள் உற்சாகமாக இயங்கி கொண்டிருக்க கருநீலக் கடற் பரப்பில் சின்னச் சின்ன ஒளிக் கும்பல்களாக சுப்பல்கள் காத்திருந்தன. சுலேகாவின் மரணத்தைப் பற்றி யாரும் கவனமில்லாமல் கார்களிலும் ஸ்கூட்டர்களிலும் சென்று கொண்டிருந்தார்கள் வண்டியிலிருந்து கண்ட கண்ட தின்பண்டங்களை வாங்கி மென்று கொண்டிருந்தார்கள். வானத்தில் சில கடைசி பலூன்கள் விடுதலை பெற்றன. அவசரப்பட்டுவிட்ட ஒரு நட்சத்திரம கொஞ்ச நேரத்துக் குத் தனிக்காட்டு ராஜா போல ஒளிர்ந்தது. நான் முப்பத் தாறு முப்பத்தறுக்காகக் காத்திருந்தேன்.

முதலில் அது வந்து நின்றதை, என் பின்னால் கச்சித மாக இனிமையாக ஹாரன் அடித்ததை கவனிக்கவில்லை. 'யோவ் கரிகாலன்!' என்று சப்தம் கேட்டுத் திரும்பனதில் விஜி ஆர் கார். அவரே ஓட்டி வந்தார். நான் சன்னல் வழியாக எட்டிப் பார்க்க 'ஏறு' என்றார்.

நான் தயக்கத்துடன்—'அய்யா, வாங்க. பீச்சுக்குப் போகலாம்.'

'சே...அங்கெல்லாம் நான் வர மாட்டேன்.'

'அப்ப எங்கயாவது ரெஸ்ட்ராண்டுக்குப் போக லாம்.'

'சரி ஏறு.'

'இங்கேயே பக்கத்திலேயே எங்கயாவது இருந்தா நடந்து போய்க்கிட்டே...'

'தபாரு, உன்னை ஒண்ணும் செய்ய மாட்டேன் ஏறு ரோதனை! எங்கயும் போகலை இங்கயே பேசலாம்' நான்



தயங்கினேன் ஏதோ ஒரு உந்துதலில் அவர் திறந்து வைத்திருந்த முன் ஸீட்டில் ஏறிக் கொண்டேன். பாண்டி யனின் முதல் எச்சரிக்கையை மீறியாகி விட்டது. விஜி ஆர் அப்படி ஒன்றும் பயம் தரக் கூடியவராக இல்லை

'காரில் சகல வசதிகளும் இருந்தன. பியட் கார் என் றாலும் உள்ளே ஏஸி செய்யப்பட்டு ஏதோ ஒரு பட்டனை அவர் தட்ட கதவுகள் தானாகவே ஏறிக் கொண்டன பயனியர் காஸட் பிளேயர் இருந்தது. அதைத் தட்ட ராஜ்குமார் பாரதியின் கொள்ளுத் தாத்தாவின் பாடல் கள் மெலிதாக ஒலிக்க 'என்ன விஷயம்? சொல்லு' என்றார்.

'இந்தப் பாட்டை நிறுத்திரலாங்களா?'

'இருக்கட்டும். என்ன விஷயம்?'

'அதான் சொன்னேனே—போட்டோ.'

'ஆமா. என்ன அது, பார்க்கட்டும்.'

அந்தக் கவரைக் காண்பித்தேன். அவர் காரின் உள் விளக்கைப் போட்டுக் கொண்டு திறந்து பார்த்தார். சரக் சரக்கென்று இரண்டு மூன்று பார்த்தார். 'மைஸூர்ல எடுத்தது! இது எப்படி உனக்குக் கிடைச்சுது? இது எங்க போச்சுன்னு தேடிக்கிட்டு இருந்தேன்.'

'சொன்னேனே, சுலேகா எங்கிட்ட டெவலப் பண்ணக் கொடுத்திருந்தாங்க.'

'இதை என்ன செய்யப் போறே.'

'நீங்கதான் சொல்லணும்.'

'போலீஸ்கிட்ட காட்டப்போறியா? எங்க நெகட்டிவ் எல்லாம்?'

'ரூம்ல இருக்குதுங்க.'

'அப்படியா சேதி, கரிகாலா, உனக்குப் பணம் வேணுமா'

'இல்லைய்யா, என்னை போலீஸ் சந்தேகப்பட்டுக் கிட்டு இருக்காங்க.'

'இதைக் காட்டறதாலே அந்தச் சந்தேகம் என்மேல விழும்! அதானே.'

'அது எப்படியோ எனக்குச் சொல்லத் தெரியலைங்க நீங்கதான் சொல்லணும்ங்க.'

அவர் திரும்பி என்னை நேராகப் பார்த்தார் 'என்னைப் பாரு' என்றார்.

'அய்யா!'

'என் தங்கத்தை. என் செல்லத்தைக் கொலை செய்வேனா' என்று சட்டென்று முகத்தைப்பொத்திக்கொண்டு விசும்பி விசும்பி அழ ஆரம்பித்தார், எனக்கு ரொம்பவும் சங்கடமாக இருந்தது அவரை எத்தனையோ வடிவத்தில் பார்த்திருக்கிறேன். வாய்விட்டு அழக்கூடியவர் என்று தோன்றினதே இல்லை. இது புதுசாக இருந்தது. பல்லை இடுக்கிக் கொண்டு கஷ்டப்பட்டு அழுகையை அடக்கப் பிரயத்தனித்தும் அவ்வப்போது பெருகினார்.

'என்னங்கய்யா, என்ன ஆச்சு!'

'யாரும் கொலை செய்யலை தற்கொலைதான் அது.

'போலீஸ் கொலைன்னுதான் தீர்மானமாகச் சொல்றாங்க?'

'போலீஸ் என்ன வேணா சொல்லுவாங்க எனக்குத் தெரியும். இதபாரு, நான் ரொம்ப நொந்து போயிருக்கேன் கரிகாலா அந்தப் பொண்ணு தற்கொலை செஞ்சுக்கிட்டதுக்கு காரணம் நான்தான். பார்த்தல்ல போட்டோ மைசூர்ல எடுத்தது என் வாழ்க்கையிலேயே இன்பமான நாளு! சின்ன வயசிலேயே எனக்குக் கல்யாணம் ஆயிருச்சு ஸ்டுடியோவில காமிரா அஸிஸ்டண்டா இருந்தேன். கோயமுத்தூருக்குக் கூட்டிக்கிட்டுப் போயி கல்யாணம்



பண்ணி அனுப்பிச்சுட்டாங்க. நாங்க ஒரு மாதிரி நாயுடு ஜாதி. கல்யாணம் ஆறவரைக்கும் பொண்ணைக் காட்டாவே மாட்டாங்க. திரை போட்டு மறைச்சு வெச்சிருப்பாங்க. நான் அவளைக் கல்யாணத்துக்கு முந்தி பார்க்கவே இல்லை. இஷ்டமே இல்லாத கல்யாணம். தலையெடுத்து வந்தேன். பொண்டாட்டி அதிர்ஷ்டம்னு சொன்னாங்க நல்லா பணம் பண்ணிட்டு ஒரு பொண்ண முழுக்க அறிஞ்சிக்கிட்டு, காதல் பண்ணி, கல்யாணம் செய்துக்கலாம்னு இருந்த ஆசையைக் கலைச்சாச்சு. அவளைக் குத்தம் சொல்லமுடியாது. அவளும் என்னைப் போல பையனைப் பார்க்காம கல்யாணம் செஞ்சவ தானே! சிகரெட் பிடிக்கிறியா?'

'அய்யா, வேண்டாங்க. பழக்கம் இல்லைங்க.'

'எனக்கு ஏதும் பழக்கம் இல்லாமதான் இருந்தது. சினிமால தீவிரமானப்புறம் சிகரெட், குடி எல்லாம் சேர்ந்துக்கிட்டது. ஆனா பொம்பளை சமாசாரம்இல்லை அங்க இங்க தமாஷ் பண்ணுவேன் ஆனா கெட்ட காரியம் கிடையாது சினிமாவிலேதான் உனக்குத் தெரியுமே! சந்தர்ப்பங்கள் இருந்தும் வேண்டாத பொண்டாட்டி கிட்ட விசுவாசமாத்தான் இருந்தேன் குழந்தை கிடையாது என்ன குறையோ? யார் குறையோ?கவலையில்லை முரளியைக்கூட வெச்சுக்கிட்டேன். நெளிவு சுளிவெல்லாம் கத்துக்கொடுத்து பிற்காலத்தில் அவனுக்கு வசதி பண்ணிக்கொடுத்துரலாம்னு ஏதோ குருட்டு அதிர்ஷ்டம் அடித்துப் பணம் நிறையவந்தது. என்னை அறியாமலேயே சேந்துது. இருந்தும் நிம்மதி இல்லை அன்பு இல்லை. பொண்டாட்டியை நகையாலயே இழைச்சேன். அவ ஒரு மாதிரி, சில சமயம் பைத்தியம் மாதிரி பேசிரும்... எம்பேர்ல எப்பவும் சந்தேகம். இண்டஸ்ட்ரில இருக்கிறவ எல்லாருமே தேவடியா! அதுதான் எல்லாரும் தன் புருஷனை கொத்திக்கிட்டு போக வந்திருக்கிற விபசாரிங்கன்னு எண்ணம். தம்பேர்லயே நம்பிக்கை இல்லாத நகை, பணம், பொடவைன்னு அரிச்சுக்கிட்டு இருந்தா. எங்க

போன, ஏன் லேட்டு, யார்கூடப்படுத்தே இது மூணுதான்
கேள்வி. அவ கேக்கக் கேக்க எனக்கு எரிச்சல் ஜாஸ்தியா
போயி அடிக்கக்கூட அடிச்சிருக்கேன். ஆனா பொம்பளை
பக்கம் போகல. எல்லாம் ஒரே மாரு. ஒரே குழிதா
னேன்னு வெறுப்பு. வேண்டு மட்டும் பார்த்திருக்கலாம்.
பார்க்கலை அப்பத்தான் இந்தக் கிரிஜா, அதான் சுலேகா
வை சந்திச்சேன் பார்த்ததுமே அதும் சிரிப்பு. பழகின
விதம் அதனுடைய அறியாமை என்னை என்னவோ
செஞ்சிருச்சு. சின்னவயசில் நான் எங்க பாளையத்தில
பெஞ்சு துடைச்சிக் கிட்டு இருக்கறப்ப எதிர்த்தாப்பல
கவுண்டர் வீட்டுல ஒரு பொண்ணு இருக்கும். அதைப்
பார்த்து நான் எத்தனை நாள் உருகிப்போயிருக்கேன்னு
சொல்ல முடியாது பணக்காரக் குடும்பம் அந்தப்
பொண்ணு. கல்யாணம் ஆயி வடக்கே போயி அமெரிக்கா
போயிருச்சு. நான் அந்த முகத்தை மறைக்கவே இல்லை
அந்த முகத்தை மறுபடி இதை சுலேகாகிட்ட பார்த்தேன்,
விழுந்துட்டேன். எங்கூட நல்லா பழகிச்சு, அதை வெச்சு
ஒரு படம் எடுக்கிறதா ஏற்பாடானாலும். அதுக்கப்புறம்
அதைக் கல்யாணம் செய்துக்கறதா சத்தியம் செஞ்சு
கொடுத்து மைசூர்ல நல்லா என்ஜாய் பண்ணிட்டேன்.
அப்ப ஒரு காமிரா பரிசு கொடுத்தேன். அதில எடுத்த
படந்தான். வெச்சுக்க. அப்புறம் கழுவிக்கலாம்னுகொடுத்
திருந்தேன். அது என் பேச்சை மீறும்னு எதிர்பார்க்கலை!
ஆனா கல்யாணம் செய்யறதாத்தான் இருந்தேன்.'

'விஷயம் உங்க மனைவிக்கு...'

'சொல்லிட்டேன். முரளியைக் கூப்பிட்டேன். முரளி
ரொம்ப உஷாரான ஆசாமி பாருப்பா. நீதான் உங்க
அக்காவுக்குச் சொல்லணும். நான் தீர்மானம் பண்ணிட்
டேன். எனக்கும் வயசாயிகிட்டு வருது. நான் இத்தனை
சம்பாதிச்சதுக்கு கொஞ்சமாவது சந்தோஷம் பார்க்க
ணும். அதை இந்தப்பொண்ணு எனக்குக் கொடுக்கப்
போவுது உங்களுக்குச் சமாதானமா சொல்லவேண்டியது



உன் பொறுப்பு. எல்லா விதத்திலயும் உங்களுக்கு உண்
டான சௌகரியங்களை நான் குறைக்கப் போறதில்லை
அதே விஜிஆர்தான் நான். ஆனா இந்தப் பொண்ணை
ரெண்டாம் கல்யாணம் பண்ணிக்கப் போறேன், வாக்குக்
கொடுத்தாச்சு, ஏதாவது மறுப்பு தெரிவீச்சிங்க, வூட்டை
வுட்டு நான் துரத்திருவேன்னு பளிச்சுன்னு சொல்லிட்
டேன். முரளி போய் இதை அவங்கக்காகிட்ட சாமார்த்
தியமா சொல்லியிருக்கான். முரளி ரொம்ப கெட்டிக்
காரன். எப்ப கொஞ்ச தூரம் போகலாம். எப்ப ஆரம்
பத்திலேயே விட்டுரலாம். சாலாக்கு தெரியும் அவனுக்கு.
அவன் எப்படியோ அக்காளுக்குச் சொல்லிப் போட்டான்
அவ வந்து 'என் கிட்ட முரளி எல்லாத்தையும் சொன்
னான். எனக்கும் சம்மதம் தான். எனக்கு வேறவக்
கில்லை, என்னைத் தள்ளி வெச்சிராதிங்க. ஆனா எனக்கு
ஒரே ஒரு வருத்தம் தான், இந்த விசயத்தை நீங்களே எங்
கிட்ட சொல்லியிருக்கலாம். ஒப்புத்துக்கிட்டு இருப்பேன்
சுலுவா எப்படியோ விவகாரம் முடிஞ்சு போச்சுன்னு
தான் தோணிச்சு. ஆனா ஒண்ணைத் தப்புக் கணக்கு
போட்டுட்டேன். சுலேகா வோட மனசு! கல்யாணம் கல்
யாணம்னு பறந்துகிட்டே இருந்தது. படம் முடிஞ்ச
உடனே வெச்சுக்கலாம்னு சொன்னேன். கமுக்கமா முடிச்
சுரலாம்னு சொன்னேன்,'

'அவங்களை என்ன பண்ணப்போறீங்க'ன்னு கேட்
டுது

'அவங்களைச் சமாதானம் பண்ணியாச்சுன்னு'
சொன்னேன்.

'அவங்களே என் கிட்ட சொல்லணும். அப்பத்தான்
எனக்கு மன நிம்மதியாகும்'னு சொல்லிச்சு.

'அதுக்கென்ன, ஏற்பாடு பண்ணிரலாம்னு சொல்லி
ஒத்திபோட்டுக்கிட்டே வந்துட்டேன். எனககுக் கொஞ்
சம் தயக்கமாத்தான் இருந்தது. எம் மூத்த பொண்டாட்டி
ஒண்ணு கிடக்க ஒண்ணு சொல்லிருச்சுன்னா. அவங்க
ரெண்டு பேரையும் சந்திக்கவேவிடலை. இது அந்தப்

பொண்ணு மனசை உறுத்திக்கிட்டே இருந்திருக்கணும்.
அதும் மனசு பூப்போல ஒண்ணுமே அறியாது! இருக்கிறது
எல்லாமே பெரிசு பண்ணிக்கும். அவங்க வேண்டாங்க
றாங்க. அதனாலதான் நீங்க ஒத்தி போட்டுக்கிட்டே
போறீங்கன்னு ஒரு முறை சண்டைக்குக்கூட வந்திருச்சு.
வேற ஏதோ படப்பிடிப்பில. டென்ஷனாயிப் பேயி
சுலேகாவைச் சத்தம் போட்டுட்டேன். அதுக்கப்புறம்
பம்பாய்க்கு போய்ட்டனா, பார்க்க முடியலை, இதெல்
லாம் அதும் மனசிலே என்ன உறுத்து உறுத்திச்சோ!
முதநாத் தான்யா பம்பாய்லருந்து வரேன் அன்னிக்கு
டயர்டா இருந்திச்சு. பார்க்க முடியலை ஞாயிற்றுக்
கிழமை ஷூட்டிங் இல்லை, ரெண்டு பேரும் சந்திக்க
ஏற்பாடு செய்துரலாம்னு இருந்தேன், ப்ரொஜக்ஷன்ல
சேட்டுகிட்ட மாட்டிக்கிட்டேன். சாயங்காலம் மூணு
மூணரை மணி இருக்கும் முரளி வந்து சொல்றான்.
'மாமா விபரீதம் நடந்து போச்சு!' போய்ப் பார்த்தேன!'

சற்று நேரம் தயங்கினார். குரல் கம்மிப் போய்
'என் கண்ணு இல்லை அது! வேறயாரோ, முகமெல்லாம்
வீங்கிப் போயி! இல்லை, அது வேற யாரோ! சுலேகா
உசிரோட இருக்கா. அந்த மாதிரி அழகுக்கு அழிவில்லை:
பைத்தியக் காரன் நான்! ஒரு பெண்ணோட மனசு சரியா
புரியாம, சின்ன விஷயங்களெல்லாம் அதுக்கு முக்கியம்னு
தெரியாம...போயிருச்சி!'

விஜிஆர் காரின் ஸ்டியரிங் நனையும்படி அழுதார்.
எனக்குப் பரிதாபமாக இருந்தது.

கண்ணை துடைத்துக் கொண்டு 'போலீஸ்காரங்க
என்னவோன்னா சொல்லுவாங்க கண்டுக்காதே. அந்த
மாதிரி புஷ்பத்தை யார் கொலை செய்வாங்க யாரு!
தற்கொலைதான் அது. அதான் நீ போன் பண்ணப்ப
போலீசில பெயில் கியில் கேட்டாக் கூடகொடுக்கத்
தயாரா இருந்தேன். உன்னைப் போயி சந்தேகப்பட்டது
ரொம்ப முட்டாத்தனம். நீ சொல்லிக் கொடுத்த தமிழ்ல



கட்டாயமாக அது திக்கித் திக்கிப் பேசும் பாரு. அதுக்கே
என்னுடைய எல்லா சொத்தையும் எழுதிக்கொடுக்கலாம்.
நீ ஏதோ சொன்னியாமே தங்க மீனு அதைச் சொல்லிக்
கிட்டே இருக்கும் தங்க மீனைக் கேரளத்தில் தண்ணில
கொண்டு விடறேன்னு அதுக்கு ரெண்டே ரூம் வெச்சு
ஒரு வீடு போதுமாம். தினம் தேங்கா எண்ணெய் தேச்சுக்
குளிச்சுட்டு அம்பலமோ ஏதோ சொல்லும் அங்கபோகணு
மாம். எட்டுப்பிள்ளை பெத்துக்கணுமாம். அத்தனையும்
ஆண் பிள்ளைதானாம்! போஸ்ட்மார்ட்டத்தில் கண்டு
பிடிச்சாங்களாமா, அது ப்ரெக்னண்டா?''

'தெரியாதய்யா.'

'இருந்தா எம்பிள்ளை!'

'போஸ்ட்மார்ட்டத்தின்படி தற்கொலை இல்லங்
கறாரு இன்ஸ்பெக்டர்.'

'தப்பு! தப்பு! அதை யாரும் கொலை செய்யலை.
நான்தான் அதன் தற்கொலைக்குக் காரணம்! அந்தபோட்
டோக்களை நீ காட்டு. பரவாயில்லை எனக்குக் காப்பி
மட்டும் வேணும்! வெளிய தெரிஞ்சா பரவாயில்லை.
என்னுடைய ஒரே ஒரு சந்தோஷ வாரம் மைசூர்! உன்னை
எங்க ட்ராப் பண்ணணும்?'

## 16

பாண்டியன் ராத்திரி பத்து மணி வரை நான்
சொன்னதைக் குறுக்கிடாமல் கேட்டுக் கொண்டிருந்தார்.

'போட்டோவைப் போலீஸ்கிட்ட கொடுக்கலாம்னு
சொன்னாரா?'

'ஆமா ஸார். ஒரே செட்டு காப்பி கேட்டார்.
அவ்வளவுதான் சார், அது கொலையில்லைன்னுதான்
தோணுது.'

'கொலைதான் அதைப்பத்தி சந்தேகமில்லை!'

'ஆனா விஜிஆர் செய்யலை!

'சொல்ல முடியாது! மறுபடி ஆரம்பிச்ச இடத்தில வந்தாச்சு. முதல்ல உம்மேல லேசா சந்தேகம் வந்தது. இல்லை. அப்புறம் விஜிஆர்னு நினைச்சேன், அன்லைக்லி. இதுக்கப்புறம் அந்த முரளி, ஏன் அந்த ஒய்ஃபு ஏன் சேட்டன். ம்ஹூம் கட்டட வேலைக்காரர் சொல்றதை நம்பினா கொல்ல வந்தவன் சிகப்புச் சட்டை போட்டுக்கிட்டு வந்திருக்கான். உங்கூட ஆக்ட் பண்ண அத்தனை பேரையும் கண்டுபிடிச்சு விசாரிக்கணும்''

'அவுங்களுக்கெல்லாம் என்ன காரணம் இருக்க முடியும்?'

'காரணம் இருக்கிறவர் நீங்க ஒருத்தர்தான், ஆளை வெச்சு செஞ்ச கொலையா இருந்தா அவங்கள்ல ஒருத்தன் அந்த மாதிரி அடியாளா இருக்கலாம்.'

'ஆளை வெச்சா? யாரு?'

'நான் இப்ப ஒருத்தரையும் சந்தேகப்படலை. நாலு பேருக்கு மோட்டிவ் இருக்கு.'

'நாலு பேரா!'

'விஜிஆர், அல்லது விஜிஆர் மனைவி, அல்லது மச்சான் முரளி. அல்லது சேட்டன்! விஜிஆர் உங்ககிட்ட கண்ல தண்ணி விட்டு அழுததும் மாய்மாலமா இருக்கலாம். விஜி ஆருடைய மனைவிக்கு சக்களத்தியா வரப்போறான்னு ஆத்திரம் இருக்கலாம். முரளிக்கு மாமன் ரெண்டாம் கல்யாணம் பண்ணிக்கிட்டா அக்காளுக்கும் அவ மூலமா தனக்கும் வர சொத்து எல்லாம் போயிருமேன்னு வெறுப்பா இருக்கலாம். சேட்டன்கிறவன் சேட்டன் இல்லைன்னு தெரியுது. காதலனா இருக்கலாம். அவமேல ஆசைப்பட்டு அவளைக் கல்யாணம் செய்துக்கறதா



இருந்திருக்கலாம். இன் அதர் வேர்ட்ஸ். மறுபடி ஆரம்பிச்ச இடத்துல வந்தாச்சு! ஹூம்! என்று பெருமூச்சு விட்டார். 'இன்னும் எத்தனை வேலை இருக்குது எத்தனை விசாரிப்புக்கள். எத்தனை பேரைத் தேடிப் போகணும்!'

'நிச்சயமாத் தெரிஞ்சுது ஏதும் இல்லையா ஸார்'

'ஒண்ணே ஒண்ணு! சுலேகா கொலை செய்யப்பட்டிருக்காங்கறது மட்டும்தான்.'

எனக்கு எதும் சொல்ல முடியவில்லை,

'இன்னொண்ணு. ஏறக்குறைய நிச்சயம் பத்துமணிக்கு ஒருத்தன் டிஸ்கோ சட்டை போட்டுக்கிட்டு வந்திருக்கான் அவன் யாரால ஏவப்பட்டவன்? அந்தப் பெண்ணுடைய நடந்த காலம் என்ன? அய்யோ? பிரம்மாண்டமா இருக்கு வேலை. காலை ஸ்டூடியோவில உங்க கூட ஸ்க்ரீன் டெஸ்ட் எடுத்துக்கிட்டவங்க, காமிராக்காரங்க ஏற்பாடு பண்ணவங்க, அத்தனை பேரையும் பார்த்தாகணும் விஜி ஆரை, அவர் மனைவியை, முரளியை பாலசந்திரனை! ஜீவா, பிளாஸ்க் நிறைய டீ எடுத்தாந்துரு, ஒரு பாக்கெட் சிகரெட் வாங்கி வந்துரு. டிஸி போன் செய்தாரா? சினிமாக்காரங்க கேஸு. பரபரப்பா இருக்கும்! எல்லாரும் வந்துருவாங்க.'

சொல்லிக் கொண்டே இருக்கும்போது ஒரு சுவேகா திருபர் சக்கரத்தைச் சற்றுவிடுபட்டு பூட்டிவிட்டு உள்ளே தாராளமாக நுழைந்து, 'என்ன? ஏதாவது சிக்கிச்சா என்று நோட்டுப் புத்தகத்தை விடுதலை செய்தார்.

'எங்கிட்ட. எந்த ஸ்டேட்மெண்ட்டும் இல்லை.'

'கேஸ் முன்னேற்றம் அடைஞ்சுக்கிட்டு இருக்குன்னு போடலாங்களா?'

'சொல்லலாம்! என்னை கோட் பண்ணாதீங்க. பேர் போடாதீங்க. எங்க டிஸி வருவார். அவர் ஏதாவது ஸ்டேட்மெண்ட் கொடுத்தா எடுத்துக்குங்க. என்னை

விட்டுடுங்க தற்கொள்ளை இல்லை; கொலைன்னு நான் சொன்னதா போட்டுட்டு அவர் என்னைக் சாச்சிட்டார், எதுக்காக அவசரப்படறிங்கன்னு!'

'இது தற்கொலையா, கொலையா?'

'என்ன வேணா இருக்கலாம்.,

'என்ன பாண்டியன்! ரொம்ப டிப்ளமட்டிக் ஆயிட்டிங்க.''

'நிலைமை அப்படி.'

'சுலேகாவைப்பத்தி பயாகரபி எல்லாம் வெச்சிருக்கோம்; தேவைங்களா'

''பேப்பர்ல போடுவீங்களே— படிச்சுக்கறேன்! ஸார், எனக்குக் கொஞ்சம வேலை இருக்கு.'

'இவருதாமன கரிகாலன்!' என்று என்னைக்கண்ணாடி வழியாகப் பார்த்தார் நிருபர். 'அவரை அரஸ்ட பண்ணி யிருககீங்களா?'

'இல்லை,'

'அப்ப இவரு இல்லையா?'

''அதெல்லாம் இன்னும் தெளிவாத் தெரியலை.'

'யாரையும் இன்னும் அரஸ்ட் பண்ணலை?'

'இல்லை'

'நாளைக்குப் பண்ணிருவீங்க'

'சொல்ல முடியாது.'

பத்திரிகைக்காரர் ஏமாற்றத்துடன் என்னைக் குற்ற வாளியாக இல்லாததே என் தப்புப் போலப் பார்த்து விட்டு. 'காலைல வரவா? ஏதாவது பாஸிட்டிவா இருக்குமா?' என்றார்.

'வாங்க.'



'கரிகாலன் நீங்க ரூமுக்குப் போங்க. நாளைக்குச் சாயங் காலம் ஏழு மணி சுமாருக்கு வாங்க! நாம ஒரு மாதிரி ஸ்டோரி டிஸ்கஷன் பண்ணலாம்.'

'நாளைக்குக் கண்டுபிடிச்சுருவிங்களா?'

'நாளைக்கா? உங்க சினிமாவில வர மாதிரி திடீர்னு ஒரு தாடிச் சாமியார் வந்து. 'நாந்தான் செய்தேன்'னு குற்றத்தை ஒப்புக்கிட்டாதான்!

## 17

ராத்திரி அறைக்குத் திரும்பி வந்தபோது குழாயில் தண்ணீர் வருகிறது என்று சொன்னார்கள். பக்கெட்டில் நிரப்பச் சென்றபோது அருணா பிரிண்டர்ஸ விசாரித்தார் 'என்னங்க. உங்களை விட்டுட்டாங்களா?'

'என்னைப் பிடிச்சிருந்தாத்தானே விடறதுக்கு'

'அப்ப உங்களை எதுக்காகப் போலீஸ் கூட்டிட்டுப் போனாங்க?'

'விட்னஸுக்கு.'

'சுலேகாவைக் கொன்னது, கூட இருந்த ஒரு ஆளு தான்னு சொல்றாங்க! அண்ணன்னு கதைபண்ணிக்கிட்டு இருந்தானாம்.'

அருணா பிரிண்டர்ஸ் ரோஸ் காகிதத்தில் யாரோ கல்யாணம் பண்ணிக் கொள்கிறதாக அச்சடித்துக் கொண்டிருக்க நான் கிணற்றடியில் குளிராக இருந்தாலும் உட்கார்ந்து குளித்தேன் சோப்புத் தேய்க்கும் போது, உடலை நனைக்கும்போது துடைக்கும்போது, உடுத்தும் போதெல்லாம் சுலேகாவின் குழப்பக் கேஸ்தான். கொலை தற்கொலை, சிவப்புச் சட்டைக்காரன், பத்து மணி, கட்டடவேலை, குருவி என்ற தொடர்பில்லாதஎண்ணங்கள் மூளைக்குள் சுற்றின. அவ்வப்போது பளிச்

சென்று அந்த நீலமுகம் தென்பட்டது. எதைப் பிடிப்பதற்
காகக் கைகளை இறுக்கினாள்? விஜி ஆர் சொன்னதைப்
பாண்டியன் நம்புகிறாரா இல்லையா? என்னையே சந்
தேகப் பட்டியலில் இருந்து இன்னும் நீக்கியிருப்பார்
என்று தோன்றவில்லை. அவர் பழக்கமே அப்படித்தான்
போலும். போலிக் கவர்ச்சியில்லாத ஆனால் பொறுப்
பான ஒழுங்கான அணுகுமுறை! நாளைக்கு ஸ்டுடியோ
வுக்குப் போய் என்னுடன் ஸ்க்ரீன் டெஸ்ட்டுக்கு வந்த
அத்தனை பேரையும் விசாரித்து அணு அணுவாக முன
னேறி...யார்?

ராத்திரி அச்சாபீஸ் சத்தம் தொடர்ந்து கேட்டுக்
கொண்டிருக்க, என் எதிர்காலத்தை யோசித்தேன்.
யூனிட்டில் என் வேலை தொடருமா? இப்போது நிச்சயம்
தடைப்பட்டுத்தான் இருக்கும் இன்னும் எத்தனை நாட்
களுக்குப்பின் அவர்கள் பழைய நிலைக்கு வருவார்கள்?
சுலேகாவின் மரணத்தை எவ்வளவு விரைவில் மறைக்கப்
போகிறார்கள்: மறந்துவிடுவார்கள். இன்றோ
நாளையோ என்றாவது மறந்துதான் ஆகவேண்டும்.
மறந்துபோய் மறுபடி ஒரு சந்தர்ப்பம்வந்து விஜிஆருக்குக்
கதை சொல்ல என் தங்க முடிச்சை அவிழ்க்க வேண்டும்
கதாநாயகன் எஸ். எல்.சி. படிச்சுட்டு வேலைக்கு அலைய
றான் நல்ல சுபாவம்... இல்லை பி ஏ. முதல் வருடத்தோட
நிறுத்திட்டு சென்னைக்கு நம்பிக்கைகளைத் துரத்திக்கிட்டு
வரான்... அந்தத் தங்க முடிச்சு என் கனவுகளில் கலந்து
என் கதையாகவே மாறி அதில் சுலேகா ஒருபுறம் நிற்க
சேட்டன், விஜிஆர், விஜிஆரின் மனைவி, முரளி எல்
லோரும் எதிரே அவளை நோக்கிக் குறிவைத்து ஒரே
சமயத்தில் சுட...

விழுந்தவள் தரையிலிடப்பட்ட மீன் போலத்தான்
துடித்தாள். அவளைப்பார்க்க வாசலிலிருந்து தூரத்தில்
கேரளத்தில் கொல்லம்வரை ஜனங்கள் காத்திருக்கிறார்
கள். எல்லோரும் அதே தக்காளி வர்ண டிஸ்கோசட்டை
போட்டிருக்கிறார்கள். அருகே வாலாட்டிக் கொண்டி
ருந்த நாய்கூட அதே மாதிரிச் சின்னதாகச் சட்டைபோட்



டிருந்தது. பாண்டியன் மட்டும் தான் அவளருகில் போய்
இது கொலை இல்லை தற்கொலை' என்றார். சைக்கிள்
பால் மணி ஒலிக்க எழுந்து விட்டேன்.

பத்து மணிக்கு டப்பிங் ஸ்டுடியோ போயிருந்தபோது கூர்க்கா மட்டும் இருந்தான். ஒண்ணும் கிடையாது எல்லாம் விஜி ஆர் கான்ஸல் செய்து விட்டார் என்றான். பஸ் பிடித்து பவர் அவுஸில் இறங்கி டென்னிஸ் கோர்ட்டு மார்க்கமாக விஜி ஆர் வ்ட்டுக்குப் போனேன். இரண்டு போலீஸ் ஜீப்புகள். ஒரு போலீஸ்காரர் வாசலில் ரேடியோவுடன் நின்று கொண்டிருந்தார், நான் உள்ளே போகத் தலைப்பட்டபோது கான்ஸ்டபிள் தடுத்து நிறுத்தினார்.

'பாண்டியன் இருக்காருங்க. டிஸி வந்திருக்காங்க.'

'நான் உள்ளே போகலாமா?'

'நீங்க யாரு?'

'கரிகாலன், இந்த கேஸோட சம்பந்தப்பட்டவன் தாங்க, பாண்டியன் என்னை வரச்சொல்லியிருக்காரு.'

'போய்ப் பாருங்க.'

வராந்தாவில் அந்த ஊஞ்சலின் அருகில் நான்கைந்து கான்ஸ்டபிள்கள் நின்று கொண்டிருக்க— திறந்திருந்த கதவருகில் பெரிய அதிகாரி போன் செய்ய—பக்கத்தில் மௌனமாகப் பாண்டியன் நின்று கொண்டிருந்தவர். நான் வணக்கம் தெரிவித்ததை மௌனமாக வாங்கிக் கொண்டார் எதிரே சற்றே தீவிரமான முகத்துடன் விஜி ஆர் அவர் மனைவி, முரளி மூவரும் இருந்தார்கள் நான் அருகே செல்ல, டிஸி அவர்தான் பேசலும், போன் முடிந்து செல்ல, டிஸி அவர்தான் போலும், போன் முடிந்து வந்தவர்—'ஸார்' நீங்கள் ப்ரொஜெக்ஷன்லதான இருந்திங்க

'ஆமாம்.'

'என்ன லாலுய்யா அவன்.'

ஸோஹன்லால்.

'அவன்கூட பிஸினஸ் பேசிக்கிட்டு இருந்தேன் அவனுக்கு இந்திப் படத்தைப் போட்டுக் காட்டிக்கிட்டு'

'முரளி, நீங்க?'

'நானும் மாமா கூடத்தான் இருந்தேன். நான்தானே ப்ரொஜக்ஷனையே ஏற்பாடு செய்தது.'

'அம்மா, நீங்க?'

எனக்கு அவள் முகத்தைப் பார்க்கப் பதற்றமாக இருந்தது. 'இஹி' என்று சிரித்தாள்.

'சிரிக்காதேம்மா. அவங்க கேள்விக்கு பதில் சொல்லு.' என்றார் விஜி ஆர்.

'என்ன் கேக்கறாங்க?'

'ஞாயிற்றுக்கிழமை பத்து மணிக்கு நீங்க எங்க இருந் தீங்க?'

மறுபடி இஹி என்று சிரித்து—சிரிப்பா, இல்லை—ஏதோ ஒரு நரம்புத்தனமான கோளாறு போலத்தான். பட்டது—'எனக்குத் திங்கள் கிழமை செவ்வாய்க்கிழமை ஞாயிற்றுக்கிழமை எல்லாமே ஒண்ணுதான். இதே வீடு, இதே கண்ணாடி ஊஞ்சல் பத்து மணிக்கு எங்க இருந் திருப்பேன்? பூசை ரூம்ல, இல்லை சமையல் அறையில' இல்லை தோட்டத்தில, இல்லை மாடில! விடியோ பார்த் திட்டு. காம்பவுண்டைத் தாண்டி மூணு மாசம் ஆச்சு. அதும் இவர் வேற அந்தத் தேவடியாளைக் கட்டிக்கிட்ட சேதி சொல்லிட்டப்புறம் கொஞ்ச நஞ்சம் வெளியே போறதும் போயிருச்சு!'

டிஸியும் பாண்டியனும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். 'அப்ப வீட்ல தான் இருந்தீங்கன்னு சொல் றீங்க.'

'முரளி, உங்களை அன்னைக்கு ப்ரொஜக்ஷன் பாத்த வங்க யாராவது கராபரெட் பண்ணுவாங்களா?'

'நிச்சயம் ஸார்.'



'விஜி ஆருக்கும்?'

'ரெண்டு பேரும் ஒண்ணாத்தானே இருந்தோம்.'

'ப்ரொஜக்ஷன் போது இருட்டா இருக்குமில்லை?'

'நீங்க என்ன சொல்றீங்க?'

'சும்மா ஸ்டேட்மெண்ட் வாங்கிக்கறேன், அவ்வளவு தான்.'

விஜிஆர் இதபாருங்க. நீங்க என்னையே சந்தேகப் படற மாதிரி இருக்குது. தற்கொலையைப் போயி கொலைன்னு தப்பா எடுத்துக்கிட்டு ஏன் எங்க உசிரை வாங்கறீங்க! மிஸ்டர் திவாகர், டிபுட்டி கமிஷனரே வந் திருக்கிங்க! உங்களுக்காவது தெரிஞ்சிருக்கும், இந்த மாதிரி எல்லாம் வீட்டுக்குள்ள நுழைஞ்சு கன்னாபின் னான்னு கேள்வி கேக்கறதுக்கெல்லாம் போலீஸுக்கு உரிமை இருக்குதா ஸார்?'

டிஸி பொறுமையாக, 'யாரு உங்க மேலே குற்றம் சொன்னாங்க. உங்ககிட்ட சிலதகவல்கள்தான் கேக்கி றோம்.'

'அதுக்கு உங்களுக்கு உரிமை இருக்கா?'

'இருக்குங்க. உங்களை ஸ்டேஷனுக்குக் கூப்பிட்டு விசாரிக்கறதுக்கே உரிமை இருக்கு. உங்க ஒய்ஃபை போலீஸ் ஸ்டேஷனுக்கு கூப்பிடறதுக்கு எங்களுக்கு உரிமை கிடையாது. அதான் நாங்களே வந்திருக்கோம். நீங்க இந்தக் கேஸை எங்க கோணத்தில இருந்து பாருங்க. அந்தப் பொண்ணு கொலை செய்யப் பட்டிருக்காங்கற தில சந்தேகமே இல்லை. கொலை செஞ்ச ஆளைக் கண்டு பிடிச்சு அரஸ்ட் பண்ணணும். அதான் எங்க கடமை. அதுக்கு முன்னாடி ஏராளமான எவிடென்ஸை கலெக்ட் பண்ணணும். இதில அதிகம் தாமதமானா குற்றவாளி தப்பி ஊரைவிட்டு ஓடிப்போகக்கூட சான்ஸ் இருக்கு, அவசரப்பட்டு அரஸ்ட்டும் பண்ணக் கூடாது. எங்க நிலையை யோசிச்சுப் பாருங்க! எங்ககூட ஒத்துழை

கிறதா இருந்தா சரி. இல்லைன்னா செக்ஷன் நூத்தறு வதை வெச்சுக்கிட்டு உங்களை ஸ்டேஷனுக்கு வரவழைக் கணும்னாலும் சரி! எப்படி செளகரியம்'' என்றவர் சற்றே கோபப்பட்டிருந்தது தெரிந்தது.

விஜிஆர் நெற்றியைச் சுருக்கிக் கொண்டு யோசித் தார். 'சார்! கேக்க வேண்டியதை எல்லாம் கேட்டுட்டுப் போங்க மறுபடி தொந்தரவில்லாம இருந்தா சரி.'

'பாண்டியன்!'

பாண்டியன் காத்திருந்தவரைப் போல் கேள்விகளைத் துவக்கினார்.

ப்ரொஜக்ஷன் ரூம்ல இருந்தீங்கங்கறதுக்குச் சாட்சி சொல்லக் கூடியவங்க பேர் சொல்ல முடியுமா?'

'இதோ முரளி! இல்லை, சேட்டைக் கேளுங்க.'

'முரளி, உங்களுக்கும் சேட்டுத்தானா?'

'இல்லை, ஆம், யூனிட்ல என்னைப் பார்த்த பல ஆளுங்க இருக்காங்க தாமோதர், சசிதரன்பிள்ளை.'

'ப்ரொஜக்ஷன்னா நீங்க எடுத்த படத்தை யாருக்கோ போட்டுக் காட்டினிங்க அதானே.' என்றார் கமிஷனர்.

'ஆமாம்.'

'எத்தனை மணி நேரம் படம்.'

'ரெண்டரை மணி நேரம்.'

இருட்டில நடுவில எழுந்து போயிருக்கலாமில்லையா'

'யாரு.'

'யாரும்.'

'எதுக்காக எழுந்து போகணும்.'

அதை அப்புறம் பார்க்கலாம் எழுந்து போகலை மில்லையா.'



'நான் எங்கேயும் எழுந்து போகலை. சேட்டு பக்கத் திலேயே தொண தொணன்னு பேசிக்கிட்டு இருந்தான்.'

'முரளி, நீங்க?''

'பின்னாலேயே, மாமாவுக்குப் பின்னாலேயே உட் கார்ந்திருந்தேன்.'

'அப்படியா! விஜிஆர் நீங்க எப்பலாவது திருப்பி முரளிகிட்ட ஏதாவது பேசினீங்களா?'

'பேசின்னா முரளி?'

'பேசலிங்க மாமா!'

பாண்டியன் சட்டென்று விஷயத்தை மாற்றினார். உங்க சொத்தெல்லாத்தையும் உங்க பேர்லதானே வெச்சிருக்கீங்க?'

'ஆமாம்.'

'எப்பலாவது உங்க சொத்தைப் பிரிக்கிறதைப்பத்தி பேசியிருக்கிங்களா?'

'யாருக்கு.'

'உங்க மனைவிக்கு, முரளிக்கு.'

'பேச்சு வந்தது. அதுக்கெல்லாம் சமயமில்லை. இது எதுக்கு இப்ப?'

'சுலேகாவைக் கல்யாணம் செய்துக்கறதா இருந்தீங் கல்ல! அவளுக்குச் சொத்து எழுதி வெக்கறதைப்பத்தி பேச்சு வந்ததா?'

'அவ ஒண்ணுமே என்னைக் கேக்கலை'

'அவ இல்லை. அந்தப் பாலசந்திரன்'

'ஆமாம். அவன் கேக்கத்தான் கேட்டான் சரியா ஞாபகம் இல்லை.'

'ஞாபகப்படுத்தறேன் இன்னைக்கு, அந்தாளே சொன் னாரு. சுலேகாவைக் கல்யாணம் பண்ணிக்கணும்னா

பெரும்பாலும் உங்க ப்ராப்பர்ட்டி முழுக்க அவ பேருக்கு எழுதி வைக்கணும்னு கேட்டானாம், அதுக்கு நீங்க சம்மதிச்சீங்களா'

'சம்மதிச்சாரு' என்றாள் மனைவி திடீர் என்று.

'சும்மாரு, சம்மதிச்சிருக்கலாம், ஆனா அதை நான் சீரியஸா யோசிக்கல. ஒருவிதமான மோகத்தில் இருந்த தால் என்ன வேணா சொல்லியிருக்கலாம், அதெல்லாம் இல்லைன்னு தீர்ந்துபோச்சு! போயிட்டாளே! தற்கொலை பண்ணிக்கிட்டாளே! இத பாருங்க. என்ன என்னவோ பேசறோம். யார்கிட்டயோ என்ன என்னவோ வாக்குக் கொடுக்கறோம் அதுபோல இந்தக்கேஸுக்கும் அதுக்கும என்ன தொடர்புன்னு எனக்குவிளங்கலை அவபோயிட்டா அவளைக் கல்யாணம் செய்துக்கறதா இருந்தேன். பொண் டாட்டி சம்மதம் கேட்டா. இவளும சம்மதிச்சா. இரண்டு பேரும் மீட் பண்றதுக்குள்ளே போயிட்டா. அவ்வளவு தாங்க.'

விஜிஆரின் மனைவி லேசாகச் சிரிக்க ஆரம்பித்தாள். சிரிப்பு நிற்காமல் தொடர்ந்து பெரிதாகி ஹாஸ்யமில் லாத வெறிச் சிரிப்பாகப் பரிணமிக்க முரளி அவளருகே சென்று, 'அக்கா! அக்கா! நிறுத்து. நிறுத்து, என்ன இது?' என்று கன்னத்தில் லேசாகத் தட்டினான்.

'சம்மதிச்சேன். சம்மதிச்சேன்!' அதுக்குள்ளே மறுபடி சிரிப்பு 'கடவுளே பாத்து அவளை அழைத்துக்கிட்டுப் போயிட்டாரு எனக்குக் கெடுதல் நினைச்சா அதான் ஆகும்! கட்குண பசு மாதிரி வீட்டோட இருக்கிற மனைவிக்கு துரோகம் பண்ண நினைச்சா...' எப்போது சிரிப்பு அழுகையாக மாறியது என்று தெரியவில்லை. முரளி அவளை அணைத்து அழைத்துச்செல்ல விஜிஆர் 'அவ்வளவுதானே? ஏதாவது இன்னம் கேக்கணுமா?

'கமிஷனர் பாண்டியன் 'அப்புறம் பார்த்துக்கலாம் என்றார். இருவரும் மெல்ல வெளியே வரும்போது



பாண்டியன் என்னைக் கவனித்தார். 'இங்க இருக்கிங்களா ஸார், இவர் தான் நான் சொல்லவில்லை கரிகாலன்...'

உதவி கமிஷனர் என்னை ஒரு முறை பார்த்துவிட்டு 'இவரை வரச் சொல்லியிருந்திங்களா?' என்றார்.

'இல்லைங்க. என்ன கரிகாலன், ஏதாவது புதுசா இருக்கா?'

'இல்லை ஸார், சும்மா பார்த்துட்டுப் போகலா மின்னுட்டு.'

'சாயங்காலம் ஏழு ஏழரைக்கு வாங்க நான் ஸ்டேஸன்ல இல்லைன்னாலும் காத்திருங்க.'

பெரிய அதிகாரி காரில் ஏறிக் கொள்ள அவருக்கு சல்யூட் அடித்துவிட்டுதன்னுடைய ஜீப்பில்ஏறிக்கொண்டு சென்றார். முரளி என்னைப் பார்த்து 'கரிகாலன், ஒரு நிமிஷம்' என்றான்.

'என்னங்க?'

'போலீஸ்ல உங்களுக்கு ரொம்ப தொந்தரவு தந்தாங்களாமே, மாமா சொன்னார்.'

விஜி ஆர் என்னைக் கவனிக்காமல் மாடிக்குச் சென்ற தற்குக் காரணம் அலட்சியமில்லை. அலுப்பும் துக்கமும் தான் என்பது தெளிவாகத் தெரிந்தது. மனைவி தொடர்ந் தாள்.

'முதல்ல எம் மேல சந்தேகப்பட்டாங்க.'

'எப்படி?'

'யார் மேலயும் சந்தேகப்படலாம். ஒவ்வொருத்தரா விசாரிக்கப் போறாங்க!'

'அதென்ன சட்டை சட்டைன்னு கேட்டுக்கிட்டே இருந்தாங்களே!'

'அங்க போயிருந்த ஆளு ஸ்டுடியோவில் ஸ்க்ரீன் டெஸ்டில் கொடுத்தாங்களே அதே மாதிரி சட்டை போட்டுக்கிட்டு இருந்தானாம்'

'ஓ' அதுதான்லிஸ்ட்டு கேட்டாரா! யார்யார் ஸ்க்ரீன் டெஸ்ட்டு கொடுத்தாங்கன்னு பட்டியல் கேட்டாரு. கொடுத்திருக்கேன். பாவம்! இப்ப அந்தாளுங்களைப் போயி சத்தாய்க்கப் போறாங்க!'

'நீங்க என்ன நினைக்கிறீங்க!'

'எனக்கென்னவோ இது தற்கொலைன்னு படுது. அவளைக் கொலை செய்யற அளவுக்கு யாருக்கும் வெறுப்பு இல்லை' நான் அந்த அலங்கார ஹாலைச் சுற்றிலும் பார்த்தேன். விஜிஆர் கல்யாணப் போட்டோவில் எததனை இளமையாக இருக்கிறார். கேடயங்கள், விழாக்களின் புகைப்படங்கள்...

'இந்தப் போட்டோ யாருங்க.'

'நான் தான்! அடையாளம் தெரியலை?'

'ரொம்ப யங்கா இருக்கீங்களே, பட்டாளத்தில் இருந்திருக்கீங்களா?'

'பட்டாளம் இல்லை. கடற்படை. அதில் சார்ட் சர்விஸ் கமிஷன்ல இருந்தேன். பாகிஸ்தான் போது மாமாதான் யூனிட்டைப் பார்க்கணும்னு கமிஷன்முடிஞ்ச உடனே கூப்பிட்டு வச்சிக்கிட்டாரு. தொடர்ந்து இருந்திருந்தேன்னா இந்நேரம் கமாண்டர் ஏன் காப்டனாகக் கூட ஆயிருப்பேன்!'

அந்தப் போட்டோவில் முரளி வெண்மைச்சீருடையில்ஷோக்காகத்தான் இருந்தான், தாடி வைத்திருந்ததால் அடையாளம் கண்டு கொள்ளக் கஷ்டமாக இருந்தது.

சாப்பிட்டுட்டுப் போங்க.

'இல்லைங்க, மற்றொரு சந்தர்ப்பத்தில், எல்லாம் மறந்த பிற்பாடு வர்றேங்க,

'எதுக்கு வந்திங்க இப்ப?'

'டப்பிங் ஸ்டுடியோவுக்குப் போயிருந்தேன். எல்லா வேலையும் அப்படியே நிக்குது. எப்ப பழையபடி துவங்கும்



படம் நின்னு போயிட்டதால என் மாதிரி ஆளுங்களுக்கு இன்னும் தேவையிருக்குமா?'

'ஏன் தேவையில்லாம? அவ செத்துப்போனதில் எல்லாருக்கும் வருத்தம்தான். அதுக்காக வேலை தடைப்படக்கூடாது. மாமாகிட்ட சொல்லிட்டேன் நாளைலருந்து எல்லாம் துவங்கிரும். நீங்க வாங்க. சாயங்காலம் போலீஸ் காரர்களுக்கு அநாவசியமா பதில் சொல்லிக்கிட்டு இருக்காதிங்க. எல்லாரையும் சந்தேகிப்பானுங்க.'

'வரட்டுங்களா? பெரியவரைப் பார்த்துக்குங்க. ரொம்ப நொந்து போயிருக்காரு.'

வாஸ்தவம்தான். ரெண்டு நாளா எப்படி மெலிஞ்சுட்டார் பாருங்க. அப்றம்மா பார்க்கலாம் நாளைக்கு.'

புறப்பட இருந்தவனை, 'போலீஸ்ல ஏதாவது தொந்தரவு பண்ணாங்கன்னா சொல்லுங்க...'

'இல்லைங்க. அவங்களால ஒரு தொந்தரவும் இல்லிங்க. பாண்டியன்கிறவரு ரொம்ப துடியா இருக்காரு, கண்டு பிடிச்சுருவாருன்னு நினைக்கிறேன்.'

மத்தியான வெய்யிலில் வெளியே வந்தபோது அந்த வீட்டைத் திரும்பிப் பார்த்ததில் பால்கனியில் பாதி சுருட்டப்பட்ட பச்சைத் தட்டியின் நிழலில் நின்று கொண்டு விஜிஆரின் மனைவி என்னைப் பார்த்துச் சிரித்தாள்.

## 18

ஏழு...மணிக்குப் போலீஸ் நிலையத்துக்குப்போன போது பாண்டியன் அங்கே இல்லை. எப்போது வருவார் என்று அவர்களால் சொல்ல முடியவில்லை, எட்டு அடிக்கும் வரை காத்திருந்து 'அப்பறம் வரேன்னு சொல்லுங்க' என்று புறப்பட்ட போது ஜீப் வந்து நிற்க களைத்துப்

போன பாண்டியன் இறங்கினார். தலைத் தொப்பியைக் கழற்றிக் கொண்டு நெற்றியைக் கைக்குட்டையால் துடைத்துக் கொண்டே 'ஏன்யா சசிதரன் பிள்ளைங்கிற வரு வந்தாரா? நீங்களா? வாங்க! உக்காருங்க.'

'என்ன ஸார், ஏதாவது தெரிஞ்சுதா?'

'அதுக்குள்ள தெரிஞ்சுருமா' என்று உடனே டெலிபோன் செய்து காத்திருக்கும்போது, 'யோவ் அந்தக்கேஸ் டயரியைக் கொண்டா' என்றார். நான் உட்கார அவர் டெலிபோனில், 'ஸார் பாண்டியன்! ஒரு விஷயம் கன்ஃபர்ம் ஆயிடுச்சு. இன்னம் இரண்டு பேர் பத்து மணி சுமாருக்கு அந்தச் சட்டை போட்டிருந்த ஆளைப் பார்த்திருக்காங்க. மறுமுனைப் பேச்சு கரகரவென்று இருந்தது.

'.................'

'ஒம்பது பேர் சார். எல்லாம் அட்ரஸும் கிடைச்சிருச்சு ஒருத்தர் ஒருத்தரையா விசாரிக்கணும். நாலு பேர் ஆயிருக்கு யாருக்கும் நேரா மோட்டிவ் கிடையாது.

'.................'

'ராவனு ஒருத்தர் காஸ்ட்யூமர்.'

'...............'

'இருக்கலாம் ஸார்.'

'...............'

'இல்லை.'

'...............'

'நிச்சயம் அந்த முடிவுக்கு வர முடியாது.'

'இர்க்வெஸ்ட் ரிப்போர்ட் கொஞ்சம் மையமாகத்தான் இருக்குது. இன்ஜுரி லிஸ்டு இருக்குது. தற்கொலையா இருக்கலாம்னு சொல்லியிரு.'

'.................'

'ஸப் டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட்டு.'

'நாந்தாங்க கொஞ்சம் சந்தேகம் இருந்துதுன்னுட்டு'



'கொஞ்சம் டயம் கொடுங்க.'

'இல்லை. இன்னம் இல்லை.'

'எஸ் ஸார்!' என்ற ஆத்திரத்துடன் போனை வைத்தார். முகம் சற்றுச் சிவந்திருந்தது. 'பேஜாருய்யா. எங்கிருந்து அரஸ்ட் பண்ணுவேன். ஒண்ணும் இன்னம் தெளிவாகவே இல்லை. இன்னும் எத்தனை பேர் பாக்கி இருக்குது! கரிகாலன், இப்ப கொஞ்சம் பிஸியா இருக்கேன். நீங்க நாளைக்குக் காலைல...வெயிட் எமினிட். உங்களை நான் ஒரு விஷயம் முக்கியமா கேக்கறதுக்குக் கூப்பிட்டிருந்தேன். என்னது?'

நான் காத்திருந்தேன். அவர் கண்கள் சற்று சோர்வுடன் தூக்கமின்மையைக் காட்டின.

'ஏதோ டிஸ்கஷன் பண்ணணுமின்னிங்க.'

'அதுக்கு இன்னும்வேளை வரலை. பேசாம..பேசாம.. கேஸைக் குளோஸ் பண்ணித் தள்ளிரலாம்னு தோணுது! இழுபறி.'

'அவங்க யாரும் இல்லைங்களா?'

'எவங்க?'

'நீங்க சொன்னீங்களே. விஜிஆர், மனைவி, முரளி, பாலச்சந்திரன்...'

'யாரையும் பின்பாயிண்ட் பண்ண முடியலை.'

'பாலச்சந்திரன் எப்படி?'

'அந்தாளைத் துருவிக் கேட்டுட்டேன். மோட்டிவ் இருக்கு. ஆனா அவன் கொச்சில இருந்ததுக்குச்சரியான ஆதாரம் இருக்குது. கேரளா டிஸ்ட்ரிப்யூட்டரைசந்திச்சுப் பேச அவர்களேதான் அனுப்பிச்சிருக்காங்க டெலிபோன் மூலமா வெரிஃபை பண்ணிட்டேன்.'

'வேலைக்காரப் பொண்ணை ஏன் அழைச்சுட்டுப் போனானாம்.'

'வீட்டுவேலைக்காக கேரளத்தில இருந்து கொண்டுட்டு வந்த பொண்ணு. ரொம்ப நாளா தன் அம்மாவைப் பார்க்கணும்னு சொல்லிக்கிட்டு இருந்ததாம். இந்தச் சந்தர்ப்பத்தில கூட்டிட்டுப் போயிருக்கான். இதெல்லாம் சரியாத்தான் இருக்குது.'

'சுலேகாவைத் தனியா விட்டுட்டா.'

'நாயி இருக்குது. ராத்திரி வீடு கூட்டி விட்டு வேலை செய்யற இன்னொரு வேலைக்காரப் பொம்பளையைப் படுத்துக்க வரச் சொல்லியிருக்கான். சுலேகாதான் போயிட்டு வான்னு சொல்லிச்சாம். மேலும் ஞாயிற்றுக் கிழமை, உங்களைத் தனியா சந்திக்கிறதை விரும்பியிருப் பாங்க போல இருக்கு, என்னவோ உங்க கிட்டசொல்ல...

சற்று நேரம் மௌனத்திற்குப் பிறகு, கொலையைச் செய்தது ஒரு அடியாளு, சிவப்புச் சட்டை போட்டுக் கிட்டு திட்டம் போட்டுக்கிட்டு செய்த கொலை. சட்டை யில இருக்குது சூட்சுமம். உங்க இந்தச் சட்டையை எப்ப வாங்கிக் கிட்டீங்க?'

'முன்னேயே கொடுத்திட்டாங்க. அதைத் திரும்ப வாங்கிக்கலை.'

'இந்த ஸ்க்ரீன் டெஸ்ட்டுக்கு பிள்ளைதான் ஏற்பாடு பண்ணாரா உங்களுக்கு.'

'முரளி ஸார்.'

'அளவெடுத்துத் தெச்சாங்களா?'

இல்லை. சுமாரா பொருந்தும் படியா காஸ்ட்யூமி லிருந்து கொடுத்தாங்க.'

ஸ்க்ரீன் டெஸ்டுக்கு வந்தலங்க எல்லாரும் அதே மாதிரிச் சட்டை...'



'ஆமாம்.'

'எல்லாரும் துணை நடிகருங்க. நீங்க ஒருத்தர்தான் கதாசிரியர். அந்த ராவ் எத்தனை சட்டை செஞ்சாருன்னு கேட்டு வெச்சுக்கணும். டெஸ்ட்டு எடுக்க வந்தாங்களே, அவங்களை யூனிட்ல முன்னாடி பார்த்திருக்கீங்களா?'

'யூனிட்டைச் சேர்ந்தவங்கதான்.'

எதற்கு இதெல்லாம் கேட்கிறார் என்று எனக்குப் புரியவில்லை.

'எப்படியாவது, எப்படியாவது, இவங்க நாலு பேர்ல ஒருத்தரைச் சம்பந்தப்படுத்தும்படியா ஒரு துப்புக் கிடைச்சாப் போதும் கிடைக்கலையே! எங்கயோ எதையோ மிஸ் பண்றேன். பத்து மணிக்கு ஒரு ஆளு சிவப்புச் சட்டை போட்டுக்கிட்டு அங்க போயி காரியத்தை முடிக்கிறான். டிஸ்கோ சட்டை. அத்தனை பேரும் அதே சட்டை!'

'எல்லாரையும் விசாரிச்சிட்டீங்களா?'

'இல்லை, ஆனா அவங்க யாரும் இருக்க முடியாது.'

'ஏன்?'

'நாயி! நாயி என்ன பண்ணிச்சு நாய் எதிர்த்திருக் காதோ? இல்லை, அந்த நாயைக் கட்டிப் போட்டுட்டுப் போறப்ப விடுதலை செய்திட்டுப்போயிட்டானா? இல்லை தெரிஞ்ச ஆசாமியா? தெரிஞ்சவன்னா மறுபடி நீங்க, விஜிஆர், பாலன், முரளி, சுத்துது! விஜி ஆருச்குமோட் டிவ் பத்தாது. சரி, விஜிஆர் நாங்க கிளம்பினதும் என்ன சொன்னாரு?'

'அவர் பாட்டுக்கு மாடிக்குப் போயிட்டாரு.'

'முரளி?'

'முரளி போலீஸ் தொந்தரவு கொடுக்கறாங்களான்னு விசாரிச்சார்.'

'அந்தம்மா?'

'அவங்க மாடியில நின்னுக்கிட்டு இன்னும் சிரிச்சிக் கிட்டிருந்தாங்க.'

'ஒருத்தரும் ஒண்ணையும் சொல்லலை.'

'முரளி கடற்படையில் கொஞ்ச காலம் ஆபீஸரா இருந்ததைப் பற்றிச் சொன்னாரு.'

'என்னவா இருந்தாராம்?'

'ஷார்ட் சர்வீஸ் கமிஷன்னு என்னவோ சொன்னாரு அது முடிஞ்சப்புறம் விஜிஆர் வீட்டில் கூட்டி வச்சுக் கிட்டாராம்'

'விஜிஆர் சொத்து பூராவையும் லிமிடெட் கம்பெனி யாக்கி மூணு பேருக்கும் ஷேர் பங்கிட்டுக் கொள்ற மாதிரி ஒரு திட்டம் இருந்திருக்குது மனைவிக்கும் மச்சானுக்கும் ரெண்டாம் கல்யாணத்தில பெரிய ஏமாற்றம். அவனைக் கொல்றதுக்கு வலுவான காரணம் இருந்திருக்க எவிடன்ஸ்தான் பத்தலை. ஒண்ணு கிடைச்சா போதும்... குழம்பிக்கிட்டு இருக்கேன்

'நாங்க சில வேளைகளில் தவிப்போங்க ஒரு 'நாட்டுக் காக! ஒரே ஒரு முடிச்சுக்காக! தங்க முடிச்சுன்னு விஜிஆர் சொல்வாரு. அந்த ஒரு நாட்டுக் கிடைச்சாப் போதும்! பாக்கியெல்லாம் பாத்துக்கலாம் பாரு அது மாதிரி நீங்களும்...'

'ஆமாம் எனக்கும் ஒரு நாட்டுக் கிடைச்சாப்போதும். நாட்டு! முடிச்சு! தங்க முடிச்சு! இல்லை, இது கயிற்று முடிச்சு. ஓ மைகாட்!' உள்ளங்கையால் தன் நெற்றியில் அடித்துக் கொண்டார். 'எனக்கு வேண்டிய முடிச்சு கிடைச்சுருச்சு! இருக்கு சுட்சுமம்! கரிகாலன்! கை கொடுங்க! கண்டுபிடிச்சுட்டேன். என்ன சுலபம்! என்ன சுலபம்!'

'என்ன ஸார் சொல்றீங்க?'



என்னை மாதிரி மர மண்டை இருக்க முடியாது!' டெலிபோனை எடுத்துக்கொண்டு அவசர அவசரமாக டயல் செய்தார்.

'என்ன ஸார் சொல்லுங்க?'

'யாருன்னு தெரிஞ்சு போச்சு. எல்லாமே ஒரு ஸ்லாட்டுக்குள்ள விழுந்துருச்சு! ஸார்! பாண்டியன்! ஆள் யாருன்னு தெரிஞ்சு போச்சு.'

'.................'

'இல்லை ஸார், இப்பத்தான் திடீர்னு ஃப்ளாஷ்ஆச்சு கொலையையும் அவனையும் லிங்க் பண்ணக்கூடியமுக்கிய மான முடிச்சு—தங்கமுடிச்சு கிடைச்சுருச்சு! ஆம் ஸார், திரும்பி வரும்னு சொல்வாங்களே அது போல, அபயங்கர் மர்டர் கேஸ் ஞாபகம் இருக்கில்லை?'

'...............'

'ஆமா ஸார், நாட்டு! நாட்டு! அவகழுத்தில கயிற்றில போட்டிருந்த முடிச்சு! செய்லர்ஸ் நாட்டில ஒரு வகை! கடற்படையில் பயிற்சி பெறும்போது சொல்லித் தரும் முடிச்சுகள்ல ஒண்ணு!'

'...............'

'மிஸ்டர் முரளிதர் கடற்படையில ஒரு அதிகாரியா இருந்திருக்காரு.'

நான் அவரை வியப்புடன் பார்த்துக் கொண்டிருக்க டெலிபோனில் ஒலித்த 'இஸ் இட்!' எனக்குத் தெளிவாகக் கேட்டது. 'சில வேளையில சின்ன பாயிண்டுகளை விட்டுட றோம்! ஸார், தி க்ளூ வாஸ் தேர் ஃப்ரம் தி பிகினிங்!'

எல்லாமே பொருந்துது. ப்ரொஜக்ஷன்ல இருந்து இருட்டில சுலபமா விலகியிருக்க முடியும், சட்டையைப் பற்றி அவருக்கு நல்லாவே தெரியும்! ராவ் சப்ளை பண்ண சட்டையில ஒண்ணை எடுத்துப் போட்டுக் கிட்டுப்

போயிருக்கணும். நாயி பழகினது..., எல்லாம் இப்ப சட்டுனு பொருந்திப் போயிருக்கு!'

'ஓகே ஸார். காலைலயே வாரண்டுக்கு ஏற்பாடு பண்ணிடறேன்...'

டெலிபோனை வைத்தவரின் கண்களில் பிரகாசத்தைப் பார்த்தேன், ''ஆச்சு, காலைல வாரண்ட் வாங்கி வெக்க வேண்டியதுதான் பாக்கி கன்னியப்பன், இதைக் காலைவரை யார்கிட்டேயும் சொல்லிடாதீங்க...'

''நீங்க சொல்றது தலைகால் புரியலை. முரளியா?'

'ஆமாம். முரளிதர்தான் இந்தக் குற்றத்தைச் செய்தவன்.'

'காரணம்?'

'சொத்துதான். விஜிஆரோட அத்தனை சொத்தும் குடும்பத்துக்குள்ளேயே. அதுவும் தனக்கு ஒரு கணிசமான பங்கு கிடைக்கப் போறதுன்னு எதிர்பார்த்துக்கிட்டு இருந்தபோது சுலேகாவை ரெண்டாம் கல்யாணம்செய்துகணும்னு அவர் தீர்மானிச்சுது எல்லாம் அப்ஸட் ஆயிடுச்சு ரொம்ப கமுக்கமான ஆளு மேம்போக்கா அதுக்குச் சம்மதம் சொல்லிட்டு உள்ளுக்குள்ள நல்லாவே திட்டம் போட்டிருக்கான்! நீங்க வந்து மாட்டியிருக்கிங்க. உங்களுக்கு அவகூட தமிழ் கத்துக் கொடுக்கிற சாக்கில பழக்கம் ஏற்படுத்தி கதை வசனகர்த்தாவுக்கு திடீர்னு ஸ்க்ரீன் டெஸ்ட்டுக்கு ஏற்பாடு செய்து சட்டையைக் கொடுத்து எல்லோராலும் சுலபமா அடையாளம் கண்டு கொள்ளக் கூடிய டிஸ்கோ சட்டை! ஞாயிற்றுக் கிழமை அவளைப் பார்க்கப் போறிங்கன்னு விஷயம் தெரிஞ்சுகிட்டு— அன்னைக்கு யாரும் வீட்டில இல்லை. சேட்டன் வேலைக்காரப் பெண்ணைக் கூட்டிட்டு கொச்சின் போயிருக்கான்னு தெரிஞ்சுக்கிட்டு...'

'அவனே போய்க் கொன்றிருக்காங்கறீங்களா?இல்லை ஆளை வெச்சா?'



'இவனேதான் போயிருக்கான் அந்தச் சட்டையைப் போட்டுக்கிட்டு.'

'சட்டை எங்க கிடைச்சுது?'

'ராவ் கிட்ட. சட்டைக்கு ஏற்பாடு செய்ததே அவன் தானே! அதில் ஒரு சட்டையை எடுத்துக்க அவனுக்கு நிறையச் சந்தர்ப்பம் இருந்திருக்கும்.'

நான் யோசித்தேன். 'பொருந்துது.'

இனி ஒரு திசை கிடைச்சிருச்சு. ஒவ்வொருத்தரா விசாரிச்சா எல்லாம் வெளிய வந்துரும்! ராவ் எத்தனை சட்டை தெச்சார்? யார் கிட்ட டிஸ்கஸ் பண்ணார்? முரளி கிட்ட எப்பஅதைக்காட்டினார்? எல்லாத்தையும் துளைச்சு எடுத்துர மாட்டேனா'

'அடப் பாவி! இப்படிச் செஞ்சுட்டானா? இதையெல்லாம் எப்படி கோர்ட்டில் நிரூபிக்கப் போறிங்க?'

'கோட்டில நிரூபிக்கறதுங்கறதுக்கு வேற முறைகள் இருக்குது. ஜோடனை மாதிரி இது. பல்லாக்கில சாமியை வெச்சு அலங்காரப் பண்ற மாதிரி! சாமி மட்டும் பொய்யில்லாம உண்மைங்கிற சாமியா இருக்கணும். அது நம்ம மனச்சாட்சிக்குத் தெரிஞ்சுட்டாப் போதும். மத்த அலங்காரங்களில் கொஞ்சம் பொய்கலந்துக்கலாம். 'பொய்மையும் வாய்மையுடைத்து புரை தீர்ந்த நன்மை பயக்குமெனின்'னு வள்ளுவர் சொன்னாப்பல. முதல் காரியமா காலைல மாஜிஸ்திரேட்டைப் பார்த்து ஒரு அரஸ்ட் வாரண்ட் வாங்கிக்கணும்!'

எனக்கு எல்லாவற்றையும் ஜீரணிக்க ஒரு மணி நேரமாவது ஆகும் போல இருந்தது. ஸ்டேஷனுக்குள் கழுத்தில் சவுக்கம் போட்டு ஒரு ரத்த முகனை கான்ஸ்டபிள் இழுத்து வர அவன் 'வணக்கம்யா' என்றான்.

'என்னடா என்ன செஞ்சே?' என்று அவனைத் தோளில் தட்டி அமர்த்தினார்.

'பாட்டிலுங்க' என்றார் கான்ஸ்டபிள்.

'ஏன்யா இப்படிப் பாழாப் போறீங்க!'

பாண்டியன் அவருடைய தினசரி ரத்தங்களுக்கும், குற்றங்களுக்கும் திரும்ப, 'ஸார், நான் அப்புறம் வந்து உங்களைப் பார்க்கறேன்' என்று புறப்பட்டேன்.

'வாங்க! ரொம்ப தாங்க்ஸ் கண்ணைத் திறந்து பார்த்ததுக்காக!'

'என்ன பார்க்கேன்.'

'அந்தப் போட்டோ! கடற்படை போட்டோ படத்தை!'

அவருடைய முகத்தைப் பார்த்தபோது— கண்களில் இருந்த சந்தோஷத்தையும் கடமையுணர்ச்சியையும் பார்த்தபோது—

'நரனை நரனாக்கும் தர்மமே உனக்கு ஆயிரம் நமஸ்காரம் ஆயிரம் நமஸ்காரம்' என்று சுலேகா சொல்வது ஞாபகத்துக்கு வந்தது.

●

# தப்பித்தால் தப்பில்லை

பாலகிருஷ்ணனைப் பாருங்கள். ஐந்தடி நாலங்குலம் உயரம். மெலிதான கரங்கள். தூரத்திலிருந்து பார்த்தால் பையன்போல இருப்பான். சன்னமான குரல். சாது. பிறர் வம்புக்குப் போகமாட்டான் தனக்குள்பேசிக்கொள்வான். தெருவில் கூட்டத்தைப் பார்த்தால் கிட்டத்தில் போய் விசாரிக்கமாட்டான். ஒதுங்கிப்போவான். அல்லது வேறு வழியில் போவான். அனாவசியமாக ஈ எறும்பைக் கூடக் கொல்ல மாட்டான்.

**சாரதாவைக் கொல்லப் போகிறான்!**

தன்னுடைய சிறிய அளவை ஈடு கட்டும் விதத்தில் பாலகிருஷ்ணன் நன்றாகவே படித்தான். இரண்டு மூன்றாவது 'ராங்க்'குக்குக் குறைவாக வாங்கியதே இல்லை. தக்க சமயத்தில் படித்து, பாஸ் பண்ணி. வேலைக்கு மனுப்போட்டு, இரண்டு மூன்று வேலை கிடைத்து, மனசுக்குப் பிடித்தமான வேலையில் அமர்ந்து, அப்பா அம்மா சொன்ன பெண்களையெல்லாம் விசுவாசமாகப் பார்த்து. சாரதாவைப் பிடித்துப் போய்க் கல்யாணம் பண்ணிக்கொண்டு, தேனிலவு சென்று திரும்பி வந்து, வீடு அமைத்து, பொருட்கள் சேர்த்து, இல்லறம் அமைத்து மூன்று வருஷம் கழித்துச் சிக்கல்!

**காட்சி**

பாலகிருஷ்ணன் அலுவலகத்திலிருந்து திரும்பி வருகிறான். வீடு பூட்டி சாவி எதிர் வீட்டில். சாரதா எங்கே போயிருக்கிறாள் என்று தெரியவில்லை ராத்திரி பத்தரை வரை காத்திருந்துவிட்டு யாரிடம் சொல்லலாம் என்று

கவலைப்பட்டுக் கொண்டிருக்கும்போது வருகிறாள்' ஸ்லீவ்லஸ் அணிந்து பாடிக்கொண்டே வருகிறாள்.

'எங்கே போயிருந்த சாரதா? சொல்லிட்டுப் போயிருக்கலாமில்ல?'

ஃப்ரெண்ட்ஸ் வீட்டுக்குப் போயிருந்தேன். எதிர் வீட்டில சொல்லிட்டுத்தானே போயிருந்தேன்!'

'எந்த பிரண்ட்.'

'பேர் சொன்னால் உங்களுக்குத் தெரியாது!'

'சொல்லேன்.'

'சுப்புலக்ஷ்மி. தெரியுமா?'

'தெரியாது.'

அவளிடமிருந்து செண்ட்டு வாசனை வருகிறது.

**காட்சி**

வெளியூர் போய்விட்டுத் திரும்பும்போது ஆட்டோ கிடைக்காமல், கடைசி பஸ் பிடித்து மத்திக்கரையில் இறங்கிக் குறுக்கே கடந்து தூரத்தில் தன்வீட்டு சன்னல் விழித்துக் கொண்டிருப்பதையும் வாசலில் ஒரு ஜாவா வண்டி நிற்பதையும் கவனிக்கிறான். இவன் செல்வதற்குள் புறப்பட்டு ஜாவா எதிர்ப்பக்கம் செல்ல சன்னல் விளக்கு அணைகிறது. வீட்டுக்குச் சென்று மணிப் பொத்தானை அழுத்த தயக்கத்துக்குப்பின் கதவு திறக்கிறது. 'என்ன நீங்க? ஒரு நாள் முன்னமேயே வரதா தகவல் சொல்லக் கூடாதா?'

'அதனால என்ன, பரவாயில்லை சாரதா.'

'நல்ல வேளை.'—

'என்ன?'

'நல்ல வேளை, சினிமா சினிமாக்கு போகாம இருந்தேன்.'



சேலை புதுசா சாரதா? நான் பார்த்ததில்லையே'
'நீங்க எப்ப என்னைக் கவனமாப் பார்த்திருக்கிங்க?'

**காட்சி**

பாலகிருஷ்ணன் அவள் கைப்பையைப் பிரித்துப்பார்க்கிறான். அலங்கார் தியேட்டரில் நூன் ஷோ டிக்கெட்டின் கிழிந்த பாதி இரண்டு பார்க்கிறான், டியர் எஸ்— எல்லாவற்றுக்கும் வந்தனம்—எம்' என்று ஒரு காகிதக் குறிப்பைப் பார்க்கிறான்.

**காட்சி**

ஒரு முறை அலுவலகத்தில் டூர்க்குப் புறப்பட்டு விட்டு கான்ஸலாகிச் சாயங்காலமே திரும்பி வர அதே ஜாவா வீட்டு வாசலில் நிற்கிறது. அதன் வால்விளக்கு மேலே அலங்காரமாக எம் என்று எழுதியிருக்கிறது. நேராகப் போய்க் கதவைத் தட்டிச் சந்திக்கப்போகும் உண்மையை விரும்பாமல், கோகுலா சென்று ஒரு பாரில் முதல்தடவையாகக் குடிக்கிறான்.

பாலகிருஷ்ணன் அலுவலகத்தில் தன் மேசை மேல் உட்கார்ந்து கொண்டு இதுவரை பார்த்ததையெல்லாம் வைத்துக்கொண்டு என்னத்தைச்செய்வதுஎன்று குழம்பிக் கொண்டிருந்தான் படிப்பு, சூழ்நிலை எல்லாம் மனைவியுடன் தெருச்சண்டை போட அனுமதிக்கவில்லை. தெரிந்ததெல்லாம் பாதி உண்மைகளே. இதிலிருந்து இது தான் என்று முடிவெடுக்க முடியவில்லை அல்லது விரும்பவில்லை. கோழை, நடுத்தரவர்க்க இந்தியக் குடும்பத்தில் இம்மாதிரி நடக்கவே நடக்காது என்று தலையை மண்ணுக்குள் புதைத்துக் கொண்டாலும் சங்கடமாக இருந்தது. மேல் மட்டத்தில் அல்லது கீழ்மட்டத்தில்தான் இவையெல்லாம் நடக்கும் கீழ்மட்டம் என்றால் தலைமயிரைப் பிடித்துத் தெருவுக்கு இழுத்து வந்து அக்கம் பக்கத்திலோ பஞ்சாயத்திலோ நியாயம் கேட்பர். மேல் மட்டத்தில்

வைத்து டிவோர்ஸ் கேட்பர். சம்ப நாசூக்காக வக்கீலை வைத்து டிவோர்ஸ் கேட்பர். சம்ப வங்களைக் கோர்த்துப் பார்த்தால் கோரமில்லாத வேறு வியாக்கியானம் கிடைக்கத்தான் கிடைக்கும் என்று எண்ணினான். கேட்கத் தைரியம் வரவில்லை. அந்தரங்க நண்பர் யாரும் அவனுக்கில்லை. ஒரே நட்பு சாரதா தான். பிரச்னையே சாரதாதான்! இவன் இரண்டும் கெட்டான்.

யோசித்துப் பார்த்தால் சாரதா அழகானவள் என்று தான் சொல்லவேண்டும். பாலகிருஷ்ணனை விடச் சற்று உயரம். ஸ்லீவ்லெஸ் ரவிக்கை அணிந்து கரும்பச்சையில் லேசாகச் சரிகை போட்ட புடவையில் வசீகரித்தாள். முகத்தின் அமைப்பால் அல்ல, அங்க லட்சணங்கள் ஒத்துழைத்து சில ஆண்களுக்கு அவள் நிச்சயம் கவர்ச்சி கரமாகவே இருக்க முடியும். மூன்று வருஷம் தினமும் அவளையே பார்த்துக் கொண்டிருப்பதாலோ என்னவோ அவளுடைய சாத்தியங்கள் தெரியவில்லை. ஒருபெண்ணை முழுமையாக அறிந்து கொள்வதற்கு மூன்று வருஷம் போதாது. சுந்தட காலமெல்லாம் அவள் சொல்லித்தான் தெரியும் அப்பா அம்மா பார்த்து விசாரித்துத்தான் கல்யாணம் ஏற்பாடு பண்ணினார்கள். எல்லாவற்றையும் விசாரிக்க முடியுமோ? மனம்? சாரதாவின் மனமே! உனக்குள் என்ன இருட்டுக்கள், என்ன இரகசியங்கள் வைத்திருக்கிறாய்?

'ஆபீஸ் போகலியா?'

'இல்லை. வேற வேலை இருந்தது. ஏன்?'

இல்லை. டிபன் எல்லாம் கட்டிக் கொடுத்தனே உடம்பு சரியில்லையா?'

'இல்லையே. சரியாகத்தானே இருக்கேன்,'

அருகில் வந்து கழுத்தைத் தொட்டுப் பார்த்து. ஜுரம் இல்லையே?' என்றாள்.

'இல்லை.'



'எம்மேல ஏதாவது கோபமா? ஏன் உம்முனு இருக்கிங்க?'

'ஒண்ணுமில்லை.'

'ஏதாவது இருந்தா சொல்லிடுங்க. மனசில ஒண்ணை யும் வெச்சுக்க வேண்டாம்.'

இதுதான் சரியான சமயம்! கேட்டுவிடு! கேட்டுவிடு

'சாரதா, உன்னை ஒண்ணு கேக்கணும்!' ம், கேள்! தயங்காதே! கேட்டுவிடு! 'அலங்கார்ல படம் ரொம்ப நாளா ஓடறதே போலாமோ?' இப்படியா ஆரம்பிப்பது!

'போகலாமே.'

'நீ பார்க்கலியே?'

'என்ன சொல்றீங்க? உங்களை விட்டுட்டு தனியா சினிமா பார்ப்பேனா? என்னங்க பேசங்க?'

'இல்லை, ப்ரண்ட்ஸ் கூட ஏதாவது...'

'ஏன் இப்படிக் கேக்கறிங்க? புரியவே இல்லையே.'

'புரியலைன்னா விட்டுரு. ஜாவா மோட்டார் சைக்கிள் தெரியுமா?'

கண்களில் அதிர்ச்சியை எதிர்பார்த்தான். இல்லை. தேர்ந்த நடிகை.

'மோட்டார் சைக்கிளா? பேர் எல்லாம் தெரியாது, பக்கத்துகாண்ட்ராக்ட்காரரு வெச்சிருக்கார் ஒண்ணு. ஏன்?

'நானும் ஜாவா ஒன்று வாங்கலாம்னு இருக்கேன்,'

'நானும்னா? என்னங்க சொல்றிங்க? நிசமாவே ஏதோ உளர்றிங்க.

'சாரதா அடிக்கடி நம்ம வீட்டுக்கு ஜாவாவில வர்றவன் யாரு? அன்னைக்கு யார்கூடச் சினிமாவுக்குப் போனே? இந்த லெட்டர் எழுதினவன் யாரு?'

**இப்படி நேராக அழுத்தமாகக் கேட்பதற்குப் பதில்**
**'ஒண்ணுமில்லை' என்றான் விடு!'**
சாரதா அவனை வினோதமாகப் பார்த்து மறுமுறை
அவன் நெற்றியில் கைவைத்துப் பார்க்க முயன்றபோது
ஆத்திரத்துடன் தள்ளினான்.

'கோபம் போலிருக்கு. கோவிச்சுட்டா கோவிச்சுகங்க
ளேன். எனக்கு என்ன போச்சு?' என்று எழுந்து உள்ளே
போனாள். கேட்டிருக்கலாம் ஏன் கேட்கவில்லை?'
பாலகிருஷ்ணனின் கோழைத் தனம்தான். தயக்கம் அவன்
ஜீன்களிலேயே இருக்கிறது. பொய்க் கோட்டையை
இந்தனை சீக்கிரம் கலைக்க விருப்பமின்றித் தன்னைத்
தானே இன்னமும் எண்ணங்களால் பருத்திக்கொள்ளும்
உத்தேசம்தான்.

ஆபிஸில் சுபா ஒரு கடிதத்தில் கையெழுத்து வாங்க
உள்ளே வந்தபோது பாலகிருஷ்ணன் தனக்குள்ளே
கொஞ்சம் உரக்கவே பேசிக் கொண்டிருந்தான். சுபா
தயங்கினாள், நிமிர்ந்தான். அந்தச் செயலில் மாட்டிக்
கொண்டதில் அவனுக்குக் கோபம் வந்தது. 'வாட்டிஸிட்'?
என்று அதட்டினான்.

'லெட்டர்ல சைன் பண்ணணும்.'
'எல்லாம் காலைல பாத்துக்கலாம். டோன்ட்
டிஸ்டர்ப் மி நௌ!'

'ஸாரி' என்று அவள் விலகியதும் கண்ணாடிக்கு
வெளியே சிரிப்பு கேட்டது

'சுபா, வில் யூ ப்ளீஸ் கம்!' என்றான் இண்டர்காமில்.
டிக்டேஷன் நோட்டுப் புத்தகத்துடன் அவள் உள்ளே
வர 'உனக்குச் சிரித்து விளையாட வேண்டும் என்றால்
ஆபீஸில் வைத்துக் கொள்ளாதே. அரை நாள் லீவு
போட்டுவிட்டு வீட்டுக்குப் போய் எத்தனை வேண்டுமா
னாலும் சிரித்துக் கொள்ளலாம் அண்டர்ஸ்டாண்ட்?'



சுபா முகத்தைச் சோகமாக வைத்துக் கொண்டு
'ஸாரி' என்றாள்.

'ஸாரி இஸ் எ டர்ட்டி வர்ட்.'

'எனிதிங் எல்ஸ் ஸார்.'

'நத்திங். யூ மே கோ.'

மறுபடியும் கண்ணாடிக்கு வெளியே சிரித்தாள் என்று
தோன்றியது.

மூன்று வருஷங்களை நுட்பமாகஎண்ணிப்பார்த்தான்
அறிகுறிகள் எதாவது இருந்தனவா? ஏழைக் குடும்பத்தில்
நாலு பெண்களில் மூத்தவள். பாலகிருஷ்ணன் அப்பா
அம்மாவுடன் தங்கமுடியாமல் பங்களூருக்கு மாற்றலாகி
வந்துவிட்டான். மர்மியார் மாமனாரைப் பற்றித்
தாழ்த்திப் பேசமாட்டான், நல்ல வேலையில் இருப்பதே
ஆணுக்குத் தனிப்பட்ட தகுதியையும் கல்யாண அருகதை
யையும் ஏன், அழகையும் கூடக்கொடுக்கிறது. பணக்காரப்
பெண்ணாக இருந்தால் இன்னம் சிவப்பாக அழகாக
அவளுக்குக் கணவன் கிடைத்திருப்பான்

தெருவில், அவளுடன் நடந்து போகும்போது எதிரே
செல்பவர்கள் சாரதாவைக் கறைபட்ட நோக்கத்துடன்
பார்ப்பதைப் பெருமையாகவே எண்ணிக் கொண்டிருந்
திருக்கிறான். தனக்காகவென்று மற்றவரை ஈர்க்கும்
மனைவி! சாரதா பல்வேறு அலங்காரங்கள் செய்துகொள்
வதையும் ரசித்திருக்கிறான், டிரஸ்ஸிங்டேபிள் முன் உள்
பாவாடை ரவிக்கையில் நிற்பவளை நிதானமாக ரசித்து
அப்படியே இடுப்போடு சேர்த்து அணைத்துக்கொண்டி
ருக்கிறான். ஆனால் அவர்களிடையே உடல் தொடர்பு
அவள் இஷ்டத்துக்கு ஏற்பத்தான் நிகழ்ந்திருக்கிறது ஐந்து
வருஷங்களுக்குக் குழந்தை பெற்றுக்கொள்ள இஷ்ட
மில்லை என்று சொன்னாள். அதனால் சாரதா வேண்
டாம் என்றால் கட்டாயப்படுத்தியதில்லை. தற்செய

லாகத்தான் அவள் மாத்திரை சாப்பிடுகிறாள் என்பது தெரிந்தது. இருந்தும் படுக்கையில் கட்டுப்பாடாகத்தான் இருந்திருக்கிறாள். சில வேளைகளில் மிகவும் இஷ்டமாக இருந்தாலும், தொட்டவுடன் கூசுவாள். அதையெல்லாம் மதித்ததில்லை அவன். அதிகம் பேசமாட்டாள். பெற்றோரிடமிருந்து வரும் கடிதங்களைக் காட்டமாட்டாள். சம்பளத்திலிருந்து வீட்டுச் செலவுக்குத் தரும் பணத்தை எப்படிச் செலவு செய்கிறாள் என்று கணக்குக் கேட்பதில்லை. எதிர்பாராமல் புதிய டிரஸ் அணிந்து கொண்டிருக்கும்போது 'இது ஏது?' என்று கேட்டால் 'வாங்கினேன்' என்பாள். அதற்குமேல் கேட்டதில்லை கொடுத்த காசில் மிச்சம் பிடித்து வாங்கியிருப்பாள் என்பதைநிச்சயமாக நம்பினான். இப்போது நினைத்துப் பார்க்கும்போது கொடுத்த பணத்துக்கு அதிகமாகவேதான் அலங்காரச் சாதனங்கள் சேகரித்து வைத்திருப்பதாகப்பட்டது. தனியாக ஊருக்குப் போகத் தயங்க மாட்டாள் 'எனக்கு என்ன பயம்? தாலியைப் பார்த்தா யார்கிட்ட வரப் போறாங்க? நான் என்ன அப்படி அழகாவா இருக்கேன்?'

ஆபிஸ் நண்பர்கள் வந்தால் நன்றாக வரவேற்பாள். பாலகிருஷ்ணன் உள்ளே போகும்போது கூட அவர்களுடன் ஹாலில் சரளமாகப் பேசிக் கொண்டிருப்பாள். மார்பில் புடவை அடிக்கடி நழுவினாலும் திருத்திக் கொள்ள அவசரப் படமாட்டாள். அண்டை வீட்டில் காலேஜ் மாணவர்கள் பெயர் எல்லாம் தெரியும்.

அறிகுறிகள் இருந்திருக்கின்றன! சுபாவத்திலேயே அவளுக்கு ஆண் சல்லாபம் பிடித்து வந்திருக்கிறது. மற்றவர்கள் தன்னைப் பார்ப்பதில் பெருமை இருந்திருக்கிறது. இருந்தும் சாரதா துரோகம் செய்வாள் என்பதை அவனால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இதெல்லாம் அவள் சுபாவமே தவிர கல்யாணம் என்கிற லுவான இழையைத் துண்டிக்கும் அளவுக்கு அவளுக்குத் தைரியம் இருக்காது, கணவனைவிட்டால் அவளுக்குவேறு அந்தஸ்து



ஏதும்கிடையாது. அதைகலைக்கமாட்டாள். மோட்டார் சைக்கிளில் வருபவன் சும்மா பேசிக் கொண்டிருக்கத்தான் வந்திருக்கிறான். இதில் ஏதும் இன்றைய நாகரிக வெளிச் சத்தில் தப்பில்லைதான். நான் சுபாவுடன் பேசுவதில்லையா? அவன் யார், என்ன சினேகிதம் என்று தெரிந்து கொள்ளாமல் கற்பனைகள் செய்து கொள்ள வேண்டாம், பார்க்கலாம்.

இரண்டு நாட்களில் தெரிந்து விட்டது லே—அவுட்டில் பக்கத்துக் குறுக்குத் தெருவில் அவர்கள் வீட்டுக்குப் பின்புறம் காலிமனையில் அஸ்திவாரம் போட்டுப் புதுசாக வீடு கட்டிக் கொண்டிருக்கிறார்கள், காலை கனவில் மோட்டார் சைக்கிள் சப்தம் கேட்டு எழுந்து வாசலில் போய் எட்டிப் பார்த்தால் அந்த ஜாவா வீட்டுவாசலில் நிற்பது தெரிந்தது. வெயில் கண்ணாடியைக் கழற்றாமல் தன் ஹெல்மெட்டைக் கையில் வைத்துக் கொண்டு கதவைப் பார்ப்பவனை கவனித்தான். இவனைப் பார்த்ததும் லேசாகப் புன்னகைத்ததற்குப் பதிலளிக்கவில்லை. வாயிற்கதவைத் தட்டுமுன் திறந்தான்.

ஹாய்! யூ மஸ்ட் பி பாலகிருஷ்ணன் நாம் சந்தித்ததில்லை! மஞ்சுநாத்!' என்று கைநீட்டினான்.

பாலகிருஷ்ணன் கை குலுக்காமல் 'என்ன வேணும் உங்களுக்கு?' என்றான். இதற்குள் சாரதாவந்துவிட்டாள்

'வாங்க மஞ்சு! ஏங்க. இவர்தான் மஞ்சு—பின் பக்கத்து மனையில வீடு கட்டற காண்ட்ராக்டர். மஞ்சு இவர்தான் என் ஹஸ்பண்டு.'

'தெரியும். அறிமுகமாயிருச்சு.

பாலகிருஷ்ணன் பேசாமலிருக்க, சாரதா 'உக்காருங்க காஃபி கொண்டு வரேன்' என்றாள்.

'வேணடாம், உங்களுக்கு தாங்க்ஸ் சொல்லத்தான் வந்தேன். நாளைல இருந்து இன்ஸ்பெக்ட் பண்ண மாமா

வருவார். ரெயில்வேல புதுசா ஒரு ஸைடிங் காண்ட்ராக்ட்
எடுத்திருக்கேன். அதனால கொஞ்ச நாளைக்கு வர
முடியாது. சாரதா,கார்டிகன் அளவு செரியா இருந்ததா?'
'ஓ!'பாலகிருஷ்ணனைப் பார்த்து'மஞ்சு டில்லிலருந்து
ப்ரெண்ட்ஸ் கிட்ட சொல்லி ஒரு கார்டிகன் வாங்கி
வந்தார் எனக்கு' என்றாள்.
'ஸாருக்குக்கூட ஒரு ஸ்வெட்டர் சொல்லிர்றேனே!
என்ன சைஸு?'
'ஸ்வெட்டர் இருக்கு '
'பேசிக்கிட்டு இருங்க, காப்பி கொண்டுவரேன்' என்று
உள்ளே போனாள் பாலகிருஷ்ணன் அவனைப் பார்த்
தான் சாரதாவைவிட வயது குறைவானவனாகத்தான்
இருப்பான், நெற்றிக்குக் குறுக்கே லேசான வெட்டுக்காய
வடு இருந்தாலும் அதனால் முகத்துக்கு உக்கிரம் ஏற்பட
வில்லை. பெரிய தெற்றி. தலைமயிர் எண்ணெய்ப் பசை
யில்லாமல் ஷாம்புவால் அலைந்தது. அவனிடமிருந்து
லேசாக வெளிப்பட்ட செண்ட்டு வாசனை பரிச்சயமான
தாக இருந்தது, பற்களைக் காட்டத் தயங்குவான் போல
இருந்தது மீசையை மிகவும் கவனமாக அமைப்புக்குக்
கொண்டு வந்திருந்தான். உடல் கட்டாக இருந்தது
இளமை.
'மிஸஸ் பாலகிருஷ்ணன் ரொம்ப ஒதவிங்க. ரூஃப்
காஸ்டிங்போது தண்ணி நிறைய வேண்டியிருந்தது. மற்ற
வீட்டுக்காரங்கள்ளாம் கொடுக்க மறுத்துட்டாங்க. இவங்
களைக் கேட்டேன். தாராளமா எடுத்துக்கங்கன்னாங்க.
வெறும் தண்ணிதானே, அதனால என்ன போச்சுன்னு
அனுமதிச்சாங்க.' சாரதா உள்ளே கோப்பைகளுடன் வர,
மிஸஸ் பாலகிருஷ்ணன், உங்க ஹஸ்பண்டுகிட்ட சொல்
லிட்டேன். கன்ஸ்ட்ரகஷன் முடிஞ்சதும் உங்களுக்கு
வெஸ்ட் எண்டில ஒரு பார்ட்டி.'
'மஞ்சு நல்ல பையன். கல்யாணம் பண்ணிக்கத்தான்
இஷ்டமே இல்லை. என்ன மஞ்சு?'



'அதுக்கு எங்கம்மா டயம்? மேலும் ஸார் மாதிரி
எல்லாரும் லக்கியா இருக்க முடியுமா?' என்று பாலகிருஷ்
ணனைப் பார்த்து விகற்பமில்லாமல் சிரித்தான் மஞ்சு,
'அன்னிக்கு நான் குறிப்பு எழுதி வெச்சிருந்தேன், பாத்
திங்களா? என்னால உங்களைப் பார்த்துக் கொடுக்க
முடியலை ட்யூபை வெளியவே வெச்சுட்டுப் போயிட்
டேன். கதவு பூட்டியிருந்தது. சினிமா எப்படி இருந்தது?
என் சிஸ்டர் சொன்னா—நல்லாவே இருந்ததாம். ஷபானா
உங்களுக்குப் பிடிக்குமாமே?'
'சாரதா இயல்பாக 'மஞ்சுபாவம். தங்கை கூட சினிமா
போறதுக்கு ரெண்டு டிக்கெட் வாங்கி வெச்சிருந்தான்.
கடைசில எங்கிட்ட கொடுத்துட்டுப் போயிட்டான்.
பிளீ!'
'தினப்படி உங்க வீட்டு வாசல்லதான் பைக்கை பார்க்
பண்றேன் ஸார். அதுக்கு ரெண்ட் வசூல் பண்ணனும்
நீங்க! ஒரு நா ராத்திரி வரைக்கும் கூட பார்க் பண்ணி
ருந்தேன். மிஸஸ் பாலகிருஷ்ணன், தாங்க்ஸ் ஃபர் எவ்ரி
திங் அப்புறம் பார்க்கலாம்.,
அவன் போனதும் பாலகிருஷ்ணன் யோசித்தான்
என்ன பைத்தியக்காரன் நான்! வீடு கட்ட வந்திருக்கும்
காண்ட்ராக்ட்காரனுக்கு நீரும் நிழலும் கொடுத்திருக்
கிறாள் இதைப்போய்ப் பெரிசாக எடுத்துக்கொண்டு...
'பல் தேய்க்கலியா?'
அவளை அப்படியே வாரியெடுத்துத் தூக்கமுடியாமல்
தூக்கிக் கழுத்தில் முத்தமிட்டான்.
'சேச்சே விடுங்க. முள்ளு தாடி குத்துது '
வாரம் முழுவதும் அவளுடன் புதிதாகக் கல்யாணம்
பண்ணிக் கொண்டவனைப் போல பழகினான். அனாவசி
யமாக சந்தேகப்பட்டதற்கு நஷ்ட ஈடு செய்யும் விதத்தில்
வா சினிமாவுக்குப் போகலாம், கச்சேரிக்குப் போகலாம்
என்று சந்தோஷப்படுத்த முயன்றான். அவளுக்குச்

சந்தோஷம்தான். சில சலுகைகளை அனுமதித்நாள். அவனை மூச்சுத் திணறும் வரை இறுக்கித் தனக்குள் முழு வதும் ஒருமுறை நிரப்பிக் கொண்டாள். 'ரொம்ப நாளாச்சு இந்த மாதிரி' என்றாள்,

பெண்ணின் உடல்தான் என்ன பாக்கியம், எத்தனை சாத்தியக் கூறுகள்! எத்தனை உஷ்ணங்கள், எத்தனை தாகங்கள், எத்தனை பிடிப்புகள்!

மே மாதம் அவர்களுடைய திருமண நாள். தங்கத்தில் 'எஸ்' என்று இனியஷியல் போட்ட மோதிரம் ஒன்று வாங்கி இருந்தான் சர்ப்ரைஸாக பரிசளிக்கலாம் என்று ஆபிஸில் தீர்மானித்தான். சுபாவிடம் அழகாக பூப்பூ வாக 'ஹாப்பி அனிவர்ஸரி' என்று ஒரு காகிதத்தில் டைப் அடித்து வாங்கிக் கொண்டான். 'கங்ராஜுலே ஷன்ஸ் ஸார்.'

'தாங்க்யூ சுபா இன்னிக்கு கல்யாணமாயி நாலாவது வருஷம் துவங்கறது.'

'ரொம்ப சந்தோஷம் ஸார். கொஞ்ச நாளாவே சியர் ஃபுல்லா இருக்கிங்க'

ஐ ஹவ் எ லவ்லி.·. பெய்த் .·.புல் ஒவ்.·.ப்!'

'பின்னதுதான் ரொம்ப முக்கியம் ஸார்!'

டைரக்டர் வந்தா சொல்லிரு. அரை நாள் லீவில் போறேன். அவளை அழைச்சுக்கிட்டு சினிமாக்கு போகப் போறேன்.'

அவங்க என்ன பிரஸண்ட் குடுக்கப் போறாங்க உங்களுக்கு?'

'நாளைக்குச் சொல்றேன்.'

வீட்டுக்கு வந்து சேர்ந்தபோது ஓசைப்படாமல் உள்ளே நுழைந்து அவள் கண்ணைப் பொத்தி ஆச்சரியப் படுத்த எண்ணித தன்னுடைய சாவியால் டோர் லாட்சை ஸன்னமாகத் திறந்தான். மெல்ல அடியெடுத்து



நடந்தான். பெட்ரூமில் லேசாகத் திரை ஆடிக்கொண்டி ருந்தது. பேச்சுக் குரல்கேட்டது. போயிடு போயிடு சீக்கிரம் போயிடு.'

'போலாம், போலாம். வரத்துக்கு நேரமாகும்னு சொன்னியே...இது பாத்தியா? இது எப்படி?'

அப்படியே உறைந்து நின்றான்.

'மஞ்சு எனக்குப் பயமா இருக்குது.'

'என்ன பயம்?'

'தெரிஞ்சுரும்னுட்டு. ஏற்கனவே சந்தேகப்படறா ருன்னு நினைக்கிறேன்.'

'கவலைப்படாத என்ன சாமர்த்தியமா அன்னைக்கு எல்லாத்துக்கும் எக்ஸ்பிளனேஷன் கொடுத்தேன். நம்பி னாரா இல்லையா?'

'அப்படின்னுதான் நினைக்கிறேன். மஞ்சு எனக்கு ரொம்ப வெக்கமா இருக்குது.'

'கண்ணை மூடிக்கிடு.'

'வாசக்கதவு உள்பக்கம் தாப்பா போட்டியா?'

'யாரு வரப் போறாங்க?'

திரை லேசாக ஃபான் காற்றால் விலக, படுக்கையின் அடிவாரத்தில் சாரதாவின் உடைகள் ஒவ்வொன்றாக விழுவதைப் பார்த்தான்.

'வேண்டாம்மா மஞ்சு, இதெல்லாம் தப்பு.

'தப்பிச்சுட்டா எதுவுமே தப்பில்லை சாரு'

பாலகிருஷ்ணனுக்கு ஒரு கணம் வேடிக்கை பார்க்கும் ஆர்வம் மற்ற உணர்ச்சிகளை மீற நிலைமையின் தீவி ரதை, அவன் வாழ்வில் அதற்கு உண்டான அர்த்தத்தை முற்றும் உணர்ந்து கொள்ளுமுன் அந்த அரை குறைக் காட்சியைக் காண்பதில் ஒரு விதமான ஆறுதல், ஏன், குரூரமான சந்தோஷம் கூட இருந்தது. விஷயம் தெரிந்து

விட்டது! சந்தேகத்துக்கும் மன அலைச்சலுக்கும் முற்றுப் புள்ளி! இனி அவன் செயல்பட வேண்டும். கால்கள் பின்னிக் கொள்வதைப் பார்த்தான். அவன் கை அவள் உடலில் அலைவதைப் பார்த்தான். உடனே திரையை விலக்கிவிட்டு இருவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்த மனத்தில் ஒரு அடி எடுத்து வைத்தான் செயல்பாட்டில் இல்லை

பாலகிருஷ்ணன் சப்தம் போடாமல் அந்த இடத்தை விட்டு விலகிக் கதவை மிக மெல்லச் சார்த்திவிட்டு லாட்ச் பொருந்தும் சப்தம்கூட அவர்களுக்குக் கேட்காமல் தன் வீட்டை விட்டு விலகிச் சென்றான்.

மோட்டார் சைக்கிள் காத்திருந்தது. மணற் கும்பலில் சின்னப் பிள்ளைகள் பொய் வீடு கட்டி ஈரமாக்கிக் குகை அமைத்து உள்ளே மறைந்த கை தொடுவதில் சந்தோஷம் பெற்றுக் கொண்டிருந்தார்கள். பஸ் நிலையத்தில் கணவனும் மனைவியும் ஒத்துழைத்துக் கைக்குழந்தையைச் சிரிக்கவைத்துக் கொண்டிருந்தார்கள் பாலகிருஷ்ணன் எதோ பஸ் வந்து எதோ டிக்கட் வாங்கி எப்படி நடந்து எங்கே சென்றான்? தான் ஒரு கோவிலில் இருப்பதைக் கண்டான். குன்றின்மேல் குளிர்காற்று வீசிக்கொண்டிருக்கக் கல்லில் பட்டையாகச் செதுக்கின பெரிய அனுமார் யாருக்கோ சஞ்சீவி தூக்கிக் கொண்டிருந்தார். கட்டடத்திற்கு நிதி கேட்டுப் பிற்காலத்தில் வரப்போகிற கோபுரத்தை மரத்தில் செய்து கண்ணாடிப் பெட்டிக்குள் வைத்திருந்தார்கள். சூடம் காற்றில் துடித்தது. பாலகிருஷ்ணனை மணி கேட்டார்கள்.

கடைசிப் பக்தரும் விலகி, சீய் சீய் என்ற நைவேத்திய சிதறல்களைப் பெருக்கிக் கொண்டிருக்கும்வரை பாறையிலேயே உட்கார்ந்திருந்தான்.

பாலகிருஷ்ணன் மனத்தில் கடிதம் எழுதினான்.

அன்புள்ள...வேண்டாம், சாரதா போதும்.



'சாரதா!'

இன்றைக்கு நான் பார்த்த காட்சி என்னை மிகவும் அதிர்ச்சிக்குள்ளாக்கிவிட்டது. இத்தனை பார்த்து விட்ட பின்னரும் நாமிருவரும் ஒரே வீட்டில்...

கடிதம் பாதியில் அறுந்துபோய்விட கன்னத்தில் கை வைத்து அழுத்திக் கொண்டு, தூரத்து லாரி டிராபிக் நகர்வதைக் கவனித்தான், அவனை அறியாமல் அவன் கன்னங்களின் வழியே கண்ணீர்த் துளிகள் உருண்டன. சாரதாவின் கால்களும் அதைவிடக் கருப்பான மஞ்சுநாதின் கால்களும் பிணைந்து கொண்டன.

'பேசாம வீட்டுக்குத் துரத்திடலாம்' என்றான் காற்றிடம்.

'வெரட்டிட்டா? அதான் தண்டனையா? இல்லை அவளுடைய பாவத்துக்கு உடத்தையா? விரட்டிட்டா அவனோட இதே ஊரில வாழ மாட்டான்னு என்ன நிச்சயம்?'

'என்னப்பா உன் ஒய்.' ப் ராஜாஜி நகர்ல ஒரு வீட்டு மாடியில புடவை காயப்போட்டு இருந்ததைப் பார்த்தனே—'

'எல்லோருக்கும் ஒரு நாள் தெரிஞ்சுரும்.'

**தப்பிச்சுட்டா தப்பில்லை சாரு!**

'ஸார் தேவஸ்தானம் மூடப் போறது.'

'எல்லாருக்கும் ஒரு நாள் தெரிஞ்சு போயிரும்யா' என்றான்.

'என்ன தெரியப் போறது?'

'உனக்கு நான் என்ன துரோகம் செஞ்சேன்? எதுக்காக மத்தவனுக்கும் படுக்கை விரிக்கிறே? உனக்கு வாழ்வு தந்து சோறு போட்டு சமூகத்திலே ஒரு அந்தஸ்து கொடுத்து. நீ செய்யற கைம்மாறு இதானா?'

'பாவம் என்ன கவலையோ! அண்ணா எழுந்திரு வீட்டுக்குப் போ! அனுமார் உன்னைக் காப்பாத்துவார். இந்தா பிரசாதம்!'

'நான் என்ன அப்படிப்பட்ட ஏமாளியா எனக்கு மூளையே கிடையாதா?'

'அண்ணா, கிளம்பறியா? கோவில் மூடணும்.'

பாப்பா பாப்பா என்று கோவில் அர்ச்சகர்கள் விலகிச் செல்லப்படியிலேயே படுத்தான். குளிரும் பூச்சிகளும் அவன் சிந்தனையின் உக்கிரத்தைத் தொந்தரவு செய்ய வில்லை. பாதி மயக்கம் போலவோ அல்லது தூக்கம் போலவோ கண் அயர்ந்த போது அவன் கை விரல்கள் விரியப் படிகளில் அந்தத் தங்கமோதிரம் தத்தித் தத்தி உருண்டது

சாலை அவனுக்குத் தெளிவாக இருந்தது. நேராக வீட்டுக்குப்போய் மனைவியைக் கேட்டுவிடப்போகிறான். இனிமேல் பொய் சொல்லிப் பிரயாசனமில்லை. பார்த்து விட்டேன். இதற்கு நீ என்ன பதில் சொல்கிறாய்?

கதவைத் திறந்ததும் அவனைக் கடுமையாகப் பார்த்தாள், 'எங்க போயிட்டிங்க என்ன உடம்பெல்லாம் புழுதி?'

பதில் சொல்லாமல் நாற்காலியில் போய் உட்கார்ந்தான், 'உங்களுக்கு ஆபீஸ்ல வேலையோ அல்லது வேறு ஜோலியோ இருந்தா தகவல் சொல்லக் கூடாதா? ராத்திரி பூரா கவலைல தூங்கலே இல்லை! இந்த மாதிரி நீங்க நடந்துக்கிட்டதே கிடையாது. போன்பண்ணுவனா? யாருக்குப் போன் பண்ணுவேன்? அப்படியே வயித்தைக் கலக்கிடுச்சு!'

'சாரதா, உன்னோட பேசணும்.'

பாதியில் நிறுத்தி அவனைக் கூர்ந்து பார்த்தாள்.

'பேசறதெல்லாம் அப்பொறம் வெச்சுக்கலாம், முதல்ல காப்பி.'



'உக்காரு! பேசணும்.'

'என்ன பேசணும்னாலும் காப்பி சாப்பிட்டதுக்கு அப்புறம்தான். ஒரு நிமிஷத்தில வரேன்' என்றாள்.

வெறுப்பாக இருந்தது, விஷயத்தை உடனே ஆரம்பிக்காமல் பேசணும், என்ன பேசணும்? அவளை அப்படியே தலை மயிரால் பிடித்துக் கலைத்துக் கன்னம் கன்னமாய் இழைக்க வேண்டும் போலிருந்தது. இன்னும் எத்தனை ஆணவம்! தன்னம்பிக்கை! வெய்ட் சாரதா! நான் சொல்வதைக் கேட்கும் வரை காத்திரு. மேசைமேல் செய்தித்தாளிருந்தது. அதை அஸ்வாரஸ்யமாகப் பிரித்தான்.

**சோப்புக்காரனின் மூன்றாவது கொலை!**

**போலீஸ் எச்சரிக்கை!**

அந்தச் செய்திக்கும் தனக்கும் ஏதோ ஒரு ரத்த சம்பந்தம் இருப்பது போலப்பட்டது.

படித்தான்.

பங்களூர் துப்பறியும் போலீஸார் கடந்த ஒன்றரை மாதங்களாக ஒரே முறையில் செய்யப்பட்ட மூன்று கொலைகளை விசாரித்துக் கொண்டிருக்கிறார்கள்.

கொலை செய்யப்பட்டவர்கள் மூவரும் மணமான நடுத்தர வயதுப் பெண்கள். மூவரும் கழுத்து நெரிக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். கொலை செய்தவன் பொருள் லாபத்துக்குச் செய்பவனாகத் தெரியவில்லை அடுத்தடுத்துச் செய்யப்பட்ட மூன்று கொலைகளிலும் ஒரு குண்டூசி கூடக் காணாமற் போகவில்லை. பரிதாபத்துக்குரிய அந்த மனைவிகளிடம் முதல் பரிச்சயத்தில் அவன் சாமர்த்தியம் காட்டியிருக்கிறான். சோப்புத்தூள் இலவச சாம்பிள் கொடுக்கும் விற்பனைக்காரன் போல் வந்து கதவு திறந்ததும் தாக்கியிருப்பதாகத் தெரிகிறது.

போலீஸ் உதவி கமிஷனர் பொதுமக்களுக்கு—குறிப்பாக வீட்டில் தனியாக இருக்கும் மனைவிகளுக்கு

எச்சரிக்கை விடுத்திருக்கிறார். அன்னியருக்குக் கதவைத் திறக்காதீர்கள். தனியாக இருப்பதைத் தவிர்க்க முயற்சி செய்யுங்கள். ஏராளமான தடயங்கள் இருப்பதால் சீக்கிரமே குற்றவாளியைக் கண்டுபிடிப்பதில சிரமம் இருக்காது என்று...

சாரதா காப்பி கொண்டு வந்து மேசைமேல் வைத்துவிட்டு 'இப்ப சொல்லுங்க, எம்மேல என்ன கோபம்? ஏன் வீட்டுக்கு வரலை?' என்றாள்.

'ஆபீஸ்ல வேலை' என்றான்.

'ராத்திரி பூராவுமா'

'லேட்டாச்சு. அங்கயே தூங்கிட்டேன்.'

'என்னவோ பேசணும்னிங்களே...' அவள் கண்கள் அவனைத் துளைத்தன.

'இல்லை! ஒண்ணுமில்லை! பேசவேண்டாம்' என்று எழுந்து போனான். குளிக்கப் போனான். ஒருகணம் அவளைத் திரும்பிப் பார்த்தான். புன்னகைத்தாள் அந்தப் புன்னகையில் அத்தனை தன்னம்பிக்கை. இவன் ஏமாளி, அப்பாவி. என்ன சொன்னாலும் நம்பி விடுவான் நான் என்ன வேண்டுமெனினும் செய்யலாம் நேராகப் படுக்கையில் என்னைப் பார்த்தாலே சமாளிக்கும் திறமை எனக்கு இருக்கிறது என்று கோடி காட்டுவதுபோல ஒரு அலட்சியப் புன்னகை,

பெண்ணே உனக்கு ஒரு ஆச்சரியம் காத்திருக்கிறது.

செய்தியைப் படிக்க ஆரம்பித்தபோதே அவனுள் அந்தத் தீர்மானம் உருவாகிவிட்டதா? தக்க சமயததில் அந்தச் செய்தி எப்படி வந்து முளைத்தது? ஏதோ விதி போல, ஞானோதயம்போல, பாலகிருஷ்ணனுக்குத்தெளிவாகிவிட்டது. மரணம்! அதுதான் தண்டனை.

அவளை நான் கொல்லப் போகிறேன். அதற்கு உபாயம் கிடைத்துவிட்டது. சோப்புக்காரனின் நாளாவது கொலை.



அவளைக் கேட்டுப் பொய் சொல்லி, இழுத்தடித்து சந்தி சிரித்து, கோர்ட்டுக்குப் போய், விவாகரத்து வாங்கி இம்மாதிரி இழுபறிக்குப் பதிலாக முளையிலேயே கொய்து விடலாம்!

சுலபம்

சுபம்.

ஒன்றரை மாதச் செய்தித் தாள்களையெல்லாம் சேகரித்து அந்த வினோதக் குற்றவாளியைத் தொடர்ந்தான், முதல் செய்தி—

'ஹவுஸ்வை.்.ப் ப்ருட்டலி மர்டர்ட்' என்பது பிப்ரவரி இருபத்தாறாம் தேதி வந்திருந்தது சாந்தம்மா இரண்டாவது மாடி .்.ப்ளாட்டில் இறந்திருக்கிறாள். வாசல் கதவு திறந்தவளிடம் ஒரு சோப்புத்தூள் டப்பாவைக் கொடுத்து விட்டு வாயிற் படியிலேயே அவள் மண்டையில் தாக்கப் படுகிறாள்.

சோப்புத் தூள் கம்பெனிக்காரர்கள் அவ்வாறு எந்த விதமான திட்டமும் இல்லை. யாரையும் அம்மாதிரி வீட்டுக்கு விடு இலவச சாம்பிள்கள் கொடுக்க அனுப்பவில்லை எங்கள் சோப்புத்தூளுக்கு இந்த மாதிரி விளம்பரங்கள் எல்லாம் தேவையில்லை—என்று அறிவிக்கிறார்கள்.

குற்றவாளி நடுத்தர வயதினன் என்பதும் சற்றே மாறு கண்ணாக இருந்தவன் என்றும்தெரிகிறது.

இரண்டாவது சம்பவம் கண்டோன்மெண்ட் கோல்ஸ் ரோடு பகுதியில்.

பதினெட்டு நாட்களுக்கு முன் இந்திரா நகரில் நடந்த கொலைக்கும் இதற்கும் நிறைய ஒற்றுமைகள் இருப்பதாகப் போலீஸ் நம்புகிறது. இறந்து போன துரதிருஷ்டக்காரிகள் இருவரும் திருமணமானவர்கள்.

கொலை நடந்தது மத்தியானம் இரண்டரை மணி இரண்டிலுமே.

கொலை செய்ய வந்தவன் சுற்றுப் புறத்தில் இரண்டு
மூன்று வீடுகளில் சோப்புத் தூள் ஸாம்பிள்கள் கொடுத்
திருக்கிறான்—முன் சம்பவம் போலவே!

அவனுடைய அங்க அடையாளங்கள் ஒத்துப்
போகிறது மாறுகண்!

கொலை செய்த முறையும் ஒன்றே! மயக்கம் வருமள
வுக்கு மண்டையில் தாக்கப்பட்டு அதன் பின் கயிற்றால்
கழுத்தில் நெரிக்கப்பட்டிருக்கின்றனர்.

மூன்றாவது ஜெய நகர்.

ஒரு சிறு சீட்டில் வேகமாகக் குறிப்புகள் எழுதிக்
கொண்டிருக்கும்போது மெலிதாகப் பவுடர்வாசனைவீசத்
துணுக்குற்று நிமிர்ந்தான். சுபா.

'எத்தனை தடவை சொல்லியிருக்கேன். உள்ளவர்
றப்ப சொல்லிட்டு வான்னு. செய்தித்தாள்களை அவ
சரமாக டிராயருக்குள் செலுத்தி மூடினான். என்ன?'

'மன்னிக்கணும். நீங்களே சொல்லியிருக்கிங்க அர்
ஜண்ட் பேப்பர்னா எப்ப வேணா வரலாம்னு' உண்
மையை இப்படிச் சுட்டிக் காட்டுவது அவனுக்குப் பிடிக்க
வில்லை.

சுபா, ரொம்ப எதிர்த்துப் பேசறே.

அவள் மௌனமாக இருக்க 'உன்னை வேறசெக்ஷன்ல
போட்டுர சிபாரிசு பண்ணப் போறேன். கார்ப்பரேட்
ஆபிஸ் பானர்ஜிகிட்ட'

'உங்க இஷ்டம் ஸார்.' அவள் உதடுகள் இறுகின.

'ஒரு செக்ரட்ரிக்கு உண்டான டெம்பரமெண்ட்
இல்லை உங்கிட்ட.'

அவனை நிமிர்ந்து பார்த்தாள், 'ஸார், உங்கபர்ஸனல்
லைப்.·.ல ஏதோ உங்களுக்கு டிஸ்டர்பன்ஸ் இருக்குன்னு
நினைக்கிறேன். அதுனால உங்க கோபதாபங்களை எம்



மேல் காட்டறிங்க. எந்த விதத்தில் நான் செக்ரட்ரிக்கு
உண்டான கடமைகளைச் செய்யலை? எதாவது ஒரு
இன்ஸ்டன்ஸ் சொல்லுங்க! சில நாள் சுமுகமா இருக்
கிங்க. சில நாள் எரிஞ்சு விழறிங்க, என்னை எங்க
வேணா ட்ரான்ஸ்பர் பண்ண உரிமை இருக்கு உங்களுக்கு
இதை ஒரு பனிஷ்மெண்ட்டுன்னு நினைச்சிங்கன்னா
எதுக்கு ஸார் பனிஷ்மெண்ட்? தப்புசெய்யாததுக்கு பனிஷ்
மெண்ட்டா? நான் என்ன ஸார் செஞ்சேன்?'

இப்போது அவள் கண்களில் லேசாகக் கண்ணீர்,
சட்டென்று கைக்குட்டையால் துடைத்துக்கொண்டாள்.
'சரி போ' என்றான்.

'சரின்னா என்னை டிரான்ஸ்பர் பண்ணப் போறிங்
களா?'

'யோசிக்கணும்' என்றான்.

'தாங்க்ஸ். நீங்க கூப்பிடாம இங்க இனி வரதில்லை.
எதுக்கு வம்பு?'

'யூ மே கோ.'

அவள் போனதும் தப்பே இல்லாததுக்கு பனிஷ்
மெண்டா? நான் என்ன செஞ்சேன்?'

தப்பித்தால் தப்பில்லை! குற்றத்தின் ஒவ்வொரு பகுதி
யையும் விரிவாக யோசித்துச் செய்தால் தப்பிக்கலாம்.

எப்படிப் பாலகிருஷ்ணன் என்கிற உபத்திரமில்லாத
பிரஜைக்கு இத்தனை வைராக்கியம் வந்தது? எத்தனை
நாள் வைராக்கியம் தாங்கும்?

செய்யத்தான் வேண்டுமா? தடுமாற்றம் ஏற்படும்
போதெல்லாம் அவன் மனத்தில் அந்தகாட்சிசஞ்சலிக்கும்.
கால்கள்! பின்னிப் பிணைந்த கால்கள்! அவன் அவன்
மேல் லேசாக அசைவது! எனது படுக்கையில் திருமண
நாளன்று! என்ன துரோகம்!

வீட்டுக்குப் போனதும் கோட்டைக் கழற்றிவிட்டு
'மஞ்சுநாத் வரலையா?' என்றான்.

'மத்தியானம் வந்திருந்தான், காண்ட்ராக்ட் விஷயமா உங்களை விசாரிச்சான். உங்களை மீட் பண்ணணுமாம்.'

'என்னவாம்?'

'பர்ஸனலா எதோவாம்.'

'அவனுக்குக் கல்யாணம் நிச்சயமாயிருச்சா.'

'பாத்துட்டு இருக்காங்களாம்.'

'உன் மாதிரி பொண் வேணுமாம்'

சிரித்தாள்

'உன் மாதிரி பொண்ணு கிடைக்கிறது கஷ்டம்.'

'பரிகாசம் பண்ணாதிங்க.'

'அழகு பண்பு விசுவாசம் கற்பு எல்லாம் ஒரு சேர உங்கிட்ட இருக்கு சாரு'

'நான் ஒண்ணும் அத்தனை நல்லவ இல்லைங்க.'

'நீ ரொம்ப நல்லவ சாரு. என்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டதே உன்னுடைய நல்ல தனத்தாலதானே? உனக்கு எத்தனையோ அழகான மாப்பிள்ளைங்க கிடைச்சிருப்பாங்க.

'கல்யாணமாயி மூணு வருசம் கழிச்சுப் பேசற பேச்சைப் பாரு.'

'குழந்தைகூட இல்லை.'

சாரதா அவனை நிமிர்ந்து பார்த்தாள். 'என்னவோ தத்துப் பித்துன்னு பேசிக்கிட்டு வேண்டாம்னு தான வெச்சுருக்கோம். குழந்தை பெத்துக்கறது ரொம்ப சுலபம்! மாத்திரையை நிறுத்தினா குழந்தை! எனக்கு நீங்கதான் குழந்தை! அவன் கையை எடுத்துக் கன்னத்தில் ஒத்திக் கொண்டாள், திகைப்பாக இருந்தது, அந்தச் செயலில் இருந்த இயல்பும் நளினமும் ஒருகணம் துரோகத்தையும் சோரத்தையும் மறக்க வைத்தன.



ஜாக்கிரதை! செண்ட்டிமெண்டே கூடாது. அவளுடன் ரொம்பக் கொஞ்சினால் மனம் மாற வைத்து விடுவாள். டேஞ்சர்!

இரவு படுக்கையில் படிப்பு விளக்கைப் பொருத்திக் கொண்டான் வீட்டு வேலைகளை முடித்துக் கொண்டு கவுன் அணிந்து கொண்டு அருகில் அவனுடன் ஒட்டி உரசிக் கொண்டு படுத்தாள்,

பாலகிருஷ்ணன் புத்தகத்தில் ஆழ்ந்தான்.

பரிவுடன் அவன் கழுத்தைத் தடவினான். இந்த இடத்தில் இறுக்கினால் சுலபம். இங்கே எலும்பு தடுக்கும். அனாக்ஸியா என்றால் என்ன? ஹையாய்டு எலும்பு எங்கே இருக்கிறது? மெல்ல மெல்ல விரல்களால் வருட 'ஹூம் குறுகுறுங்குது' என்றாள்.

செய்தித் தாளில் மூன்றாவது தலையங்கத்தில் போலீஸைச் சாடி ஒரு பத்தி எழுதியிருந்தது. 'மக்களின் மனத்தில் பீதி பரவியிருக்கும் இந்த வேளையில் போலீஸார் சீக்கிரமே குற்றவாளியைக் கண்டுபிடிக்கவில்லையெனில் சில அப்பாவிகள் அடி படச் சந்தர்ப்பம் இருக்கிறது என்பதைப் பற்பல சம்பவங்கள் நிரூபித்திருக்கின்றன. போலீஸின் முதற்கடமை மக்களின் பத்திரம்; அவர்கள் மனத்தில் இருக்கும் பீதியை நீக்குவது, அதற்கு முதற் காரியமாகச் சோப்புக் கொலைகாரனைப் பிடித்தாக வேண்டும். இன்னும் சில தினங்கள் தான் என்று கமிஷனர் அறிக்கைகள் விட்டுப் பிரயோசனமில்லை. உடனே அவன் பிடிபட வேண்டும்.'

பிடிபட வேண்டாம் என்று பிரார்த்தித்துக் கொண்டான். தன்னுடைய திட்டம் செயல்படும் வரையில் பிடிபட வேண்டாம்.'

'சாரதா, போன வருஷம் க்ளவ்ஸ் வாங்கினேனே ஞாபகமிருக்கா?'

'ஆமா, அதுக்கென்ன இப்ப வெயில் காலத்தில்?'

'அதை எங்க வெச்சிருக்கேன்னு கேட்டேன்.'

'உங்க பெட்டிக்குள்ளதான் இருக்கு. எதுக்கு?'

'ஆபீஸ்ல ரிக்ரியேஷன் கிளப்பில டிராமா போடறாங்க. டயல் எம்.ஃபர மர்டர். அதுக்குத் தேவை.'

'நீங்க ஆக்ட் பண்ணறிங்களா என்ன?'

'இல்லை, நடிக்கப் போறதில்லை.'

'கிளவ்ஸ் தரன். இப்பவே வேணுமா?'

'அவசரமில்லை. எங்க உன் ப்ரெண்டு மஞ்சு'

'ப்ரெண்டா? என்ன சொல்றிங்க?'

'காண்ட்ராக்டரைச் சொன்னேன்.'

'மைஸூர் போயிருக்கான் பொண்ணு பார்க்கறதுக்கு. எட்டுப் பொண்ணு பார்த்தாச்சு. எதும் அவனுக்குச் சரிப்பட்டு வரலை,'

'அவன் ஒண்ணும் கல்யாணம் பண்ணிக்கிற சாதியா தெரியலை!'

'ஏன்?'

'உம் மாதிரிப் பொண்ணு வேணும்னா எங்க கிடைக்கும்?'

'கிண்டலா?'

'சேச்சே, சீரியஸ்! உம் மாதிரிப் பொண்ணு கெடைப்பாளா? ரொம்ப ரேர்! சாரதா, நான் ரொம்ப அதிர்ஷ்டம் பண்ணவன்' என்று அவளை மார்புடன் சேர்த்து அணைத்துக் கொண்டான்,

'ரொம்பத்தான் கொஞ்சாதீங்க...மூச்சுத் திணறுது. விடுங்க...விடுங்க... அய்யோ என்னங்க இது?'



ஜாக்கிரதை! அவனுள் கிளர்ந்த மூர்க்கம் ஒரு கணம் அவனுடைய கட்டுப்பாட்டுக்கு அப்பால் தவறவிருந்தது. ஜாக்கிரதை! ஜாக்கிரதை! இதுவல்ல சமயம்!

அவளை விடுவித்தான். சென்றவளின் திசையைப் பார்த்துக் கொண்டிருந்தான் ஜாக்கிரதையாகத் தாக்க வேண்டும். மண்டை உடையக்கூடாது. எனக்கு ரத்தம் வேண்டாம் ரத்தம் வந்தால் சிக்கல். வலுவாக ஒரு அடி, மயக்கம். அப்புறம் கயிறு. இதுதான் முறை. அதையே அப்படியே நடத்தவேண்டும்.

சோப்புக்கொலைகாரன்!

பாலகிருஷ்ணன் வெளியூர் சென்றிருக்கும் போது அந்தச் சோப்புக் கொலைகாரன் வந்து அவளைக்கொன்று விட்டுப் போயிருப்பதாகக் காட்டவேண்டும்.

அதற்குள் அவன் அகப்பட்டு விடக்கூடாது.

அதற்குள் பாலகிருஷ்ணன் எல்லா விதத்திலும் தயாராக வேண்டும்.

ஆபீஸ் அறையில் வெளியே பேச்சுக் குரல் கேட்டது. 'சுபா இங்க வா'

அவள் வந்ததும் 'சுபா! ஆபீஸ் சமயத்தில் கண்டவங்களோட பேசிக்கிட்டு இருக்கிறதுன்னா...'

சுபா கோபப்பட்டு வெளியே சென்று ஒரு இளைஞனை அழைத்து வந்தாள். 'கண்டவங்க இல்லை ஸார். என் அண்ணன். போலீஸ்ல இருக்கான்.'

இதை ஒரு எச்சரிக்கை போலவே சொன்னாள் போலீஸ் என்றதும் பாலகிருஷ்ணனுக்கு சுவாரஸ்யம் ஏற்பட்டு 'அப்படியா? போலீஸ்ல என்ன வேலை?' என்றான்.

'கமிஷனர் ஆபீஸ் கிளார்க் ஸார்.'

'என்னய்யா போலீஸ்! அந்தச் சோப்புக் கொலைகாரனைக் கண்டுபிடிக்க முடியலை.'

'கண்டுபிடிச்சுருவாங்க ஸார். ஒருநாள் பூரா டிஸிகூட இருந்தேன். எனக்கு முழு விவரமும் தெரியும்.'

'எப்ப கண்டுபிடிப்பாங்களோ தெரியலை.'

'புதுசா ஒரு தியரி வெச்சிருக்காங்க ஸார், அவன் செய்த மூன்று கொலைகளுக்கும் உள்ள ஒற்றுமைகளைப் பார்த்திருக்காங்க. மூணிலையும் செத்துப் போனது கல்யாணமான பெண்கள். ஆல் இண்டியா சைக்கியாட்ரிஸ்ட்டைக்கூடக் கேட்டிருக்காங்க. பெண்கள் மேல வெறுப்புள்ள ஒரு ஆள் செய்யற கொலைங்களாம் அப்புறம், கிட்ட வாங்க, யார்கிட்டயும் சொல்லாதிங்க!

'என்ன?'

'சரியா இரண்டு நாளில் இன்னொரு கொலைசெய்ய முயற்சிக்கப் போறான்! இது புரளியாய்டும்னு யார்கிட்டயும் சொல்ல வேண்டாம்னு சொல்லியிருக்காரு.'

'இவர்கிட்ட சொல்லிட்டியே அண்ணா'.

'இவர் உம்பாள்! தங்கமானவர். விஷயத்தைப் பரப்பாதிருந்திங்கன்னா மேற்கொண்டு சொல்றேன்.'

'இல்லை, சொல்லுங்க.'

'ஒரு கொலைக்கும் மற்றொரு கொலைக்கும் உண்டான இடைவெளியில ஒரு 'பாட்டர்ன்' இருக்கிறதைக் கவனிச்சிருக்காங்க, சரியா பதினெட்டு நாள்! கொலை தேர்ந்தெடுத்த இடங்கள்ளயும் ஒரு பாட்டர்ன் இருக்கு! என்னென்னவோ தியரி; ஹாபிட்டுங்கறாங்க, அடுதத கொலை நார்த் பங்களூர்ல நடந்தாலும் நடக்கும்ங்கறாங்க. அதாவது உங்க ஏரியாவில.'

'க்ரேஸி' என்று சிரித்தான் பாலகிருஷ்ணன்.



'ஆளே க்ரேஸியா இருந்தா இந்த மாதிரி க்ளுவெல்லாம் கொடுத்துக்கிட்டே போவானாம் அதனால உங்க ஏரியாவில நடந்தாலும் நடக்கும். ஜாக்கிரதையாவே இருங்க.'

'தாங்க்ஸ்.'

'வீடு வீடா இன்ஸ்ட்ரக்ஷன் கொடுத்துக்கிட்டே போறாங்க. பீட்டை அதிகப்படுத்தப் போறாங்க. பிடிச்சிருவாங்க. அவன் பணக்காரப் பையனாக இருக்கலாமாம் வயசு, இடது கைப் பழக்கம் எல்லாம் கண்டு பிடிச்சிருக்காங்க. இட்ஸ் எ மாட்டர் ஆஃப் டேஸ்!'

இடது கை உபயோகிக்க வேண்டுமா என்ன?

'அப்ப ரெண்டு நாளில எங்க பேட்டையில கொலை விழலாம்ங்கறே?'

'ஆமா ஸார்! என்ன சிரிக்கிறிங்க?'

'அதுக்குள்ள கண்டுபிடிச்சுட்டா?'

'சிரமமில்லை, ஆனா ஆளு ரொம்ப பாச்சா காட்டறானே? எத்தனை பேரை விசாரிச்சிருக்காங்க தெரியுமா? எழுநூறு பேர் கிட்டத்தட்ட! இந்த மாதிரி மாஸ்ஸிவ் மான் ஹண்ட் பார்த்திருக்க மாட்டீங்க.'

சீக்கிரமே முடிஞ்சுட்டா நிம்மதியா தூங்க முடியும்.

'வரட்டுமா?'

**இரண்டு நாள்! அதற்குள் என்ன செய்வது?**

டைரக்டரிடம் டெலிபோன் மூலம் அப்பாயிண்ட்மெண்ட் வாங்கிக் கொண்டு அவர் அறைக்கு வெளியே காத்திருந்து உள்ளே போனதும் அவர் 'உன்னை நானே கூப்பிடணும்னு இருந்தேன். மைஸூர் போய் வரியா?' என்றார்.

'எப்ப ஸார்?' என்றான் ஆச்சரியத்தைச் சமாளிக்க முடியாமல்.

'எப்ப நீ ரெடியோ அப்ப. விக்ராந்தில இன்ஷ்யூரன்ஸ் க்ளெய்ம் இழுத்து அடிக்குது. இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிக் காரங்க பிடிவாதமா இருக்காங்க ஸர்வே பார்ட்டி வரப்ப நீயும் இருக்கிறது நல்லது.'

'சரி ஸார், உடனே போறேன்'

'ஒரு நாள்ல முடிஞ்சுரும். ஆபிஸ் காரை எடுத்துட்டுப் போ.'

'இல்லை ஸார். பஸ் அல்லது ட்ரெய்ன்ல போறேன்.'

'ஓரியண்டுக்குப் போன் பண்ணி ஏற்பாடு பண்ணிரு ஆமா. ஸ்டெனோவைத் திட்டறியா?'

'சுபாவையா? இல்லையே ஏன்?'

'அட்மின்லருந்து ரிப்போர்ட் வந்தது. அந்தப் பொண்ணு ரொம்ப குறைபட்டுக்கிச்சாம். எரிஞ்சு விழறியாம். வீட்டில எதாவது தகராறா? வீட்டில தகராறுன்னா ஆபிஸ்ல அது உன்னைப் பாதிக்கிற மாதிரி விடக்கூடாது. நானே கவனிச்சிருக்கேன். உன் அவுட்புட் சில வேளையில பிரில்லியண்ட்; சில சமயம் நாசம்! எதாவது டிரபிளா சொல்லு?'

'இல்லை ஸார், எல்லாம் ஸார்ட் அவுட் ஆயிருச்சு.'

'என்ஜாய் யுர்ஸெல்ஃப் இன் மைஸூர். டேக் யுர் வைஃப் இஃப் யூ வாண்ட்'

'வேணாம் ஸார், தாங்க்ஸ்.'

'எஸ். எ. ப்ரெண்ட், எதாவது தேவைன்னா சொல்லு ஐ கன் ஹெல்ப்.'

சொல்லி விடலாமா? என் மனைவி மற்றவனுடன் படுக்கிறாள் என்று? இல்லை. இதை நானே தீர்த்து வைக்கப் போகிறேன். என் திட்டம்தான் சரி.

வீட்டுக்கு வந்ததும் சுபாவைக் கூப்பிட்டான். பயந்து கொண்டே வந்தாள்.



'டைரக்டர் கிட்ட் என்னைப்பத்தி புகார் பண்ணியா? நான் ட்ரீட் பண்றது சரியாயில்லைன்னு?'

'இல்லை ஸார்,'

'ஏ ஓ கிட்ட?'

'இல்லை ஸார்' என்றாள் அதிகம் அழுத்தமில்லாமல்.

'என்னைப் பத்தி என்ன நீ நினைச்சாலும் ஐடோன்ட் கேர்! உனக்குஎங்கிட்ட வேலை செய்யஇஷ்டமில்லைன்னா இப்பவே...'

'வேணாம் ஸார், என்று உதட்டைக் கடித்துக் கொண்டு கண்களில் ஊர்ந்த கண்ணீரை அடக்கிக் கொண்டாள். எவ்வளவு சுலபமாகக் கண்ணீர்!

'எங்கிட்ட இருக்கணும்னா என்னைப் பத்தி கம்ப்ளெயிண்ட் பண்ணக்கூடாது.'

'கம்ளெயிண்ட் பண்ணலை ஸார் நான்.'

'பின்ன?,

'உங்களைப் பத்திக் கவலைப்பட்டேன்.'

'அதுக்கு வீட்டில ஒய்.'.ப் இருக்கா.'

'அந்த மாதிரி கவலை இல்லை ஸார். கொஞ்ச நாளாவே நீங்க ஒரு மாதிரி ப்ரெடிக்ட் பண்ண முடியாத மூடில இருக்கிங்க. கோவிச்சுக்காதிங்க எப்ப எரிஞ்சு விழுவிங்க எப்ப சாதாரணமா இருப்பிங்கன்னு சொல்லவே முடியறதில்லை.'

'கொஞ்ச நாளாவா?'

'ஆமாம். முன்பெல்லாம் இதுக்குக் கோவிப்பிங்க, இதுக்கு கோவிக்க மாட்டிங்கன்னு தீர்மானமா தெரிஞ்சுக்க முடிஞ்சுது. இப்ப காரணமே இல்லாம கோபம். ஏன் ஸார்?'

மௌனமாக இருந்தான்.

'எனக்கு அதனால உங்க மேல கவலையா இருந்தது. உங்களுக்கு எந்த விதத்திலயாவது உதவி செய்யணும்னு தோணிச்சு. கேட்கப் பயமா இருந்தது.'

'சரி, சரி!'

'ஸாரி, என்னைத் தப்பா நினைச்சுக்காதிங்க. உங்க சொந்த விஷயத்தில் குறுக்கிட எனக்கு உரிமை இல்லை'.

'இது ஒன்றும் பர்ஸனல் இல்லை, யூ மே கோ '

'ட்ரான்ஸ்.'.பர் மட்டும் பண்ணிடாதிங்க.'

'இல்லை.'

சுபா லேசான சந்தோஷப் புன்னகையுடன் சென்றாள்.

ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். சுபா என்னும் கழுகு உன்னில் நிகழும் நுட்பமான மாறுதல்களையெல்லாம் கவனிக்கிறாள். இவளுடன் இயல்பாக நடந்து கொள்ள வேண்டும். வெளி உலகத்துக்கு எந்த வகையிலும் உள் போராட்டத்தைக் காண்பிக்கக் கூடாது. இப்போது மைஸூர் ஒரு வாரம்தான்! ஸர்வே வேலை ஒரு நாளில் முடிந்துவிடும். இரண்டு நாள் தங்கலாம். அதாவது தங்குவதாகச் சொல்லலாம்!

'சுபா, ரெண்டு நாள் நான் மைஸூர் போறேன். தர்மப்ரகாஷ்ல வழக்கம் போல புக் பண்ணிடு.'

'ரெண்டு நாளா ஸார்?'

'ஆமா. ரெண்டு நாள்.'

அவன் மன வெளிச்சத்தில் '**சோப்புக் கொலைகாரனின் ஐந்தாவது பலி**' என்று பெரிய தலைப்பெழுத்துகள் பளிச்சிட்டன.

மத்திக்கரையில் பாலகிருஷ்ணன் என்பவரின் மனைவி இன்று பிற்பகல் பயங்கரமாகக் கொலை செய்யப்பட்டார்! பெயர் சாரதா. இவர் கணவர் ஊரில் இல்லாத போது இவரைப் பார்க்க யாரோ ஒருவன் கதவைத்தட்டியிருப்பதாகத் தெரிகிறது.



அவன் எண்ணத்தில் தெரிந்த செய்தித் தாளைச் சுபா கலைத்தாள். மைஸூர்ல ஏஸியா? நான்—ஏஸியா? என்ன ரூம் புக் பண்ணணும் ஸார்?'

'எதா இருந்தாலும் பரவாயில்லை சுபா.'

'உங்களுக்கு ஏஸி ஆகாதே!'

'சரி, நான்—ஏஸி.'

அவள் அறைக்கு வெளியே போய் மைஸூருக்கு டெலிபோன் செய்ய முயற்சித்துக் கொண்டிருந்தபோது பாலகிருஷ்ணன் தன்னுடைய எண்ணங்களைத் தொடர்ந்தான்.

மாலை வீட்டுக்கு வந்து சட்டையைக் கழற்றி வைக்கும் போது 'நான் ரெண்டு நாளைக்கு மைஸூர் போக வேண்டியிருக்கு சாரதா.

'அப்படியா?' குரலில் உற்சாகமிருந்தது.

'நீயும் வரே.'

'லீவ்ல போறிங்களா?'

'இல்லை. ஆபீஸ் விஷயமாத்தான்.'

'ஆபீஸ் விஷயம்னா நான் எதுக்கு கூட?'

'இல்லை சாரதா. இந்தச் சமயத்தில இந்த ஏரியாவில எல்லாம் பீதியா இருக்கு. யாரோ சோப்புக் கொலைகாரனாம். உலாத்திக்கிட்டு இருக்கானாம். தெரியுமில்ல?'

'பேப்பர்ல பார்த்தேன், நீங்க இல்லாத போது மத்தவங்களுக்கு ஏன் கதவைத் திறக்கிறேன்?'

**திறந்திருக்கிறாயே ராட்சசி! அதற்காகத்தானே சாகப் போகிறாய் துடிதுடித்து!**

'படுக்கை எடுத்து வைக்கணுமா? என்று கேட்டது யோசனையில் காதில் விழவில்லை. நடுவில் திரும்ப வருவதை யாரும் பார்க்கக் கூடாது, யாரும் பார்க்கப் போவதில்லை'

'என்ன யோசனை?'

'மைஸூர்லருந்து உனக்கு ஏதாவது வாங்கி வரணுமா கண்ணு?'

'வாங்கி வரணுமான்னு கேட்டிங்களே. அதுவே போதும்!'

'இல்லை, ஏதாவது கேளு.

'எனக்கு ஒண்ணும் வேண்டாம். இந்தத் துணி உலத்தற கொடியை ஆணி அடிச்சு மாட்டிக் கொடுத்திட்டிங்கன்னா அதுவே ரொம்ப உபகாரம்.'

'அவ்வளவுதானே? கயிறு இருக்குதா?'

'கயிறு சுத்தியல் ஆணி எல்லாம் இருக்குது. ஸ்டூலைப் போட்டு ஏறி மாட்டி அடிச்சு, கட்டிக் கொடுத்தாப் போதும்.'

**கயிறு சுத்தியல்!**

சுத்தியல் மண்டையைப் பிளக்க! கயிறு கழுத்தை இறுக்க!

கயிறு வலுவாகத்தான் இருந்தது. சுத்தியலால் ஒரு அடி அடித்தால் போதும், மயக்கம் போட்டு விழுந்து விடுவாள். ஓங்கி அடிக்கக்கூடாது. மண்டை உடையக்கூடாது அடிப்பதின் நோக்கம் மயக்கம்தான். மரணம் கயிற்றின் இறுக்கத்தால் தான்

**இதுதான் அவன் முறை**

'நல்லாத்தான் ஆணி அடிக்கிறிங்க' என்றாள் சிரித்துக் கொண்டே.

அடிக்கத்தான் போகிறேன் பார்த்துக் கொண்டிரு. 'இத்தனை கயிறு வேண்டாம். மிச்சத்தை அலமாரியில மேல் தட்டுல வெச்சுரு, ஊர்லந்து திரும்ப வந்ததும் பால்கனில ஒண்ணு கட்டிர்றேன்.'



கயிற்றை இழுத்துக் கொடி கட்டியதும், அந்தச் சுத்தியலையும் அலமாரியின் மேல்தட்டில் வைத்தான். ஆயுதமும் கிடைத்துவிட்டது. இனி என்ன? ஒரு சோப்புத்தூள் டப்பா. அவ்வளவுதான். அதை வரும்போது மைஸூரிலேயே வாங்கி வரலாம்

மைஸூருக்குப் புறப்படுமுன் மனத்தில் பட்டியலைச் சரி பார்த்துக் கொண்டான். கயிறு, சுத்தியல், சோப்புத்தூள் டப்பா மூன்றுதான் அவனுக்கே அந்தப்பட்டியலை எண்ணிச் சிரிப்பாக இருந்தது.

இரண்டும் அலமாரியின் மேல்தட்டில் வைத்த இடத்தில்தான் இருந்தன.

'சாரதா. மைஸூர்ல இருந்து உனக்கு ஒரு ஆச்சரியமான பரிசு கொண்டுவரத்தான் போறேன்.'

'என்னவோ நீங்க ஒரு வாரமா நடந்துக்கற விதமே செரியில்லை.'

'வாட் டு யூ மீன் சாரதா?'

'பரிசு வேண்டாம், பரிவா இருந்தாப் போதும்.'

'நீ எனக்குக் குடுத்தியே நம்முடைய கல்யாண தினத்தின்போது பரிசு...'

'என்ன கொடுத்தேன்?' என்றாள் ஆச்சரியத்துடன்,

'முத்தம்! இப்ப ஒண்ணு கொடுக்கிறியா ஊருக்குப் போறதுக்கு முன்னாடி?'

கடமையாகக். கன்னத்தைக் காட்டினான். அதில் முத்தம் பதித்தபோது இதுதான் கடைசி. நிஜமாகவே கடைசி என்பதில் சற்று துக்கமாகத்தான் இருந்தது. 'வரேன் சாரதா. சீக்கிரமே பார்க்கலாம்.'

போகுமுன் ஒரு முறை திரும்பிப் பார்த்தபோது நிலைப்படியில் முகத்தில் கேள்விக் குறியுடன் நின்று கொண்டிருந்தாள். சத்தியமாக அதை எதிர்பார்க்க

மாட்டாள். கணவன் ஏதோ வினோதமாக நடந்துகொள்கிறான் ஒருவேளை விஷயம் தெரிந்திருக்கலாமோ என்று சந்தேகப்படுவாள். காதலன் வந்ததும் கேட்பாள்.

'கவலைப்படாத சாரதா. அவர் அசடு! அவரால கண்டுபிடிக்கவே முடியாது.'

'எனக்குப் பயமா இருக்கு மஞ்சு' என்பாள்.

'எப்ப திரும்பி வரார்?'

'ரெண்டு நாள்!'

'அப்பவா, மஜாதான்! உள்ள போக வேண்டியது தானே?' என்பான்.

பாவப்பிண்டங்கள். மெத்தைமேல் பின்னிப் புரண்டு ஒரு தூய உறவை மேலும் மேலும் கொச்சைப்படுத்திக் கொஞ்ச நேரச் சுகத்துக்காக ஒரு சமூக அமைப்பையே, ஒரு கணவனின் அத்யந்தத்தையே, ஒரு பாரம்பரியத்தையே புறக்கணிப்பார்கள். பன்றிகள் போல உழல்வார்கள். இன்னும இரண்டுநாள் இந்தக் கானல் நீரைக் குடிக்கட்டும்! துடிப்பதற்குமுன் குடிக்கட்டும்!

திப்பு எக்ஸ்பிரஸ் சரியான நேரத்தில் போய்ச் சேர்ந்தது சந்தோஷமாக இருந்தது. தர்ம பிரகாஷில் சுபா இரண்டு நாளைக்கு ரூம் ரிசர்வ் செய்திருந்தாள். செய்தித்தாளை வாங்கி சினிமாப் பட்டியலைப் பார்த்தான்—நாளைக்குப்போக வேண்டிய சினிமா அதாவது போனதாகக் காட்ட வேண்டிய சினிமா ஜன்னலுக்கு வெளியே லேசாகத் தூறல் இருந்தது பாலகிருஷ்ணன் மிகவும் சாந்தமாக இருந்தான். அவன் தீர்மானம் கலையவே இல்லை, காலைக்குள் ஸர்வேவேலையை முடித்துக் கொண்டு கூடிய சீக்கிரம் நான்-ஸ்டாப் பஸ் ஏறி...

மகாராஜாவின் விசுவாசம் பாக்கியிருக்கும் கட்டடங்களின் ஊடே நடந்தான் ஆரவாரமில்லாத கடைத்தெரு. ஜனங்கள் யோசித்து நிதானமாக நடப்பது போல இருந்தது தூறல்கூட யோசித்து யோசித்துத்தான்



படர்ந்தது. மைஸூர் அவனுக்கு ஒரு போர்வை போல இதமளித்தது. கொஞ்சநேரம் அலைந்துவிட்டுத் துப்பா தோசை ஒன்றும் காப்பியும் சாப்பிட்டுவிட்டு வெளியே வந்தபோது அவன் தோளை யாரோ தட்டினார்கள்.

'ஹலோ பாலகிருஷ்ணன். ஸார்.'

திடுக்கிட்டுத் திரும்பினான்.

'மஞ்சுநாத். நீ இங்க எப்ப?' என்று தடுமாறினான்' எண்ணங்கள் விரைந்தன.

'சாரதா சொல்லலை மைஸூர் வந்திருக்கேன்னு?'

'ஆமா ஆமா. சொன்னதா ஞாபகம்.'

'நீங்க இங்க வரப் போறதா அவங்க சொல்லவே இல்லையே. தனியாவா இருக்காங்க? எத்தனை நாள்?'

'நாளன்னைக்குத் திரும்பிப் போயிடுவேன்.'

'நானும் நாளன்னைக்குத்தான்! வெரிகுட்! சாரதா எப்படி இருக்காங்க? பார்த்து ஒரு வாரம் ஆச்சு!'

'ஷி இஸ் ஓக்கே!'

'எங்க தங்கியிருக்கிங்க?'

'தர்ம ப்ரகாஷ்ல?'

'ரூம் நம்பர்.'

'நாப்பத்திரெண்டு.'

'சரி ராத்திரி உங்களை வந்து பார்க்கறேன். உங்க கூடப் பேசணும்' என்று பிரிந்து சென்றான்.

'நீ என்னை வந்து பார்க்க வேண்டாம். எனக்கு அதில் இஷ்டம் இல்லை' என்று சொல்ல நினைத்தான். அதற்குள் விலகி விட்டான்.

இவன் எதற்கு இங்கே வந்தான்? ஒரு விதத்தில் இதுவும் நல்லதுதான். என்னை மைஸூரில் தீர்மானமாகப் பார்த்ததற்குச் சாட்சியம். நாளைக்கு நாளன்

றைக்கு இரண்டு நாளும் இவன் ஒரு முறை என்னைப் பார்த்தால் போதும். 'உங்க கூடப் பேசணும்.'

இந்த நாயுடன் என்ன பேச்சு? பேசாமல் ராத்திரி சினிமாவுக்குப் போய் விடலாம், எப்படியாவது என் விரோதத்தைக் காட்டத்தான் வேண்டும் என்று எண்ணிக் கொண்டான் இருந்தும் இவன் என்ன சொல்லப் போகிறான் என்று அறியவும் ஆர்வமாக இருந்தது. கொஞ்சம் அங்கே இங்கே அலைந்தான். சாரதாவுக்கு ஒரு காஸ்ட்யூம் ஜ்வல்ரி வாங்கிக் கொண்டான் நாற்பத் தைந்து ருபாய்க்கு. மற்றப் பேர் நம்ப வேண்டாமா? சுமாரான ஒட்டலில் ப்ளேட் மீல்ஸ் சாப்பிட்டான். ஒன்ப தரை மணிக்கு ஹோட்டலுக்குத் திரும்பினான். தன் அறைக்கு வந்து படுக்கையில் படுத்துச் செய்தித் தாளை விரிக்க பஸ்ஸர் ஒலித்தது.

மஞ்சு நாத் 'ஹாய்! எட்டரைக்கு ஒரு வாட்டி வந்தேன்' என்று சுவாதீனமாக உள்ளே நுழைந்தான். நியூஸ் பேப்பரில் பாட்டில் ஷேப்புக்குச்சுற்றியிருந்தது. ரூம் சர்விஸைக் கூப்பிட அவனே படுக்கைக்குப் பக்கத்தில் இருந்த மணியை அடித்தான். பேப்பரைப் பிரித்ததில் ஸ்காட்ச் பாட்டில்.

'நம்ம ப்ரெண்டு மிடில் ஈஸ்ட்டில் காண்ட்ராக்ட் எடுத்திருக்கான். நீங்க சாப்பிடுவிங்களோல்லியோ?'

'இல்லை.'

'நான் சாப்பிடலாமா?'

'ஓ எஸ்! நோ அப்ஜெக்ஷன்.'

'ரெண்டு பாட்டில் சோடாவும் கிரவுண்ட் நட்ஸும் கொண்டு வாப்பா, என்றான் ரூம் சர்விஸ் ஆளிடம்,

குட்டையான மேசை மேல் பாட்டிலை வைத்துச் சிகரெட் பற்ற வைத்துக் கொணடான். 'சிகரெட்டாவது குடிப்பீங்களா?'



'அதும் ரொம்ப ரேர். என்னவோ சொல்லணும்னுக் கிட்டு இருந்தீங்களே?'

'ஸார், கோவாவிலே தஸ்தூர்ல உங்க கம்பெனிக்கு காண்டாக்ட்ஸ் உண்டா?'

'உண்டு, ஏன்?'

'அவங்க ஒரு மிடில் 'ஈஸ்ட்' காண்ட்ராக்ட்டுக்கு இண்டர்வ்யூ கூப்பிட்டிருக்காங்க. உங்களுக்கு யாரை யாவது தெரியுமா?'

'எனக்கு ஒருத்தரையும் தெரியாதுப்பா. எங்க டைரக்டருக்குத்தான் தெரியும்.'

'உங்க டைரக்டர்கிட்ட சொல்ல முடியுமா?'

'சொல்ல முடியும். ஆனா எதுக்குச் சொல்லணும்.'

'என்ன ஸார்? எனக்காக! நீங்க...'

'உன்னைப்பத்தி நிசமாவே தெரியாதேப்பா.'

'என்னைப்பத்தி சாரதா கிட்ட கேளுங்க. எவ்வளவு நல்ல பையன்னு சொல்வாங்க.'

'பார்க்கலாம்! பாலகிருஷ்ணனுக்குள் உள்ளம் கொதித் தது. என் மனைவியுடன் படுத்துவிட்டு என்னிடமே வேலைக்குச் சிபாரிசு கேட்கிறான். என் அறையில் வந்து நான் இவனை வரவேற்று கடலைக்கொட்டை கொடுத்துக் கொண்டிருக்கிறேன்! இந்த நிமிஷமே இவன் கழுத்தை நெரித்தால் என்ன?

லேசாக சோடா ஊற்றிக்கொண்டே முதல்ஸிப்புக்கு அப்புறம் கொஞ்சம் இருமிவிட்டு 'பாருங்க ஸார் ஒரு நண்பனுக்காக...ஷ்யூர் யூ டோன்ட் வாண்ட் ஸம்?' என்று பாட்டிலைக் காட்டினான். 'எல்லாத்தையும் நானே சாப்பிட விருப்பமில்லை.'

மெல்ல மெல்ல இரண்டாவது உள்ளே போனது. 'பால கிருஷ்ணன் ஸார்! நீங்க என் உயிர் சினேகிதர். நீங்க ஒண்ணு சாப்ட்டே ஆகணும். ப்ளீஸ்' என்றான்.

'வேணாம்பா, பழக்கமில்லை!'

'யுர் ஒய்.'.ப், பாலகிருஷ்ணன் ஸார், இஸ் ப்யூட்டி.'.புல் என்றான். மூன்றாவதில் 'அவங்க மாதிரி ஒரு மனைவி கிடைக்கிறதுக்குக் கொடுத்து வெச்சிருக் கணும் உங்க மேல என்ன மரியாதை, என்ன அன்பு தெரியுமோ அவங்களுக்கு?'

'அப்படியா?'

'ஷி இஸ் எ ஜெம்! எனக்கு மேரேஜ் ஆகலை, நிறையப் பெண்களைப் பார்த்துட்டேன் ஒருத்தியும் பிடிக்கலை. ஒருத்தரும் உங்க மனைவி அத்தனை அழகா இல்லை இன்னை தேதிக்கு! அப்புறம் தீர்மானிச்சுட்டேன் கல்யாணமே பண்ணிக்கப் போறதில்லைன்னு. எதுக்கு கல்யாணம்? வேணும்னா அது .'.ப்ரியா கிடைக்குது. முதல்ல காரியர். காண்ட்ராக்டில ஒரு வருஷத்தில நாப்ப தாயிரம் அம்பதாயிரம் பண்றேன். டாக்ஸ் கட்டறதில்லை நோ டாக்ஸ்! ஆனா ஒருவருஷத்தில மூன்றுலட்சம் பண்ண லாம். நாலு லட்சம்! இங்க இல்லை. சவுதியில. ஆனா விசா கிடைக்கிறது கஷ்டம், தஸ்தூர் காண்ட்ராக்ட் கிடைச்சா அவங்களே எல்லாம் பார்த்துப்பாங்க. எனக்குந் காரியர் முக்கியம். இந்த வயசில சம்பாதிக் கலைன்னா வேற எப்ப சம்பாதிக்க முடியும்? என் தலை பாருங்க. இப்பவே ஒரு நரை மயிர் எச்சரிக்கை தரது. சமயம் ஆயிட்டிருக்கு பாலகிருஷ்ணன் ஸார்! யூ மஸ்ட் ஸ்பீக் டு யுர் பாஸ்! உங்க ஒய்.'.ப்கிட்ட என்னைப்பத்தி கேட்டுப்பாருங்க. நான் எத்தனை நல்லவன்னு சொல்வா. சாரதா இஸ் ப்யூட்டி.'.புல். யூ ஆர் லக்கி! நாளைக்கு நான் உங்களுக்கு லலித் மஹல் பாலஸ்ல பார்ட்டி தரேன். ஷ்யூர், யூ டோண்ட் வாண்ட் எ ட்ரிங்க்?'

இப்போது முழுப்போதையில் லேசாகக் கப்பல்போல ஆடிக் கொண்டிருந்தான்.

பாலகிருஷ்ணன் அவனை முறைத்துப் பார்த்தான்.



'இத பார் மஞ்சுநாத்! எனக்கு எல்லாம் தெரியும்' என்றான்.

அவன் புன்னகை செய்து 'வெரி குட்! உங்களுக்கு எப்பவுமே நிறையத் தெரியும்னு எனக்குத் தெரியும். யூ ஆர் பியுட்டி.'.புல். யுர் ஒய்.'.ப் இஸ் ப்ரெட்டி ஐ என் வி யூ!'

'உன் நிஜ சொரூபம் தெரிஞ்சதாலே நான் உனக்கு ஹெல்ப் பண்ணவே மாட்டேன்' என்றான்.

'நிஜ சொருபம்...பாலகிருஷ்ணன் ஸார்! யாருக்குமே நிஜ சொரூபம் கிடையாது! எல்லாருமே பொய்! என் ப்ரின்ஸிப்பிள் லை.'.ப்ல என்னன்னா. என்ஜாய் யுர் செல்ப். தப்பிச்சா தப்பில்லை. அதான் என் பிலாஸ.'.பி கமான், இப்பவே போலாம் வாங்க. இங்க இருக்கிற ப்ராஸ் எல்லாம் எனக்குத் தெரியும். காந்தாமணி ராதா மணி ரமாமணி எல்லாம் மணியாகவே இருப்பாளுங்க. வாங்க போகலாம். லெட்ஸ் பெயிண்ட் த டவுன் ரெட்! நான் சாரதாகிட்ட சொல்ல மாட்டேன். வாங்க, வாங்க போகலாம். லெட்ஸ் என்ஜாய், கம்! பார்க்காத வரைக் கும் பாவமில்லை.'

'இல்லைப்பா. நான் வரலை, நீ போ.'

'கம்! சாரதா கிட்ட சொல்ல மாட்டேன். கம்! சாரதா இஸ் ப்யூட்டி.'.புல்! பட் இன் பேங்களூர்! வாங்க போகலாம். அப்படி ஒரு சரக்கு காட்டறேன். நின்னு விளையாடும்! பெட்டர் தன் யுர் ஒய்.'.ப்!'

பாலகிருஷ்ணனை அழைத்துப் போக வேண்டியது அவசியம் போல அருகில் வந்து கையைப் பிடித்து இழுக்க பாலகிருஷ்ணன் அவனைக் கொஞ்சம் தள்ள, படக் கென்று பின் பக்கமாக விழுந்தான்.

படுக்கையில் பாதியும் அந்தரத்தில் பாதியுமாக விழுந்தவன் போதை ஆக்கிரமிக்கப்பட்டு அப்படியே கிடந்தான். தூங்கிப் போனான்!

பாலகிருஷ்ணன் அவனைக் கண் கொட்டாமல் பார்த்
தான். **இவனை இங்கேயே கொன்று விட்டால் என்ன?**

இங்கும் அங்கும் தேடினான். கயிறு! கயிறு! ஸ்டராங்
குலேஷன் தான் சரி, அதைப்பற்றித்தான் நிறையப் படித்
திருக்கிறான். கயிறு! சே, அந்தக் கயிற்றைக் கொண்டு
வந்திருக்க வேண்டும். அண்டர் வேர் நாடாக் கயிறு
போதுமா? கழுத்து தடிப்பாக இருக்கிறது. கத்தியால்
குத்த விருப்பமில்லை. இங்கேயே கிடக்கட்டும். கடை
திறந்திருக்குமோ? ஆயுதம் வாங்கி வரலாமா? இல்லை.
பாட்டிலை உடைத்துக் கூர்மையான ஆயுதம் பண்ணிக்
கொண்டு...

தப்பித்தால் தப்பில்லை.

என்ன ஒரு பைத்தியக்காரன் நான்! இவனை இப்
போது இங்கே கொன்றால் எவ்வளவு சுலபமாக அகப்
பட்டுக் கொள்வேன்! அறை என் பெயரில் இருக்கிறது.
இவன் என்னைச் சந்திக்க வந்ததைப் பார்த்திருக்கிற சிப்
பந்திகள் இருக்கின்றனர். சே! பாலகிருஷ்ணன், உன்
முக்கிய குறிக்கோளிலிருந்து விலகாதே.

**அது நாளைக்கு**

அவனை இழுத்துத் தரையில் கிடத்தினான். உடனே
புரண்டு குறட்டை ஒலியுடன் தூங்க ஆரம்பித்து
விட்டான்.

ரூம் சர்விஸ் பையன் வந்து மௌனமாகப் பாட்டில்
களையும் தம்ளர்களையும்காலிச் சோடாப் புட்டிகளையும்
விலக்க பாலகிருஷ்ணன் தன்னைப்போல் ஏமாளியாராவது
உலகத்தில் இருக்க முடியுமா என்று யோசித்தான். ஏன்
தைரியமில்லாமல் இருக்கிறேன்? ஏன் பளிச்சென்று—
அடேய் பாதகா! உன்னைப் பிடிக்கவில்லை. ஒழிந்து போ
என்று அவனைத் துரத்தாமல்அவனை என் அறையில்கூட்டி
வைத்துப் பேசிக் கொண்டு இஷ்டத்துக்குஅவனுக்குபடுக்க



இடமும் அளித்திருக்கிறேன்... இந்தத் தாட்சண்யம் தான்
என் குறை! இதைத்தான் அவர்கள் யாவரும் உபயோ
கித்துக் கொள்கிறார்கள். போதும், இந்தச் சமரச வாழ்வு
போதும். நாளையிலிருந்து நான் வேறு விதமானவன்.
முதல் முதல் ஆண்மை மிக்க காரியம் செய்யப்போகிறேன்.
துரோகம் செய்தவளைத் தீர்க்கப் போகிறேன். இவன்
இருக்கட்டும், எனக்காகச் சாட்சி சொல்ல இந்த மஞ்சு
நாத் இருக்கட்டும். நாளன்றைக்கு இவனுடன் கூடவே
திரும்பலாம். கோர்ட்டில் சாட்சியம் சொல்ல அவன்
எனக்குத் தேவைப்படலாம். இவனைச் சமயம் பார்த்து
மைஸுருக்கு அழைத்து வந்ததிலும் விதியின் விளை
யாட்டு இருக்கிறது.

பாலகிருஷ்னைனுக்குத் தூங்க முடியவில்லை. விளக்கை
அணைக்கப் பயமாக இருந்தது. மஞ்சுநாத்தின் குறட்
டைச் சப்தம் காதைத் துளைத்தது. அவன் முகத்தின்
மேல் தலையணையை வைத்துப் பொத்தினான். அந்தப்
பக்கம் திரும்பிப் படுத்தான். குழப்பமான கனவுகளின்
இடையே தூங்கிப் போனான்.

காலை எழுந்தபோது மஞ்சுநாத்தைக் காணவில்லை.
மேசைமேல் ஒரு சிறிய குறிப்பு மட்டும் இருந்தது.

'அன்புள்ள பாலு (பாலுவாம் பாலு!)

தூங்கிக் கொண்டிருந்தீர்கள். கலைக்க வேண்டாம்
என்று புறப்பட்டு விட்டேன். மாலை ஏழரைக்குச் சந்திக்
கிறேன் எல்லாவற்றுக்கும் நன்றி! எம்.

எல்லாவற்றுக்கும் நன்றி : உன் மனைவி உள்பட!

ஏழரைக்கு வருகிறேன் என்று சொல்லியிருக்கிறான்.
அதற்குள் பங்களூர் போய்த் திரும்பிவிட வேண்டும்.
அப்படியெனில் இரண்டு இரண்டரைக்குப் பங்களூரி
லிருந்து புறப்பட வேண்டும். அப்படியென்றால் பத்து
பத்தரைக்கெல்லாம் மைஸுர் காரியம் முடிந்து விட
வேண்டும். முடிந்துவிடும். சர்வேயரை எட்டு மணிக்குத்

தொழிற்சாலை திறக்கும் சமயம் வரச் சொல்லியிருக்கிறான். வந்து விடுவான். பார்க்கலாம். தாமதமானால் பதற்றப்படக்கூடாது. திரும்பிவந்தால் உத்தமம். முடியவில்லை எனில் சினிமா போனேன் என்று சொல்லிக் கொள்ளலாம்.

பாலகிருஷ்ணன் எதிர்பார்த்தபடியே எல்லாம் நடைபெற்றது. சர்வே சீக்கிரமே முடிந்து போய் விஷயம் செட்டில் ஆகிப் புறப்படும்போது மணி ஒன்பதே கால். பஸ் நிலையத்துக்குப் போனதுமே அவனுக்காகக் காத்திருந்தது போல ஒரு பஸ் கிடைத்தது. பஸ்ஸில் ஏறுவதற்குமுன் ஒரு சோப்புத் தூள் டப்பா வாங்கி வைத்துக் கொண்டான்

பஸ்ஸில் யாராவது தெரிந்தவர்கள் இருந்துவிடப் போகிறார்களே என்று கவலைப்பட்டான். ஒரு வயதான அம்மாவைப் பார்த்த முகமாக இருந்தது எங்கே என்று தெரியவில்லை. அவள் இவனை ஒருமுறை ஏறிட்டுப் பார்த்துவிட்டு முகத்தைத் திருப்பிக் கொண்டாள். பரிச்சயம் காட்டும் வகையில் பார்வை தயங்கவில்லை. முன் ஸீட்டில் போய் உட்கார்ந்து கொண்டான். பஸ் புறப்பட்டு வேகம் பிடித்து ஜன்னல் காற்று முகத்தில் வீச, ஏன்? ஏன் இந்தப் பிரயாணம்? என்று யோசித்தான். சுருங்கச் சொல்லப் போனால் பெண்டாட்டியைக் கொல்வதற்கு.

எதற்காகக் கொல்ல வேண்டும்? அவள் செய்தது எந்த விதத்தில் பாவம்? மரண தண்டனை விதிக்கும் அளவுக்குப் பாவமா?

'ஆம், பாவம்தான்!

ஏன்?

ஓ! நம்பின ஒருத்தனை ஏமாற்றியதற்காக! கணவன் மனைவி என்ற உறவின் புனிதத்தையே மாசுபடுத்தியதற்காக. இந்த மாதிரித் துரோகம் செய்துவிட்டுத் தப்பித்துவிட்டால் சமூகத்தின் அடிப்படை அஸ்திவாரமே கலைந்து போகிறது. மிருகங்களுக்கும் நமக்கும் அப்புறம் என்ன



வித்தியாசம்? அன்றைக்குப் பார்த்த காட்சி அவன் மனத்தில் ஆறாத காயத்தை ஏற்படுத்தி விட்டது.

திரை லேசாக பேன் காற்றில் ஆடுகிறது. படுக்கையின் அடிவாரத்தில் சாரதாவின் உடைகள் ஒவ்வொன்றாக விழுகிறது.

என்ன சாமர்த்தியமா அன்னைக்கு எல்லாத்துக்கும் எக்ஸ்ப்ளனேஷன் கொடுத்தேன். பாரு நம்பினாரா இல்லையபே...

உடல்களின், கால்களின் பின்னல்.

பாலகிருஷ்ணனின் சொந்த சட்டப்புத்தகத்தில் இந்த துரோகத்துக்குத் தண்டனை மரணம்தான். சந்தேகமே இல்லை

வெளியே தீய்க்கப்பட்ட கரும்பு நிலங்களைப் பார்த்தான் மண்டியா, உடல்களின் பின்னல். கால்களின் சரசம் என் படுக்கை. என் மனைவி. என் கல்யாணத்தின் வருடாந்திரம்!

மிக முக்கியமான கட்டம் பங்களூர் போனதும் யாரும் பார்க்காமல் வீட்டை அடைவது. மஞ்சுகூட ஊரில் இல்லை. வீட்டில்தான் இருப்பாள். சாப்பிட்டு விட்டுப் படுத்திருப்பாள். மிக விரைவில் செயல்பட வேண்டும் கதவைத் திறக்க என்னிடம் இரண்டாவது சாவி இருக்கிறது.

திறந்து அவள் எழுந்தால் சரி. எழுந்திருக்காவிட்டால் கதவு திறந்ததுமே அலமாரியில் மேல் தட்டில் வைத்திருக்கும் கயிறு சுத்தியல் முதலில் மண்டைமேல் ஒரு பலத்த அடி! பின்னர் கழுத்தில் பலத்த இறுக்கம். மூச்சு, நிற்கும்வரை என் ஆத்திரம் வடியும்வரை இறுக்கம். அவள் முகத்தைப் பார்க்காதே. கடைசி நேர பச்சாதாபத்துக்கு இடம் கொடுக்க வேண்டாம் அவனிடம்சொல்லி விட்டுக் கொலை செய்யலாம் என்கிற !யோசனையைக் கைவிட்டுவிட்டான். சில நிமிஷங்களில் சாகப் போகிறவள் தெரிந்து செத்தால் என்ன? தெரியாமல் செத்தால்

என்ன? அவளுக்கு அந்தக் கடைசி நேரங்களில் இதை
யெல்லாம் யோசிக்க அவகாசம் கிடைக்குமா என்ன?
சொர்க்கமாவது நரகமாவது! செத்துப்போன பின்
அவ்வளவுதான், அதன் பின் ஒரு பெரிய பூஜ்யம்! சூன்யம்!
அவ்வளவுதான்.

பங்களூர் லந்து சேர்ந்தபோது மணி இரண்டு.

சுபாஷ் நகர் பஸ்நிலையத்தில் இறங்கினாள். போலீஸ்
உதவியுடன் வரிசையாக ஆட்டோ ஏற்பாடு பண்ணிக்
கொண்டிருந்த ஸ்டாண்டை விட்டு வெளியே வந்தான்.
கடந்து கொண்டிருந்த ஆட்டோவைக் கையால் தடுத்துச்
சைகை காட்டி நிறுத்தி ஏறிக்கொணடான்.

ஆட்டோ ஓட்டுபவன் அவனைத் திரும்பிப் பார்க்கா
மலே அதன்மீட்டரைப் பொருத்தினான்.

ஆட்டோ ரிக்ஷாவின் கான்வஸில் ப்ரஜாவாணி
செருகியிருந்தது. அதையெடுத்துப் படிக்கலாமா என்று
யோசித்தான். கன்னடம் தடுக்கித் தடுக்கிப் படிக்க வேண்
டும், இப்போது பேப்பர் படிக்கும் மனநிலையில் இல்லை.

படித்திருக்கலாம், ப்ரஜாவாணியில் முன் பக்கத்தில்
தலைப்புச் செய்தியையாவது படித்திருக்கலாம்.

**'சோப்புக் கொலைகாரன் பிடிபட்டான்!' என்று செய்தி
யைப் படித்திருக்கலாம்.**

பாலகிருஷ்ணன் படிக்கவில்லை. அவன் மனதில்
அவன் திட்டத்தின் கடைசி விவரங்களைத்தீட்டிக்கொண்
டிருந்தான். ஆட்டோவை ஸி பி ஆர் ஐ க்வார்ட்டர்ஸ்
அருகிலேயே அனுப்பிவிட வேண்டும். இல்லை யஷ்வந்பூர்
வரை போகலாமா? இரண்டிற்கும் இடையில்தான் இருக்
கிறது வீடு. கடைசி ஒரு கிலோ மீட்டரை நடந்துதான்
கடக்க வேண்டும். பரிச்சயமில்லாத பாதையில் செல்ல
வேண்டும். தெரிந்தவர்கள் வீடுகள் இருக்கும் சந்துகளைத்
தவிர்க்க வேண்டும்.



சோப்புத் தூள் சாம்பிளை மறக்காமல் அவளருகே
அல்லது ஹால் மேசை மேல் வைத்துவிட்டுப் புறப்பட
வேண்டும். போலீஸார் நம்புவதற்கு சோப்புதூள்! அதே
மண்டைத் தாக்குதல்! அதே கழுத்துச்சுருக்கு! போலீஸார்
வேறு எவரையும் சந்தேகப்படவே முடியாது. நாளை
செய்தித்தாளில் பொறி பறக்கும். சோப்புக் கொலைகார
னின் நாலாவது கொலை! மைஸூரில் தர்மப்ரகாஷில்
உட்கார்ந்து கொண்டு பார்க்கலாம். பதறலாம். மஞ்சுவும்
பார்த்த உடனே என் அறைக்கு வருவான். இரண்டு
பேரும் சோகமாகக் கிளம்பி போலீஸைப் பார்த்து...

ஆட்டோவுக்குச் சரியாகச் சில்லரை கொடுத்ததால்
அவன் ஒரு முறை ஏறிட்டுப் பார்க்கவில்லை, அவன்
இறங்கிய இடத்தையும் அவன் வீட்டையும் சம்பந்தப்
படுத்த முடியவே முடியாது.

மணி பார்த்தான் மெல்ல நடந்தான், அவசர
மாகக் கட்டப்பட்ட ஆஸ்பெஸ்டாஸ் வீடுகள். செங்கல்
லையும் களி மண்ணையும் போட்ப்டு பூசி மெழுகின
வீடுகள். நடுத்தர வர்க்கக் குடிசைகள், கிணறுகள்,
ஒவ்வொரு திசையைப் பார்த்துக் கொண்டு, எருமை
மாடு கட்டி. ஏறக்குறைய ஸ்லம்தான். பிள்ளைகள் குச்சி
பதித்து கிரிக்கெட் ஆடிக்கொண்டிருக்க பெண்கள் வீட்டு
வேலைகளை முடித்துவிட்டு வெளியில் உட்கார்ந்திருக்க...
பெண்கள்! கணவனை ஏமாற்றாத பெண்கள்!

பக்கத்து கிராஸிலிருந்து தன் வீட்டைப் பார்த்தான்.
கட்டட வேலை நடக்கும் இடம் காலியாகத்தான்
இருந்தது. ஒரே ஒரு தூளி கட்டப்பட்டு ஒரு குழந்தை
தூங்கிக் கொண்டிருக்க அருகில் ஒரு பெண் தொழிலாளி
தரையில் உறங்கிக் கொண்டிருந்தாள். சட்டென்று
காம்பவுண்டில் இருந்த உடைப்பைக் கடந்து சஜ்ஜாவின்
நிழலில் நின்றான். தன்னை யாருமே கவனிக்கவில்லை
தெருவே வெறிச்சென்றிருந்தது. எல்லோருக்கும்.
மத்தியானத் தூக்கம் போலும். பக்கத்துத் தெருவில்
காரட் விற்பவன் குரல் கேட்டது. சட்டென்று தன் வீட்டு

வாசலுக்கு வந்து நின்று கொண்டான். பாக்கெட்டில் கை
விட்டுச் சாவியை எடுத்து லேசாகத் திறந்தான்.
கதவு ஒத்துழைத்தது. மிக லேசாகத்தான் சப்தம்
கேட்டது.
உள்ளே நுழைந்து கொண்டு சாவியை எடுத்துப்
பைக்குள் போட்டுக் கதவை உள்பக்கம் சார்த்திக்
கொள்ளுமுன் கைக்குட்டையை எடுத்துக் கதவைத்
தொட்ட இடத்தில் துடைத்தான். அலமாரியின் மேலே
பார்த்தான். செய்தித் தாள்கள் அவன் கலைத்தவாறே
இருந்தன. அலமாரிக்கு அருகில் சென்று கையைச்
செய்தித்தாளின் இடைவெளியில் செலுத்தித் தேடினான்
முதலில் கயிறு அகப்பட்டது. பின்னர் சுத்தியல்
பதற்றமே இல்லாமல் இருந்தான். படுக்கை அறையின்
திரை லேசாக ஆடியது. உள்ளே ஃபானின் மெலிதான
சப்தம் கேட்டது தூங்குகிறாள். கயிற்றைத் தன்
தோளில் போட்டுக் கொண்டு சுத்தியலைப் பதம் பார்த்
தான். சோப்பு டப்பாவைக் கைக்குட்டையால் துடைத்து
விட்டு மேசை மேல் வைத்தான்.
மெதுவாகப் படுக்கை அறையை அணுகினான்.
படுக்கையின் நடுமையத்தில் சுகமாகத் தூங்கி கொண்
டிருந்தாள். மெலிதாகக் குறட்டைச் சப்தம் கேட்டது,
வாய் சற்றே திறந்திருந்தது. வாயோரத்தில் லேசாக
எச்சில் தெரிந்தது. சுவாசத்துக்கு ஏற்ப மார்பு ஏறி
இறங்குகிறது. இடையோடு புடவை ஒட்டியிருக்க...
இந்த இரண்டு சமாசாரத்துக்காகத்தானே உலகமே
இந்த அல்லாட்டம்! இதே மார்பைத்தான் அவன் தொட்
டிருக்கிறான். இதே இடையைத்தான் அவன் வளைத்
திருக்கிறான். வளைத்து, முடிச்சுகளை விடுவித்து என்,
என் மனைவியை நிர்வாணமாக்கியிருக்கிறான், இந்த
பாவி! காட்டிக் கொண்டிருந்திருக்கிறாள், கால்களை
அகற்றியிருக்கிறான்...

**சீயும் குருதிச் செழுநீர் வழும்பும் செறிந்தெழுந்து**
**பாயும் புடவை ஒன்றில்லாதபோது பகல் இரவாம்**



**ஈயும் எறும்பும் புகுகின்ற யோனிக்கு இரவு பகல்**
**மாயும் மனிதரை மாயாமல் வைக்க மருந்தில்லையே!**

பாலகிருஷ்ணன் தன் கையிலிருந்த ஆயுதத்தைச் சரி
பார்த்து அவள் மண்டைக்கு மேல் பிடித்து ஓ ஓங்கி...
நான்கு நாட்களாகப் பாலகிருஷ்ணன் தன் அறையி
லேயே உட்கார்ந்திருக்கிறான். மாலை நேரம். ஆபிஸ்
முடிந்து எல்லோரும் விலகிப் போய் விட்டார்கள்.
வெளியே பங்களூர் இன்று மழை என்று திடீர்த்
தீர்மானம் செய்திருந்தது. அவசர மேகங்கள் சூழ்ந்து
கொள்ள அகாலமாக இருட்டாகி இருந்தது. பாலகிருஷ்
ணன் இருட்டைப் பொருட்படுத்தாமல் கன்னத்தில் கை
வைத்துக்கொண்டு ஒரே திசையில் பார்த்துக்கொண்டு
உட்கார்ந்திருந்தான் அவன் கண்களின் கீழ் கரிய நிழல்கள்
தெரிந்தன. குளிக்கவில்லை முகத்தில் நான்கு நாள் தாடி
சுபா உள்ளே வந்து அவனை நிதானமாகப் பார்த்
தாள்.

''ஸார், ஆபிஸ் மூடணும்.'

பேச்சில்லை.

'ஸார்?'

நிமிர்ந்தான். அவளை அன்னியளைப் போலப் பார்த்
தான்.

'ஆபிஸ் மூடணும்.'

'நான் மூடிக்கிறேன். நீ போ.'

'வீட்டுக்குப் போகலியா?'

'வீட்டில என்ன இருக்கு?'

அவனை மறுபடி ஆழ்ந்து பார்த்தாள். 'சரி, குட்
நைட் ஸார்.'

'குட் நைட் சுபா.'

'ஸார்.'

'என்ன?'

'உங்களுக்கு எந்த வகையிலாவது ஆறுதலா இருக்க
முடியும்னா நான் தயார். உங்களை நாலுநாளா பார்த்

துக்கிட்டே வரேன். பரிதாபமா இருக்கு ஸார். ஏதோ நீங்க சொல்ல விரும்பறிங்க. எங்கிட்ட சொல்லலாம். நான் யார்கிட்டயும் சொல்ல மாட்டேன். என்னை நம்ப வாம். சில வேலைளயில் சில துக்கங்களை—கவலைகளை யார் கிட்டயாவது சொல்லிட்டா ஆறுதல் கிடைக்கும். அந்த விதத்தில் என்னை நீங்க உங்க நலன்ல அக்கறை உள்ள ஒரு ஃப்ரெண்டு மாதிரி ட்ரீட் பண்ண இஷ்ட மிருந்தா சொல்லலாம்.'

பாலகிருஷ்ணன் அவளை முழுவதும் நிமிர்ந்து மேலும் கீழும் பார்த்தான். அவள் தன் மேலாடையைத் தேவையில்லாமல் சரி செய்து கொண்டாள்.

'தாங்க்ஸ் சுபா, எனக்கு யாரும் வேண்டாம்.'

'சரி ஸார். குட் நைட், ஆபிஸ் கதவைச் சார்த்திப் பூட்டிட்டு செக்யூரிட்டி கிட்ட சாவி கொடுத்துருங்க.'

'இல்லை, நான் எங்கயும் வெளியே போகப் போற தில்லை.

'சரி, காலைல பார்க்கலாம்.'

வெளியே கிளம்ப இருந்தவளைச் 'சுபா' என்று ஒரு முறை கூப்பிட்டான்.

'எஸ் ஸார்.'

'உடனே போகணுமா'

'இல்லை. ஏன்?'

அவளைக் கண்கொட்டாமல் பார்த்தான். இதுவரை சிப்பந்தியாகத்தான் பார்த்திருக்கிறான். இந்தத் தனிமை யான சந்தர்ப்பத்தில் இந்தக் குழப்ப வேளையில் அவள் ஒரு பெண்ணாக ஆசாபாசக்காரியாகத் தோன்றினாள்.

சொன்னால் என்ன?

யாரிடமாவது சொல்லித் தீர்த்தால் தான் மனச்சுமை நீங்குமோ? இனி சொன்னால் என்ன? சொல்லாவிட்டால் என்ன யாரிடமாவது சொல்லித்தான் ஆக வேண்டும். மனசுக்குள் அதை நெருப்புத் துண்டு போல வைத்துக் கொண்டு அதிக காலம் ஜீவிக்க முடியாது. கொழுந்து விடுகிறது. துப்பித்தான் ஆக வேண்டும்!



ஒரு பெண்ணின் துரோகத்தை எனக்குப் புரிய வைக்க மற்றொரு பெண்தான் வேண்டும். அவர்களுடைய லாஜிக் அவர்களுக்குத்தானே புரியும்!

'என்ன ஸார் பார்க்கறிங்க?'

'உக்காரு சுபா.'

நாற்காலி விளிம்பில் உட்கார்ந்தாள்.

'உடனே வீட்டுக்குப் போகணுமா?'

'இல்லை ஸார்.'

'நான் ட்ராப் பண்றேன் ஆட்டோவில.'

'சரி. என்ன விஷயம்?'

'நீ சொன்னதை யோசித்துப் பார்த்தேன். எனக்குச் சொல்லிக்கிறதுக்கு யாரும் இல்லை ஆபிஸ்ல என்கூடப் பழகின முறையில நீ ஒருத்திதான் என் சிநேகம் என் உறவுன்னுகூடச் சொல்லலாம். அதனால உங்கிட்ட சொல்லறதா தீர்மானிச்சுட்டேன் சொன்னா எனக்கு நிச்சம் ஆறுதல் கிடைக்குமாங்கிறது சந்தேகம்தான். இருந்தாலும் சொல்லாம என்னால இருக்க முடியாது. நான் சொல்லப் போறது ரொம்ப அந்தரங்கமானது. யார் கிட்டயும் சொல்ல மாட்டேன்னு உன்னை நான் நம்பறேன். சொல்ல மாட்டியே?'

'சொல்லலை.'

'சத்தியம் பண்ணிக் கொடு என்று கையை நீட்டி னான்.

கையில் அடித்தாள்.

'பொம்பளைங்க எல்லாம் சத்தியம் செய்து மீர்றதில் எக்ஸ்பர்ட்ஸ்.'

'எல்லாரும் அப்படி இல்லை.'

'எனக்கும் ஒருத்தி இப்படித்தான் சத்தியம் பண்ணிக் 'எனக்கும் ஒருத்தி இப்படித்தான் சத்தியம் பண்ணிக் கொடுத்தா. தீயை வலம் செய்து சத்தியம் பண்ணிக் கொடுத்தா. சுபா, சமீபத்தில் நான் சித்தர் பாட்டுகளை கல்யாண மந்திரத்தின் அர்த்தங்களையும் நிறையப் படிச் சேன் கல்யாணம்! 'நீயும் நானும் கிழமானால் கூட ஒருத் தரை ஒருத்தர் பிரியாதபடி உன் கையைப்பிடிக்கிறேன்னு.'

‘பரஸ்பரம் ருசியுள்ளவர்களாகவும் நல்ல மனம் உள்ளவர்
களாகவும் இருப்போம். மனமும் உடலும் ஒருத்தருக்
கொருத்தர் விசுவாசமா இருப்போம்’னு சத்தியம் வாங்
கிக் கொண்ட கல்யாணம். உடல் மட்டும் அல்ல, மனம்
சுபா! கொஞ்சம் நிதானமாகவே கேளு. அம்மா அப்பா
பார்த்து குலம் கோத்திரம் விசாரிச்சு எனக்கும் பிடித்துப்
போயி கல்யாணம் பண்ணிக் கொண்ட பெண்டாட்டி
எனக்குத் துரோகம் செஞ்சா!’
சுபாவின் உதடுகள் இறுகின. ‘ஒரு விதத்திலே இந்தச்
செய்தியை நான் எதிர்பார்த்தேன் ஸார்.’
‘நீ அவளைப் பார்த்திருக்கியா?’
‘இல்லை, உங்களைப் பார்த்திருக்கிறேன்.!’
‘முதல்ல நான் நம்பவே இல்லை சுபா இதெல்லாம்
கதைகள்ளதான் நடக்கும். ஒரு மரியாதைப்பட்ட குடும்
பத்தில நடக்கவே நடக்காதுன்னுதான் நினைச்சுக்கிட்டு
இருந்தேன்.’
இல்லை ஸார், இப்பல்லாம் சகஜமா நடக்கிறது.’
‘நான் நடக்காதுன்னுதான் நினைச்சேன். அவன்
யாரு? இந்த ஊர்க்காரன். ‘பேரு...ஏதோ பேரு. காண்ட்
ராக்டர், அவளை விடச் சின்னவன். என் ஒய்.' பை நீ
பார்த்ததில்லை. அழகாகத்தான் இருப்பா. ஆண் பிள்
ளைங்கள் எல்லாம் அவளைப் பார்க்கறாங்கன்னு பெரு
மைப்பட்டுக்கிட்டு இருந்தேன். பக்கத்து மனையில
காண்ட்ராக்ட் எடுக்க வந்தவன் வீட்டுக்குள்ள புகுந்துட்
டான். சுபா நீ ஒரு பெண்! ஒரு பெண்ணைச் சோரம்
போக வைக்கிறது எது சொல்லு?’
சுபா யோசித்தாள். ‘வளர்ந்த விதம்னு சொல்லலாம்
காரணம் ரொம்பச் சிக்கலானது. உங்களுக்கும் அவளுக்
கும் குடும்ப வாழ்க்கை ரீதியில குறைபாடு இருந்ததா?’
‘இருந்ததா தெரியலை. நான் கொஞ்சம் சாது.
டிமிட்டைப்! அவளுக்கு ·.பிஸிக்கலா பொருத்தமில்லை.
ஆனா...’



‘அது காரணம் இருக்காது.’
‘அவன் அடிக்கடி வரது, டிக்கெட் கொடுக்கிறது,
மோட்டர் சைக்கிளைப் பார்க் பண்றது, நல்லா சரளமா
பேசிக்கிறது எல்லாமே தெரிஞ்சும் நான் அவளைச் சந்
தேகப் படலை. சந்தேகப்படவும் விரும்பலை. எல்லாத்
துக்கும் ஒரு விதமான எக்ஸ்ப்ளனேஷன் எனக்குக் கிடைச்
சிக்கிட்டே இருந்தது. ஆனா ஒரு முறை கண்ணால
பார்த்துட்டேன்...சுபா! அன்னைக்கு ஒரு தங்க மோதிரம்
வாங்கிட்டுப் போனேனே நீ கூட வாழ்த்தெல்லாம்
டைப் அடிச்சுக் கொடுத்தியே—ஞாபகம் இருக்குதா?’
‘மை காட்! உங்க வெடிங் அனிவர்ஸரி!’
‘அன்னிக்கு என்னுடைய படுக்கையில, என் வீட்டில,
என் மனைவியோட...மை காட்! இட்ஸ் ஸம்திங் யூ மஸ்ட்
கோ த்ரு! அப்பதான் புரியும். ஒருவிதமான அருவருப்பு,
அமிலம் மாதிரிப் பொங்கிச்சு! அந்த நிமிஷமே ரெண்டு
பேரையும் கடப்பாரை எடுத்துப் பொளந்து கட்டும்படி
யான ஆத்திரம் வந்தது அதுக்குப் பதிலா என்ன செஞ்
சேன்? பேசாம வந்துட்டேன்! என்னைப் போலக் கோழை
இருக்க முடியுமா சொல்லு! நீ அன்னைக்கு என்னைக்
கேட்டது ஞாபகம் இருக்கு. ‘உங்க மனைவி உங்களுக்கு
என்ன திருமண நாள் பரிசு கொடுக்கப் போறான்’னு
கேட்ட கொடுத்துட்டா! அதான் பரிசு...அந்தக் காட்சி!
பீப் ஷோ! கேக்கணும் கேக்கணும்னு மென்று முழுங்கித்
தயங்கிக் கேக்கற வேளை வந்த போது தற்செயலா செய்
தித் தாள்ல ஒரு செய்தி பார்த்தேன். அது என்னைத்
திசைதிருப்பிருச்சு. அந்தச் சோப்புக் கொலைகாரன்
தொடர்ந்து செஞ்ச கொலைங்களைப் பத்தின செய்தி!
‘ஆமா அதுக்கும் இதுக்கும்...’
‘அவனுடைய நாலாவது கொலைய நான் செய்
யறதா தீர்மானிச்சுட்டேன்!’
‘அய்யய்யோ! என்ன ஸார் சொல்றீங்க? என்ன விபரீ
தம் இது!’

'மைஸூர் போறதுக்கு முன்னாடியே தீர்மானிச்
சுட்டேன். மைஸூர்ல இருக்கிறாப்பல பாசாங்கு. அலிபி'

'ஓ மை காட்!'

'மைஸூர்ல யாரைப் பார்க்கறேன்? மஞ்சுவை!'

'அவனைக் கொன்னுட்டிங்களா அங்க?'

'இல்லை! அப்பவாவது எனக்குத் தைரியம் வந்ததா?
அவனை அங்கேயே கொலை பண்ணலாமான்னு ஆத்தி
ரம்தான் வந்தது கொலை செய்யலை. என் ரூமுக்கே
வந்து கடலையைக் கொரிச்சிக்கிட்டு என் மனைவியைப்
பத்தி உயர்த்தியாப் பேசறான். மிடில் ஈஸ்ட். காண்ட்ராக்ட்
எடுக்க மனு போட்டிருக்கானாம், தஸ்தூர் கம்பெனியில.
டைரக்டர் மூலமா அவனைச் சிபாரிசு பண்ண வேண்டி
எங்கிட்டயே கேக்கறான் என் மனைவியை எடுத்துக்
கிட்டான்! 'நான் ரொம்ப நல்லவன் ஸார் உங்க
மனைவியைக் கேட்டுப் பாருங்க'ங்கறான். சிபாரிசு கேக்
கறான், என்னை விடப்பெரிய ஏமாளி இந்த உலகத்தில
இருக்கமுடியுமா சொல்லு? அவனைக் கொல்லத் தைரியம்
வரலை. அவளைத்தான்...எனக்குள்ள பத்திரமா பூட்டி
வெச்சிருந்த ஆத்திரமெல்லாம சேர்ந்துக்க என்னை
இப்படி ஏமாற்றினவளைத் தண்டிக்க முடிவு செய்து
விட்டேன். முடிவு சரியோ தப்போ அதைப்பத்திக்
கவலை இல்லை, குடிச்சிட்டு என் ரூம்லயே குறட்டை
விட்டுத் தூங்கறான், அவனை ஒண்ணும் பண்ணலியே!
நான் ராத்திரியெல்லாம் யோசித்துப் பார்த்தேன். ஏன்
இப்படி இருக்கேன்? என்னை இந்த நிலைக்குக் கொண்டு
வந்த சாரதாவை உள்ளே புகைஞ்சிக்கிட்டு இருக்குற
ஆத்திரமெல்லாம் வடியும்படியா கொல்லணும்னு தீர்
மானிச்சுட்டேன்.'

சுபா அவனை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்
தாள். அவள் கரங்கள் நடுங்கின.

'சர்வே வேலை முடிஞ்சது. பஸ் பிடிச்சேன்.
ஆட்டோவில ஏறினேன். வீட்டுக்கு வந்தேன். கதவைத்



திறந்தேன். மத்தியான வேளை, தூங்கிக்கிட்டு இருந்தா,
சுத்தியல் கயிறு எல்லாம முன்னமேயே தயாரிச்சு
வெச்சிருந்தேன். அவைகளை எடுத்துக்கிட்டேன் நேரா
அவ படுக்கையடிக்குப் போனேன். உயர்த்தினேன் ஒரே
போடு!'

'ஓ, நோ...சொல்லாதீங்க! சொல்லாதீங்க!'

முடியலியே சுபா! போட முடியலியே! அதுக்குத்
தைரியம் வரலியே!' பாலகிருஷ்ணன் விசித்து விசித்து
அழ ஆரம்பித்தான்.

'கொல்லலையா?' என்றாள் மூச்சை விடுவித்துக்
கொண்டு.

'இல்லை! என் ரத்தத்தில் அந்த மூர்க்கம் இல்லை
சுபா. என் கண்ணுக்கு முன்னால துரோகம் செய்த
வளைப் பழி தீர்த்துக்க எனக்குக் கிடைச்ச அருமையான
சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்க எனக்குத் தைரியம்
இல்லை. சாமர்த்தியம் இல்லை. ரத்தத்திலே துடிப்புக்
கிடையாது, இதயம் இல்லை! நான் மனுஷனே இல்லை!
அலி! நபும்சகன்!'

சுபா அவன் கையைப்பற்றி 'இல்லை ஸார்! யூ ஆர் எ
நார்மல் மேன்!' என்றாள்.

அவள் கையை குழந்தை போல இறுகப் பிடித்துக்
கொண்டான்

'எழுந்திருக்கிறா. என்னைப் பார்க்கிறா. அப்ப
வாவது பளிச்சுன்னு கேட்டனா? இல்லை!...

'என்ன இது? மைசூர்லருந்து ஒரு நா முன்னமேயே
வந்துட்டிங்களாங்றா.'

'ஆமாம் சாரதா.'

'என்னது கைல சுத்தியல் கயிறு எல்லாம்?'

வராந்தாவில் கொடி கட்டச் சொன்னியே அதைக்
கட்டி முடிச்சுரலாம்னு...'

'இவ்வளவுதான் சொன்னேன் சுபா. உனக்குச் சிரிப்பு
வரலை?'

'இல்லை ஸார்!'

‘பிரச்சனை இன்னும் தீரவே இல்லை! எப்படித்
தீர்க்கறது? புரியலை சுபா! தற்கொலை பண்ணிக்கப்
பயமா இருக்குது. அதிலயும் ஒரு கோழைத்தனம்தான்!’
‘கேழைத்தனம் இல்லை ஸார். முதல்ல அதைப்
புரிஞ்சுக்கங்க! இட்ஸ் நாட் கவர்டிஸ்!’
‘பின்ன என்ன இது?’
‘உங்க குணம்! உங்க ரத்தத்தில வயலன்ஸ் கிடை-
யாதுன்னு சொன்னிங்க பாருங்க, அதான் உண்மை!
உங்களுடைய நல்ல மனசு, உங்களைக் கொடுமைப்
படுத்தறவங்களைக் கூடத் துன்புறுத்த விரும்பலை பால
கிருஷ்ணன் ஸார். இதைக் கோழைத்தனமாவே நினைக்
காதிங்க, நீங்க அவளைக் கொலை பண்ண நினைச்சது
முட்டாள்தனம். அவ்வளவுதான்.’
‘ஏன்?’
‘உங்க மனைவியோட துரோகம் அத்தனை பெரி
சில்லை, மரண தண்டனை கொடுக்கற அளவுக்கு.’
‘என்ன சொல்ற சுபா?’
‘உங்களைப் போல அமெச்சூர்த்தனமா யாரும்
கொலை பண்ண நினைச்சிருக்க முடியாது. சோப்புக்
கொலைகாரனாம்! அவன் பண்றாப்பல நீங்க பண்றிங்
களாம்! ‘அலிபி’யாம்! என்ன ஸார்! இதெல்லாம்! உங்
களுக்கு ஒரு விஷயம் தெரியுமா? அந்தச் சோப்புக்
கொலைகாரன் அகப்பட்டாச்சு! நீங்க மைஸூர்
கிளம்பின மறுநாளே அகப்பட்டாச்சு! தப்பிச்சிங்க!
எதாவது அந்த மாதிரி பைத்தியக்காரத்தனமா செஞ்சி
பண்ணியிருப்பாங்க. கொலை செய்யறது அத்தனை
எளிதில்லை ஸார் மறுபடி சொல்றேன். இந்தக் குற்றத்
துக்குத் தண்டனை ரொம்பப் பெரிசு!’
‘என்ன சுபா இப்படிச் சொல்றே?’
‘என்ன ஆயிடுத்து? உங்க மனைவி உங்களைத்
துன்புறுத்தினாளா? வேதனை வலி எதையாவது ஏற்
படுத்தினாளா? ரத்தம் சிந்த வெச்சாளா? நீங்க அந்தச்
சம்பவத்தைப் பார்க்கவே இல்லைன்னு வெச்சுக்கங்க.



அன்னைக்குக் கொஞ்ச நேரம் லேட்டாவே போயிருந்
தீங்கன்னு வெச்சுக்கங்க, என்ன ஆயிருக்கும்? எந்த
விதத்தில ஒரு பொண்ணு படுக்கையில படுத்திருந்தாங்கற
தகவல் ஒரு மனப் பிம்பத்துக்காக அவள் சாகணுமா?’
என்ன சுபா இது?‘டார்ச்சர் இல்லையா அது?’
‘என்ன விதமான டார்ச்சர்?’
‘மெண்டல் டார்ச்சர்!’
‘சரி, ஒப்புத்துக்கறே’ மனசில துன்பம் ஏற்படுத்
தினதுக்காக ஒருத்தர் சாகணுமா? அப்படிப் பார்த்தா
நிறையப் பேர் சாகணும்.’
‘பழி வாங்க வேண்டாமா?’
‘பழிகிழின்னு பேசாதிங்க. நீங்க அந்தச் சாதியில்லை.
சாரதா உங்களுக்கு மனத்தில் கொடுமை இழைச்சா.
அதுக்காக அவளைக் கொல்ல நினைச்சது தப்பு!’
பின்னே?’
‘பொசிச்சுப் பாருங்க ஸார் அதே மனக் கொடுமையை
நீங்க அவளுக்கு இழைக்க முடியாதா?
‘எப்படி?
‘சொல்றேன். உங்க மனைவி படிச்சிருக்காளா?’
‘அதிகம் படிச்சதில்லை.’
‘சொந்தமா வசதியுண்டா பிறந்த வீட்டில?’
‘இல்லை. ஏழைக் குடும்பம்.’
‘உங்களை விட்டா பொருளாதார ரீதியில அவளுக்கு
வேற கதி கிடையாது?’
‘கிடையாது. டிவோர்ஸ் பண்ணிரலாமா? அதையும்
யோசிச்சேன்.’
‘கூடாது! தப்பிச்சுக்கறா. பணம் எல்லாம் நீங்க
கொடுக்க வேண்டியிருக்கும். டிவோர்ஸ்ங்கறது தண்ட
னையே இல்லை. ஸார் நான் ஒண்ணு சொல்றேன்
கேப்பிங்களா? அவன் பேர் என்ன?’
‘மஞ்சுநாத்.’

'அந்த மஞ்சுநாத்தை முதல்ல விலக்குங்க!'

'எப்படி?'

'அவன் உங்ககிட்ட மிடில் ஈஸ்ட் காண்ட்ராக்ட்டுக்கு டைரக்டர்கிட்ட சிபாரிசு பண்ணும்படி கேட்டான் இல்லையா?'

'ஆமாம்.'

'டைரக்டர் நீங்க சொன்னா கேப்பாரு. டைரக்டர் சொன்னா தஸ்தூர்ல நிச்சயம் கேப்பாங்க. முதல்ல அவனுக்கு அநத வேலையை வாங்கிக் கொடுங்க. அவனை இந்த தேசத்தை விட்டு நீக்கறது ரொம்ப முக்கியம்!'

'சாரதாவையும் கூட்டிக்கிட்டுப் போயிட்டான்னா?'

'போக மாட்டான். ஒரு கல்யாணமான பெண் பிள்ளையை, ஏற்கெனவே பார்த்த பெண் பிள்ளையை அழைச்சுக்கிட்டா போவான்? முதல்ல சவுதியில அனுமதிப்பாங்களா? சொல்லுங்க. என்னுடைய கணிப் பின்படி அவன் ரொம்ப சுயநலக்காரன். அந்த வேலை கிடைச்சதுன்னா உங்க மனைவியைக் கைவிடத் தயங்க மாட்டான்'

'ஆமாம். அவன் அப்படிப்பட்ட ஆளுதான்.'

'உங்களைப்போல் சாதுவான நல்ல ஆசாமியை ஏமாற்றி ஒரு கொலை செய்யற விளிம்புவரை போக வைச்சு மெண்டல் டார்ச்சர் கொடுத்த பெண்ணுக்குக் காதலனைப் பிரிகிறதால மட்டும் தண்டனை பூர்த்தி அடையாது!'

'பின்ன?'

'நீங்க அவளை மற்றவனோட பார்த்தபோது என்ன மாதிரி மனசில துடிச்சிருப்பிங்க. அந்த மாதிரி அவளும் துடிக்க வேண்டாம்?'

'எப்படி?'

சுபா மேசையிலிருந்து எழுந்தாள். மெல்ல அவனை அணுகினாள். 'உங்களை ரெண்டரை வருஷமா தூரத்தில இருந்துதான் கவனிச்சுக்கிட்டு வந்திருக்கேன். உங்க உள் மனசை உங்க சுபாவத்தைத் தெரிஞ்ச ஒரே பெண் நான் தான் ஸார்.'



'சுபா, நீ என்ன சொல்றே?'

'பாலகிருஷ்ணன்! உங்களுக்குத் தேவை ஆறுதல். உங்க இயற்கையைப் புரிஞ்சுகொண்ட சிநேகிதி. நீங்க கோழை இல்லை. உங்க உள் மனத்தில் ஒரு பிரகாசம், ஏன் அழகுகூட இருக்கு. நான் கவனிச்சிருக்கேன்!'

'புரியலை சுபா.'

'புரியலையா? எங்க, கையைக் காட்டுங்க பார்க்க லாம்'

'பாலகிருஷ்ணன் தயக்கத்துடன் கையை அவளிடம் கொடுக்க, அவள் அதை மெல்ல வருடித் தன் முகத்தின் மேல் வைத்துக் கொண்டாள். 'அழாதிங்க' அழக்கூடாது.

பாலகிருஷ்ணன் பிரமித்தான். அந்தக் கை அவள் மார்பின்மேல் பட்டது. அவள் அதை அனுமதித்தாள். சற்றுநேரம் முற்றிலும் புதிய இந்த அனுபவத்தின் திகைப்பில் இருந்தான். மற்றொரு கையை அவள் தொடைமேல் வைத்தான்.

'உங்களைப் பார்த்த முதல் நாளில இருந்தே உங்களை எனக்குப் பிடிச்சுப் போயிடுச்சு. சொல்றதுக்குச் சந்தர்ப்பமே வரலை. இப்பதான்... இப்பதான்... என்ன செய்யறிங்க...'

'ஸாரி சுபா!'

'ஸாரியெல்லாம் வேண்டாம்!' என்று அவன் கையால் தன் உடல் முழுவதும் தடவிக்கொடுத்தாள். டெலிபோன் ஒலித்தது. அதை எடுத்தாள்.

'ஹலோ...'

'இருக்காரு. நீங்க யார் பேசறது?'

'இட்ஸ் ஃபர் ஸ்வீட் ஹார்ட்!'

மஞ்சுநாத் என்று சைகை செய்து அவனிடம் கொடுத்துவிட்டு மேல் உட்கார்ந்து கொண்டாள்.

'என்ன மஞ்சு!'

'ஸார், அந்த தஸ்தூர் காண்ட்ராக்ட் விஷயமா...'

'ஓயெஸ். நாளைக்கு முதல் காரியமா டைரக்டரைப் பார்த்துச் சொல்லிர்றேன்... சுபா இரு. கொஞ்சம் தொந்தரவு பண்ணாத... அப்ளிகேஷன் நம்பர் சொல்லு

பாலகிருஷ்ணன் நம்பரைக் குறித்துக் கொள்ள—சுபா அவன் கன்னத்தில் சத்தமாக முத்தம் கொடுத்தாள்.

'தாங்க்ஸ் ஸாந். உங்க டைரக்டர் சொன்னா நிச்சயம் ஆயிரும்.'

'சொல்றேன். மிடில் ஈஸ்ட்டில் வேலை கிடைச்சா தனியாப் போவியா?'

'வலது கையை வித்தாவது போயிருவேன் ஸார்! பக்கத்திலே யாரு?'

'ஒரு. .ப்ரெண்டு! சரிபோய்ட்டு வா. ஆல் தி பெஸ்ட்.'

டெலிபோனை வைத்துவிட்டுச் சுபாவைப் பார்த்தான். 'முதல் பகுதி முடிஞ்சுருச்சு... இனி...' என்று அவள் மார்பின் மேல் முகத்தைப் பதித்தான்.

'இங்க வேணாம்' என்றாள்.

'எங்க போகலாம்?'

'உங்க வீட்டுக்கு' என்றாள். 'உங்க மனைவியை மீட் பண்ணணும்'

முற்றும்